ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

உவேஅ
பொறுப்பார்ந்த மீன்வள நடவடிக்கைக்கு தொழில்நுட்ப வழிகாட்டு முறைகள்
9

# சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துதல்



உவேஅ
பொறுப்பார்ந்த மீன்வள
நடவடிக்கைக்கு
தொழில்நுட்ப
வழிகாட்டு முறைகள்

9

# சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துதல்

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு
ரோம் 2002

இவ்வெளியீட்டில் பயன்படுத்தப்பட்ட பெயர்க் குறிப்புகளும் அளிக்கப்பட்ட தகவல்களும் ஒரு நாட்டின் சட்டமுறையான தகுதிநிலை,பெருநிலப் பகுதி, நகரம் அல்லது பகுதியினை பற்றியோ, பிறநாட்டுடனான அந்நாட்டின் எல்லைக்கோடு அல்லது எல்லையை பற்றியோ, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் சார்பாக குறிப்பாக எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை.

அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தார்க்கே. இப்பதிப்பிலிருந்து எப்பகுதியையும் உரிமையாளரின் முன் அனுமதியின்றி, பதிப்பிடவோ, நினைவில் கொள்ள பதிப்பில் சேமிக்கவோ, புகைப்படம், மின்னணு இயந்திரவியல் அல்லது பிற வழிகளில் அனுப்புதலோ கூடாது. அத்தகைய அனுமதிக்கு நோக்கம் மற்றும் விபரம் குறித்த அறிவிக்கையுடன் இயக்குநர் தகவல் பிரிவு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, வியாலே, டொமே டி , காரகல்லா 00100, ரோம், இத்தாலி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

© உவேஅ 2002

*வங்காள விரிகுடா திட்டத்தின் மூலம்*
*தமிழில் மொழிபெயர்த்து அச்சடிக்கப்பட்டது*
***2009***

படகு தளத்தில் பொய்யான இழுவைவலைக் கதவுகளுடன் சட்டத்திற்குப்புறம்பாக அண்மைக்கடல் பகுதியில் பெரிய இழுவை மீன்பிடிகலன்.

*முகப்பு அட்டை புகைப்படம்:* ஆஸ்டின் ஜோன்ஸ்
இயக்குநர், கண்காணிப்பு செயல்களை ஒருங்கிணைக்கும் அலகு, கஞ்சுல் காம்பியா

*மொழிபெயர்ப்பு: டாக்டர் ம பரமசிவம்*

*Tamil translation by Dr M Paramasivam*

*Large trawler fishing illegally inshore with false trawl doors on board*

*Cover photo:*
*Austin Jones, Director of the Surveillance Operations Coordinating Unit*
*Banjul, the Gambia*

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*2009*

**Bay of Bengal Programme**
**Inter-Governmental Organisation**
91, Saint Mary's Road, Abhiramapuram,
Chennai - 600 018, Tamil Nadu, India
Tel: +91-44-24936294, 24936188; Fax: +91-44-24936102
Email: info@bobpigo.org; website: www.bobpigo.org

## ஆவணம் தயாரித்தல்

1994 ல் வன விலங்கு மற்றும் தாவர உயிரினங்களின் பன்னாட்டு வர்த்தகம் மீதான 9வது மாநாட்டில் சுறா மீன்களின் உயிரியல் மற்றும் வர்த்தக நிலை பற்றி முடிவு ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. (மா.9.17) உவேஅ மற்றும் பிற பன்னாட்டு மீன்வள மேலாண்மை நிறுவனங்களை சுறா உயிரின வகைகளின் உயிரியல் மற்றும் வர்த்தகம் பற்றிய விபரங்களைச் சேகரிக்க திட்டங்களை நிறுவிட கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்த வேண்டுகோள்படி 1997ல் உவேஅமைப்பின் மீன்வளக் குழுவின் 22வது அமர்வில் இதனைப் பற்றிய விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. சுறா மீன்களைப் பாதுகாத்தல் மற்றும் திறமையான மேலாண்மை மேலும் பரிசோதிக்க சிறந்த தகுதி உடையது என்பதனை பல பிரதிநிதிகளும் குறிப்பிட்டனர். இவ்வாறு ஜப்பான் மற்றும் அமெரிக்க நாடுகளுடன் இணைந்து உவேஅமைப்பு திட்டநடவடிக்கைக்கான வழிகாட்டு முறைகளை ஏற்படுத்தி அடுத்த அமர்வில் சமர்ப்பிக்க வல்லுநர் குழுவை அமைத்தது. மண்டல மீன்வள மேலாண்மை அமைப்புகளையும் மற்றும் பிற தகுதி வாய்ந்த நிறுவனங்களையும் சுறா மீன்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை பற்றிய அனைத்து அம்சங்களையும் பரிசீலிக்க இந்த குழு கேட்டுக் கொண்டது.

சுறா மீன்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைக்கான பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கை (பசெதிந–சுறா), சுறா மீன்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைக்கான தொழில் நுட்ப செயல்குழு கூட்டத்தின் வழியாக 1998 ஏப்ரல் மாதத்தில் டோக்கியோவில் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1998 அக்டோபர் மாதத்தில் ரோமில் மீன்பிடிப்பு திறன் மேலாண்மை, சுறா மீன்வளம் மற்றும் ஒடுகயிறு மீன்பிடிப்பில் கடல்பறவைகள் தற்செயலாக பிடிபடுவது மீதான கலந்தாய்வு நடைபெற்றது. பசெதிந–சுறா, 1999ல் மீன்வளக் குழுவின் 23வது அமர்வில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மிகுந்த முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது.

உவேஅமைப்பின் கடல்வள ஆதாரப்பணி இந்த ஆவணத்தை தயாரித்தது. திட்ட தலைவர், முன்மாதிரி அமைத்தல் மற்றும் தகவல் மேலாண்மை, கடல்வள மற்றும் உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் நிறுவனம், த.பெ.எண்.114, குயின்ஸ்கிளிப், விக்டோரியா 3225, ஆஸ்திரேலியா டாக்டர். டெர்ரி யின் (e.mail:Terry Walker@nre.vic.gov.in) பணியினை அடிப்படையாகக் கொண்டது.

இந்த வழிகாட்டு முறைகளுக்கு சாதாரணமான சட்ட அந்தஸ்து இல்லை என்பது வலியுறுத்தப்படுகிறது. பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பினை செயல் படுத்த ஆதரவு வழங்குவதற்காக உத்தேசிக்கப்பட்டது. மேலும் மேலாண்மை முறைகளில் முழுமையான தோற்றத்தையும் பல்வகைத் தன்மையையும் அளிப்பதற்காக, இந்த வழிகாட்டு முறைகளின் வார்த்தைகள் மற்றும் அமைப்பு, விதித்தொகுப்பின் வார்த்தை, மொழி மற்றும் அமைப்பை கடுமையாகப் பின்பற்றவில்லை. ஆகையால், சொல்தொடரில் இறுதியாக வித்தியாசம் இருப்பின் அதனை விதித்தொகுப்பின் மறுவிளக்கமாக எண்ணுதல் கூடாது. முடிவாக மாறும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப எழும்தன்மை மற்றும் வளைந்து கொடுக்க கூடியதாக வழிகாட்டு முறைகள் உள்ளன அல்லது புதிய தகவல் கிடைத்துள்ளது என்பதாகக் கருதப்படுவதால் இவை மேலும் திருத்தப்படலாம். குறிப்பான பிரச்சினைகளில் பிற வழிகாட்டு முறைகள், குறிப்புகள் போன்றவற்றால் நிறைவு செய்யப்படலாம்.

*வழங்குதல்:*

அனைத்து உ வே அ உறுப்பினர்கள் மற்றும் இணை உறுப்பினர்கள்
ஆர்வமுள்ள நாடுகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள்
உ வே அமைப்பின் மீன்துறை
உ வே அமைப்பின் மண்டலங்களில் உள்ள அலுவலர்கள்
ஆர்வமுள்ள அரசு சாரா நிறுவனங்கள்

உவேஅ மீன்துறை
சட்டத்திற்குப்புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துதல்
*உவேஅ பொறுப்பார்ந்த மீன்வள நடவடிக்கைக்கு தொழில்நுட்ப வழிகாட்டு முறைகள்*. எண். 9. ரோம், உவேஅ. 2002.பக் 124


**சுருக்கம்**

சட்டதிற்குப்புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கையை (பசெதிந –சஅக) செயல்படுத்துவதற்கு உதவிட இந்த வழிகாட்டு முறைகள் ஏற்படுத்தப்பட்டன. மீன்வள மேலாண்மை குறித்து முடிவு மேற்கொள்பவர்கள், கொள்கை அமைப்போர் ஆகியோருக்காக இந்த வழிகாட்டு முறைகள் எழுதப்பட்டன. மீன்பிடிப்பு தொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் பிற குழுவினருக்கும் இவை ஆர்வத்தைத் தரும்.

வளர்ந்து வரும் மீன்பிடிப்பு நடவடிக்கைகளையும் மற்றும் நடவடிக்கைகள் சமீபத்திய பன்னாட்டு சாதனங்களில் முன்வைக்கப்பட்ட வரையறைகளையும் சேர்த்து உபயோகப்படுத்தக்கூடிய சட்டம் மற்றும் கட்டுப்பாடுகளை மதிப்பதில்லை, என்பதனையும் பன்னாட்டு சமுதாயம் உணர்கிறது. அத்தகைய நடவடிக்கைகளுக்கு உதாரணமாக கட்டுப்பாட்டிலிருந்து தப்பிக்க கலன்களுக்கு மறுகொடியிடுதலைக்குறிப்பிடலாம். கடலோர நாட்டின் அங்கீகாரம் இன்றி தேசீய எல்லைப்பகுதிகளில் மீன்பிடிப்பதையும் குறிப்பிடலாம். பிடிக்கப்பட்டவை போன்றவற்றை அறிவிக்க தவறுதல் (அல்லது தவறுதலாக அறிவித்தல்) ஆகியவற்றையும் குறிப்பிடலாம். அத்தகைய பொறுப்பு அற்ற மீன்பிடிப்பு நடவடிக்கை சரியான முறையில் மீன்வளத்தை நிர்வகிக்கும் முறைகளை நேரடியாக பலவீனப்படுத்தும். வளம்குன்றாத மீன்வளம் என்ற இலக்கை நோக்கிய முன்னேற்றத்தை தடை செய்யும்.

''சட்டத்திற்குப் புறம்பான, அறிவிக்கப்படாத கட்டுபாடற்ற மீன்பிடிப்பு'' என்ற வார்த்தைகள் அல்லது–சஅக அத்தகைய நடவடிக்கைகளின் பரந்த வரிசையை விளக்குவதற்காக தோன்றியவை. மீன்வளம் மீதான உவேஅ குழு 1999ல் வளர்ந்துவரும் இப்பிரச்னையை பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கையை விரிவாகச் செய்வதன் மூலம் தெரிவிக்க முடிவு செய்தது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முயற்சி விரிவடைந்தது. 2001ல் பசெதிந–சஅக பின்பற்றும் நிலையை அடைந்தது.

பசெதிந–சஅக “கருவிகளின் பெட்டி” யாக கருதப்படுகிறது. ச.அ.க மீன்பிடிப்பு வெளிக்காட்டுபவற்றை நிர்வகிப்பதில் பயன்படுத்த தேவையான கருவிகள் என கருதலாம். அனைத்து சூழ்நிலைகளிலும் பெட்டியில் உள்ள அனைத்து கருவிகளும் பயன்படுத்த வெளிப்படையாக தகுதியானவை அல்ல. இந்த வழிகாட்டு முறைகள் (1) உவே அமைப்பு உறுப்பினர்கள் மற்றும் பிறருக்கு கருவிகளை பயிற்சி அளிக்க உதவுதல் (2) குறிப்பிட்ட சூழ்நிலையில் எத்தகைய கருவியை பயன்படுத்த வேண்டும் என பரிந்துரைத்தல் (3) இக்கருவிகளை திறமையாக எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கு வழிகாட்டுதல் ஆகியவற்றிற்காக உத்தேசிக்கப்பட்டவை.

பசெதிந–சஅக ஒரு தன்னார்வ சாதனமாகும். எனினும் நடத்தை விதித் தொகுப்பை போன்று பசெதிந–சஅக சில பகுதிகள் 1982 கடல் சட்டத்தின் ஐக்கியநாடுகளின் மரபுப்படி மற்றும் பிற தகுந்த சாதனங்களில் தெரிவிக்கப்படுவது போல் பன்னாட்டு சட்டத்தின் பொருத்தமான விதிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. உலக மண்டல மற்றும் சார் மண்டல சாதனங்களை உள்ளடக்கிய பிற சட்ட சாதனங்களின்படி பிணைக்கப்பட்ட விளைவுகளை வழங்கும் அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட பசெதிந–சஅக தக்க ஏற்பாடுகளைக் கொண்டிருக்கும்.

சுருக்கமாக, இந்த வழிகாட்டு முறைகள் பசெதிந–சஅக–ல் உள்ள சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க மேற்கொள்ளப்படும் முறைகளை ஆய்வு செய்யும். இம் முறைகளை எவ்வாறு சிறப்பாக அமுல்படுத்துவது என்பதற்கான அறிவுரையை வழங்கும். செய்யக்கூடிய நிறுவனங்கள் மற்றும் பசெதிந–சஅக செயல்படுத்த தேசீய திட்டங்களின் உள்ளடக்கம் ஆகியவை மீதான அறிவுரையை இந்த வழிகாட்டு முறைகள் வழங்கும். அவ்வாறே பசெதிந–சஅக செயல்படுத்துதல் பற்றி உவே அமைப்பிற்கு அறிவிக்க பரிந்துரைகளை வழங்கும்.

## பொருளடக்கம்

**பக்கம்**

**பின்னணி** ..... 9
**சொல் சுருக்கம்** ..... 12

1. பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கை – சஅக ..... 13
1.1 பசெதிந – சஅக தோற்றம் மற்றும் நோக்கம் ..... 13
1.2 பசெதிந –சஅக பகுதிகள் ..... 15
2. வழிகாட்டு முறைகளின் நோக்கம் மற்றும் வாய்ப்பு ..... 19
3. அனைத்து நாடுகளின் பொறுப்புகள் ..... 19
3.1 பன்னாட்டு வரையறைகளை கடைப்பிடித்தல் ..... 19
3.1.1 தேசீய எல்லைக்குட்பட்ட பகுதிகள் ..... 20
3.1.2 ஆழ்கடல் ..... 21
3.2 தேசீய சட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் செய்முறைகள் ..... 22
3.2.1 தக்க சட்டங்கள், கட்டுப்பாடுகள், மற்றும் செய்முறைகளை ஆய்வு செய்தல் ..... 22
3.2.2 தேசீயத்தின் மீது நாடுகளின் கண்காணிப்பு ..... 23
3.2.3 தேசீய மில்லாத கலன்கள் ..... 25
3.2.4 மான்யங்கள் மற்றும் பொருளாதார உதவிகளை நீக்குதல் ..... 26
3.2.5 எச்சரிக்கை, கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு ..... 27
3.3 நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு ..... 29
4 கொடி நாடுகளின் பொறுப்புகள் ..... 30
4.1 மீன்பிடிகலன் பதிவு செய்தல் ..... 32
4.1.1 மீன்பிடிப்பு பயண ஏற்பாடுகள் ..... 33
4.2 மீன்பிடி கலன்களின் பதிவேடுகள் ..... 35
4.3 மீன்பிடிக்க அங்கீகாரம் ..... 36
4.4 போக்குவரத்து மற்றும் உதவி கலன்கள் ..... 38
4.5 பிற கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ..... 38
5. கடலோர நாடுகளின் நடவடிக்கைகள் ..... 41
5.1 கடலோர நாடுகளின் உரிமை மற்றும் பொறுப்புகள் ..... 41
5.2 சென்றடைதல் மற்றும்அதற்கான ஒப்பந்தங்கள் ..... 43
5.3 கடலோர நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு ..... 44
6. துறைமுக நாடுகளின் நடவடிக்கைகள் ..... 46
6.1 அடிப்படை துறைமுக நாட்டின் நடவடிக்கைகள் ..... 47
6.2 பயன்பாட்டில் உள்ள சில துறைமுக நாட்டின் நடவடிக்கைகளுக்கான எடுத்துக்காட்டுகள் ..... 49
6.3 ஒத்துழைப்பிற்காக பிற செய்யக் கூடியவை ..... 54
7. பன்னாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்தை தொடர்பான நடவடிக்கைகள் ..... 55

7.1 மமீவமே நிறுவன நடவடிக்கைகள் ........ 56
7.2 சந்தை தொடர்பான பிற நடவடிக்கைகள் ........ 61

8. பசெதிந –சஅக மமீவமே நிறுவனம் மூலம் செயல் படுத்துதல் ........ 62

8.1 சஅக மீன்பிடிப்பை தெரிவிப்பதில் மமீவமே நிறுவனத்தின் பங்கு ........ 62
8.2 மமீவமேநி பின்பற்றும் நடவடிக்கைகளுக்கான எடுத்துக்காட்டுகள் ........ 64
8.3 மேல் நடவடிக்கைக்காக செய்யக்கூடியவை ........ 65
 8.3.1 நிறுவனங்களை வலுப்படுத்துதல் ........ 65
 8.3.2 கூடுதலான இணக்கமான நடவடிக்கைகள் ........ 67
 8.3.3 விபரங்களை சிறப்பாக சேகரித்தல் மற்றும் பரிமாற்றம் ........ 68
 8.3.4 மேம்படுத்தப்பட்ட எச்சரிக்கை கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு ........ 69
 8.3.5 துறைமுக நாட்டின் சுறுக்கமான அரசாட்சி ........ 70
 8.3.6 சான்று அளித்தல்/ பதிவு செய்தல் திட்டங்கள் ........ 70
 8.3.7 பயணம் மீதான கட்டுப்பாடு ........ 70
 8.3.8 மீதமுள்ள உறுப்பினர் அல்லாத பிரச்சினைகளுக்கான நடவடிக்கைகள் .. 71
 8.3.9 மமீவமே நிறுவனங்களுக்குள் மற்றும் ம மீவமே நிறுவனங்களுக்கிடையே மற்றும் பிற பன்னாட்டு நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பு ........ 72

9 வளரும் நாடுகளின் தனிப்பட்ட தேவைகள் ........ 72

10 தேசீய செயல்திட்டங்கள் மற்றும் செயல்படுத்துதல் மீதான அறிவிக்கை ........ 75

10.1 தேசீய செயல் திட்ட நடவடிக்கைகளின் வளர்ச்சி ........ 75
10.2 தேசீய செயல் திட்ட நடவடிக்கைக்காக பரிந்துரைக்கப்படும் படிவங்கள் ........ 75
10.3 செயல்படுத்துதல் பற்றி உவே அமைப்பிற்கு அறிவிக்க பரிந்துரைக்கப்படும் படிவங்கள் ........ 78

11. பரிந்துரைக்கப்படும் நடவடிக்கைகளுக்கான சரிபார்ப்பு பட்டியல் ........ 79

12. பார்வைக்குறிப்புகள் ........ 86

**பிற்சேர்க்கைகள்**

I. சட்டத்திற்குப்புறப்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கை ........ 89
II. மீன்வளம் தொடர்பான எச்சரிக்கை, கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பிற்கான பன்னாட்டு வலை அமைப்பின் தொழில் நுட்ப வார்த்தைகள். ........ 109
III. வமே அமீவநிறுவனம் நிறுவிய பாதுகாப்பு மற்றும் அமுலாக்க முறைகளுக்கு ஒப்பந்தத்தில் இல்லாத குழுவின் கலன்கள் இணக்கமாக இருப்பதை ஊக்கப்படுத்த திட்டங்கள். ........ 114
IV. திருத்தி அமைக்கப்பட்ட அசூபாபகுழுவின் துறைமுக ஆய்வு திட்டம். ........ 118
V. Dissostichus வகைகளுக்கான அகவாஆபாகுழுவின் பிடிபடும் மீன்களை ஆவணப்படுத்தும் திட்டம் ........ 120
VI. தேர்ந்தெடுக்கப்பட்ட மமீவமே நிறுவனங்களின் வலைத்தளங்கள். ........ 124

## பின்னணி

1) மனித இனத்திற்கு மீன்பிடிப்பு முக்கிய உணவு ஆதாரமாக தொன்று தொட்டு விளங்குகிறது. இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நன்மைகள் கிடைக்கின்றன. எனினும், வளர்ந்து வரும் அறிவு மற்றும் மீன்வள தொழில் நுட்பங்களின் வளர்ச்சியினால் தொழில் புதுப்பிக்கப்பட்ட போதிலும் மீன்வள ஆதாரங்கள் எல்லையற்றது அல்ல. வளர்ந்து வரும் உலக மக்கட்தொகைக்கு சத்துணவு, பொருளாதாரம் மற்றும் சமூக நலம் ஆகியவற்றில் அவற்றின் பங்கு நிலை நிறுத்தப்படுவதற்கு, மீன்வள ஆதாரங்களை முறையாக நிர்வகிக்கும் தேவை உள்ளது என்பது உணரப்படுகிறது.

2) 1982–ல் ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பு உருவாக்கி ஏற்றுக் கொண்ட கடல் சட்டம் கடல் சார் ஆதாரங்களை நல்ல முறையில் நிர்வகிக்க புதிய வடிவமைப்பை வழங்கியது. உலக கடல் மீன்வளத்தில் 90 சதவீதம் தன்னுள் கொண்டிருக்கும் பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் மீன்வள ஆதாரங்களைப் பயன்படுத்த மற்றும் நிர்வகிக்க பொறுப்புகளை கடலோர நாடுகளுக்கு புதிய ஆழ்கடலின் சட்ட அமைப்பு வழங்கியது.

3) சமீப காலங்களில் உணவுத்துறையில் உலக மீன்வளப்பிரிவு மிக விரைவாக முன்னேறுகிறது. மீன் மற்றும் மீன்வள பொருட்களுக்கு உலக அளவில் உயர்ந்து வரும் தேவைக்கு ஏற்ப புதிய மீன் பிடி கப்பல்கள் மற்றும் மீன் பதப்படுத்தும் தொழில்களில் கடலோர நாடுகள் முதலீடு செய்து அவ்வாய்ப்புகளை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கட்டுப்பாடற்ற வகையில் மீன் பிடித்தல் அடிக்கடி மேற்கொள்ளப்படுவதால் பல மீன்வள ஆதாரங்கள் நிலை நிறுத்தப்பட இயலாதவை ஆகிவிடும் என்பது உண்மை.

4) முக்கிய மீன் இருப்புகள் அளவுக்கதிகமாக பிடிக்கப்படுவதற்கு தெளிவான அடையாளங்கள், சுற்றுச் சூழல் அமைப்பில் மாறுபாடுகள், குறிப்பிடக் கூடிய பொருளாதார பின்னடைவுகள், மேலாண்மை மற்றும் மீன் வர்த்தகம் இடையே ஏற்படும் பன்னாட்டு கருத்து வேறுபாடுகள் ஆகியவை மீன்வளத்தின் நீண்ட வளங்குன்றாத தன்மையையும் மற்றும் உணவு விநியோகத்தில் மீன்வளத்தின் பங்கினையும் அச்சுறுத்துகின்றன. ஆகையால், உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்வளக்குழு 1991 மார்ச்சில் நடைபெற்ற 19வது அமர்வில் பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழல் அடங்கிய மீன்வள மேலாண்மைக்கு புதிய வகைமுறைகளை பரிந்துரைத்தது. அவ்வாறே சமூக பொருளாதார பரிசீலனைகளும் உடனடியாக தேவைப்படுகின்றன. பொறுப்பார்ந்த மீன்வள நடவடிக்கை கருத்தை ஏற்படுத்த உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் பயன்பாடுகளை வளர்க்க நடத்தை விதித் தொகுப்பை விரிவு படுத்த கேட்டுக் கொள்ளப்பட்டது.

5) மெக்சிகோ அரசு, உணவு மற்றும் வேளாண்மை அமைப்புடன் இணைந்து பொறுப்பார்ந்த மீன்பிடிப்புபற்றி கான்கனில் பன்னாட்டு கூட்டத்திற்கு மே 1992ல் ஏற்பாடு செய்தது. கான்கன் அறிவிக்கை அக்கூட்டத்தில் மேலொப்பம் இடப்பட்டு பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பை தயாரிக்க ஆதரவு அளித்திட UNCED Rio Summit கவனத்திற்கு 1992ல் கொண்டு வரப்பட்டது. 1992 செப்டம்பரில் நடைபெற்ற ஆழ்கடல் மீன்பிடிப்பின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் தொழில் நுட்ப கலந்தாய்வு ஆழ்கடல் மீன் பிடிப்பு குறித்தான பிரச்சினைகளுக்கு தீர்வாக விதித் தொகுப்பை மேலும் விரிவாக்க பரிந்துரைத்தது.

6) 1992 நவம்பரில் நடைபெற்ற 102வது அமர்வில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் குழு விதித் தொகுப்பை விரிவாக்குவது பற்றி விவாதித்தது. ஆழ்கடல் மீன் பிடிப்பு பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க பரிந்துரைத்தது. 1993ல் நடைபெற இருந்த மீன்வள குழுவிற்கு விதித் தொகுப்பு கருத்துருவை அளிக்க கேட்டுக் கொண்டது.

7) 1993 மார்ச்சில் நடைபெற்ற மீன்வளக்குழுவின் 20வது அமர்வு அத்தகைய விதித்தொகுப்பின் வழிகாட்டு முறைகளையும் சேர்த்த உள்ளடக்கத்தையும் முன்மொழியப்பட்ட வடிவமைப்பையும் பொதுவாக பரிசீலித்தது. விதித்தொகுப்பை மேலும் விரிவாக்க காலக் கெடு வழங்கியது. விதித்தொகுப்பின் பகுதியாக ''அதிவேக'' அடிப்படையில், ஆழ்கடலில் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளைப்பாதிக்கும் கலன்களுக்கு மறு கொடி இடுதலை தவிர்க்க கருத்துரு தயார் செய்ய உணவு மற்றும் வேளாண்மை அமைப்பை கேட்டுக் கொண்டது. 1993 நவம்பரில் 27வது அமர்வில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் கூட்டம், ஆழ்கடலில் மீன் பிடிக்கும் கலன்கள் பன்னாட்டு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணங்குதலை ஊக்குவிக்கும் ஒப்பந்தத்தை பின்பற்றுவதில் முடிந்தது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் கூட்ட தீர்மானம் 15/93 ன்படி இது விதித் தொகுப்பில் இணைப்பு பகுதியாக இணைந்தது.

8) தொடர்புடைய பன்னாட்டு விதிகளுக்கு இணங்கி ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பின் கடல்சட்டம் 1982 ன் படி பகுதிகளை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் 1982 டிசம்பர் 10, இடம்பெயராத மற்றும் பெரிதும் இடம்பெயரும் மீன் இருப்பு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை குறித்த 1995 மற்றும் 1992 கான்கன் அறிவிக்கையின்படி 1992 சுற்றுப்புறச்சூழ்நிலை மற்றும் வளர்ச்சி ரியோ அறிவிக்கை, குறிப்பாக கட்டுரை 17 நிகழ்ச்சி நிரல் 21க்கு இணங்கி அர்த்தம் கொள்ளும் வகையில் பயன்படுத்திட ஏதுவாக விதித்தொகுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

9) தொடர்புடைய ஐக்கிய நாட்டு முகமைகள் மற்றும் பிற அரசு சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்களுடன் கலந்து ஆலோசித்து விதித்தொகுப்பின் வளர்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

10) விதி தொகுப்பு 5 அறிமுக கட்டுரைகள் கொண்டது. அவை தன்மை மற்றும் நோக்கம், குறிக்கோள் பிற பன்னாட்டு காரணகர்த்தாவினருடன் உள்ள தொடர்பு, செயல்பாடு, கண்காணிப்பு மற்றும் புதுப்பித்தல் மற்றும் வளரும் நாடுகளுக்கான சிறப்பு தேவைகள்ஆகும். இந்த 5 அறிமுக கட்டுரைகளை தொடர்ந்து பொது கோட்பாடுகள் என்ற கட்டுரை அமையும். அதைத்தொடர்ந்து மீன்வள மேலாண்மை, மீன்பிடி நடவடிக்கை, நீர்வாழ் உயிரின மேம்பாடு, கடலோர மேலாண்மையுடன் இணைந்த மீன்வளம், பிடித்த மீன்களை பாதுகாக்கும் அறுவடைக்குப்பிந்தைய செயல்பாடு விற்பனை மற்றும் மீன்வள ஆராய்ச்சி என்ற 6 தலைப்பில் கட்டுரைகள் இடம் பெறும். முன்பே தெரிவித்தவாறு ஆழ்கடல் மீன்பிடிப்பு கலன்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய பன்னாடுகளுக்கிடையே ஆன பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை பற்றிய இணக்கத்தை ஊக்குவிக்கும் ஒப்பந்தம், சட்ட விதித் தொகுப்பு நடவடிக்கைக்கு ஒரு அங்கமாக அமைந்தது.

11) நடத்தை விதி தொகுப்பு சுய விருப்பமானது. எனினும் அவற்றின் சில பகுதிகள் டிசம்பர் 10 1982 கடல் சட்டத்தில் தெரிவித்துள்ள பன்னாட்டு விதிகளின் அடிப்படையில் ஆனவை. ஆழ்கடல் மீன்பிடிப்பு கலன்கள் பாதுகாத்தல் மேலாண்மை பற்றி கடைபிடிக்கப்பட வேண்டிய இணக்கத்தை ஊக்குவிக்கும் 1993ல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் போன்றவற்றை குழுவினர் இடையே சட்டப்படி கட்டுப்படும் காரணகர்த்தாக்களுக்கு கட்டுப்படுத்துகிற பகுதிகளையும் விதி தொகுப்பு கொண்டுள்ளது.

12) 31.10.1995 அன்று பொறுப்பார்ந்த மீன்பிடிப்பிற்கான நடத்தை விதிகளை 28வது கூட்ட அமர்வு 4/95 தீர்மானத்தில் ஏற்றுக்கொண்டது. அதே தீர்மானத்தில் விதித் தொகுப்பினை நடைமுறைப்படுத்த உதவியாக பொருத்தமான தொழில் நுட்ப வழிகாட்டு முறைகளை உறுப்பினர் மற்றும் ஆர்வமுடைய உகந்த நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கித் தர உணவு மற்றும் வேளாண்மை அமைப்பை கேட்டுக் கொண்டது,

13) வளர்ந்து வரும் மீன்பிடிப்பு நடவடிக்கைகளையும் மற்றும் நடவடிக்கைகள் சமீபத்திய பன்னாட்டு சாதனங்களில் முன்வைக்கப்பட்ட வரையறைகளையும் சேர்த்து

உபயோகப்படுத்தக்கூடிய சட்டம் மற்றும் கட்டுப்பாடுகளை மதிப்பதில்லை என்பதனையும் பன்னாட்டு சமுதாயம் உணர்கிறது. அத்தகைய நடவடிக்கைகளுக்கு உதாரணமாக கட்டுப்பாட்டிலிருந்து தப்பிக்க கலன்களுக்கு மறுகொடியிடுதலைக்குறிப்பிடலாம். கடலோர நாட்டின் அங்கீகாரம் இன்றி தேசீய எல்லைப்பகுதிகளில் மீன்பிடிப்பதையும் குறிப்பிடலாம். பிடிக்கப்பட்டவை போன்றவற்றை அறிவிக்க தவறுதல் (அல்லது தவறுதலாக அறிவித்தல்) ஆகியவற்றையும் குறிப்பிடலாம். அத்தகைய பொறுப்பு அற்ற மீன்பிடிப்பு நடவடிக்கை சரியான முறையில் மீன்வளத்தை நிர்வகிக்கும் முறைகளை நேரடியாக பலவீனப்படுத்தும் வளம்குன்றாத மீன்வளம் என்ற இலக்கை நோக்கிய முன்னேற்றத்தை தடை செய்யும்.

14) “சட்டத்திற்குப் புறம்பான, அறிவிக்கப்படாத கட்டுபாடற்ற மீன்பிடிப்பு” என்ற வர்த்தைகள் அல்லது–சஅக அத்தகைய நடவடிக்கைகளின் பரந்த வரிசையை விளக்குவதற்காக தோன்றியவை. மீன்வளம் மீதான உவேஅ குழு 1999ல் வளர்ந்துவரும் இப்பிரச்னையை பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கையை விரிவாகச் செய்வதன் மூலம் தெரிவிக்க முடிவு செய்தது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முயற்சி விரிவடைந்தது. 2001ல் பசெதிந–சஅக பின்பற்றும் நிலையை அடைந்தது.

15) பசெதிந–சஅக “கருவிகளின் பெட்டி” யாக கருதப்படுகிறது. ச.அ.க மீன்பிடிப்பு வெளிக்காட்டுபவற்றை நிர்வகிப்பதில் பயன்படுத்த தேவையான கருவிகள் என கருதலாம். அனைத்து சூழ்நிலைகளிலும் பெட்டியில் உள்ள அனைத்து கருவிகளும் பயன்படுத்த வெளிப்படையாக தகுதியானவை அல்ல. இந்த வழிகாட்டு முறைகள் (1) உவே அமைப்பு உறுப்பினர்கள் மற்றும் பிறருக்கு கருவிகளை பயிற்சி அளிக்க உதவுதல் (2) குறிப்பிட்ட சூழ்நிலையில் எத்தகைய கருவியை பயன்படுத்த வேண்டும் என பரிந்துரைத்தல் (3) இக்கருவிகளை திறமையாக எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கு வழிகாட்டுதல் ஆகியவற்றிற்காக உத்தேசிக்கப்பட்டவை.

16) பசெதிந–சஅக “கருவிகளின் பெட்டி”யாக சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட தற்சமயம் உள்ள பயன் அளிப்பதாகத் தெரியும் அனைத்து நடவடிக்கைகளையும் அணைத்துக்கொள்ள முயற்சிக்கிறது. சில நாடுகளிலேனும் தற்சமயம் செயல்படுத்தும் கட்டாயத்தில், கொண்டுள்ள, புதிய மற்றும் புதிதாக வெளிப்படும் சாதனங்களையும் உள்ளடக்கும். தற்சமயம் வெவ்வேறான நாடுகள் வெவ்வேறான சட்ட கடமைகளை கொண்டுள்ளன என்பதனை பசெதி நடவடிக்கை உணர்கிறது. அதே நேரத்தில், பசெதி நடவடிக்கையின் வடிவமைப்பு வளையும் தன்மை உடையது. பன்னாட்டு சட்டம் மற்றும் தகுந்த கடமைகளை மேம்படுத்த அனுமதிக்கும்.

## சொல் சுருக்கம்

| | |
|---|---|
| 1982 ஐ.நா.மரபு | 1982 டிசம்பர் 1 கடல் சட்டம் மீதான ஐக்கிய நாடுகளின் மரபு |
| 1993 உவேஅ இணக்க ஒப்பந்தம் | ஆழ்கடலில் மீன்பிடிப்பிற்கான முறைகள் மீதான பன்னாட்டு மேலாண்மை மற்றும் பாதுகாப்பிற்கு இணக்கத்தை ஊக்குவிக்க ஒப்பந்தம். |
| 1995 ஐநா மீன் இருப்பு ஒப்பந்தம் | 1982 டிசம்பர் 1 கடல் சட்டம் மீதான, நகராத மற்றும் பெரிதும் நகரும் மீன் இருப்புகள் குறித்த ஐக்கிய நாடுகளின் மரபினை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம். |
| அகவா ஆ பாகு | அண்டார்டிக் கடல்வாழ் ஆதாரங்களின் பாதுகாப்பிற்கான குழு |
| தெ நீ து சூ பாகு | தென்பகுதி நீல துடுப்பு சூரை மீன்களின் பாதுகாப்பிற்கான குழு |
| நடத்தை விதித் தொகுப்பு | பொறுப்பார்ந்த மீன் வளத்திற்கான உவே அமைப்பின் நடத்தை விதித்தொகுப்பு |
| மீகு | உவே அமைப்பின் மீன்வள குழு |
| த பொம | தனிப்பட்ட பொருளாதார மண்டலம் |
| உவேஅ | ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு |
| ம மீ மு | தென்பசிபிக் மன்ற மீன்வள முகமை |
| பொ மீ கு மெ | மெடிட்டரேனியன் பொது மீன்வள குழு |
| அவெசூகு | அமெரிக்கா இடையேயான வெப்பமண்டல சூரை மீன் குழு |
| ப ப க மீ கு | பன்னாட்டு பல்டிக் கடல் மீன் குழு |
| அ சூ பா ப கு | அட்லாண்டிக் சூரை மீன்களைப் பாதுகாக்கும் பன்னாட்டுக் குழு |
| பகநி | பன்னாட்டு கடல்சார் நிறுவனம் |
| இ பெ சூ கு | இந்தியப் பெருங்கடல் சூரை மீன் குழு |
| பசெதிந | பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கை |
| பசெதிந – சஅக | சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கைகள் |
| ச அ க மீன்பிடிப்பு | சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு |
| எ க க | எச்சரிக்கை கட்டுப்பாடு கண்காணிப்பு |
| வ மே அ மீ வ நி | வட மேற்கு அட்லாண்டிக் மீன்வள நிறுவனம் |
| வகி அமீவநி | வடகிழக்கு அட்லாண்டிக் மீன்வள நிறுவனம் |
| வ ப ந இ மீ வநி | வடக்கு பசிபிக் நன்னீரில் இனப் பெருக்கம் செய்யும் மீன்வள நிறுவனம் |
| தே செதிந | தேசீய செயல் திட்ட நடவடிக்கை |
| அ சா நி | அரசு சாரா நிறுவனம் |
| ம மீ வ மே நி | மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனம் |
| களஅ | கலன் எச்சரிக்கை அமைப்பு |
| உவநி | உலக வர்த்தக நிறுவனம் |

## 1. பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கை– சஅக

### 1.1 பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கை தோற்றம் மற்றும் நோக்கம்

சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுபாடற்ற (சஅக) மீன்பிடிப்பு உண்மையாக தேசீய எல்லையில் அல்லது ஆழ்கடலில் நடைபெறும் அனைத்து வகை மீன்பிடிபாட்டிலும் உள்ளது. பலவகை மீன் இருப்புகளின் திறமையான மேலாண்மை மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை சஅக ஏற்படுத்துகிறது. இதனால் மீன்வளத்திற்கும் தங்களது நியாயமான வாழ்வு ஆதாரத்திற்கும் அதனைச்சார்ந்துள்ள மக்களுக்கும் பாதகமான பல்வகை விளைவுகள் ஏற்படுகின்றன.

மீன்வள மேலாண்மை நோக்கங்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் சஅக மீன்பிடிப்பு மீன்வளத்தை தகர்த்துவிடும் அல்லது அழிந்து வரும் மீன் இருப்பை மீண்டும் நிர்மாணிப்பதற்கான முயற்சிகளை ஆபத்தான முறையில் வலுவிழக்கச் செய்யும். இதனால் சமூக மற்றும் பொருளாதார வாய்ப்புகளை இழக்க நேரிடும். உணவுப் பாதுகாப்பு குறையும். இதனை கண்காணிக்காது விடுவதால் சஅக மீன்பிடிப்பு முழுதுமாக திறமையான மீன்வள மேலாண்மையின் பயன்களை செல்லுபடியற்றதாக ஆக்கி விடும்.

சில மீன்பிடி நடவடிக்கைகளின் தீமையான விளைவுகளிலிருந்து கடல்வள சுற்றுச்சூழலைப் பாதுகாக்க விதி முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக சிறிய மீன்களை அறுவடை செய்வதற்கான கட்டுப்பாடு இலக்கு இடப்படாத தற்செயலாக பிடிபடுபவை மற்றும் வீணாகுபவை ஆகியவற்றைக் குறைக்க ஏற்படுத்தப்பட்டுள்ள மீன்பிடி சாதனங்களின் கட்டுப்பாடுகள் மற்றும் அறிமுகமான மீன் இனப் பெருக்கம் செய்யும் பகுதிகளில் விதிக்கப்படும் தடை போன்றவை. சஅக மீன்பிடிப்பு நடத்துவோர் இந்த விதி முறைகளைப் பின்பற்றுவது இல்லை. தாங்கள் கண்டுபிடிக்கப்படுவதைத் தவிர்க்க குறிப்பிட்ட சில இரவு நேரங்களில் அடிப்படையான கடற்பயண விளக்குகளை ஏற்றுதல் போன்ற பாதுகாப்பு சாதனங்களையும் முறைகளையும் மேற்கொள்வதை சஅக மீன்பிடிப் போர் வழக்கமாக ஒதுக்கி விடுவர். இது கடற்பகுதியை பயன்படுத்தும் பிறருக்கு ஆபத்து விளைவிக்கும். சஅக மீன்பிடிப்பு கலனை இயக்குபவர்கள் பணியாளர்களுக்கான அவர்களது உழைப்பு குறித்த காலம் மற்றும் நிபந்தனைகள் போன்ற அடிப்படை உரிமையை வழங்கவும் மறுப்பர். சம்பளம், பாதுகாப்பு வரையறைகள் மற்றும் பிற வாழ்வதற்கும் மற்றும் பணி செய்வதற்குமான நிபந்தனைகளும் இவற்றுள் அடங்கும்.

சமூக, சுற்றுப்புறச்சூழல் மற்றும் பாதுகாப்பு மீது தீங்கு ஏற்படுத்தக்கூடிய விளைவுகளுக்கு கூடுதலாக சஅக மீன்பிடிப்பின் *நேர்மையின்மை* ஆபத்தான கவலையை தோற்றுவிக்கிறது. வரையறைப்படி, சஅக மீன்பிடிப்பு என்பது சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கை அல்லது பயன்படுத்தப்பட வேண்டிய வரையறைகளின் மீது சிறிதளவு கவனத்துடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என குறைந்த அளவில் நினைக்கும் பொழுது கருதலாம். அதாவது வரையறைகளுக்கு இணங்கி நியாயமாக மீன்பிடிப்பவர்களைக் காட்டிலும் சஅக மீன்பிடிப்போர் நியாயமற்ற பயன்களைப் பெறுகின்றனர். இந்த கருத்தில் சஅக மீன்பிடிப்போர் ‘இலவச சவாரி செய்பவர்’ ஆவர். உரிய மீன்வள பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்காக செய்யப்பட்ட பிறரது தியாகத்திலிருந்து நேர்மையற்ற முறையில் பயன்பெறுகின்றனர். இந்த நிலை நியாயமான மீன்பிடிப்பவர்களின் கட்டுப்பாட்டுணர்வை அழிக்கிறது. சில வேளை மிகவும் முக்கியமாக விதிகளை புறக்கணிக்க அவர்களை ஊக்கப்படுத்துகிறது. இவ்வாறு சஅக மீன்பிடிப்பு சஅக மீன்பிடிப்பை கூடுதலாக ஊக்கப்படுத்த முயற்சிக்கிறது. ஏற்படுத்தும் மேலாண்மை தோல்வியால்[1] சுழற்சியை கீழ் நோக்கி செலுத்துகிறது.

சஅக மீன்பிடிப்பு அறிவிக்கப்படாத தன்மையால் அதனை அளவிடுவது குறிப்பாக கடினமாகிறது. எனினும் கிடைக்கக்கூடிய விபரங்கள், சில முக்கிய மீன்வளத்தில், மொத்த மீன்பிடிப்பில் சஅக

[1] மேலும் தகவலுக்கு டேவிட் பால்டனின் “கடல் மீன்வளத்தின் ‘தவறான பங்கேற்போருடன்’ ஈடுபடுதல்” புத்தகத்தைப் பார்க்கவும்.

மீன்பிடிப்பு 30 சதவிகிதம் வரையானது என தெரிவிக்கின்றன. ஒன்றில் இதற்கு மேலும் அதிக மிருக்கவும் வாய்ப்பு உள்ளது.[2] உதாரணமாக இந்திய பெருங்கடல் சூரை மீன் குழு(இபெசூகு) இந்திய பெருங்கடலில் ஒவ்வொரு வருடமும் ஓடு கயிறு கொண்டு மீன்பிடிக்கும் கலன்களால் பிடிக்கப்படும் குறைந்தது 70,000 டன்கள் சூரை மீன் அறிவிக்கப்படாமல் உள்ளது என தெரிவிக்கிறது.[3] அட்லாண்டிக் சூரை மீன்களைப் பாதுகாக்கும் பன்னாட்டு குழு (அசூபாபகு) 1999ல் முழுமையான அட்லாண்டிக் சூரை மீன்பிடிப்பில் அதிக அளவிலான சிற்றின வகைகளில் (நீல துடுப்பு, கத்தி மீன், மற்றும் பெரிய கண்) 10 சதவிகிதத்திற்கு மேல் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு வகை என்று மதிப்பீடு செய்தது.[4] அசூபாபகு உறுப்பினர்களில் சிலர் தவறாக அறிவிப்பு செய்துள்ளதாகவும் சந்தேகம் கொள்கிறது. அட்லாண்டிக் கடல்வாழ் ஆதாரங்களின் பாதுகாப்பிற்கான குழு (அகவா ஆபாகு) 1999ல் அதன் மரபு பகுதிக்குள் பல் மீன் பிடிப்பிற்காக (Dissostichus spp) மிகுதியாக நடத்தப்படும் சஅக மீன்பிடிப்பு பற்றிய ஆழ்ந்த கவலையை தெரிவித்தது.[5] இந்த கவலையை கடல் சட்டத்திற்கான பன்னாட்டு குழுவும் எதிரொலித்தது.

எனினும், சில மண்டல சூழ்நிலைகளிலும் வெளிப்படையான முன்னேற்றம் இருந்த போதிலும் உலக அளவில் சஅக மீன்பிடிப்பின் அளவு அதிகரித்து வருகிறது. சஅக மீன்பிடிப்போர் வளர்ந்து வரும் மீன் இருப்பை குறைக்கும் முயற்சியை எதிர்த்துப் போராட ஏற்படுத்தப்பட்ட கடுமையான மீன்பிடிப்புக்கான கட்டுப்பாடுகளுக்கு இணங்குவதைத் தவிர்க்கின்றனர். உலகின் கடல் பகுதிகளில் பிடிக்கப்படும் மீன்களில் குறைந்தது கால் பகுதியேனும் சஅக மீன்பிடிப்பால் பெறப்படுபவை என சிலர் மதிப்பிடுகின்றனர். சஅக மீன்பிடிப்பு பற்றி முழுதும் நம்பக்கூடிய அளவிற்கு விபரங்கள் கிடைப்பது துரதிர்ஷ்டவசமாக மிகவும் அரிதே.

1990களின் பிற்பகுதியிலிருந்து பல பன்னாட்டு அமைப்புகள் சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட அழைப்புகள் விடுத்தன.[6] உவே அமைப்பின் மீன்வளக்குழு (மீகு) 1999ல் தனது மூன்றாவது அமர்வில், இப்பிரச்சினையை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதியது. அந்த நேரத்தில் மீன்வளக் குழுவிற்கு தெரிவிக்கப்பட்ட விபரத்தில் சஅக மீன்பிடிப்பு குறிப்பாக அதனை நடத்தும் கலன்கள் 'வசதிக்கேற்றபடி கொடிகளை' பறக்கவிடுவது வளம்குன்றாத மீன்வளத்தை அடைவதற்கு எதிராக வளர்ந்து வரும் அச்சுறுத்தல் என தெரிவிக்கப்பட்டது. அத்தகைய விபரங்களின் அடிப்படையில், மீகு சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கையைப் பரிந்துரைத்தது.[7]

---

2 பார்க்கவும் SOFIA 2000, ப. 57.

3 உவேஅ மற்றும் உவேஅ அல்லாத மண்டல மீன்வள அமைப்பு அல்லது ஏற்பாடுகள் 2வது கூட்டம் அறிக்கை, பக். 7. மேலும் பார்க்கவும் இபெசூகு தீர்மானம் 00/01 குறிப்பிடும் "ஓடு கயிறு மீன் பிடிப்பில் (அந்தப் பகுதியில்) 70 சதவிகித விபரங்கள் இபெசூ குழுவிற்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை".

4 இந்த வழிகாட்டு முறைகளின் பின் பகுதியில் விளக்கப்படும் முறைகள் சமீபகாலத்தில் சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட அசூபாபகு மேற்கொண்ட முறைகளில் தகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை எனினும், அசூபாபகு, முந்தைய வருடங்களைக் காட்டிலும் 1999/2000 வருடத்தில் குறைந்தது நீல துடுப்பு மற்றும் பெரிய கண் சூரை மீன்களுக்கான சஅக மீன்பிடிப்பின் அளவு குறைந்துள்ளது என மதிப்பிடுகிறது.

5 1999/2000க்கான அகவா ஆபாகு மதிப்பீடு முந்தைய வருடங்களைக் காட்டிலும், பல் மீன்களுக்கான சஅக மீன்பிடிப்பு குறைந்துள்ளதாக தெரிவிக்கிறது. ஆனால் இன்னும் அதிக அளவிலேயே உள்ளது. 8000 டன்னுக்கு மேலாக பிடிக்கப்படுகின்றன (பசுமை எடை) இதற்கான அதிக சந்தை மதிப்பு இதனை சஅக மீன்பிடிப்பில் முக்கிய இலக்காக செய்துள்ளது. அகவாஆபாகு உறுப்பினர்கள் இப்பிரச்சினையை தற்சமயம் குழு எதிர்நோக்கும் முக்கிய அறைகூவலாக கருதுகின்றனர். தொடரும் இத்தகைய சஅக மீன்பிடிப்பு, மீள இயலாத நிலைக்கு பல் மீன் இருப்பைக் குறைத்து விடும். மேலும் சஅக மீன்பிடிப்பில் நிகழும் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவது அதன் பல சிற்றின வகைகளை குறிப்பாக petrels மற்றும் albat rosses போன்றவற்றை இல்லாததாகச் செய்துவிடும் என்ற அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது. மேலும் விபரங்களுக்கு, பார்க்கவும் டி.ஜே. அக்நியூவின் "தென்கடலில் பல்மீனுக்கான சட்டத்திற்குப் புறம்பான கட்டுப்பாடு அற்ற மீன்பிடிப்பு மற்றும் அகவாஆபாகுழுவின் மீன்பிடிப்பை ஆவணப்படுத்தும் திட்டம்".

6 உ.ம். வளம்குன்றாத மேம்பாட்டிற்கான குழு (ஏப்ரல் 1999); ஆசியா – பசிபிக் பொருளாதார கூட்டுறவு மீன்வள செயற்குழு (ஜுலை 1999); ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை (நவம்பர் 1999); ப.க.நி. கொடி நாடு செயல்படுத்துவதற்கான துணைக்குழு (ஜனவரி 2000); ப.க.நி கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்புகுழு (மார்ச் 2000); கடல் மற்றும் கடல் சட்டம் மீதான ஐக்கிய நாடுகளின் திறந்த வெளி அசாதாரண கலந்தாய்வு முறை (மே 2000).

7 மீன்வளக்குழுவின் 23வது அமர்வு அறிக்கை ரோம், இத்தாலி, 15–19 பிப்ரவரி, 1999, பத்தி 72.

அதற்குப்பிறகு, மார்ச் 1999ல் உவே அமைப்பின் அமைச்சரவைக் கூட்டம் சஅுக மீன்பிடிப்பு அதிகரித்துவருவது பற்றி கவலை தெரிவித்தது. பன்னாட்டு சட்டங்களின் படி நாடுகளின் உரிமைகளுக்கு தீங்கு மற்றும் கட்டாயம் இல்லாது உவே அமைப்பு "சட்டத்திற்குப்புறம்பான, அறிவிக்கப்படாத கட்டுபாடற்ற மீன் பிடிப்பின் அனைத்து வகைகளையும் திறமையுடன் போராட உலகளவில் செயல்திட்டத்தை அமைக்கும் என அறிவித்தது. 'வசதிக்கு ஏற்றபடி கொடிகளை' பறக்கவிட்டு மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களையும் இது உள்ளடக்கும். நாடுகளின் தொடர்புடைய பன்னாட்டு கடல் சார் நிறுவனம் (பகநி) போன்ற பிறவற்றின் முயற்சியுடன் உவே அமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளும்."

1999 ஜுன் மாதத்தில் உவே அமைப்பின் குழு சஅக மீன்பிடிப்பு பிரச்சினையை கையாள்வதற்கு இறுக்கமான தொடர் நடவடிக்கைக்காக இந்த அறைகூவல்களை எதிரொலித்தது. நடத்தை விதித் தொகுப்பிற்குட்பட்டு பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கையை மேம்படுத்துவதன் மூலம் தொடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என தீர்மானித்தது.

ஆஸ்திரேலிய அரசு உவேஅமைப்பின் ஒத்துழைப்புடன் சட்டத்திற்குப் புறம்பான, அறிவிக்கப்படாத, கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு பற்றி வல்லுநர் கலந்தாய்வு ஒன்றை மே 15 – 19, 2000ல் சிட்னியில் ஏற்பாடு செய்தது.[8] உவேஅ தொடர்ந்து சட்டத்திற்குப்புறம்பான, அறிவிக்கப்படாத கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு பற்றிய தொழில்நுட்பக் கலந்தாய்வை அக்டோபர் 2 – 6, 2000ல் ரோமில் ஏற்பாடு செய்தது. பிப்ரவரி 22 – 23, 2001ல் ரோமில் மேலும் நடத்தப்பட்ட தொழில்நுட்ப கலந்தாய்வின் கவனமான ஆலோசனைகள், மீன்வளக்குழு அதன் 24வது அமர்வில் பரிசீலிக்க முழுமையான பசெதிந வரைவினை வழங்கியது.

மார்ச் 2, 2001ல் மீன்வளக்குழு அதன் ஏக மனதான இசைவின்படி பசெதிந–சஅக மேற்கொண்டது. இவ்வாறு செய்தமையால், மீன்வளக்குழு உவே அமைப்பின் அனைத்து உறுப்பினர்களை திறமையுடன் பசெதிந – சஅக செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள விரைவு படுத்தியது. ஜுன் 2001ல் தனது 120 வது அமர்வில் உவே அ குழு சஅக பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கையை உறுதிப்படுத்தியது. நவம்பர் 28, 2001ல் ஐக்கிய நாடுகளின் பொது சபை, அனைத்து நாடுகளையும் மிகுந்த முக்கியத்துவ அடிப்படையில் அவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து நேரடியாக ஒத்துழைத்து, மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மூலமாக பசெதிந – சஅக செயல்படுத்த விரைவு படுத்தியது. மேலும் பொருத்தமான தேசீய திட்ட நடவடிக்கைகளை மேம்படுத்தவும் துரிதப்படுத்தியது. (தேசெதிந)[9]

## 1.2 பசெதிந – சஅக பகுதிகள்

சஅக மீன்பிடிப்பின் கடினமான பிரச்சினையை திறமையான முறையில் விவரிப்பது எளிதான செயல் அல்ல. 'சஅக மீன்பிடிப்பு' என்ற வார்த்தைகள் கீழே விவரிக்கப்பட்டபடி செய்கையின் பரந்த எல்லையை விவரிக்கிறது. இயற்கையாகவே, சஅக மீன்பிடிப்பு நடத்தும் கலன்கள் அதிகமாக நகரும் நடைமேடைகளைக் கொண்டவை. கரையிலிருந்து அதிக தொலைவில் திறமையான எச்சரிக்கை கட்டுப்பாடு கண்காணிப்பு முறைகள் (எகக) குறைந்துள்ள இடங்களில் இயக்கப்படுபவை.[10] கலனில் பயன்பெறும் உரிமையாளர்கள் அக்கலன்களிலிருந்து வேறுபடும் தேசீயம் பெற்றவர்கள். மீன்வள மேலாளர்கள் மற்றும் சட்டத்தை அமல்படுத்தும் அலுவலர்கள் அவர்களது அடையாளங்களை உறுதிப்படுத்துவதை வழக்கமாக தடுப்பதில் வெற்றிகண்டவர்கள்.

---

8 சட்டத்திற்குப்புறம்பான, அறிவிக்கப்படாத மற்றும் கட்டுப்பாடு அற்ற மீன்பிடிப்பு அறிக்கையில் உள்ள வல்லுநர் கலந்தாய்வு குறித்த ஆவணங்கள்.

9 பார்க்க ஐநா பொது தீர்மானம் 56/13 பத்தி 15.

10 "எச்சரிக்கை, கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு" என்ற சொற்கள் – அல்லது எகக –மீன்வள மேலாண்மைக்கு எச்சரிக்கை கட்டுப்பாடு கண்காணிப்பு அமைப்பு மீதான உவே அமைப்பின் 1981 வருடத்திய வல்லுநர் கலந்தாய்வைத் தொடர்ந்தே சாதாரணமாக பயன்பாட்டிற்கு வந்ததாகத் தெரிகிறது.

மேலும், சஅக மீன்பிடிப்போர் தங்கள் கலன்களின் பதிவுகளை மாற்றும் இயல்பு மற்றும் பிடிக்கப்பட்ட மீன்களை பல துறைமுகங்களில் கரை இறக்குதல் போன்றவையால் இவர்கள் செல்லும் பாதையை அறிவது கடினமாகிறது.

இத்தகைய பல்வகை சவால்களால், பசெதிந – சஅக சுருக்கமான 'கருவிப் பெட்டியாக' கருதப்படுகிறது. சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க முழுமையான கருவிகளைக் கொண்டதாகக் கருதப்படுகிறது. சில நாடுகளிலேனும் தனியாகவோ அல்லது பிற நாடுகளின் ஒத்துழைப்புடனோ மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மூலமாகவோ (மமீவமேநி) ஏற்கனவே இவற்றில் சில பயன்பாட்டில் உள்ளன. அனைத்து சூழ்நிலைகளிலும் அனைத்து சாதனங்களும் செயல்படாது. எனினும், பசெதிந – சஅக மீன்பிடிப்பில் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஏற்றபடி பொருந்தக்கூடிய சாதனத்தை அறியும் வகையில் நாடுகள் இருக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் சஅக மீன்பிடிப்பை குறைக்க இயலும்.

கீழ்உள்ள பிரிவு பசெதிந – சஅக மீன்பிடிப்பின் முக்கியமான பகுதிகளை சுருக்கமாக தெரிவிக்கிறது.

*அடிப்படை சொற்றொடர்.* வரைவில் பயன்படுத்தப்பட்டுள்ள பல முக்கிய சொற்றொடர்களை பசெதிந – சஅக பிரிவு II தெளிவுபடுத்துகிறது. மீன்பிடிப்பு உடன் தொடர்புடைய 'சட்டத்திற்குப்புறம்பான', 'அறிவிக்கப்படாத' மற்றும் 'கட்டுப்பாடு அற்ற' போன்றவை தனியான குறிப்பு சொற்றொடர்கள். அவை இங்கு அப்படியே சொல்லுக்கு சொல்லாக கொடுக்கப்பட்டுள்ளன:

'**சட்டத்திற்குப் புறம்பான'** என்பது மீன்பிடிப்பு நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டது:

**(1)** நாட்டின் எல்லைக்குள் உள்ள நீர்ப்பரப்பில் தேசீய அல்லது அந்நிய கலன்களால் அந்த நாட்டின் அனுமதி இன்றி அல்லது அந்த நாட்டின் சட்ட விதிகளுக்கு மாறாக மீன்பிடிப்பு நடத்துவது;

**(2)** உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனத்தில் பங்கு கொண்ட நாட்டின் கொடியைப் பறக்கவிடும் கலன்களைக் கொண்டு ஆனால் அந்த நிறுவனம் பின் பற்றும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு மாறாக மற்றும் நாடுகள் கட்டுப்பட்டுள்ள அல்லது பொருந்தக்கூடிய பன்னாட்டு விதிகளுக்கு முரணாக நடத்துவது; அல்லது

**(3)** பன்னாட்டு விதிகளை அல்லது உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனத்துடன் ஒத்துழைக்கும் நாடு மேற்கொள்வனவற்றை சேர்த்து பன்னாட்டு கட்டாயங்களுக்கு எதிராக நடத்துவது.

**அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு** என்பது மீன்பிடிப்பு நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டது:

**(1)** தேசீய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு எதிராக உரிய தேசீய அங்கீகார அமைப்பிற்கு அறிவிக்கப்படாதவை அல்லது தவறாக அறிவிக்கப்பட்டவை; அல்லது

**(2)** நிறுவனத்தின் அறிவிக்கை செய்முறைகளுக்கு எதிராக, உரிய மீன்வள மேலாண்மை நிறுவனத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு அறிவிக்கப்படாத அல்லது தவறாக அறிவிக்கப்பட்டவை.

**கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு** என்பது மீன்பிடிப்பு நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டது:

**(1)** உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனத்தின் பயன்பாட்டில் உள்ள பகுதியில் தேசீய மற்ற கலன்களைக் கொண்டு மீன்பிடிப்பு நடத்துவது அல்லது, அந்த நிறுவனத்தில் பங்கு கொள்ளாத அல்லது மீன் பிடிக்க நிலைத்திருக்கும் உரிமையில்லாத நாட்டின் கொடியைக் கொண்ட கலன்களை கொண்டு அந்த நிறுவனத்தின்பாதுகாப்பு முறைகளுக்கு எதிராக மீன்பிடிப்பு நடத்துவது; அல்லது

(2) பரப்பில் அல்லது பயன்படுத்தக்கூடிய பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகள் இல்லாத மீன்இருப்பிற்காக அல்லது அத்தகைய மீன்பிடிப்பு நடவடிக்கைகள் பன்னாட்டு சட்டப்படி கடல்வாழ் ஆதாரங்களின் பாதுகாப்பிற்கான நாட்டின் பொறுப்புகளுக்கு பொருந்தாத முறையில் மீன்பிடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்கள்.[11]

இத்தகைய பகுதிகள் 'சஅக மீன்பிடிப்பு' என்பது பரவலான வார்த்தை என்பதனைத் தெரிவிக்கிறது. பலதரப்பட்ட மீன்பிடிப்பு நடவடிக்கைகளைக் கொண்டுள்ளது என்பதனையும் அவற்றில் பல சட்டவிரோதமானது என்பதனையும் தெரிவிக்கிறது. வரையறைப்படி, சஅக மீன்பிடிப்பு என்பது தவறானது. எந்த ஒரு மீன்பிடிப்பு நடவடிக்கையும் தெரிவிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யாததும் அல்லது தவறாக அறிவிக்கப்படுதலும் தவறே. எனினும் கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு சூழ்நிலைக்கு ஏற்றபடி தவறாகவோ அல்லது தவறின்றியோ இருக்கலாம். பசெதிந–சஅக பொதுவாக மீன்வளத்தின் குன்றாத தன்மையைப் பாதிக்கும் கட்டுப்பாடற்ற மீன்பிடிப்புடன் தொடர்புடையது.[12]

சஅக மீன்பிடிப்பு பொதுவாக தேசீய அல்லது பன்னாட்டு அளவில் பின்பற்றப்படும் பயன்படுத்தப்படக் கூடிய மீன்வள விதிகளை மீறி அல்லது குறைந்த அளவிலேனும் கவனமின்றிநடைபெறுவது என்பது வழக்கமானது.

<u>*நடத்தை விதித்தொகுப்பு மற்றும் பிற சாதனங்களுடன் தொடர்பு.*</u> சமீபகாலத்தில் மீன்வளக்குழு பின்பற்றும் பிற பசெதி நடவடிக்கை போன்று, பசெதிந–சஅக விதித்தொகுப்பின் எல்லைக்குட்பட்டு விரிவாக்கப்பட்டுள்ளது. விதித் தொகுப்பின் பல பகுதிகள் குறிப்பாக கட்டுரை 1 மற்றும் 3 தனிப்பட்ட பகுதிகள் பசெதிந–சஅக மற்றும் பிற பொருந்தக்கூடிய பன்னாட்டு சாதனங்களுக்கு இடையே உள்ள தொடர்பை விளக்குகிறது. பொதுவாக கூறினால், பசெதிந–சஅக என்பதனை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகளின் 1982 மரபு, உவே அமைப்பின் 1993 இணக்க ஒப்பந்தம் மற்றும் ஐக்கிய நாடுகளின் 1995 மீன்இருப்பு ஒப்பந்தம் ஆகியவற்றையும் சேர்த்து அனைத்து சாதனங்களுக்கும் இணக்கமான வழியில் பயன்படுத்த வேண்டும். பன்னாட்டு வர்த்தகம் குறித்த பசெதிந–சஅக மீன்பிடிப்பின் பகுதிகளையும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். உலக வர்த்தக நிறுவனத்தின் (உவநி) விதிகளுக்கு இணங்கிய வகையில் பயன்படுத்த வேண்டும்.

<u>*நோக்கம் மற்றும் கொள்கைகள்.*</u> தலைப்பு தெரிவிப்பது போல், பசெதி நடவடிக்கையின் நோக்கம் சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த மற்றும் நீக்கவே ஆகும். இந்த நோக்கங்களின் முயற்சிக்கு வழிகாட்டுதலையும் சேர்த்து கொள்கைகள்: (1) நாடுகளுக்கு இடையேயும், தொழில், மீனவ சமுதாயம் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் (அசாநி) ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு இடையேயும் பரவலாக கலந்து கொள்ளுதல் மற்றும் ஒத்துழைப்பு; (2) இயலும் வகையில் விரைவான கால அட்டவணைப்படி பசெதிந–சஅக செயல்படுத்தும் நடவடிக்கையை திட்டமிட்டு மேற்கொள்ளுதல்; (3) சுருக்கமான ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி, சஅக மீன்பிடிப்பின் அனைத்து பாதிப்புகளையும் தெரிவிப்பது (4) மீன் இருப்பின் நீண்டகால வளம் குன்றாத தன்மைக்கும் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் சீரான நிலையை நிர்வகிப்பது (5) வெளிப்படையான தன்மை; மற்றும் (6) எந்த ஒரு நாட்டிற்கும் அல்லது அதன் மீன்பிடி கலன்களுக்கும் எதிராக அமைப்பு அல்லது நடப்பில் வேறுபாடு இன்றி இருத்தல்.

---

[11] பசெதிந–சஅக, "சில கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு, பயன்படும் பன்னாட்டு சட்டத்திற்குப் புறம்பான வழியில் நடைபெறாது. இவற்றிற்கு பசெதிந–சஅக கருத்தில் உள்ள முறைகளைப் பயன்படுத்துவது தேவையற்றது என குறிப்பிடுகிறது.

[12] 'சட்டத்திற்குப்புறம்பான' மற்றும் 'அறிவிக்கப்படாத' மீன்பிடிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு மீனவர்கள் குறைகூறுவதாக தெரிவிக்கலாம். இத்தகைய தவறான நடவடிக்கைகள் முழுவதுமாக அவர்களது கண்காணிப்பிற்கு உட்பட்டதே. அவ்வாறே, மீனவர்கள் 'கட்டுப்பாடற்று' பிற மீன்பிடிப்பவர்களுக்கான விதிகளைத் தவிர்த்து, உ.ம். மறு கொடியிடுதல் அல்லது தேசிய மற்ற கலன்களைப் பயன்படுத்துவது போன்றவை தவறாக செயல்படுவதாக குறை கூறப்படுகிறது. எனினும், மீனவர்களின் இத்தகைய நடவடிக்கை தனியானதே. ஏனெனில் தொடர்புடைய நாடு அல்லது நாடுகள் கருதப்படக்கூடிய அந்த மீன்வளத்திற்கு கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்தாமையால், அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கருதுதல் இயலாது.

*நாடுகளின் பொறுப்புகள் ஒத்திருத்தல்.* கீழே விவரித்தபடி பசெதிந–சஅக தனியாகவோ அல்லது பிற நாடுகளின் ஒத்துழைப்புடனோ சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட நாடுகள் மேற்கொள்ளும் பெரிதான பல வகைப்பட்ட செய்முறைகளைக் கொண்டுள்ளது. அத்தகைய முறைகளில் சில அனைத்து நாடுகளும் பயன்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. பிற கொடி நாடுகளும் பயன்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது .பிற கொடி நாடுகளின்,கடலோர நாடுகளின் மற்றும் துறைமுக நாடுகளின்[13] பயன்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்டது. பசெதிந–சஅக மற்றொரு பிரிவு, “ பன்னாடுகள் ஏற்றுக் கொண்ட சந்தைத் தொடர்பான முறைகள்” சந்தைத் தொடர்பு நாடுகளுக்காக எழுதப்பட்டவை. மீன் மற்றும் மீன் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகளுக்கானவை. அவற்றை செயல் படுத்தும் பொழுது செய்முறைகள் ஒத்து இருப்பது வெளிப்படை.

இயன்றவரை விரைவாக ஆனால் பசெதிந–சஅக பின்பற்றுவதற்குப் பிறகான மூன்று வருட காலத்திற்குள்ளாக அதாவது மார்ச் 2004க்குள் அனைத்து நாடுகளும் ஏற்படுத்தி பின்பற்ற பசெதிந–சஅக கேட்டுக்கொள்கிறது. தேசீய செயல் திட்ட நடவடிக்கைகள் மேலும் பசெதிந சஅக நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும். மீன்வள மேலாண்மை திட்டம் மற்றும் வரவு செலவு திட்டங்களின் ஒருங்கிணைந்த பகுதியாக அதன் பகுதிகளுக்கு முழுமையான விளைவுகளை வழங்க வேண்டும். அந்த வழிகாட்டு முறைகளின் முதன்மையான நோக்கம், அத்தகை தேசெதி நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு அரசுக்கு கருத்துக்கள் வழங்குவதேயாகும். வழங்கப்பட்ட கால அட்டவணைப்படி, இயன்றவரை விரைவாக அனைத்து நாடுகளும் தேசெதி நடவடிக்கையை மேம்படுத்தும் முறைகளை விரைவில் தொடங்க வேண்டும்.

*மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள்.* பசெதிந–சஅக பல மீன்வளங்கள் குறிப்பாக நகராத மற்றும் பெரிதும் நகரும் மீன் இருப்புகள் மீவமே நிறுவனங்களால் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதனை உணர்ந்துள்ளது. அவ்வாறே மமீவமேநி சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராடுவதில் முதன்மையான பங்கு கொண்டுள்ளது. அதன் முடிவில், பசெதிந–சஅக மண்டல அளவில் பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்டு மமீவ நிறுவனங்கள் மூலம் செயல்படும் நாடுகளுக்கு வழங்குகிறது. பசெதிந–சஅக, நாடுகள் அவை உறுப்பினராக உள்ள மமீவமே நிறுவனங்களின் முறைகளால் நேரடியாக கட்டுப்படுத்தப்படுவதை உணர்கிறது. மமீவமே நிறுவனங்களில் உறுப்பினர் அல்லாத நாடுகள், அந்த நாட்டினர் மற்றும் அதன் கலன்கள், மமீவமே நிறுவனங்கள் பின்பற்றும் மீன்வள பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முயற்சிகளை வலிவற்ற தாக்கி விடாது என்பதனை உறுதி செய்யும் பொறுப்பை மேற் கொள்ள வேண்டும்.

*வளரும் நாடுகளின் தனிப்பட்ட தேவைகள்.* வளரும் நாடுகள் குறிப்பாக, வளரும் சிறு தீவு நாடுகள், மற்றும் பிற வளரும் கடலோர நாடுகள், சஅக மீன் பிடிப்பின் எதிரான விளைவுகளால் துன்புறும் நாடுகளில் அடங்கும். பசெதிந–சஅக, உவே அமைப்பு மற்றும் தொடர்பான பன்னாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் நுட்பங்கள் உதவியுடன் பொருந்தும் இடங்களில், பயிற்சி மற்றும் திறன் வளர்த்தல் ஆகியவற்றிற்கு உதவி வழங்கிட நாடுகளை அழைக்கிறது. நிதி தொழில்நுட்பம் மற்றும் பிற உதவிகளை வளரும் நாடுகளுக்கு அவை அவற்றின் பொறுப்புகளை முழுமையாக சந்திக்க பசெதிந–சஅக, பன்னாட்டு சட்டம், கொடி நாடு, கடலோர நாடு துறைமுக நாடு போன்றவற்றின் பணிகளை கடமைகள் என்ற அளவில் வழங்க பரிசீலிக்கிறது. அத்தகைய உதவி குறிப்பாக, தேசெதி நடவடிக்கையை மேம்படுத்தி செயல்படுத்தும் நாடுகளுக்கே வழங்கப்படும்.

---

[13] ‘கடலோர நாடு’ என்ற வர்த்தையை கடற்பகுதியை எல்லையாகக் கொண்ட நாடு என்று புரிந்து கொள்ளலாம். ‘கொடிநாடு’ என்ற வார்த்தையை, ஒரு நாடு அதன் எல்லைக்குள் கலனை பதிவு செய்து, அந்நாட்டின் கொடியை அக்கலனில் பறக்கவிட உரிமை வழங்கிய நாடு என்று புரிந்து கொள்ளலாம். ‘துறைமுக நாடு என்ற வார்த்தையை, ஒரு நாடு கலன் ஒன்று அதன் துறை முகத்திற்குள் வர அல்லது அடைவதற்கு அனுமதி வழங்கிய நாடு என்று புரிந்து கொள்ளலாம்.

*உவே அமைப்பின் பங்கு*. பசெதிந–சஅக நாடுகள் தனியாகவோ அல்லது பிற நாடுகளுடன் ஒத்துழைத்தோ அதனை செயல்படுத்துவதை மேம்படுத்த உவே அமைப்பு திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கிறது. பிறவற்றிற்கு இடையில், உவேஅ அதன் கூட்டம் வழங்கிய எல்லைவரை, சஅக மீன்பிடிப்பு தொடர்பான விபரங்களை சேகரிக்கிறது. தேசெதிநடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதலுக்கு ஆதரவு வழங்குகிறது. மீன்வளம் குறித்த விபரங்களை ஆவணப்படுத்துதல், சான்றிதழ் வழங்குதல் தொடர்பாக வரையறை செய்யும் வழிகளைப் பரிசீலிக்க வல்லுநர் கலந்தாய்விற்கு ஏற்பாடு செய்தது.[14] நாடுகள் மற்றும் மமீவமே நிறுவனங்களிடமிருந்து பசெதிந–சஅக செயல்படுத்துதல் பற்றிய அறிக்கைகளை உவேஅ பெறும். அவற்றை வெளியிடும். நடத்தை விதித்தொகுப்பு மீதான இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையான அறிவிக்கையின் பகுதியாக உவே அமைப்பிற்கு வழங்கப்படும்.

## 2. வழிகாட்டு முறைகளின் நோக்கம் மற்றும் வாய்ப்பு

தேசீய அரசுகள், தொடர்புடைய பன்னாட்டு நிறுவனங்கள் குறிப்பாக மண்டல மற்றும் சார் மண்டல அளவில் பசெதிந–சஅக செயல்படுத்துவதற்கு உதவிட இந்த வழிகாட்டு முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசு சாரா நிறுவனங்களுக்கும் இந்த வழிகாட்டு முறைகள் பயன்படும். மீன்வளப்பிரிவின் பிரதிநிதிகள், சுற்றுப்புறச்சூழல் நிறுவனங்கள், கல்வி மற்றும் விஞ்ஞான நிறுவனங்களும் இதில் அடங்கும்.

பசெதிந–சஅக மீன் பிடிப்பில், சஅக மீன் பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க உள்ள முறைகளை இந்த வழிகாட்டு முறைகள் ஆய்வு செய்கிறது. இந்த முறைகளை மிகவும் திறமையாக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதற்கு அறிவுரையும் வழங்குகிறது. இயலும் நிறுவனம் பற்றியும் பசெதிந–சஅக–ல் செயல்படுத்த வேண்டிய பகுதி பற்றியும், அறிவுரை வழங்குகிறது. பசெதிந–சஅக செயல்படுத்துவது பற்றி உவே அமைப்பிற்கு அறிவிக்கை பரிந்துரைகளை வழங்குகிறது. இந்த வழிகாட்டு முறைகளின் பிரிவு II பிற பகுதிகளிலிருந்து பெறப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான கையடக்கமான சரிபார்ப்பு பட்டியலைக் கொண்டுள்ளது.

இந்த வழிகாட்டு முறைகள் பசெதிந–சஅக மீன் பிடிப்பிற்கு மாற்றம் என கருதுதல் கூடாது. அல்லது விளக்கமான நூல் அல்லது பன்னாட்டு மீன்வளத்தில் பயன்படுத்தப்படுவதற்கான பிற தொடர்பான சாதனம் என கருதுதல் கூடாது. இந்த வழிகாட்டு முறைகளுக்கு சட்ட அந்தஸ்து இல்லை.

## 3. அனைத்து நாடுகளின் பொறுப்புகள்

### 3.1 பன்னாட்டு வரையறைகளை கடைப்பிடித்தல்

சஅக மீன்பிடிப்பு அமுலில் உள்ள மீன்வளப் பாதுகாப்பு மற்றும்மேலாண்மை வரையறைகளுக்கு முரண்பாடானது. பிற வார்த்தைகளில், அனைத்து நாடுகளும் முழுமையாக அந்த பன்னாட்டு வரையறைகளை செயல்படுத்தினால், சஅக மீன்பிடிப்பு மிகுந்த அளவில் குறைந்துவிடும்.

இந்த வழிகாட்டுதலில், பசெதிந–சஅக மீன் பிடிப்பில் , சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க முதல் சாதனம் அனைத்து நாடுகளையும் "பன்னாட்டு சட்டத்தின் பொருத்தமான பகுதிகளுக்கு முழுமையான செயல்பாட்டை வழங்க" கேட்டுக்கொள்வதேயாகும். இதுவரை அவ்வாறு செய்யாத நாடுகள் 1982 ஐக்கிய நாடுகளின் மரபுக்கு, 1983 உவே அமைப்பின் இணக்க ஒப்பந்தம் மற்றும் 1995 ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் ஆகியவற்றின்படி ஒப்பந்தத்தில் ஈடுபட வேண்டும். அனைத்து நாடுகளும் முழுமையாகவும் திறமையாகவும், நடத்தை விதித் தொகுப்பையும் மற்றும் தொடர்பான பசெதிந செயல்படுத்த வேண்டும்.

[14] வல்லுநர் கலந்தாய்வு சனவரி 2002ல் நடைபெற்றது. பார்க்க மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்களின், மீன்பிடிப்பு சான்றிதழ் உகந்தது ஆக்குதல் மீதான வல்லுநர் கலந்தாய்வு அறிக்கை.

மேலும், மமீவமே நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படும் மீன்வளத்தில் பங்கு பெறும் கலன்களைக் கொண்ட நாடுகள் அந்த மமீவமே நிறுவனத்தில் உறுப்பினராக வேண்டும். அல்லது குறைந்தஅளவிலேனும், அந்த மமீவமே நிறுவனம் பின்பற்றும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை தனது கலன்களில் பயன்படுத்த வேண்டும். அல்லது அந்த பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணக்கமானவற்றை பின்பற்ற வேண்டும். மீன் இருப்புகளை நிர்வகிக்கவும் பாதுகாத்திடவும் ஒத்துழைக்க தேவையெனில் நாடுகள் புதிய மமீவமே நிறுவனங்களை நிறுவிட ஒத்துழைக்க வேண்டும். இந்த வழிகாட்டு முறைகளின் பிரிவு 8 பெரிதும் விரிவான முறையில் இந்த கடமைகளை விவரிக்கிறது.

### 3.1.1 தேசீய எல்லைக்குட்பட்ட பகுதிகள்

தேசீய எல்லைக்குட்பட்ட பகுதியில், சஅக மீன்பிடிப்பு, கடல்வாழ் உயிரினங்களைப் பொறுத்தவரை கடலோர நாடுகளின் உரிமை மற்றும் பொறுப்புகள் குறித்த பன்னாட்டு வரையறைகளை அழித்து விடுகிறது. 1982 ஐக்கிய நாடுகளின் மரபு, கடலோர நாடுகள் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆதாரங்களை ஆராய, பயன்படுத்த பாதுகாக்க மற்றம் நிர்வகிக்க அவை பெற்றுள்ள முக்கியத்துவம் வாய்ந்த உரிமைகளை உணர்கிறது. அதனால்இத்தகைய உரிமைகளுடன், 1982 ஐக்கிய நாடுகளின் மரபு மற்றும் அதனைத் தொடர்ந்த சாதனங்களில் அமைத்தபடி, இந்த ஆதாரங்களை பாதுகாத்திட நிர்வகிக்க பொருத்தமான முறைகளைப் பயன்படுத்தவும் செயல்படுத்தவும் பொறுப்பு வருகிறது.

தேசீய எல்லைக்குட்பட்ட பகுதிகளில், சஅக மீன்பிடிப்பு, கடலோர நாடுகள் அப்பகுதியில் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுடன் இணக்கம் அடைவதைத் தடுக்கிறது. கடலோர நாட்டில் பதிவு செய்யப்பட்ட கலன் சஅக மீன்பிடிப்பை மேற்கொள்வது வரை எனில், அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் உரிய முறையில் மீன்வளத்தை நிர்வகித்து பாதுகாக்கும் பணி என்ற பொறுப்பை முழுமையாக நிறைவேற்றுவதில் கடலோர நாடு தோல்வி அடைந்து விட்டது என்பதனையே தெரிவிக்கிறது. கடலோர நாடு அல்லாத பிற நாட்டில் பதிவு செய்யப்பட்ட கலன் சஅக மீன்பிடிப்பை மேற்கொள்வது எனில், கடலோர நாடு சரியாக நிறுவியுள்ள மீன்வள விதிகளை மீறி கலன்கள் மீன்பிடிப்பை மேற்கொள்ளாது என்ற உறுதி அளிக்கும் பொறுப்பையும் மீறியுள்ளதை சஅக மீன்பிடிப்பு தெரிவிக்கிறது.[15]

இத்தகைய காரணங்களால் பசெதிந–சஅக கடலோர நாட்டினை அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் நடைபெறும் சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க முறைகளை செயல்படுத்த கோருகிறது. இந்த வழிகாட்டு முறைகளின் பிரிவு 5, பசெதிந–சஅக மீன்பிடிப்பின் இந்தப்பகுதிகளை மேலும் விபரமாக தெரிவிக்கிறது. சஅக மீன்பிடிப்பின் பிரச்சினைகளைத் தெரிவிக்க கடலோர நாடு மேற்கொள்ள வேண்டிய செய்முறைகளுக்கான பரிந்துரைகளையும் வழங்குகிறது.

துரதிர்ஷ்டவசமாக, பலவளரும் கடலோர நாடுகள் அவற்றின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் சஅக மீன்பிடிப்பை கண்டுபிடிக்க வாய்ப்பு மற்றும் திறமை குறைவாக உள்ளது. அத்தகைய மீன்பிடிப்போரை கைது செய்யவோ அவர்களுக்கு அபராதம் விதிக்கவோ தேவைப்படும் ஆற்றல் இல்லை. இத்தகைய காரணங்களால் பசெதிந–சஅக அனைத்து நாடுகளையும் கடலோர நாடுகள் அவற்றின் எல்லையில் நடைபெறும் சஅக மீன்பிடிப்பை தடுக்க தேவையான ஆற்றலை மேம்படுத்துவதில் வளரும் கடலோர நாடுகளுக்கு உதவ

---

[15] இந்த பிரச்சினையின் தீவிரத்தை அடிக்கோடிட்டு தெரிவிக்க ஐக்கிய நாடுகளின் பொதுசபை 1994 டிசம்பர் 19ல் தீர்மானம் 49/116ஐ ஏற்றுக்கொண்டது. அத்தீர்மானத்தில் அது நாடுகளை, பிற நாடுகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவற்றின் கொடியுடன் மீன்பிடிக்க எந்த கலனுக்கும் உரிமை இல்லை. உரிய கடலோர நாடு அல்லது நாடுகளின் உரிய அலுவலரின் அங்கீகாரம் இன்றி மீன்பிடிக்கக் கூடாது. மேலும் அத்தகைய மீன்பிடிப்பும் அங்கீகாரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு இணக்கமாகவே நடத்தப்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறது.

கேட்டுக்கொள்கிறது. இந்த வழிகாட்டு முறைகளின் பிரிவு 9 பசெதிந–சஅக–ன் இந்தப் பகுதிகளை மேலும் விரிவாக விளக்குகிறது.

### 3.1.2 ஆழ்கடல்

ஆழ்கடலிலும் சஅக மீன்பிடிப்பு பன்னாட்டு வரையறைகளுக்கு எதிராக நடைபெறுகிறது. 1982 ஐக்கிய நாடுகளின் மரபு அனைத்து நாடுகளுக்கும் தங்கள் நாட்டவர் ஆழ்கடலில் மீன்பிடிக்க உரிமை பெற்றுள்ளதை உணர்கிறது. இந்த உரிமையை பல முக்கியத்துவம் வாய்ந்த தகுதிகளுடன் அமைக்கிறது. ஆழ்கடலில் கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பு மற்றும் பிற நாடுகளுடன் ஒத்துழைப்பு போன்றவை இதனுள் அடங்கும். இதனைத் தொடர்ந்து நடத்தை விதித்தொகுப்பு 1993 உவேஅ இணக்க ஒப்பந்தம் மற்றும் 1995 ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் போன்றவையும் இந்த அடிப்படை வரையறைகளை விரிவாக்குகிறது. குறிப்பாக கொடி நாடுகளின் பொறுப்புகளை குறித்து தெரிவிக்கிறது. இச்சாதனங்களில் பிரதி பலிக்கும் கொடி நாடுகளின் பொறுப்புகளிடையே மூன்று அடிப்படையான விதிகள் உள்ளன. அவை முழுமையாக செயல்படுத்தப்பட்டால், ஆழ்கடலில் சஅக மீன்பிடிப்பு குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துவிடும்:

- கொடி நாடுகள் அவற்றின் கலன்கள் தங்கள் கலன்கள் இயக்கப்படும் ஆழ்கடல் பரப்பில் பயன்பாட்டில் உள்ள மீன்வள பாதுகாப்பு மற்றும் நிர்வகிப்பு முறைகளை அழித்து விடாது என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.
- கொடி நாட்டில் மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்டால் அன்றி, கலன் ஆழ்கடலில் மீன் பிடிக்காது.
- கொடிநாடு ஒரு கலனுக்கு அத்தகைய அங்கீகாரத்தை, அக்கலன் இயக்கப்படும் ஆழ்கடல் பரப்பில் பயன்பாட்டில் உள்ள மீன்வளப் பாதுகாப்பு மற்றும் நிர்வகிப்பு முறைகளை அழித்து விடாது என்பதனை உறுதி செய்யாத வரை, வழங்காது.

ஆழ்கடலில் அவற்றின் கலன்களின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளுக்கான கொடிநாடுகளின் தொடக்க பொறுப்புகளை பல பன்னாட்டு சாதனங்கள் ஒப்புக் கொள்கின்றன. எனினும், பல கொடி நாடுகள், அத்தகைய பொறுப்பை நிறைவேற்ற செயல் அளவில் முயற்சி ஏதும் மேற்கொள்வதில்லை. சில நாடுகள், அந்த நாட்டிற்கு சரியான தொடர்பு இல்லை எனினும் அதன் எல்லைக்குள் கலன்களை அனுமதித்து பதிவு செய்கிறது.[16] பல நிகழ்வுகளில் உண்மையான அல்லது பயன் பெறும் கலனின் உரிமையாளர் பிற நாட்டினரைச் சேர்ந்தவராய் இருப்பர். அவ்வாறே கலன் ஓட்டுபவர் மற்றும் கலனில் பணிபுரிவோரும் இன்னும் சில நாடுகளைச் சார்ந்தவர்களாக இருப்பர். கலனும், கொடி நாட்டின் எல்லைக்குட்பட்ட பகுதிக்கு அரிதாகவே வருகைதரும். அக்கலன் பிடிக்கும் மீன்களும் கொடிநாட்டில் விற்பனை செய்யப்படுவதில்லை (அல்லது கொடிநாட்டின் மூலம் கப்பலுக்கு மாற்றப்படுவதில்லை) மிகவும் முக்கியமாக, அக்கலன்களை நிர்வகிக்க வெளிப்படையான திறமை கொடி நாடுகளுக்கு இல்லை. சஅக மீன் பிடிப்பிற்காக அவற்றின் மீது அபராதம் விதிக்கும் திறமையும் இல்லை. அத்தகைய கண்காணிப்புகளைத் தவிர்க்கவே, அக்கலன்கள் சரியாக அத்தகைய கொடி நாடுகளில் பதிவு செய்கின்றன.

மொத்தத்தில், சஅக மீன்பிடிப்பு ஆழ்கடல் பகுதியில் கொடி நாடுகளின் சார்பில், பன்னாட்டு சமுதாயம் அங்கீகரித்த பன்னாட்டு சாதனங்களில் பிரதிபலிக்கும் பொறுப்புகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும் என்பதில் முதல் மற்றும் முதன்மையான தோல்வியை ஏற்படுத்துகிறது. பசெதிந–சஅக இந்த வழிகாட்டு முறைகளின் பிரிவு 4ல் விவரிக்கப்பட்ட படி, விரும்பும் கொடி நாடுகளுக்கு அவற்றின் பொறுப்புகளை நிறைவேற்றிட உதவிடும் பல சாதனங்களைக் கொண்டதாகும். இந்த சாதனங்களை பயன்படுத்த விரும்பாத கொடி நாடுகளும், தங்களால் கட்டுப்படுத்த இயலாத

[16] 1982 ஐக்கிய நாடுகளின் மரபு, கட்டுரை 91.1ல் உள்ளவாறு ஒவ்வொரு நாடும் கப்பல்களுக்கு தேசீயம் வழங்கவும் அதன் எல்லையில் கப்பல்களைப் பதிவு செய்வதற்கு, அதன் கொடிகளை பறக்கவிடும் உரிமை பெறுவதற்கு நிபந்தனைகளை முடிவு செய்ய வேண்டும். கொடியைப் பறக்கவிடும் உரிமைபெற்ற நாட்டை தேசீய மாக கப்பல்கள் கொண்டிருக்க வேண்டும். கப்பல் மற்றும் நாட்டிற்கு இடையே உண்மையான தொடர்பு இருக்க வேண்டும்.

கலன்களை பதிவிலிருந்து நீக்கி, சஅக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த, நீக்க உதவலாம். அவற்றின் கலன்கள் நடத்தி வரும் சஅக மீன்பிடிப்பை முடிவுக்கு கொண்டுவர, பிற நாடுகள் மற்றும் மமீவமே நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு இணங்க சில நாடுகள் அக்கலன்களை பதிவிலிருந்து நீக்க தொடங்கிவிட்டன.

## 3.2 தேசீய சட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் செய்முறைகள்

### 3.2.1 தக்க சட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் செய்முறைகள் ஆய்வு செய்தல்

பசெதிந–சஅக செயல்படுத்துவதற்கு முந்தைய நிலையிலேயே ஒவ்வொரு நாடும், சஅக மீன்பிடிப்பு தொடர்பான அதன் தேசீய சட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் செய்முறைகளை ஆய்வு செய்ய வேண்டும்.[17] நடத்தை விதித் தொகுப்பில் கேட்டுக் கொண்டபடி, மீன்வள மேலாண்மை திட்டங்களை திருத்தி அமைத்தல், மேம்படுத்துதல் தொடர்பாக அத்தகைய ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த ஆய்வின் முக்கிய நோக்கம், சட்டமுறையை வலுப்படுத்தி, பகுத்தறிவிற்கு ஏற்றவாறு செய்தல், பசெதிந–சஅக சாதனப்பெட்டியில் உள்ள தொடர்புடைய அனைத்து சாதனங்களையும் பயன்படுத்தச் செய்தல் ஆகியவையாகும். ஆய்வு கீழ்க்கண்ட வினாக்களை கீழ்க்கண்டவாறு பரிசீலிக்க வேண்டும்.

- அனைத்து நாடுகளுக்கும் பசெதிந செயல்படுத்த ஏதேனும் கூடுதல் சட்டம் அல்லது கட்டுப்பாட்டு ஆணையம் தேவைப்படுமா அல்லது விரும்பத்தக்கதா ?
- உங்கள் கொடிகளை பறக்கவிடும் மற்றும் அல்லது உங்கள் எல்லையில் இயக்கப்படும் கலன்களின் சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க தற்போதுள்ள சஅக மீன்பிடிப்பிற்கான தண்டனைகள் போதிய அளவிற்கு கடுமையானதா ?
- அனைத்து நாடுகளுக்கும், பன்னாட்டு விதிகளின்படி மமீவமே நிறுவனத்தில் உங்கள் பங்கு மூலமானதையும் சேர்த்து உண்மையாக எடுத்துக் கொண்ட கடமைகளுக்கு உங்கள் உள்நாட்டு சட்டம் விளைவு ஏற்படுத்துமா ?
- கொடி நாடுகளுக்கு, ஆழ்கடலில் அவற்றின் கொடிகளைப் பறக்கவிட்டு மற்றும் பிற நாடுகளின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில், அக்கலன்களின் சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க சட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் செய்முறைகள் போதுமானதா ? அவற்றின் சட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் செய்முறைகள் அத்தகைய மீன்பிடிப்பு நடவடிக்கையை ஆழ்கடலில் மேற்கொள்ளும் கலன்களை கண்காணிக்க, சஅக மீன்பிடிப்பில் ஈடுபடுவோர்களை கைது செய்ய, அவர்களுக்கு தண்டனை வழங்க போதிய அடிப்படை கொண்டதா ?
- கடலோர நாடுகளுக்கு அவர்களுக்குட்பட்ட பகுதிகளில், மீன்பிடிப்பு மேற்கொள்ளும் கலன்களின் சஅக மீன் பிடிப்பை தடுக்க, நிறுத்த நீக்க அது தொடர்பான சட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் செய்முறைகள் போதுமானதா ? அவர்களின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அந்நிய கலன்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால், அத்தகைய அனுமதிக்கான ஒப்பந்தங்கள், சஅக மீன்பிடிப்பு பிரச்சினைகளைத் தெரிவிக்க வலுப்படுத்தப்பட வேண்டுமா ?
- துறைமுக நாடுகளுக்கு, அவர்களுடைய துறைமுகத்தில் இறக்கப்படும் மீன்கள் அல்லது கப்பலுக்கு மாற்றப்படும் மீன்கள், சஅக மீன்பிடிப்பால் பெறப்பட்டதல்ல என்பதனை உறுதிப்படுத்த சட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் செய்முறைகள் போதுமானதா ?
- மீன் மற்றும் மீன் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகளுக்கு, சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க வடிவமைக்கப்பட்டு பன்னாடுகளில் ஏற்றுக்

[17] அத்தகைய ஆய்வு சட்ட மாற்றங்களின் சட்டத்தை அவசியமாக்காது. ஆனால் சட்ட மாற்றங்கள் தேவைப்படுகின்ற நிகழ்வுகளில் இயன்றவரை பசெதிந–சஅக–ன் பல பிரிவுகளை செயல்படுத்த சட்ட நடவடிக்கையை உச்ச நிலைக்கு கொண்டு வருவதற்கு முன்பாக நாடுகள் முயற்சிக்க வேண்டும். இவை நீண்ட தாமதத்தை ஏற்படுத்தும்.

கொள்ளப்பட்ட செய்முறைகளைச் செயல்படுத்த சட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் செய்முறைகள் போதுமானதா ?[18]

### 3.2.2 தேசீயத்தின் மீது நாடுகளின் கண்காணிப்பு

சஅுக மீன்பிடிப்பு தொடர்ந்து இருக்கும் பிரச்சினை. அதற்கான ஒரு காரணம் தங்கள் நாட்டினரின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதில் பல நாடுகள் வெற்றி அடையவில்லை. பல நாடுகளுக்கு அவற்றை கண்காணிப்பது கடினம். பிற நாடுகளின் எல்லையில் தங்கள் நாட்டினரின் நடவடிக்கைகளைப் பற்றியும் பிற நாடுகளில் பதிவு செய்யப்பட்ட கலன்களின் நடவடிக்கை பற்றியும் தெரிந்து கொள்ளாமல் நாடுகள் உள்ளது என்பதனை ஒப்புக் கொள்ளலாம். சஅுக மீன்பிடிப்பில் ஈடுபடும் நோக்கத்திற்காக பிற நாடுகளில் தங்கள் நாட்டினர் மறு கொடியிடுவதை தடுப்பதும் கடினமாகிறது.

எனினும் பசெதிந–சஅுக அனைத்து நாடுகளையும் தங்கள் நாட்டினர் சஅுக மீன்பிடிப்பில் ஈடுபட அல்லது அதற்கு உதவிட மாட்டார்கள் என்பதனை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். அல்லது ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது. குறிப்பாக அனைத்து நாடுகளும் தங்கள் நாட்டினரில் சஅுக மீன் பிடிப்பை நடத்துபவர்கள் யார் அல்லது சஅுக மீன் பிடிப்பில் ஈடுபடும் கலன்களில் பயன் பெறுபவர்கள் யார் என்பதனை அடையாளம் காண ஒத்துழைக்க வேண்டும்.

பன்னாட்டு சட்டத்தின்படி, தங்கள் நாட்டினர் சஅுக மீன்பிடிப்பில் ஈடுபடுவதை தடுப்பதற்காக தாராளமாக சட்டம் இயற்றலாம். தேவைக்குரிய அத்தகைய நடவடிக்கை அந்நிய கலனில் நடைபெற்றாலும் அல்லது பிற நாட்டின் எல்லைக்குள் நடந்தாலும் நடவடிக்கை மேற்கொள்ளலாம். சில நாடுகள் அவ்வாறு செய்துள்ளன.[19]

உதாரணமாக ஜப்பான், அதன் நாட்டினர், அட்லாண்டிக் நீல சூரை மற்றும் தென்பகுதி நீல சூரை பகுதிகளில் இயக்கப்படும் ஜப்பானுக்கு சொந்தமானதாக இல்லாத மீன் பிடிகலன்களில் பணியாற்ற ஜப்பானிய அரசின் அனுமதி பெற வேண்டும் என்பதனை தேவையாக்குகிறது. இந்த நடவடிக்கையின் நோக்கம் அந்நிய நாட்டுக்கலன்களில் சென்று சஅுக மீன்பிடிப்பில் ஈடுபடுவதில் ஜப்பானியர்களைத் தடுப்பதே ஆகும். ஜப்பானியர் அந்நிய நாட்டு மீன்பிடிகலனில் எந்த ஒரு மீன்வளத்திற்கும் பணியாற்ற அந்த மீன்வளத்தை கண்காணிக்கும் மமீவ மே நிறுவனத்தில் அந்த கலனின் கொடி நாடு உறுப்பினராக இல்லாத நிலையில் அனுமதி மறுக்கிறது.[20] நியுசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா, குறிப்பான அடிப்படை பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நாடுகளில் பதிவு செய்யப்படும் அந்நிய நாட்டுக் கலன்களில் தங்கள் நாட்டினர் பணியாற்றும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகிறது.

அமெரிக்காவில், லேசி சட்டத்தின்படி, அதன் எல்லையில் "இறக்குமதி, விற்பனை போக்குவரத்து, பெறுதல், அடைதல், வைத்திருத்தல் அல்லது எந்த மீனையும் வாங்குதல்...

பெற்றிருத்தல், வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் எந்த ஒன்றையும் மீறி.... அந்நிய... சட்டம், ஒப்பந்தம் அல்லது கட்டுப்பாடு" சட்டத்திற்கு முரணானது. எனவே, அந்நிய நாட்டுக்கலனில் இருந்து சஅுக மீன்பிடிப்பில் சில நடவடிக்கைகளில் ஈடுபடும் அமெரிக்க நாட்டினருக்கு எதிராக வழக்கு தொடரலாம்.[21]

---

18 சஅுக மீன்பிடிப்பு குறித்த பரந்த சட்டங்கள் இயற்றிட கருத்துரைகளுக்கு பார்க்கவும் ''வளம்குன்றாத மீன் வளத்திற்கான சட்டங்கள்: உவே அமைப்பின் 1993 இணக்க ஒப்பந்தம் மற்றும் ஐக்கிய நாடுகளில் 1995 மீன் இருப்பு ஒப்பந்தம் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான வழிகாட்டி'' வில்லியம் எடிசன், டேவிட்ப்ரீஸ்டோன், மற்றும் எல்லி குட்மண்ட்ஸ் டாட்டிர்.

19 மேலும் விவரங்களுக்குப் பார்க்கவும். ''சஅுக மீன்பிடிப்பை தெரிவிக்க சாதனங்கள்: தற்போதைய சட்ட சூழ்நிலை'' வில்லியம் எடிசன்.

20 பார்க்கவும் ''சூரை பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளின் திறமையை குறைக்கும் தனிப்பட்ட மீன்பிடிகலனுக்கு எதிரான ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுப்பதின் முக்கியத்துவம்'' மாசாயுகி கோமாட்சு.

21 பார்க்கவும் ஐக்கிய நாடுகளின் விதித்தொகுப்பு. தலைப்பு 16, அத்தியாயம் 53. லேசி சட்டம், சஅுக மீன்பிடிப்பை ஈடுபடுத்தும் பிற சூழ்நிலைகளில் எவ்வாறு பின்பற்றப்படுகிறது என்பது பற்றி மேலும் அறிய பார்க்கவும் ''சஅுக மீன்பிடிப்பை எதிர்த்துப்போராட தேசீய சட்டம் தேர்வு செய்யும் உரிமை'' ப்ளைஸ் குயிம்லங்கம்.

நாடு தொடர்பானவற்றை கண்காணிக்க பசெதிந–சஅக– ல் உள்ள கடமைகளை பூர்த்தி செய்ய அனைத்து நாடுகளும் இவ்வாறு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதை பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறே கீழ்க்கண்டவற்றை மேற்கொள்ளவும் பரிசீலனை செய்ய வேண்டும்:

- ஒவ்வொரு நாடும், அதன் நாட்டினர், எந்த ஒரு நாட்டின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை குறித்த சட்டத்தை மீறுவதை அல்லது ஒரு மமீவமே நிறுவனத்தை மேற்கொள்ளும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளின் திறமையை அழிப்பதை, தனது விதிகளை மீறும் செயலாகக் கருத வேண்டும்.[22]
- சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் நாட்டினருக்கு எதிரான அனுமதி உள்ளடக்குவது உதாரணமாக, அபராதம், மீன்பிடிகலனை, சாதனங்களை பறிமுதல் செய்தல், எதிர்காலத்தில் மீன்பிடி உரிமம் வழங்க மறுத்தல்.[23]
- ஒவ்வொரு கொடி நாடும், அந்த நாட்டினர் மீன்பிடி கலன்களுக்கு மறு கொடியிடுவதை எதிர்த்துப் போராட நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது தொடக்கமாக புதிய கலன்களை மமீவமே நிறுவனங்கள் அதன் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளின் திறனை அழிக்கும் நாடு என அடையாளம் காணப்பட்ட நாடுகளில் பதிவு செய்வதை எதிர்த்துப் போராட வேண்டும்.[24] தேசீய பதிவேடுகளில் கலனை நீக்குவதை கண்காணித்தல், மீன் பிடிகலனின் ஏற்றுமதியைக் கண்காணித்தல்,[25] விளம்பரமுகாம்கள் மூலமாக, அவ்வாறு அடையாளம் காணப்பட்ட நாடுகளை கலன்களின் உரிமையாளர்கள் அறிய செய்தல் போன்றவை அத்தகைய நடவடிக்கைகளில் அடங்கும். அவ்வாறு அடையாளம் காணப்பட்ட நாடுகள், அத்தகைய நாடுகளில் அனுமதி வழங்குவதற்கும் அல்லது அத்தகைய நாடுகளில் பதிவு செய்யப்பட்ட கலன்கள் தொடக்கநிலை கொடி நாட்டில் மீண்டும் பதிவு செய்வதற்கும் தடை செய்யப்படுகிறது.
- பசெதிந–சஅக–ன் பத்தி 73 மற்றும் 74ல் விவரிக்கப்பட்ட படி, ஒவ்வொரு நாடும் அந்நாட்டினர் (அவ்வாறே அவர்கள் எல்லையில் உற்ற பிறநபர்) ஆகியோர் சஅக மீன்பிடிப்பின் தீங்கு உண்டாக்கும் விளைவுகளை நன்கு அறிந்துள்ளனர் என்பதனை உறுதி செய்ய வேண்டும். சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளோருடன் அவர்கள் தொடர்பு கொள்வதை கைவிடச் செய்வதற்கு வழிகளைக்காண வேண்டும்.

---

22 அத்தகைய சட்டத்தை கீழ்க்கண்டவாறு அமைக்கலாம் ஒரு நபர் எல்லைகுறித்த (நாட்டின்) – (அ) அவர் அல்லது அவளுடைய சொந்த பொறுப்பில் அல்லது பங்குதாரராக அல்லது பிரதிநிதியாக, பிறரின் பணியாளராக, நிலம், இறக்குமதி, ஏற்றுமதி, போக்குவரத்து, விற்பனை, பெறுதல், அடைதல் அல்லது வாங்குதல் போன்றவை அல்லது
(ஆ) அவர்சார்பாக ஒரு நபரை செயலாற்ற அனுமதித்தல் அல்லது காரணமாகுதல் அல்லது மீன்பிடிகலனைப் பயன்படுத்துதல், இறக்குதல், இறக்குமதி, ஏற்றுமதி, போக்குவரத்து, விற்பனை, பெறுதல், அடைதல் அல்லது வாங்குதல், பிடிக்கப்பட்ட ஏதேனும் மீன், வைத்திருத்தல், அனுப்பப்படுதல் அல்லது விற்பனை செய்தல். பிறநாட்டின் சட்டத்திற்குப் புறம்பாக அல்லது மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனத்தால் பின்பற்றப்படும் பாதுகாப்பு மேலாண்மை முறைகளின் திறமையை ஏதேனும் ஒரு வகையில் அழித்தல் போன்றவை குற்றங்களாகும். இதற்கு மேற்படாது (பணத்தின் மதிப்பை சேர்க்கவும்) அபராதம் கட்ட வேண்டும் என்ற சட்டத்திற்கு கட்டுப்பட வேண்டும்.

23 ஸ்பானிஷ் சட்டம், உதாரணமாக, வசதிக்கேற்றவாறு கொடியை பயன்படுத்தும் கலனில் செய்யும் சில குற்றங்களுக்காக, கலனின் தலைவர் உரிமத்தை ஐந்து ஆண்டுகள் வரை தற்காலிகமாக நீக்கி வைக்க வகை செய்கிறது.

24 பார்க்கவும் நன்னீரில் இனவிருத்தி செய்யும் கடல் மீன் இருப்புகளை வடக்கு பசிபிக் கடலில் பாதுகாப்பதற்கான மரபுகள் கட்டுரை 11 (13) ("ஒவ்வொரு குழுவும் அதன் சட்டம் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்ட கலன்கள் இந்த மரபின் பகுதிகளுக்கு இணங்கி இருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு பதிவுகளை மாற்றம் செய்வதை தடுப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கும்")

25 ஜப்பான் உதாரணமாக 1999 லிருந்து பெரிய அளவில் ஒடு கயிறில் சூரை மீன்பிடிக்கும் கலன்களை ஏற்றுமதி செய்ய பெறப்படும் கோரிக்கைகளை நிராகரிக்கிறது. மேலும், ஜப்பான், தொழில் வழியாக சீனாவில் தைவான் சொந்தமாக்கிக் கொண்ட குறிப்பிட்ட சில ஜப்பானிய கலன்களை உடைத்து விடுவதற்கு முயற்சி செய்தது. அங்கு கட்டப்பட்ட பிறவற்றையும் பதிவு செய்ய, அங்கு கண்காணிக்கப்பட, உடைத்து விட ஏற்பாடு செய்தது.

### 3.2.3 தேசீய மில்லாத கலன்கள்

தேசீயமற்று கலன்கள் மேற்கொள்ளும் சஅக மீன்பிடிப்பின் பங்கு குறித்த விபரங்கள் நம்பக்கூடிய அளவிற்கு இல்லை எனினும், நிகழ்ச்சிகளின் சாட்சியம், குறிப்பிடத்தக்க அளவிற்கு அக்கலன்களே பொறுப்பு ஆகும் என்பதனைத் தெரிவிக்கிறது. சில நிகழ்வுகளில், கேள்விக்குரிய கலன்கள், கலன்கள் உண்மையிலேயே தேசீயமற்று உள்ளன. உரிய முறையில் பதிவு செய்யப்பட்டவையும் அல்ல. எனவே எந்த நாட்டின் கொடிகளையும் பறக்க விடுவதற்குரிய உரிமையும் இல்லை. பிற நிகழ்வுகளில் கேள்விக்குரிய அத்தகைய கலன்கள் தேசீயமற்ற கலன்களாகக் கருதப்படுகின்றன. (அதாவது தேசீய மற்ற கலன்களுக்கு சமமாக கருதப்படுகின்றன) ஏனெனில் அவை இரண்டு அதற்கு மேற்பட்ட நாடுகளின் கொடிகளை அவற்றின் வசதிக்கு ஏற்றாற்போல் பயன்படுத்திக் கொண்டு பயணம் செய்யும்.[26]

பசெதிந–சஅக அனைத்து நாடுகளையும் ஆழ்கடலில் சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் தேசீயமற்ற கலன்கள் குறித்த பன்னாட்டு சட்டத்திற்கு இணக்கமாக இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அனைத்து நாடுகளையும் கேட்டுக்கொள்கிறது.[27] அத்தகைய கலன்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டியது மிகவும் முதன்மையானதாகும். ஏனெனில் நாடு இன்றி இருக்கும் அவர்கள் தன்மை ஆழ்கடலில் கொடி நாட்டின் எல்லை மூலமாக மீன்பிடிப்பு நடவடிக்கையை கண்காணிக்கும் தொடக்க வழிகளை பயன் அற்றது ஆக்கிவிடும். இத்தகைய கட்டுப்பாட்டு முறைக்கு முரணாக தேசீயமற்ற கலன் இயக்கப்படுகிறது.

சில நாடுகளிலேனும், ஆழ்கடலில், தேசீயமற்ற கலன், ஏதேனும் ஒரு நாட்டின் எல்லைக்கேனும் உட்படுதல் வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளன.[28] இக்கருத்தில் எந்த ஒரு நாடும், ஆழ்கடலில் சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் தேசீயமற்ற கலன் மீது அபராதம் விதிக்கலாம். உதாரணமாக கனடா நாட்டின் கடலோர மீன்வள பாதுகாப்பு சட்டம், மமீவமே நிறுவனம் நிர்வகிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பகுதிகளில் தேசீயமற்ற கலன்கள் மீன்பிடிப்பது குற்றமாகக் கருதப்படுகிறது. அப்பகுதிகளில் தேசீயமற்ற கலன்கள் காணப்பட்டால் கனடா நாட்டின் மீன்வள பாதுகாப்பு அலுவலர்கள், அச்சட்டம் வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்துவர் (உ.ம். கலனுக்குள் செல்லுதல், ஆய்வு செய்தல், கைப்பற்றுதல், கைது செய்தல்) பொருந்திய வகையில், அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டநடவடிக்கைகளை தொடருவர்.[29] 2001ல் நார்வே இந்த அணுகுமுறைக்கு சமமாக தனது சட்டத்தை திருத்தியது.[30] அவ்வாறே வடக்கு பசிபிக் கடலில் salmon மீன்பிடிப்பில் ஈடுபடும் தேசீயமற்ற கலன்களுக்கு எதிராக அமெரிக்காவும், சட்டத்தை அமுல்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. (கைப்பற்றுதல், வழக்கு தொடர்தல், அபராதம் விதித்தல்)

தேசீயமற்ற கலன்களால் நடைபெறும் மீன்பிடிப்பு, மமீவமே நிறுவனங்கள் பயன்படுத்தும் முழுமையான தன்மையை அச்சுறுத்துகிறது. சில மமீவமே நிறுவனங்கள், இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு பதில் அளிப்பது போல், அதன் உறுப்பினர்களை தேசீயமற்ற கலன்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியுள்ளது. உதாரணமாக அசூபாபகு சட்டத்தால் பிணைக்கும் முறையைப் பயன்படுத்தியது. 1998 முதல் இது அமுலில் உள்ளது. அது வழங்கும்தகுந்த பகுதி:

---

26 பார்க்கவும் 1982 ஐக்கிய நாடுகளின் மரபு கட்டுரை, 91 மற்றும் 92.

27 பசெதிந–சஅக, தேசீய வல்லைக்குட்பட்ட பகுதிகளில் தேசீயமற்ற கலன்களை சஅக மீன்பிடிப்பை மேற்கொள்வதை வெளிப்படையாக குறிப்பிடாது. எத்தகைய நிகழ்விலும் கேள்விக்குரிய கடலோர நாடு, அத்தகைய மீன்பிடிப்பிற்கு தண்டனை வழங்க எல்லை கொண்டுள்ளது.

28 ஒப்பன்ஹெய்ம் நாடுகள், ஆழ்கடல் மீதான ஆர்வத்தில், ஒரு நாட்டின் கொடியோடு பயணம் செய்யாத கலனுக்கு எந்த ஒரு பாதுகாப்பும் இருக்காது. தேசீயத்துடன் நாட்டின் கொடியுடன் பயணம் செய்யும் கலன்களுக்கு மட்டுமே, அதாவது நாட்டில் உரியவாறு பதிவு செய்தல் நாட்டின் கொடியை பறக்க விடுவதற்கான உரிமை – ஆழ்கடலின் சுதந்திரத்தன்மையை உணர்தல் பார்க்கவும் லாவ்டர்பச், எச்.(பதி) ஒப்பன் ஹெய்ம்ன் பன்னாட்டு சட்டம், 7வது பதிப்பு, தொகுதி.1, 261, ப. 546

29 கடலோர மீன்வள பாதுகாப்பு சட்டத்தை காண்பதற்கு: http://laws.justice.ge.ca/en/C-33/index.html.

30 ஜுன் 21 , 2001ல் நார்வே அதன் கடல் மீன்வள சட்டத்தை, ஆழ்கடலில் மீன்பிடிப்பு ஒழுங்கு மீறல்களில் ஈடுபடும் நாடற்ற கலன்கள் மீது வழக்கு தொடர நார்வேயின் அதிகார முடையோருக்கு ஏதுவாக, திருத்தியது.

தேசீயமற்ற கலன் (நாடற்றது) அசூபாபகு சிற்றின வகைகளுக்கு மீன்பிடிப்பது கண்பார்வைக்கு தெரிந்தால் பார்த்த கலன் அல்லது வானூர்தியின் ஒப்பந்த குழுவின் உரிய அதிகார முடையவருக்கு உடனடியாக தெரிவிக்கப்பட வேண்டும். அசூபாபகு சிற்றின வகைகளை ஆழ்கடலில் இலக்காக கொண்டுள்ள அந்த கலன் நாடற்றது என்ற சந்தேகம் கொள்வதற்கு போதிய அடிப்படை உள்ளதா என்பதற்கு ஒப்பந்தக்குழு அக்கலனில் ஏறி கலனை சோதனை செய்யலாம். சாட்சியத்திற்கான ஆதாரம் இருந்தால் ஒப்பந்தக்குழு தகுதியான நடவடிக்கைபன்னாட்டு சட்டத்திற்கு இணங்க எடுக்கலாம். எந்த ஒரு ஒப்பந்தக்குழுவும், நாடற்ற கலனை பார்த்தது பற்றி அறிக்கை பெறப்பட்டால் அல்லது அக்கலன் மீது நடவடிக்கை மேற்கொண்டால் உடனடியாக அசூபாபகுழுவின் செயலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். அது பிற அனைத்து ஒப்பந்தக்குழுவிற்கும் தெரிவிக்கவும், மேலும், ஒத்துழைப்பையும் பிற தகுதியான நடவடிக்கைகளை எளிதாக்கவும் ஒப்பந்தக்குழுக்கள் தொடர்பு முனைகளை நிறுவ ஊக்கப்படுத்தப் படுகின்றன.[31]

ஆழ்கடலில் தேசீயமற்ற கலன்கள் மேற்கொள்ளும் சஅக மீன்பிடிப்பை தடுக்க, அனைத்து நாடுகளும், அத்தகைய கலன்களின் நடவடிக்கை பற்றிய தகவல்கள் அதனைப் பார்த்த விபரங்கள், மீன் இறக்கப்பட்ட அல்லது வர்த்தகத்திலிருந்து பெறப்பட்ட விபரங்கள் ஆகியவற்றை பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும்.

### 3.2.4 மான்யங்கள் மற்றும் பொருளாதார உதவிகளை நீக்குதல்

சில நாடுகள் மான்யம் மற்றும் பிற பொருளாதார உதவிகளை மீன்பிடிப்பு நடவடிக்கைகளுக்கு வழங்குகிறது. அத்தகைய உதவி அல்லது அது சஅக மீன்பிடிப்பிற்கு பயன்படுத்தப்பட்டால், நாடுகள் அத்தகைய உதவிகளை உடனடியாக நிறுத்தி விட வேண்டும்.

இதனைப் பொறுத்த வரையில் மீன்பிடிக்கும் திறன் மீதும் பசெதிந சில கடமைகளை மான்யங்கள் மற்றும் பிற பொருளாதார உதவிகள் குறித்து கொண்டுள்ளது. குறிப்பாக, பசெதிந அனைத்து நாடுகளையும், மான்யங்கள் மற்றும் பொருளாதார உதவிகளை உள்ளடக்கிய அனைத்தையும் குறைத்து படிப்படியாக நீக்கிட அனைத்து நாடுகளையும் கேட்டுக் கொள்கிறது. இவை அளவிற்கு மீறிய வகையில் மீன்பிடித்திறனை வளர்க்க உதவுகிறது. இவ்வாறு, இவை கடல்வாழ் உயிரின ஆதாரங்களின் வளம் குன்றாத தன்மையை அழிக்கிறது. இத்தகைய கடமையை செயல்படுத்தும் பொழுது, தேசீய மற்றும் பன்னாட்டு அளவில் போதுமான பணி தேவைப்படுகிறது. அவற்றில் சில ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.[32]

---

31 கப்பலுக்கு ஏற்றுதல் மற்றும் கலன்கள் பார்வையில் படுதல் மீதான பரிந்துரை 97–11. அவ்வாறே ஒப்பந்தமற்ற குழுவின் கலன்களின் இணக்கத்தை மேம்படுத்தும் திட்டம், வகிஅமீவ நிறுவிய பரிந்துரைகள் வழங்குவதாவது "கண்காணிக்கப்படும் பகுதிக்குள் காணப்படும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள கலன், நாடற்றது என்று சந்தேகிப்பதற்கு போதுமான அடிப்படை இருப்பின், வகிஅமீவ நிறுவன ஒப்பந்தக் குழு கலனில் ஏறிச் சென்று கலனை ஆய்வு செய்யலாம். சாட்சியத்திற்கான ஆதாரம் இருந்தால் பன்னாட்டு சட்டத்திற்கு இணங்க உரிய நடவடிக்கையை வகிஅமீவ ஒப்பந்தக் குழு மேற் கொள்ளலாம். எல்லையைப் பயன்படுத்த நாடுசார்ந்த முறைகளின் தகுதியைப் பரிசீலிக்க ஒப்பந்தக்குழுக்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்."

32 2001 நவம்பர் 14ல் டோகாவில் பின்பற்றப்பட்ட உவநிறுவன அமைச்சு அறிவிக்கை பத்தி 28, மீன்வளம் மீதான மான்யங்கள் மீதான உவநி பிரிவுகளை மேம்படுத்த, தெளிவு படுத்த பேச்சு வார்த்தைக்கு சம்மதித்தது அறிவிக்கையின் 32வது பத்தி வர்த்தகம் மற்றும் சுற்றுப்புறச்சூழ்நிலை மீதான உவ நிறுவன குமு அதன் வருங்காலத்திய பணிகளில் குறிப்பான கவனம் செலுத்த ஊக்கப்படுத்துகிறது. அத்தகைய நிலையில் (மீன்வளத்திற்கு மான்யம் குறித்த நிலைகளையும் சேர்த்து) வர்த்தக கட்டுப்பாடுகளை நீக்குதல் அல்லது குறைத்தல், மாற்றுதல் போன்றவை வர்த்தகத்திற்கு சூற்றுப்புறச்சூழ்நிலைக்கு மேம்பாட்டிற்கு பயன் அளிக்குமா என்பதற்கு ஏற்ப கவனம் செலுத்த வேண்டும். உவேஅ மற்றும் பொஒமேநி போன்றவற்றையும் சேர்த்து பிற பன்னாட்டு நிறுவனங்களின் சமீபத்திய கலந்துரையாடல், மீன்வள மான்யங்கள் மீதான பிரச்சினை குறித்த பணியினைத் தொடர்வது, உவ நிறுவனத்திற்குள் இம் முயற்சிகளுக்கு ஆதரவு தரும்.

நாடுகள் உடனடியாக சஅக மீன் பிடிப்பிற்கான அரசின் அனைத்து வகை பொருளாதார உதவிகளையும் நிறுத்த வேண்டும். சஅக மீன் பிடிப்பை மேற்கொள்வோர்க்கு உதவுவதைத் தொடர்வது நாடுகளுக்கு எந்த வகையிலும் நியாயமானது அல்ல.

### 3.2.5 எச்சரிக்கை கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு

சஅக மீன்பிடிப்போர் வெற்றி பெறுவதற்காக அவர்களைக் கண்டுபிடிக்க இயலாதபடி தப்பிச் சென்றுவிடுவர். மேலே குறிப்பிட்டவாறு சஅக மீன்பிடிப்பு கலன்களை இயக்குபவர்கள், அடிக்கடி மீன்பிடிப்பு நடவடிக்கைகளை எகக இல்லாத பகுதிகளிலேயே மேற்கொள்வர். குறிப்பாக வெகு தொலைவில் உள்ள ஆழ்கடலில், அல்லது கடலோர நாடுகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதுவும் குறிப்பாக அத்தகைய மீன்பிடிப்பை நிறுத்தக்கூடிய அளவிற்கு திறமையில்லாத வளரும் நாடுகளின் பகுதிகளில் மேற்கொள்வர். கலனின் உரிமையாளர்கள் கண்டுபிடிக்கப்படுவதை வஞ்சகமான முறைகள் மூலமாக தவிர்த்து விடுவர். உதாரணமாக, விரிவான கடினமான, இணைக்கப்பட்ட ஏற்பாடுகள் மூலமாக விசாரணை செய்பவர்களுக்கு தடை ஏற்படுத்துவர். கலன்களின் பெயர்களையும் அழைப்பு அடையாளங்களையும் மீண்டும் மீண்டும் மாற்றிக் கொள்வர். பதிவேடுகளை நிர்வகிப்பதை தொடரும் நாடுகளில் வழக்கமாக மறு கொடியிடுவர்.

ஆழ்கடலில் தேசீய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எகக திறனில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் அதன் திறமையான செயல்பாடு சஅக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த, நீக்க போதிய நம்பிக்கையை அளிக்கிறது. அதிர்ஷ்டவசமாக சமீபகாலத்தில் நாடுகள் பல எகக சாதனங்களை மேம்படுத்தியுள்ளது. அவற்றை வலிமைப்படுத்தியும், குறைகளை நீக்கியும் புதுமைப்படுத்தியுள்ளது. நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மமீவமே நிறுவனம் மற்றும் பிற அதிக அசாதாரண வலைப்பணி மூலமான ஒத்துழைப்பையும் சேர்த்து அனைத்தும் சமீப காலங்களில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக மீன்வளம் குறித்த எச்சரிக்கை, கண்காணிப்பு, கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்காக ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புக்கான பன்னாட்டு வலைப்பணியில் பங்கு கொள்வதை நாடுகள் பரிசீலிக்க வேண்டும். இந்த நடவடிக்கைகள் பெட்டி 1ல் விவரிக்கப்பட்டுள்ளன.

எகக திறமையை மேம்படுத்த நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பிற்கு பிற சமீபத்திய உதாரணங்கள் உள்ளன. தென்பசிபிக் பகுதியில் மீன்வளத்தில் கண்காணிப்பு மற்றும் சட்டத்தை அமுலாக்குதல் மீதான ஒன்று நியு ஒப்பந்தம் ஆகும். கலனில் ஏறிச் சென்று பார்த்தல், ஆய்வு செய்தல், கலனை கைப்பற்றுதல் ஆகியவை உள்ளிட்ட மீன்வள கண்காணிப்பு மற்றும் சட்டத்தை அமுல் படுத்தும் நடவடிக்கைகளுக்கு தங்கள் சொத்துக்களைப் பங்கிட்டு கொள்ள அனுமதிக்கிறது.[33] பல பிற நாடுகளுடன் நார்வே ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது. கடலில் மேற்கொண்ட ஆய்வுகளுக்கான விபரங்கள், துறைமுகக் கண்காணிப்பு பற்றி விபரங்கள், பணியாளர் மற்றும் பயிற்சி விபரங்கள் ஆகியவற்றை பரிமாற்றம் செய்து கொள்ள வகை செய்கிறது.[34]

பசெதிந –சஅக மீன்பிடிப்பு பத்தி 24 மற்றும் பிற தொடர்பான பகுதிகள், சஅக மீன்பிடிப்பிற்கு எதிராகப் பயன்படுத்த பல விதமான எகக சாதனங்களை விளக்குகிறது. கலன் எச்சரிக்கை அமைப்பு (களஅ) “கறுப்பு” மற்றும் “வெள்ளை” பட்டியல்களை நிர்வகித்தல் போன்றவை (ஆனால் எல்லையற்றவை) இதனுள் அடங்கும்.[35] மமீவ மே நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில்

---

[33] இந்த ஒப்பந்தத்தின் விரிவான விபரங்களுக்கு, பார்க்கவும் ‘‘சட்டத்திற்குப்புறம்பான, அறிவிக்கப்படாத கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு : வளரும் நாடுகளுக்கான பரிசீலனைகள்’’ – டிரான்பார்ம் அகோரவ்.

[34] பார்க்கவும் ‘‘சஅக மீன்பிடிப்பை எதிர்த்துக் போராட துறைமுக நாடு பின்பற்ற வேண்டிய முறைகள்’’ – டெர்ஜி லோபட்ச்

[35] இந்நிலையைப் பொறுத்தவரை ‘கறுப்பு’ பட்டியல் என்பது சஅக மீன்பிடிப்பிற்கு பயன்படுத்த தீர்மானிக்கப்பட்ட கலன்களின் பட்டியலைக்குறிக்கும் என்பதை நாடுகளையும் சேர்த்து, புரிந்து கொள்ள வேண்டும். ‘வெள்ளை’ பட்டியல் என்பது தகுந்த தேசீய (அல்லது மண்டல) அதிகார முடையவர்களால் வழங்கப்பட்ட பகுதியில் மீன்பிடிக்க அங்கீகாரம் அளிக்கப்பட்ட கலன்களின் பட்டியலைக் குறிக்கும் என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**பெட்டி 1**

**மீன்வளம் தொடர்பான எச்சரிக்கை, கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக பன்னாட்டு வலைப்பணி ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு**

எககட பன்னாட்டு வலைப் பணி மீன்வளம் தொடர்பான எககட நடவடிக்கைகளுக்கு பொறுப்பு வகிக்கும் தேசீய நிறுவனங்கள்/நிலையங்கள் ஆகியவற்றின் ஏற்பாடு ஆகும்.

அவற்றின் நாடுகளால் சஅக மீன் பிடிப்பை தடுப்பதற்காக ஒருங்கிணைந்து ஒத்துழைப்பதற்காக அவை அங்கீகரிக்கப்பட்டவை.

பன்னாட்டு எகக வலைப்பணியின் நோக்கம் மீன்வளம் தொடர்பான எகக நடவடிக்கைகளின் திறன் மற்றும் விளைவை மேம்படுத்துவது ஆகும். ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு தகவல்கள் சேகரிப்பு மற்றும் பரிமாற்றம் ஆகியவற்றை அதிகரிப்பதன் மூலம் மேம்படுத்த வேண்டும். இந்த வழிகாட்டியின் பிற்சேர்க்கை 2ல், பன்னாட்டு எகக வலைப்பணி பற்றிய தொழில்நுட்ப வார்த்தைகளின் குறிப்புகள் உள்ளன.

பன்னாட்டு எகக வலைப்பணி ஜனவரி 2000ல் சிலி, சந்தியாகுல் நடைபெற்ற கூட்டத்தின் பயனாக தோன்றியது. பன்னாட்டு எகக வலைப்பணியில் உறுப்பினராவது தன்னார்வமானது.

பன்னாட்டு எகக வலைப்பணி பற்றி மேலும் விபரங்களை கீழ்க்கண்ட வலைத்தளத்தில் அறியலாம்.

http://swr.vcsd.edu/evf/mcs/mcs/html

User name: mcs
Password: mcsnet

குழு அல்லாத மீன்பிடிகலன்களால் பெறப்பட்ட மீன்களின் சட்ட நிலைக்கு எதிரான உத்தேசத்தை தோற்றுவித்தல் ஆகியவையும் இதனுள் அடங்கும்.

எகக வின் திறன் மற்றும் விளைவை பெரிதும் அதிகரிக்கச் செய்யும் சாதனம் கஅ. சமீபத்திய சில ஆண்டுகளில், நாடுகளின் எண்ணிக்கை வளர்ந்து, சில வளரும் நாடுகளையும் சேர்த்து, கஅ அமைப்பு தேவைகளை அவர்களின் மீன்பிடி கலன்களில் அறிமுகப்படுத்தியுள்ளனர் அல்லது அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மீன்பிடிக்க சென்று அடைய அந்நிய கலன்களுக்கு அது ஒரு நிபந்தனையாக அறிமுகப்படுத்தப்படுகிறது.[36] பல பன்னாட்டு ஒப்பந்தங்களுக்கும் கஅ தேவைப்படுகிறது. தற்சமயம் குறைந்தது 8000க்கு மேற்பட்ட மீன்பிடிகலன்கள் தங்களது இருப்பிடத்தை கஅமைப்பின் மூலம் தெரிவிக்கிறது என மதிப்பிடப்படுகிறது. கஅமைப்பை பயன்படுத்துவது மூலம் அதிக செலவின்றி விரைவாக அடிப்படை தகவல்களை அனுப்பஇயலும். அனைத்து நாடுகளும் கஅமைப்பின் தேவைகளை தங்களது கலன்களில் அறிமுகப்படுத்த அல்லது விரிவுபடுத்த தீவிரமாக பரிசீலிக்க வேண்டும். இந்த முயற்சியில் உதவிட உவே அமைப்பு, இப்பொருள் பற்றி தொழில்நுட்ப வழிகாட்டு முறைகளை வெளியிட்டு பரவச் செய்கிறது.[37]

பல நிகழ்வுகளில், எககண்காணிப்பினை பயனுள்ளதாக செய்வதற்கான விசை, மீன்வள மேலாளர், அமுல்படுத்தும் அலுவலர்களின் நிகழக்கூடிய சஅக மீன்பிடிப்பு தகவல்களை எவ்வளவு

---

[36] மீ ன்பிடிகலன்களில் கஅ பயன்படுத்தும் அல்லது பயன்படுத்துதலை பரிசீலிக்கும் வளரும் நாடுகள் மலேசியா, மாலத்தீவு, மொரோக்கோ, மொசாம்பிக், நமிபியா, செய்செல்லீஸ் மற்றும் மமீமுகமை உறுப்பினர்கள்.

[37] உவேஅ. 1998. உவேஅ பொறுப்பார்ந்த மீன்வள நடத்தைக்கான தொழில் நுட்ப வழிகாட்டு முறைகள். மீன்பிடிப்பு முறைகள் கலன் எச்சரிக்கை அமைப்பு.

விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக பரிமாற்றம் செய்யும் திறமையில் உள்ளது. அத்தகைய விபரங்களை பரவலாகவும், விரைவாகவும் பரிமாற்றம் செய்ய, நாடுகள் படிவங்களை வரையறை செய்ய பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனுப்பப்பட வேண்டிய விபரங்களுக்கான செய்முறையை வரையறை செய்ய வேண்டும்.

ஏற்கனவே நடைபெற்று வரும் சஅக மீன்பிடிப்பிற்கு எதிராக நடவடிக்கையை அமுல்படுத்துவதற்கு மட்டுமே எகக முயற்சிகள் என தொடர்பு படுத்துதல் கூடாது என வற்புறுத்தப்படுகிறது. அதனைத் தடுப்பதற்கும், சுற்றி வளைப்பதற்கும், நிறுத்துவதற்குமாகும். சஅக மீன்பிடிப்பை எதிர்த்து போராடும் எந்த முயற்சியிலும் நெருக்கடியான பகுதி, மீன்பிடிப்பவர்களுக்கு இடையே பின்பற்றப்படும் பொருத்தமான மேலாண்மை மற்றும் பாதுகாப்பு முறைகளை புரிந்து கொள்வதிலும், பாதுகாப்பு செய்வதிலும், உதவிடுதலிலும் உள்ளது. அத்தகைய முறைகளுக்கு, நாடுகள் தன்னார்வமாக இணக்கத்துடன் ஆதரிக்க வேண்டும். சஅக மீன்பிடிப்பை கீழ்க்கண்டபடி குறைக்க வேண்டும்.

- சமுதாயக்கல்வி மற்றும் பிற வற்றின் மூலம் மீன்பிடிப்போர் அறிந்திருக்க செய்ய வேண்டும்.
- மீன்வள விதிகளை மேம்படுத்துவதில் பங்குதாரர்கள் பங்கு கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.
- இணக்கத்திற்கு ஆதரவாக கூர்ந்த வற்புறுத்தலை பெறுதல் வேண்டும்.
- சரியான உறுதிப்படுத்தப்படக் கூடிய வகையில் விபரங்கள் சேகரிப்பை நிறுவ வேண்டும்.

விதிகளை மீறும் மீன்பிடிப்பவர்கள் போதிய அளவில் தண்டனை பெற வேண்டும். இதனைச் செய்யும் வகையில், அனைத்து நாடுகளும், மீறுபவர்களை வெற்றிகரமாக ஆய்வு செய்ய விசாரிக்க வழக்கு தொடர திறமையை அதிகரித்துக் கொள்வதற்கு முதலீடு செய்தல் வேண்டும். அனைத்து நாடுகளும் அதன் நீதி மற்றும் நிர்வாக அமைப்பு சஅக மீன்பிடிப்பு வழக்குகளை கையாள்வதற்கு திறமையாகவும் உரிய முறையிலும் இயங்கும் என்பதனை உறுதி செய்ய வேண்டும்.

ஒரு முக்கிய சவால், சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க, எ.க.க பயன்படுத்துவதால், நியாயமான மீன்பிடிப்பு நடவடிக்கைகளுக்கு தேவையற்ற தொல்லை தருதல் கூடாது. உதாரணமாக நாடுகள், கலன் இயக்குபவர்களுக்கு தொல்லைகளை குறைகளை குறைக்கும் வகையில் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். தனியார் மற்றும் உரிமையாளர்களின் விபரங்களை நம்பிக்கையுடன் பாதுகாக்க வேண்டும்.

அவ்வாறு செய்வதால், மீன்வள மேலாளர்கள் மற்றும் அமுல்படுத்தும் அலுவலர்களுக்கு, சட்டத்தோடு ஒத்துப் போகும் மீன்பிடிப்பவர்களின் ஒத்துழைப்பை பெறும் வாய்ப்பு அதிகரிக்கிறது. சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட உதவுவதற்கு நல்ல காரணமுமாகும்.

பசெதிந–சஅக மீன்பிடிப்பு கொண்டிருக்கும் குறிப்பான எகக சாதனங்கள், கீழ்க்கண்ட கொடிநாடு, துறைமுக நாடு, கடலோரநாடு மற்றும் மமீவ மேநிறுவனங்கள் என்ற பிரிவுகளில் முழுமையாக விவரிக்கப்படுகின்றன.

### 3.3 நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு

சஅக மீன்பிடிப்பு தடுக்கப்பட வேண்டும் எனில், பல காரணங்களால் நாடுகளுக்கு இடையே முழுமையான ஒத்துழைப்பு அவசியமாகிறது.

- பல நாடுகளின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து அடிக்கடி சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்கள் வெளியே செல்வதும் உள்ளே வருவதுமாக இருக்கும். அவ்வாறே ஆழ்கடலில் இயங்கும். இந்த நிகழ்வுகளில், ஈடுபடும் நாடுகள் எ.க.க முயற்சிகளில் ஒத்துழைக்க வேண்டும்.

- மேலே குறிப்பிட்டவாறு, சஅக மீன்பிடிப்பு கலன்களின் உரிமையாளர்கள் மற்றும் இயக்குபவர்கள் உண்மையாகவே அக்கலன்களுக்கானவர்களில் இருந்து தேசீயத்தில் மாறுபடுவர். மீண்டும், ஈடுபடும் நாடுகளுக்கிடையே சஅக மீன்பிடிப்பு கண்காணிப்பை மேற்கொள்பவர் மற்றும் அவர்கள் மீது தண்டனை விதிப்பவர்கள், அவர்களது அடையாளத்தை தீர்மானிக்க ஒத்துழைப்பது அவசியமாகிறது.
- சஅக மீன்பிடிப்பில் பிடிக்கப்பட்ட மீன்களில் மிகவும் அதிக சதவிகிதம் பன்னாட்டு வர்த்தகத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு இடையே இப்பொருட்களுக்கு சந்தை வசதி செய்வதை மறுத்திட ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகிறது.

பசெதிந–சஅக–ன் பத்தி 28–37, சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்குவதற்காக நாடுகள் ஒத்துழைக்க வேண்டிய பலவழிகளை முன் வைக்கிறது. மமீவமே நிறுவனத்துடன் பங்கு பெறுதல் மூலமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் இது உள்ளடக்கும். முக்கியத்துவம் பெறுவது உரிய விபரங்களைப் பகிர்ந்து கொள்வது, வளரும் நாடுகளுக்கு உதவி வழங்குவது ஆகியவையே தொடக்கமாகும். ஒத்துழைப்பை எளிதாக்கும் வகையில், பசெதிந–சஅக ஒவ்வொரு நாட்டையும் தொடக்கத்தில் 'தொடர்புக்கான வசதியை' ஏற்படுத்தி தர கேட்டுக் கொள்கிறது. சாத்தியமான வகைகளில், தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டதை விளம்பரம் செய்ய, உரிய தேசீய மீன்வள நிறுவனங்களின் பெயர்களை வலைத் தளத்தில் வெளியிட வேண்டும். பசெதிந–சஅக செயல்படுத்துதல் குறித்து உவே அமைப்புக்கு வழங்கப்படும் அறிவிக்கைகளில் அவற்றைச் சேர்க்கவும் வேண்டும்.

## 4. கொடி நாடுகளின் பொறுப்புகள்

கலன் எங்கு இயங்குகிறது என்பதனைக் கருதாது கலனின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க பன்னாட்டு சட்டத்தின்படி, கொடி நாட்டின் பொறுப்புகள்:

- கொடி நாட்டின் எல்லைக்குள் கலன் மீன்பிடிப்பு மேற்கொண்டால், கொடிநாட்டின் பொறுப்பு தனிப்பட்டதாகும். பொதுவாகக் கூறினால், பிற கொடி நாட்டிற்கு அந்த கலனின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க உரிமையோ பொறுப்போ கிடையாது.
- கலன் ஆழ்கடலில் மீன்பிடிப்பு மேற்கொண்டால், கலனின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக கொடிநாடு பாரம்பரியமான தனிப்பட்ட பொறுப்பை பெற்றுள்ளது. எனினும், சமீபத்திய பல பன்னாட்டு ஒப்பந்தங்கள், கொடிநாடு தவிர பிற நாடுகளுக்கு முக்கியமாக ஆழ்கடலில் சஅக மீன் பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க உதவிட அக்கலன்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள சில உரிமைகளை வழங்குகிறது.[38]
- கொடி நாடு தவிர்த்து ஒரு நாட்டின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கலன் மீன்பிடிப்பு மேற்கொண்டால் (அல்லது துறைமுக நாட்டில், கொடிநாடு தவிர்த்து) கடலோர (அல்லது துறைமுக) நாடு கலனின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை பொறுத்தவரை உரிமை மற்றும் பொறுப்புகளைக் கொண்டுள்ளது. எனினும், அத்தகைய நிகழ்வுகளில் கொடிநாடும் தொடர்ந்து அதன் மீன்பிடிப்பு நடவடிக்கை குறித்த பொறுப்புகளைக் கொண்டுள்ளது. பிற நாட்டின் எல்லைக்குட்பட்ட பகுதியில், அக்கலன் அங்கீகாரமில்லாத மீன்பிடிப்பை நடத்தவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதும் இதில் அடங்கும்.

---

[38] பார்க்கவும், உ.ம். 1995 ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம், கட்டுரை 21–22; நன்னீரில் இனவிருத்தி செய்யும் கடல் மீன் இருப்புகளை வடக்கு பசிபிக் கடலில் பாதுகாப்பதற்கான 1992 மரபுகள், கட்டுரை 5; 1994 மத்திய பெர்ரிங் கடலில் போல்லோக் ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைக்கான மரபுகள், கட்டுரை 9; 2000 மேற்கு மற்றும் மத்திய பசிபிக் கடலில் பெரிதும் நகரும் மீன் இருப்புகளைப் பாதுகாப்பதற்கான மரபுகள், கட்டுரை 26 (இன்னும் அமலுக்கு வரவில்லை) வமேஅமீவ நிறுவனத்தின் ஒப்பந்தக்குழு இணைந்த பன்னாட்டு ஆய்வு மற்றும் கண்காணிப்பை மேற்கொள்ளும் திட்டத்தைப் பின் பற்றியது. இதனால் ஆழ்கடலில் நாடுகளின் கொடியற்ற கலன்களிலும் ஏறிச் சென்று ஆய்வு செய்ய இயலும். இந்த ஏற்பாடுகளை பசெதிந– சஅக அங்கீகரித்தது. திறமையாக அவற்றை செயல்படுத்த கேட்டுக் கொண்டது.

மேற்கண்டபடி பொதுவாக கொடிநாடுகள் சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்குவதற்கான முக்கிய பொறுப்பை பெற்றுள்ளதாக கருதப்படுகிறது. இன்று உலகில் சஅக மீன்பிடிப்பின் விரிவாக்கம், முறையாக கொடிநாடுகள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றவில்லை என்பதனை உணர்த்துகிறது. கொடி நாட்டின் கண்காணிப்பில் உள்ள குறைபாடு சஅக மீன்பிடிப்பிற்கான அடிப்படையான காரணம் என தெரிகிறது.[39]

அனைத்து கொடி நாடுகளும் அவற்றின் மீன்பிடிகலன்கள் மீது அதிகமான கட்டுப்பாட்டை மேற்கொள்ளலாம். கீழே விவரிக்கப்பட்டபடி, பசெதிந–சஅக, கொடிநாடுகளுக்கு அவற்றைச் செய்வதற்கு விரிவான வகைப்படுத்தப்பட்ட சாதனங்களை வழங்குகிறது.

அதிகமான கட்டுப்பாட்டை மேற்கொள்ள ஒரு நாடு அதனைச் செய்வதற்கான அரசியல் ரீதியான உறுதியைப் பெற்று இருக்க வேண்டும். இது குறித்தவரை, இந்த நாள் வரை பல நாடுகள் அரசியல் உறுதியை மேற்கொள்ள தவறிவிட்டன. இந்த நாடுகள் அவற்றின் எல்லைக்குள் மீன்பிடிக்க கலன்களைப் பதிவு செய்வதை அனுமதிக்கின்றன. கொடிகளைப் பறக்க விடவும் அனுமதிக்கின்றன. இக்கலன்களின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க அவசியமான எந்த ஒரு அடிப்படை நடவடிக்கையையும் எடுப்பதில்லை.

பசெதிந– சஅக மற்றும் முந்தைய பன்னாட்டு சாதனங்களைக் கொண்டு, பன்னாட்டு சமுதாயத்தினரிடையே கொடி நாடுகளை அவற்றின் கலன்கள் மேற்கொள்ளும் மீன்பிடிப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த தேவையான அரசியல் ரீதியான முடிவை மேற்கொள்ள தூண்டும். சஅக மீன் பிடிப்பின் பாதகமான பொருளாதார, சமூக, சுற்றுப்புறச் சூழல் பாதிப்புகள் மிகவும் அதிகரித்து தற்போதைய நிலையை நீடிக்க அனுமதிக்கிறது. அந்த கொடி நாடுகளும் இன்று வரை தங்கள் கலன்களை கண்காணிக்க விருப்பம் இல்லாது அல்லது இயலாது உள்ளன. அவை பசெதிந – சஅக செயல்படுத்த தனிப்பட்ட முயற்சிகள் எடுக்க வேண்டும். அல்லது குறைந்த அளவிலேனும் பதிவேடுகளில் இருந்து அக்கலன்களை நீக்க வேண்டும்.[40]

மேலே குறிப்பிட்டபடி, கொடி நாட்டின் முதல் படி தொடர்புடைய பன்னாட்டு சாதனங்களை செயல்படுத்த வேண்டும் மற்றும் அல்லது அனுமதிக்க வேண்டும். சாதனங்கள் கொடி நாடுகளின் பொறுப்பு தொடர்பான **1993** உவே அமைப்பின் இணக்க ஒப்பந்தம், **1995** ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் மற்றும் நடத்தை விதித்தொகுப்பு உள்ளிட்ட சமீபத்திய மாதிரிகளை உள்ளடக்கும்.

இம்மாதிரிகளை செயல்படுத்த கொடி நாடுகளுக்கு உதவிட பசெதிந–சஅக மூன்று தலைப்புகளில் பல கருவிகளை முன்வைக்கிறது. **1** மீன்பிடிப்புகலன் பதிவு செய்தல். **2** மீன்பிடி கலன்களின் பதிவேடுகள் மற்றும் **3** மீன் பிடிப்பதற்கான அங்கீகாரம். கீழ்க்கண்ட பிரிவுகளில் ஒவ்வொன்றும் விளக்கப்படுகிறது.

---

39 பார்க்கவும், "உலக அளவிலான சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடற்ற (சஅக) மீன்பிடிப்பு பற்றிய ஆய்வு" – கொன்டிரேயால் ஒப்பிட்டு வெளியிடப்பட்டது.

40 இது குறித்து சில சாதகமான வளர்ச்சி தெரிவிக்கப்படுகிறது. உதாரணமாக பனாமா, சமீபத்தில் தனது பதிவேட்டில் இருந்து மீன்பிடி கலன்களின் எண்ணிக்கையை 1500 லிருந்து ஏறக்குறைய 100 ஆக குறைத்து விட்டது. மீதமுள்ள கலன்களையும் கண்காணிப்பு மற்றும் விபர அறிவிக்கைக்கு தேவையானவற்றை வைத்துக்கொள்ள தெரிவித்துள்ளது. பனாமா 2000ல் அசூபாபகுழுவில் சேர்ந்துள்ளது. அசூபாபகுழு, பனாமாவில் இருந்து நீல சூரை மற்றும் வாள் மீன்களை இறக்குமதி செய்வதற்கான 1990களில் இருந்துவந்த தடையை விலக்கிக் கொண்டது. அசூபாபகுழுவின் வர்த்தக தடைக்கு பொருளான ஹோண்டுராஸ் அந்த மபீவமே நிறுவனத்தில் 2001ல் சேர்ந்தது. அதன் கொடிகளைக் கொண்ட கலன்களின் சஅக மீன்பிடிப்பை குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு சாட்சி அளித்தது. 1996ல், பெலிங், அதன் வணிகக்கப்பல்களின் பதிவு சட்டத்தின் 25வது பிரிவை மீன்பிடிப்பில் செய்யும் குற்றங்களையும் சேர்த்து குறிப்பிட்ட கடுமையான குற்றங்களுக்காக கலனின் பதிவை ரத்து செய்வதற்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் திருத்தியது.

## 4.1 மீன்பிடிகலன் பதிவு செய்தல்

பெரும்பான்மையான சூழ்நிலைகளில், பதிவு செய்தல் என்பது, நாடு ஒரு கலனுக்கு தனது தேசீயத்தை வழங்குவது. ஒரு முறை பதிவு செய்யப்பட்டால், அந்த நாட்டின் கொடியை பறக்கவிடுவதற்கான உரிமை கலனுக்கு கிடைக்கும். அதாவது, கலன் எந்த நாட்டின் எல்லைக்குட்பட்ட பகுதியில் பதிவு செய்யப்பட்டதோ அந்த நாடு கொடி நாடாகும். அக்கலனுக்கான முதன்மையான பொறுப்பை நாடு பெறுகிறது.

பசெதிந– சஅக ஒரு கொடி நாடு ஒரு கலனை பதிவு செய்வதற்கு முன்பாக அதன் பொறுப்பை செயல்படுத்தி, அக்கலன் சஅக மீன்பிடிப்பில் ஈடுபடுவதில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கிறது.

எனினும் கலன் சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் என ஒரு நாடு முக்கியமாக எதிர் நோக்குதல் கூடாது. அக்கலன் முன்பாக அச்செயலில் ஈடுபட்டிருந்தால், அவ்வாறு செய்வதற்கான வாய்ப்பு அக்கலனுக்கு அதிகரிக்கும். இக்காரணத்திற்காக பசெதிந– சஅக, சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக வரலாறு கொண்ட கலனை நாடுகள் பதிவு செய்வதை கைவிடச் செய்தது.[41] அந்த கலன் அடிக்கடி சஅக மீன்பிடிப்பில் பெயர் மற்றும் பதிவு மாற்றம் செய்யப்பட்டிருப்பினும், ஈடுபடும் என்பதனை அனுபவம் தெரிவித்தது.

மேலே குறிப்பிட்டவாறு, சஅக மீன்பிடிப்பு கலன்களின் உரிமையாளர்கள் சில நேரங்களில் கொடி நாட்டை மாற்றி கண்காணிப்பில் தப்பிச் சென்றுவிடுவர். இது கொடிதாவுதல் எனப்படும். மீன்பிடிகலனை பதிவு செய்யும் கலனின் உரிமையாளர், அக்கலன் முன்பு பதிவு செய்யப்பட்டிருந்த நாடுகள், பிற பெயர்களில் பதிவு செய்யப்பட்டிருந்ததா என்பதனையும் சேர்த்து விபரங்களை நாட்டிற்கு அளித்தல் தேவையாகிறது. கொடி தாவுதலுக்கு சாத்தியம் தோன்றும் எனில், அக்கலன் சஅக மீன்பிடிப்பில் பயன்படுத்தப்பட்டிருக்குமா என்ற எண்ணம் தோன்ற வேண்டும். குறைந்த அளவிலேனும், கலனின் உரிமையாளர் பதிவில் ஏதேனும் அடிக்கடி நிகழ்ந்த மாற்றங்களைத் தெரிவித்தல் நாட்டிற்கு தேவையாகிறது.

பசெதிந – சஅக, பதிவு செய்யப்பட்ட கலனின் பணி மற்றும் மீன்பிடிப்பதற்காக அதற்கு வழங்கப்படும் அங்கீகாரம் ஆகியவை தனித்தனியானவை என குறிப்பிடுகிறது. பல நாடுகளில் இத்தகைய பணிகள் சில சமயங்களில் ஒன்றுடன் ஒன்று நன்கு தொடர்பு கொள்ளாத வெவ்வேறான அரசு நிறுவனங்களின் பெறுப்பாகும். உதாரணமாக, போக்குவரத்து அமைச்சகம் கலனின் பதிவுகளுக்கு பொறுப்பாகும். மீன்பிடிக்க அங்கீகாரம் அளிப்பது மீன்வளம் அல்லது விவசாய அமைச்சகத்தின் பொறுப்பாகும்.

மீன்பிடி கலன்களைப்பதிவு செய்யும் முறை மற்றும் மீன் பிடிக்க அங்கீகாரம் அளிக்கும் முறை ஆகிய இரண்டிற்கும் இடையே வலுவான தொடர்பு இருப்பதை உறுதி செய்வதன் மூலம் கொடி நாடுகளின் கலன்களின் மீதான கட்டுப்பாட்டை வலுப்படுத்தலாம்.[42] இப்பணிகளை ஒருங்கிணைக்க முயற்சி செய்ய வேண்டும். ஈடுபடும் நிறுவனங்களுக்கு இடையேயான தொடர்புகளை எளிதாக்க வேண்டும். மீன்வள (அல்லது விவசாய) அமைச்சகங்கள் பதிவு செய்யக்கோரும் கலன்களின் முந்தைய மீன்பிடிப்பு நடவடிக்கைகள் குறித்த விபரங்களைப் பெறும் வாய்ப்பு உள்ளது. பதிவு செய்யும் துறைக்குப் பொறுப்பான அமைச்சகத்திற்கு இந்த விபரங்களை

---

41 இதனைப் பொறுத்தவரை, பசெதிந–சஅக ஏற்படுத்தப்பட்ட விதி விலக்குகளையும் உணர்கிறது. உதாரணமாக கலனின் உரிமை மற்றும் கட்டுப்பாடு உண்மையாகவே மாற்றப்பட்ட நிகழ்வுகள் அவ்வாறே, உவே அமைப்பின் இணக்க ஒப்பந்தம் பிரிவு III, சட்டத்திற்குப்புறம்பான மீன்பிடிப்பு மேற்கொண்ட வரலாறு உடைய கலனுக்கு மீன்பிடிக்க அங்கீகாரம் வழங்குவதை தடை செய்கிறது. இந்த வகையில் குறைவான விதிவிலக்கை அனுமதிக்கிறது. எனினும், சில நாடுகள் மற்றும் மமீவமேநி பதிவுகள் மற்றும் பிற பயன்களை சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் அந்த கலன்களுக்கு, உரிமை மற்றும் கட்டுப்பாட்டில் மாற்றம் இருந்த போதிலும் வழங்க மறுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்கின்றன.

42 பார்க்கவும், உவேஅ/பகநி இணைந்து அளித்த குறிப்பான அறிக்கை சட்டத்திற்குப் புறம்பான, அறிவிக்கப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு மற்றும் அதன் தொடர்பானவை மீதான செயல்குழு, ரோம் 9–11 அக்டோபர் 2000.

விரைவாகத் தெரிவிக்க வேண்டும். மேலும், பசெதிந – சஅுக பரிந்துரைத்தபடி, தங்கள் நீர்ப்பரப்பில் அல்லது ஆழ்கடலில் மட்டும் மீன்பிடிக்க தயாராக உள்ள கலன்களுக்கு மட்டுமே மீன்பிடிக்க அங்கீகாரம் அளிக்க பதிவு செய்வதை நாடுகள் பரிசீலிக்க வேண்டும்.

சிறிய மீன்பிடி கலன்களுக்கு பதிவு பல நாடுகளுக்கு தேவைப்படுவதில்லை. எனினும், வளர்ந்து வரும் சஅுக மீன்பிடிப்பை சிறிய கலன்களும் மேற்கொள்வதை கருத்தில் கொண்டு, குறிப்பாக அனைத்து கலன்களையும், சாத்தியமான வகையில் பல மீன்பிடிகலன்களை நாடுகள் பதிவு செய்வதை ஊக்கப்படுத்த வேண்டும். அவை அனைத்தையும் பதிவேடுகளில் கீழே விவரித்தபடி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பதிவு செய்யும் தேவை என்பது அடிப்படையான சாதனமாகும். இதன் மூலம் கொடிநாடு அதன் மீன்பிடி கலன்களை கண்காணிக்கும். பதிவு செய்யாத கலன் தற்சமயம் மேற்கொண்டிருக்கும் சஅுக மீன்பிடிப்பை குறைப்பதன் மூலம் சேமிப்பு, அனைத்து கலன்களையும் பதிவு செய்வதற்காக நாட்டின் பதிவிற்கான விரிவான நிர்வாகச் செலவை ஈடு செய்யும்.[43]

### 4.1.1 மீன்பிடிப்பு பயண ஏற்பாடுகள்

மீன்பிடி கலன்களுக்கான மீன்பிடிப்பு பயண ஏற்பாடுகளை நிந்தித்து சில சஅுக மீன் பிடிப்போர் கட்டுப்பாட்டிலிருந்து தப்பிச் செல்ல முயற்சிப்பர். பசெதிந–சஅுக பயண ஏற்பாடுகளைச் செய்வதில் ஈடுபடும் பல நாடுகளையும், அவர்களது எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில், மீன்பிடிப்பிற்கு திட்டமிட்ட கலன்கள் சஅுக மீன்பிடிப்பில் ஈடுபடாது என்பதனை உறுதி செய்ய ஏற்பாடுகள் செய்யும்படி அனைத்து நாடுகளையும் கேட்டுக்கொள்கிறது.

பயண ஏற்பாடுகளை கவனமுடன் வடிவமைத்து அமுல்படுத்தாவிட்டால், கலனில் அக்கறை கொண்டுள்ள தனியார் மற்றும் கழகத்தின் அடையாளம் வெளிப்படையாக இருக்காது. உதாரணமாக ‘அ’ என்ற நாட்டைச்சார்ந்த ஒருவருக்கு கலன் சொந்தமாக இருக்கலாம். ‘ஆ’ என்ற நாட்டில் பதிவு செய்யப்படலாம். ‘இ’ என்ற நாட்டிற்கு உட்பட்ட பகுதியில் மீன்பிடிக்கலாம். கடலோர நாட்டிற்கு, உரிமையாளர், பயண ஏற்பாடு செய்பவர் மற்றும் கொடிநாடு ஆகியவற்றிக்கு இடையேயான உறவு வழக்கமாக தெளிவாக இருப்பதில்லை.

இப்பிரச்சினையைத் தெரிவிக்க, அனைத்து பயண ஏற்பாடுகளையும் முழுதுமாக, வெளிப்படையாக தெரிவித்து கொள்ள வேண்டியது நாட்டிற்கு தேவையாகிறது. உதாரணமாக, அந்நிய மீன்பிடி கலன்களின் மண்டலப்பதிவேடு தெற்கு பசிபிக் மன்ற மீன்வளக்குழுவால்

(மமீகு)[44] நிர்வகிக்கப்படுகிறது. இதற்காக பதிவுத்துறை இயக்குநருக்கு, அந்நிய மீன்பிடி கலன் விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும் என்பது தேவையாகிறது. கலனின் விண்ணப்பம் தேவைப்படும் பிற விபரங்களுடன் பயண ஏற்பாடு செய்பவரின் பெயர்(கள்) போன்ற விபரங்களையும்( விண்ணப்பதாரர்களின் பெயர்கள், ரேடியோ அழைப்புக்குறி, பதிவு செய்யப்பட்ட நாடு. பதிவு செய்யப்பட்ட கொடி, நாடு வழங்கிய பதிவு எண், கலனின் முந்தைய உரிமையாளர் பெயர்க(கள்), இயக்குபவர், கலனின் தலைவர், மீன்பிடி தலைவர்) உள்ளடக்க வேண்டும்.[45]

---

43 கப்பல்களுக்கான பதிவிற்காக பன்னாட்டு வரையறைகளுக்கான 1986 கப்பல்களை பதிவு செய்வதற்கான நிபந்தனைகள் மீதான ஐக்கிய நாடுகளின் மரபு சட்டங்களை ஒழுங்கு செய்தது. இந்த மரபு இது வரை அமுலுக்கு வர வில்லை. எனினும் மீன்பிடிகலன்களைத் தவிர்க்கிறது. பதிவு செய்தலை தவறுதலாகப் பயன்படுத்துதல் மோசடியான செய்முறைகளோடு தொடர்பு படுத்துதல் போன்றவற்றைத் தவிர்ப்பதற்காக கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. உதாரணமாக இரட்டைப்பதிவுள்ளதாகக் கருதப்படும் கலன் வெறுமையாக பயண ஏற்பாட்டில் இருப்பின் அச்சமயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளை விளக்குகிறது.

44 மமீகு தெற்கு பசிபிக் மன்ற மீன்வளக்குழு மரபால் நிறுவப்பட்டது. ஆஸ்திரேலியா, குக் தீவுகள், மைக்ரோரேசியா வைச் சேர்ந்த ஒருங்கிணைந்த நாடுகள் பிஜி, கிரிபதி, மார்ஷல் தீவுகள், நௌவ்ரு, நியூசிலாந்து, சாலமன் தீவுகள், டோங்கா துவாலு மற்றும் வானுவத் போன்ற 16 மமீகு உறுப்பினர்கள் உள்ளனர். மமீகுழுவால் நிர்வகிக்கப்படும் அந்நிய மீன்பிடிகலன்களின் பதிவுப்பதிவேடு கலன்களின் தேசீய பதிவேட்டைப் போன்றது அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

45 பார்க்கவும் ட்டி. அகோரவ் உயர்வான குறிப்பு 33.

தங்களது வரம்பிற்குட்பட்ட இருப்புகளைப்பிடிப்பதற்கான ஏற்பாடுகள் மிகவும் வெளிப்படையாக இருப்பதை உறுதி செய்வதில் மமீவ மேநி முக்கிய பங்கு வகிக்கிறது. உதாரணமாக, வமேஅமீவநி ஒதுக்கீடு மற்றும் இறால் பிடிக்கும் நாட்கள் மீதான பயண ஏற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு சமீபத்தில் விதிகளைப் பின்பற்றியது.[46] அத்தகைய விதிகள் பயண ஏற்பாடுகள் மீது கடுமையான கட்டுப்பாட்டை விதிக்கின்றன. மேலும் முழுமையான வெளிப்படைத்தன்மையும் தேவைப்படுகிறது. புதிய ஒதுக்கீடுகளை மேம்படுத்துவது குறித்தவரை, அஞூபாபகு உறுப்பினர்கள், தங்களது வரம்பிற்குட்பட்ட இருப்புகளுக்கான ஏற்பாடுகளை கட்டுபடுத்துவதற்காக புதிய விதிகளை ஏற்படுத்துவதற்கான கடமையை கொண்டுள்ளனர்.

ஒரு கலன் 'அ' என்ற நாட்டில் பதிவு செய்யப்படும் பொழுது 'ஆ' என்ற நாட்டினர் தங்களது எல்லையில் மற்றும் ஆழ்கடலில் அக்கலன் மீன்பிடிக்க ஏற்பாடுகளை வகுக்கின்றனர். அச்சமயம் பிரச்சினைகள் தோன்றுகின்றன. ஆழ்கடலில் மீன்பிடிப்பை கட்டுப்படுத்தும் பொறுப்பு தெளிவாக இல்லை. அது 'அ' நாட்டிற்கு (கொடிநாடு) அல்லது 'ஆ' நாட்டிற்கு உள்ளதா? 'ஆ' நாட்டின் எல்லைக்குட்பட்ட பகுதியில் கலன் இயக்கப்படும் பொழுது, அக்கலனின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கடலோர நாடு என்ற ரீதியில் கட்டுப்படுத்துகிறது. ஆனால் அக்கலன் ஆழ்கடலில் மீன்பிடிக்கும் பொழுது கொடிநாடு ('ஆ' நாடு) அதன் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் பொறுப்பை கொண்டுள்ளது என பொதுவாகக் கருதப்படுகிறது. 'ஆ' நாட்டிற்கு ஆழ்கடலில் கலுனுக்குள் ஏறிச்சென்று பார்க்கவோ அல்லது ஆய்வு செய்யவோ அதிகாரம் இல்லை. ஆழ்கடலில் அதன் மீன் பிடிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான செயல் முறைகளைப் பெற்றிருக்க வில்லை. இருப்பினும் நாடு, அக்கலன் ஆழ்கடலில் எப்பொழுது மீன்பிடித்தது என்பதனையும் அறிவதற்கான வழியையும் பெற்று இருக்கவில்லை. இச்சூழ்நிலைக்கு சாத்யமான தீர்விற்காக பயண ஏற்பாட்டைக் கொண்ட கலன் 'ஆ' நாட்டின் தேசீயத்தை பெற்றுக் கொள்வது தேவையாகிறது. அதாவது பயண ஏற்பாடு நீடிக்கும் காலம் வரையில் 'ஆ'. நாடு கொடி நாடாக வேண்டும். இது மீன்பிடிப்பதற்கான பயண ஏற்பாடு செய்யப்பட்ட எல்லையிலும் 'ஆ' நாட்டின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளிலும் அவ்வாறே ஆழ்கடலிலும் மேற்கொள்ளும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கான பொறுப்பை 'ஆ' நாட்டிற்கு வழங்குகிறது. 'ஆ' நாட்டிற்கான மற்றொரு அணுகுமுறை ஒரு போதும் பயண ஏற்பாடுகளைக் கொண்ட கலன் ஆழ்கடலில் மீன்பிடிக்க அனுமதிக்காது இருப்பதே ஆகும்.

மூன்றாவது சாத்தியத்தில் 'அ' மற்றும் 'ஆ' நாடுகள் இரண்டும் பயண ஏற்பாடுகளைத் தொடர்ந்து ஆழ்கடலில் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டும் என்பதே. உதாரணமாக, பயண ஏற்பாடு, நாடுகளுக்கு ஆ (அவ்வாறே அ) இரண்டிற்கும் ஆழ்கடலில் கலனில் ஏறிச் சென்று பார்க்க மற்றும் ஆழ்கடலில் அவற்றை ஆய்வு செய்ய விரைவு அதிகாரம் வழங்க வேண்டும். இரண்டு நாடுகளுக்கும் மீன்பிடிப்பு விபரங்களை அறிவிப்பதும் தேவையாகிறது. இந்த வழிகளில் வமேஅ மீவநி பயண ஏற்பாடுகளுக்கான விதிகளை இவ்வாறு வழங்குகிறது:

- பயண ஏற்பாடுகள் மூலம் ஒதுக்கீட்டில் அறுவடை செய்யும் அல்லது இறால் பிடிப்பு நாட்களைப் பயன்படுத்திக் கொள்ளும் கலனின் ஒப்பந்தக்குழு "வமேஅமீவ நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் அமுல்படுத்தும் முறைகளுக்கான தேவைகளுக்கு இணங்கி கலன் செயல்படும் என்ற உறுதியை அளிக்க வேண்டும். ஒதுக்கீடு மற்றும் இறால்பிடிப்பு நாட்கள் பெற்றுக் கொண்ட ஒப்பந்தக் குழுவின் கட்டாயத்தை இது செல்லுபடியற்றது ஆக்காது (அசலாக).
- பயண ஏற்பாடுகள் மூலம் ஒதுக்கீட்டில் அறுவடை செய்யும் அல்லது இறால்பிடிப்பு நாட்களைப் பயன்படுத்திக் கொள்ளும் கலனின் ஒப்பந்தக்குழு மீன்பிடிப்பு முடிவுகளை மற்றும்

[46] பார்க்கவும் வமேஅ மீவநி/மீவநி ஆவணம் 01/1 பாதுகாப்பு மற்றும் அமுல்படுத்தும் முறைகள் மீவநி பிற்சேர்க்கை ஆவணம். 00/1 பகுதி 1. ஆ.

தற்செயலாக பிடிபட்டவைகளைப் பற்றி, ஈடுபடும் ஒப்பந்தக்குழு மற்றும் வமேஅமீவ நிறுவன செயலர் ஆகிய இருவருக்கும் அறிவிக்க வேண்டும். இத்தகைய மீன்பிடிப்பு விபரங்களை பிற மீன்பிடிப்பு விபர அறிக்கையிலிருந்து பிரித்து தனியாக அறிவிக்க வேண்டும்.

ஆழ்கடலில் பயண ஏற்பாடுகளைக் கொண்ட கலன்களில் ஏறிச் சென்று பார்த்தல் மற்றும் ஆய்வு செய்வதற்கு 1995 ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் பிரிவு 21 மற்றும் 22 ல் வகைப்படுத்தப்பட்டபடி மமீவமே நிறுவனங்கள் மூலம் வழங்குதல் இறுதியான சாத்யமாகும்.[47]

எந்த ஒரு நிகழ்விலும் நாடுகள் பொதுவாக சஅக மீன்பிடிப்பு வரலாறு கொண்ட கலன்களை தங்கள் எல்லைக்குள் பதிவு செய்வதை அனுமதிக்காது. நாடுகள் மற்றும் மமீவ நிறுவனங்கள் பொதுவாக அத்தகைய கலன்களுக்கு பயண ஏற்பாடுகள் செய்வதற்கு அனுமதிக்காது.

## 4.2 மீன்பிடி கலன்களின் பதிவேடுகள்

உலகில் ஏதேனும் ஒரு அல்லது முழுமையான தகவல் அமைப்பு அல்லது பதிவுகள் மீன்பிடிகலன்களுக்கு இல்லை. இத்தகைய சூழ்நிலையே சந்தேகமின்றி கண்டுபிடிக்கப்படுவதிலிருந்து தப்புவதற்கு சஅக மீன்பிடி கலன்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தி தருகிறது.

உடனடியாக சுருக்கமான தகவல் அமைப்பு ஏற்படுத்துவது சாத்தியமே. பசெதிந–சஅக ஒவ்வொரு கொடி நாட்டையும் அதன் கொடியை பறக்கவிடும் உரிமை கொண்ட கலன்களின் பதிவேட்டை நிர்வகிக்க கோருகிறது. ஆழ்கடலில் மீன்பிடிக்க அங்கீகாரம் பெற்ற மீன்பிடி கலன்களும், 1993 உவே இணக்க ஒப்பந்தம் கட்டுரை 6 பத்தி 1 மற்றும் 2ல் உள்ள பட்டியல்படி விபரங்கள் பதிவு செய்ய வேண்டும். பசெதிந– சஅக பத்தி 42 பரிந்துரைக்கும் கூடுதல் விபரங்களையும் பதிலில் சேர்க்க வேண்டும். மேலும் பசெதிந–சஅக கொடிநாடு பதிவேட்டை பரமரிக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறது. அப்பதிவேடு அதன் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கலன் குறித்த முழுமையான அத்தகைய விபரங்களையும் ஆழ்கடலில் மீன்பிடிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டவை மற்றும் பிறவற்றை உள்ளடக்க வேண்டும். கூடுதலாக மீன்வள புள்ளி இயல் மீதான ஒருங்கிணைந்த செயற்குழு மீன்பிடி கலன்களின் பதிவேடுகள் உண்மையாகவே கலன்கள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளனவா என்பதனை பதிவேடுகள் தெரிவிக்க வேண்டும் என்ற பரிந்துரையை வழங்குகிறது.[48] இவை அனைத்தும் கொண்ட தொகுப்பிற்கு பெட்டி 2ஐ பார்க்கவும்.

1993 உவேஅ இணக்க ஒப்பந்தத்தில் கண்டபடி உவே அமைப்பு, ஆழ்கடலில் மீன்பிடிக்கும் கலன்களின் விபரங்களைத் தொகுத்து விபர அமைப்பு ஒன்றை நிறுவியுள்ளது. சில கொடி நாடுகள், அவற்றின் கலன்கள் பற்றிய தொடர்புடைய விபரங்களை உவே அமைப்பிற்கு இந்த ஒப்பந்தம் அமல்படுத்தப்படுவதற்கு முன்பாகவே சமர்ப்பிக்கத் தொடங்கி விட்டன. குறிப்பாக ஆழ்கடலில் சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க அனைத்து கொடிநாடுகளும் இந்த விபரங்களை உவே அமைப்பிற்கு சமர்ப்பிக்க வேண்டும். தவறாது விபரங்களை அன்றைய தேதி வரை சமர்ப்பிக்க வேண்டும். தனது முறையாக உவேஅ நாடு சமர்ப்பித்த விபரங்கள் குறித்து எந்த ஒரு தடையும் வழங்காத வரை, ஒருங்கிணைக்கப்பட்ட இந்த விபரங்கள் கிடைக்க செய்யும். இச் சூழ்நிலையில், மண்டல அடிப்படையில் மீன்பிடிகலன்களின் விபரங்களை தோற்றுவிப்பதில் பயன் உண்டு. மமீமு பராமரிக்கும் மண்டல பதிவேடுகளுக்கான விபரங்களுக்கு இந்த வழிகாட்டு முறைகளின் பிரிவு 5 ஐ பார்க்கவும் (கடலோர நாடுகளின் நடவடிக்கைகள்)

---

[47] பிடிக்கப்பட்டவற்றை ஒப்படைப்பது குறித்தான பிரச்சிளைகளுக்கும் பயண ஏற்பாடுகள் வழிவகுக்கும். அத்தகைய பிரச்சினைகளுக்காக மீன்வள புள்ளியியல் மீதான ஒருங்கிணைந்த செயற்குழு பின்பற்றும் அணுகுமுறை விபரங்களுக்கு பார்க்கவும் ''மீன்வள விபரங்களைச் சேகரிப்பதில் சட்ட அம்சங்கள்''.

[48] மீன்வள புள்ளியியல் மீதான ஒருங்கிணைந்த செயற்குழுவின் 19வது அமர்வு அறிக்கை, பத்தி 150.

## 4.3 மீன்பிடிக்க அங்கீகாரம்

அடுத்த அடிப்படையான நிலையில், கொடிநாடு அதன் கலனை, கொடி நாட்டால் வழங்கப்பட்ட மீன்பிடிக்கும் அங்கீகாரத்தைத் தொடர்ந்து அதனைத்தவிர மீன்பிடிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதை தடை செய்வதே அக்கலனைகட்டுப்படுத்துவதற்கான வழியாகும். மீன்பிடிக்க ஒரு கலனுக்கு அங்கீகாரம் வழங்குவதன் மூலம், அக்கலனின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக அதன் எண்ணத்தை கொடி நாடு தெரிவிக்கிறது. *ஒரு கொடி நாடு அத்தகைய அங்கீகாரத்தை உரிய வழியில் அதன் எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கலனுக்கு மட்டுமே வழங்க வேண்டும். அதன் மீன்பிடி கலன் பதிவேட்டிலும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.*

**பெட்டி 2**

மீன்பிடிகலன் பதிவேட்டில் சேர்க்கப்படுவதற்கான உரிய விபரங்கள்

உவே அமைப்பின் 1993 இணக்க ஒப்பந்தத்தின் 6.1 கட்டுரை ஆழ்கடலில் மீன்பிடிக்க அங்கீகாரம் வழங்கப்படும் கலன்கள் தொடர்பான கீழ்க்கண்ட விபரங்களை உவே அமைப்பிற்கு சமர்ப்பிக்க கேட்டுக்கொள்கிறது:

- மீன்பிடிகலனின் பெயர், பதிவு எண், முந்தைய பெயர் (அறிந்திருப்பின்) மற்றும் பதிவு செய்யப்பட்ட துறைமுகம்;
- முந்தைய கொடி (ஏதும் இருப்பின்);
- பன்னாட்டு ரேடியோ அழைப்பு குறி (ஏதும் இருப்பின்);
- உரிமையாளர் அல்லது உரிமையாளர்கள் பெயர் மற்றும் முகவரி;
- எங்கு எப்பொழுது கட்டப்பட்டது;
- கலனின் வகை;
- நீளம்.

செயல்படுத்துவதற்கு இயன்ற வரை உவே அமைப்பின் 1993 இணக்க ஒப்பந்தத்தின் 6.2 கட்டுரை ஆழ்கடலில் மீன் பிடிக்க அங்கீகாரம் வழங்கப்படும் கலன்கள் தொடர்பான கீழ்க்கண்ட விபரங்களை உவே அமைப்பிற்கு சமர்ப்பிக்க கேட்டுக்கொள்கிறது.

- இயக்குபவர் (மேலாளர்) அல்லது இயக்குபவர்களின் (மேலாளர்கள்) பெயர் மற்றும் முகவரி;
- மீன்பிடிக்கும் முறை அல்லது முறைகள்;
- கலனின் அடிக்கட்டையிலிருந்து உடற்பகுதிவரையான உயரம்;
- அடிக்கட்டை;
- பதிவு செய்யப்பட்ட மொத்த எடை;
- முக்கிய இயந்திரம் அல்லது இயந்திரங்களின் ஆற்றல்.

பசெதிந–சஅக பத்தி 42, கொடி நாடுகளை அதன் மீன்பிடிகலன்களின் பதிவில் உள்ள ஒவ்வொரு கலனுக்கும் மேற்கண்ட அனைத்து விபரங்களையும் சேர்க்க வேண்டும் என்றும் கீழே உள்ள தகவல்களை கூடுதலாக சேர்க்க வேண்டும் என்று தெரிவிக்கிறது.

- ஏதும் இருப்பின் மற்றும் அறிந்து இருப்பின் முந்தைய பெயர்கள்;
- கலன் யார் பெயரால் பதிவு செய்யப்பட்டுள்ளதோ இயற்கையாக அல்லது சட்டப்படியாக அந்த நபரின் பெயர், முகவரி மற்றும் தேசீயம்;
- அக்கலனின் இயக்கத்தை நிர்வகிக்கும் பொறுப்புடைய நபரின் இயற்கையாக அல்லது சட்டப்படியாக அவரது பெயர், தெரு பெயர், தொடர்புக்கான முகவரி மற்றும் தேசீயம்;

**பெட்டி 2 தொடர்ச்சி**

- அக்கலனில் பயன் பெறும் உரிமைதாரரின் இயற்கையாக அல்லது சட்டப்படியான பெயர், தெரு பெயர், தொடர்புக்கான முகவரி மற்றும் தேசீயம்;
- அறிந்துள்ள இடங்களில் அக்கலனின் பெயர் மற்றும் உரிமையாளரின் வரலாறு தேசீய சட்டங்களுக்கு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகள், தேசீய மண்டல அல்லது உலக அளவில் பின்பற்றப்பட்ட ஏற்பாடுகள் ஆகியவற்றிற்கு அக்கலன் இணங்காதிருந்த வரலாறு;
- கலனின் பரிமாணம் உரிய இடங்களில் பதிவு செய்யும் போது எடுக்கப்பட்ட கலனின் புகைப்படம் அல்லது சமீபத்திய அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் முடிவு அடைந்த பொழுது எடுக்கப்பட்ட கலனின் ஒரு பக்க தோற்றத்தை காண்பிக்கும் புகைப்படம்.

மீன்வள புள்ளியியல் மீதான இணைப்புக்குழு சாத்தியமான இடங்களில், நாடுகள், பதிவில் பட்டியல் இடப்பட்ட கலன் மீன்பிடிப்பு நடவடிக்கைகளில் செயல்படுகிறதா என தெரிவிக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

விரைவான அங்கீகாரம் இல்லாது ஆழ்கடலில் கொடி நாடுகள் அவர்களின் கலன்கள் மீன்பிடிப்பதை தடை செய்வது ஏற்கனவே பன்னாட்டு வரையறைப்படி தேவையாகிறது.[49] பசெதிந–சஅக அப்பொறுப்பை மீண்டும் வலியுறுத்துகிறது. கடற் பகுதியில் மீன்பிடிக்க அதற்கு முன்பாக விரைவு அங்கீகாரத்தை அவர்களது கலன்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையை கொடிநாடுகளுக்கு தெரிவிக்கிறது. மீன்பிடிப்பதற்கான இந்த அங்கீகாரத்தை கலன்கள் கலனில் கொண்டு செல்ல வேண்டும். குறைந்த அளவிலேனும் பசெதிந–சஅக பத்தி 46ல் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் அதனுள் குறிப்பிட்டிருக்கப் பட வேண்டும்.

மீன்பிடிப்பதற்கான அங்கீகாரம் நிபந்தனைக்குட்பட்டது. அதாவது கொடி நாடு மீன்பிடிப்பு நடவடிக்கைகள் மீதான கட்டுப்பாட்டை நிர்வகிக்க அனுமதிக்கும் விதத்தில் உரிமையாளர்/ இயக்குபவர் வடிவமைக்கப்பட்ட குறிப்பான நிபந்தனைகளுக்கு இணங்க சம்மதித்தால் மட்டுமே கலன்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்படும். உதாரணமாக இந்த சிற்றின வகைகள் பிடிக்கப்பட வேண்டும் எந்த வகை மீன்பிடி சாதனங்கள் பயன்படுத்தப்படவேண்டும் வருடத்தில் எந்த நேரத்தில் எங்கு கலன்கள் இயக்கப்பட வேண்டும் போன்றவை இந்த நிபந்தனைகள் ஆகும். பசெதிந–சஅக பத்தி 47 அத்தகைய நிபந்தனைகளின் பரந்த எல்லையை பரிந்துரைக்கிறது. அனைத்து சூழ்நிலைகளிலும் அவை அனைத்தையும் பயன்படுத்த இயலாது.

ஒரு கடலோர நாடு அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மற்றொரு நாட்டில் பதிவு செய்யப்பட்ட கலனை மீன்பிடிக்க அனுமதிப்பதற்கு முன்பாக, அக்கலன் கொடி நாட்டிலிருந்து கொடி நாட்டின் எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் மீன்பிடிக்க தனிப்பட்ட அங்கீகாரம் பெற்றுள்ளதா என்பதனை சரிபார்க்க வேண்டும். கடலோர நாடு சிறந்த முறையில் அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் அத்தகைய கலனை கொடி நாடு அவ்வாறு செய்ய கேட்டுக் கொள்ளாத வரை மீன்பிடிக்க அனுமதிக்க கூடாது. அல்லது கொடி நாடு மீன்பிடிக்கும் கோரிக்கையை எதிர்க்காது என்று தெரிவிக்கும் வரை அனுமதிக்கக் கூடாது.

எந்த ஒரு நிகழ்விலும், கடலோர நாடு அத்தகைய கலனுக்கு வழங்கிய அனுமதி, மீன்பிடிக்க வழங்கப்பட்ட இரண்டாவது அங்கீகாரமாக செயல்படும். அதன் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கலனின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட அந்த நிபந்தனைகள் கடலோர நாட்டிற்கு அனுமதி அளிக்கிறது. கொடி நாடு என்ற வகையில்

[49] பார்க்கவும் உ.ம் 1993 உவே அ இணக்க ஒப்பந்தம் கட்டுரை 3.2; 1995 ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் கட்டுரை 18.3 நடத்தை விதித் தொகுப்பு கட்டுரை 8.2.2

கட்டுப்படுத்த இயலாத கலன்களுக்கு மீன் பிடிக்க அங்கீகாரம் வழங்குதல் கூடாது. கடலோர நாடு அதன் எல்லைக்குள் கட்டுப்படுத்த இயலாத அந்நிய கலன்கள் மீன்பிடிக்க அனுமதிக்கக் கூடாது.

## 4.4 போக்கு வரத்து மற்றும் உதவி கலன்கள்

பல நிகழ்வுகளில், சஅக மீன்பிடிப்பு மேற்கொள்வதற்கு பிற உதவி கலன்கள் மற்றும் போக்குவரத்திற்கான உதவியும் மீன்பிடி கலன்களுக்கு தேவைப்படுகிறது. சஅக மீன்பிடிப்பை மேற்கொள்வதில் சாதாரணமாக கப்பலுக்கு பிடித்த மீன்களை ஏற்றுவதைக் கண்காணிப்பது மிகவும் கடினம் என்று கருதப்படும் இடங்களில் அறிவிக்கப்படாத (அல்லது தவறுதலாக அறிவிக்கப்படும்) கப்பலுக்கு ஏற்றும் செயலையும் உள்ளடக்கும். மீன்பிடிப்பு மேற்கொண்டு பிறகு துறைமுகத்திற்கு அறுவடை செய்த கலன்கள் வரும் பொழுது கப்பலில் இருக்கும் சிறிது அளவு மீன் கடலில் இருந்து உண்மையாக பிடிக்கப்பட்டவற்றின் சிறு பகுதியாகவே இருக்கும். இதற்கிடையில், கடலில் போக்குவரத்து கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்ட மீன்களின் உண்மையான பிறப்பிடம் கண்டு பிடிக்க இயலாதது ஆகிவிடும்.

பசெதிந– சஅக கொடி நாடுகளை அவற்றின் போக்கு வரத்து கலன்கள் அல்லது மற்றும் பிற கலன்கள் சஅக மீன்பிடிப்பிற்கு ஆதரவு அளிக்காது என்பதை உறுதி செய்ய கேட்டுக்கொள்கிறது. குறிப்பாக சஅக மீன்பிடிப்பில் கலன்கள் ஈடுபடுவதாக அடையாளம் காணும் இடங்களில் கொடி நாடுகள் அதன் எல்லையில் பதிவு செய்யப்பட்ட இதர கலன்கள் அக்கலனிலிருந்து மீன்களை ஏற்றிச் செல்லாது, அக்கலனுக்கு மறு விநியோகம் செய்யாது அல்லது பிற வழிகளில் உதவி செய்யாது (கலனின் பணியாளர் பாதுகாப்பு உள்ளிட்ட மனிதாபிமான நோக்கங்கள் தவிர) என்பதை உறுதி செய்ய வேண்டும்.

கப்பலுக்கு ஏற்றுவதையும் கூர்ந்து கொடி நாடுகள் கண்காணிக்க வேண்டும். முடிந்தவரை கொடி நாடு அதன் முந்தைய அங்கீகாரம் இன்றி கடலில் கப்பலுக்கு ஏற்றுவதில் ஈடுபடும் கலன்களை தடை செய்ய வேண்டும். இதற்கு மேலும் திறமையான அணுகுமுறை என்னவென்றால் சில நாடுகள் ஏற்கனவே செய்துள்ளபடி கடலில் கப்பலுக்கு ஏற்றுவதை முழுமையாக தடை செய்வதேயாகும். உதாரணமாக, மமீமு நிறுவிய அந்நிய மீன்பிடிக்கலன்களின் வழிக்கு, பொருந்திய குறைந்தபட்ச நிபந்தனைகள், கப்பலுக்கு ஏற்றுவதை நியமிக்கப்பட்ட துறை முகங்களில் மட்டுமே அனுமதிக்கிறது. எந்த நிலையிலும் கடலில் அனுமதிப்பது இல்லை.[50] குறைந்த பட்சம் பசெதிந–சஅக பத்தி 49ல் விவரிக்கப்பட்டுள்ள விபரங்களை கடலில் கப்பலில் ஏற்றும் அவர்களின் கலன்கள் அறிவிப்பது கொடிநாடுகளுக்கு தேவையாகிறது.

## 4.5 பிற கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

அக்கலன்களின் பதிவுகளை பராமரித்தல், விரைவு அங்கீகாரம் இன்றி மீன்பிடிக்க கலன்களை தடை செய்தல் போன்றவைகளைக் கொண்டு கலன்களை பதிவு செய்வதற்கு ஒரு இறுக்கமான அமைப்பை உருவாக்க வேண்டும். மீன்பிடிக்க அத்தகைய அங்கீகாரம் அளிக்க வேண்டுமா என்பதனைப் பரிசீலிக்க வேண்டும் அங்கீகாரம் வழங்குவதற்கு தயாராக இல்லாத நிலையில் கொடி நாடு கலன்களை பதிவு செய்தல் கூடாது. கொடி நாடு இத்தகைய சாதாரண (அல்லது சட்டப்படியான) அடிப்படையை அதன் கலன்களின் மீன்பிடிப்பு நடவடிக்கையைக் குறித்தவரை தனது பொறுப்புகளை செயல்படுத்த நிறுவ வேண்டும்.

இக்கலன்களின் மீது உண்மையான கட்டுப்பாட்டை மேற்கொள்ள கொடி நாடு பசெதிந–சஅக மீன்பிடிப்பு விவரிக்கும் பல்வேறு வகையான சாதனங்களில் இருந்து தேர்ந்து எடுத்துக் கொள்ள

[50] மேலும் பின்னணி விபரங்கள் மற்றும் மிகக் குறைந்த அளவிலான நிபந்தனைகளை செய்முறைப் படுத்துவதற்கான வழிகளை அறிய பார்க்கவும். ட்டி. அகோரவ், வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள சிறு தீவுகளில் சட்டத்திற்குப் புறம்பான மீன் பிடிப்பு மற்றும் மீன்வள சட்டம் அமுல்படுத்துதல்: பசிபிக் தீவுகளில் அனுபவம், கடல்வாழ் மற்றும் கடலோர சட்டம் பன்னாட்டு சஞ்சிகை, தொகுதி, 12, எண்.1, 45–46.

வேண்டும். உதாரணமாக, கலன்கள் எங்குள்ளது என்பதனை அறிய கொடி நாடு சில வழிகளைப் பெற்று இருக்க வேண்டும். ஒவ்வொரு விநாடியும் அதன் இருப்பிடத்தை தெரிந்து கொள்ள முடியவில்லை என்றாலும், ஒழுங்காக, அடிக்கடி இடைவெளிகளில் இருப்பிடத்தை அறிந்து கொள்ள வேண்டும். கலன்கள் செல்லும் பாதையை அறிவதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டிய சாதனம் கட்டாயமாக ரேடியோவில் இருப்பிடத்தை அறிவிப்பதை உள்ளடக்கும். கலனின் இருப்பிடத்தை அடிக்கடி பதிவு செய்து பராமரிக்கப்படும் கட்டாயமான குறிப்பு புத்தகமும் இதில் அடங்கும். மீன்பிடிக்க அங்கீகாரம் வழங்குவதற்கு முன்பாக கலனை இயக்குபவர்கள் இத்தகைய தேவைகளுக்கு ஒத்துக் கொள்ளுதல் வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, கலன்களின் நியாயமான இயக்குபவர்கள் நம்பிக்கையான வகையில் இத்தகைய தேவைகளுக்கு இணக்கம் தெரிவிப்பர். அடிக்கடி சஅக மீன்பிடிப்போர் இதற்கு இணங்காது இருப்பர். எனவே கொடி நாடு கடலில் அவர்களது கலனின் இருப்பிடத்தை சரிபார்க்க சில தனிப்பட்ட முறைகளை வகுக்க வேண்டும். மேலே விவரித்தபடி இதனைச் செய்ய கூடியதில் களஅ ஒன்றாகும். சமீப காலங்களில் கள அமைப்பை நிறுவுவதற்கும் நிர்வகிப்பதற்குமான செலவினம் குறிப்பிடக்கூடிய வகையில் மிகவும் குறைந்து விட்டது. தொழில் நுட்பம் சிறந்த முறையில் வளர்ந்துள்ளது. சில மீன்வளங்களுக்கு, அதுவும் குறிப்பாக தொலைதூரப்பகுதியில் உள்ளவற்றிக்கு, களஅமைப்பு மட்டுமே கடலில் கலனின் பாதையை அறிய நம்பிக்கையான சாதனமாகும்.

கலனில் ஏறிச் சென்று பார்க்க தனிப்பட்ட பார்வையாளர்களை நியமிப்பது மற்றொரு சாதனமாகும். இவர்கள் கலன்களின் இருப்பிடத்தை அறிவர். மீன்பிடிப்பு நடவடிக்கைகளையும் பார்வையிடுவர். பார்வையாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும், அவர்களது சம்பளம் மற்றும் வாழ்வு ஆதாரத்திற்கான செலவினம் மிகவும் அதிகமாகும். சிறு கலன்களில் ஏறிச் சென்று பார்க்க பார்வையாளர்களை நியமிப்பது செய்முறைக்கு உகந்தது அல்ல. இத்தகைய தடைகள் இருந்த போதிலும், சமீப காலங்களில் பார்வையாளர்களின் எண்ணிக்கை மற்றும் பார்வையாளர் திட்டங்களின் நோக்கம் கணிசமான முறையில் வளர்ந்துள்ளது.

அவர்களது கலன்கள் கடலில் எங்கு மீன் பிடிக்கும் என்று தெரிந்த பகுதிகளில் தவறாது கண்காணிப்பு மேற்கொள்வதற்கான திறமையை மேம்படுத்த கொடி நாடுகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன. பல வளரும் நாடுகளுக்கு இதற்காக நிதி மற்றும் தொழில்நுட்ப வசதி தேவைப்படுகிறது. எனினும், கடலில் கண்காணிப்பு மேற்கொள்வதற்கான செலவைக் குறைப்பதற்கு வழிகள் உள்ளன. குறிப்பாக பிற நாடுகளுடன் ஒருங்கிணைந்து ஆதாரங்களை ஒன்று சேர்த்து செலவைக் குறைக்கலாம். மீன்வளம் குறித்த எச்சரிக்கை. கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளின் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பிற்கான பன்னாட்டு வலை பணியில் பங்கு கொள்வது, இது குறித்த கூட்டு நடவடிக்கையை எளிதாக்கும்.

ஆழ்கடலில் தங்களது சொந்த கலன்களை ஆய்வு செய்வதற்கும் ஏறிச் சென்று பார்ப்பதற்கும் தற்சமயம் திறன் இல்லாத நாடுகளையும் சேர்த்து, கொடி நாடுகள் பிற நாடுகளை தங்களது சார்பாக கலனில் ஏறிச் சென்று பார்க்கவும், ஆய்வு செய்யவும் அங்கீகரிக்கலாம். அங்கீகாரம் குறிப்பிட்ட பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அடிப்படையில் வழங்கப்படலாம். உதாரணமாக ஆழ்கடலில் சஅக மீன்பிடிப்பில் ஈடுபடுவதாக சந்தேகிக்கப்படும் கலனில் ஏறிச் சென்று பார்ப்பதற்காக மற்றொரு நாட்டிலிருந்து பெறப்படும் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்படலாம். **1995** ஐக்கிய நாடுகளின் இருப்பு ஒப்பந்தத்தில் உறுப்பினராகுதல் மற்றும் இந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட மண்டல ஏற்பாடுகளில் பங்கு கொள்ளுதல் மூலமும், கொடி நாடுகள் ஆழ்கடலில் அதன் கலன்களில் ஏறிச் சென்று பார்க்கவும்,ஆய்வு செய்யவும் பிற நாட்டை அங்கீகரிக்கலாம்.[51]

[51] பார்க்கவும் உயர்குறிப்பு **38**

பசெதிந–சஅக பத்தி 47.8ல் உள்ளபடி கொடி நாடுகளுக்கு மீன்பிடிக்க அங்கீகாரம் வழங்குவதற்கான ஒரு நிபந்தனையாக, ஒவ்வொரு கலனும் உரிய வகையில் அடையாளம் இடப்பட்டிருக்க வேண்டும். அடையாளம், உவே அமைப்பின் மீன்பிடி கலன்களுக்கான அடையாளத்திற்கான வரையறை திட்டவட்டம் மற்றும் வழிகாட்டுதல் போன்ற பன்னாட்டு அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளுக்கு இணக்கமாக இருத்தல் வேண்டும். எளிதாக அடையாளம் காணும் வகையிலும் கண்டுபிடிக்கும் வகையிலும் மீன்பிடி சாதனங்களும் அடையாளம் இடப்பட்டிருக்க வேண்டும்.

கொடிநாடு மீன்வளத்தின் குறுகியகால மேலாண்மை மற்றும் பாதிக்கப்பட்ட இருப்புகளின் நீண்டகால மதிப்பீடு ஆகிய இரண்டிற்கும் அதன் மீன் பிடிகலன் ஒவ்வொன்றும் என்ன வகை மீன்களைப் பிடிக்கிறது என்பதனைத் தீர்மானிக்க சில வழிகளைப் பெற்று இருக்க வேண்டும். அதன் விளைவாக மீன்பிடிக்க அங்கீகாரம் பெறுவதற்காக அதன் கலன்கள் ஒழுங்கான இடைவெளியில் அதன் மீன்பிடிப்பு நடவடிக்கைகள் பற்றி தெரிவிப்பது கொடி நாட்டிற்கு தேவையாகிறது. களஅ, ரேடியோ, தொலை அச்சு முறைகள் போன்ற அனைத்தும் அத்தகைய அறிவிப்பு அனுப்ப வசதியான மற்றும் காலம் உணர்ந்த முறைகள் ஆகும். குறிப்பு புத்தகத்தின் மூலம் மீன்பிடிப்பு தகவல்களை கட்டாயமாக அறிவிப்பது வழக்கமான ஒன்றாகும். பிற முறைகளும் உள்ளன.[52]

அறிவிக்கப்படும் விபரம் மீன்வளத்திற்கு, மீன்வளம் மாறுபடும் எனினும், கொடி நாட்டிற்கு குறைந்தது அதன் கலன்கள் மீன்பிடிப்பு நடவடிக்கைகள் குறித்து காலம் தவறாது முழுமையான மற்றும் சரியான விபரங்களை அறுவடையின் போது அறிவிப்பது தேவையாகிறது. இதனுள் உள்ளடக்கப் படுவது:

- கலன் அடையாளம் காணுதல் (ரேடியோ அழைப்பு குறி, துறைமுகம் மற்றும் பதிவு எண்)
- கலன் இருப்பிடம்
- கலனின் பாதை
- மீன்பிடிப்பு திறன் (மீன்பிடிக்கும் இடம், தேதி, நேரம், இடம்)
- பிடிக்கப்பட்ட மீன்களின் தொகுப்பு (இலக்கு மற்றும் இலக்கு இடப்படாத சிற்றின வகைகள்) பெயரளவிலான எடை (இறக்கப்பட்டவைக்கு சமமான உயிருடன் எடை)
- பகுதிக்குள் நுழைதல், வெளியேறுதல் (மூடப்பட்ட பகுதிக்குள் நுழைதல் வெளியேறுதல் உள்ளிட்ட) அறிவிக்கை
- துறைமுக நுழைவு அறிவிக்கை[53]

அறிவிக்கப்பட்ட விபரங்களின் சரியான தன்மையை சோதிப்பதற்கு கொடி நாடு நுட்பம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அறிவிக்கத் தவறியமைக்கும் தவறாக அறிவிப்பதற்கும் தண்டனை வழங்க வேண்டும். துறைமுகத்தில் வழக்கமான ஆய்வுகள், தனிப்பட்ட பார்வையாளர் கலனில் ஏறிச் சென்று பார்த்தல் ஆகியவற்றை அணுகு முறைகளை உள்ளடக்க வேண்டும்.

மேலே விவரித்தவாறு சகஅ மீன்பிடிப்பிற்காக வழங்கப்படும் தண்டனை வருங்காலத்தில் சஅக மீன்பிடிப்பை தடுத்து நிறுத்தும் அளவிற்கு போதுமானது மற்றும் சஅக மீன்பிடிப்பால் விளைந்த பயன்களை குற்றம் இழைத்தவர் இழக்கச் செய்வதற்கும் போதுமானது என்பதனை கொடி நாடு

---

52 கள அமைப்பின் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட அறிவிப்பு அமைப்பின் பயன்கள் மீதான விபரங்களுக்கு, பார்க்கவும் ஆன்ட்ரூ ஸ்மித், கலன் எச்சரிக்கை அமைப்பு, உவேஅ மார்ச் 2000 கடல் சட்டம் மற்றும் கொள்கைக்கான நிறுவனத்தின் வருடாந்திர கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டுரை, வர்ஜினியா உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு பல்கலைக்கழகம் தற்போதைய மீன்வள வெளியீடுகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, உவேஅ ரோம் 16–17 மார்ச் 2000).

53 பி, குயும்லங்கன் குறிப்பு 21லிருந்து எடுக்கப்பட்டது, மேல் விபரங்களுக்கு பார்க்கவும், உவேஅ பிடிக்கப்படும் மீன் விபரங்களின் வழக்கமான சேகரிப்புக்கான வழிகாட்டு முறைகள், உவேஅ மீன்வள தொழில் நுட்ப அறிக்கை 382, ரோம் 1999.

உறுதி செய்ய வேண்டும். அத்தகைய கடுமையான குற்றங்களுக்கு மீன்பிடிப்பதற்காக அக்கலன் பெற்றிருக்கும் அங்கீகாரத்தை நீக்குவதையோ அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதையோ அத்தகைய அனுமதி உள்ளடக்க வேண்டும். கலனின் தலைவர் மற்றம் பிற அலுவலர்களைப் பொறுத்தவரை, அவர்களை அந்த நிலையிலிருந்து நீக்குவதையோ, தற்காலிகமாக நிறுத்திவைப்பதையோ பொருந்தக் கூடிய அனுமதி உள்ளடக்க வேண்டும்.

வழக்கமாக பிற நாடுகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வழக்கமாக மீன்பிடிக்கும் கலன்களைக் கொண்ட கொடி நாடுகள், உ.ம் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து சென்று அடைதல் கடலோர நாடுகளுடன் சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க அத்தகைய சூழ்நிலைகளில் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். உதாரணமாக அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவுகளுக்கு இடையேயான ஒப்பந்தப்படி எ.க.க முயற்சிகளில் அமெரிக்க பசிபிக் தீவுகளுக்கு உதவிட வேண்டும். ஒப்பந்தப்படி ஒப்பந்தத்திற்கு எதிராக மீன்பிடித்த அதன் கலன்களில் இருந்து வசூலிக்கப்பட்ட அபராத தொகையை அமெரிக்க மபீ முகமைக்கு கொடுத்து விட வேண்டும்.

## 5 கடலோர நாடுகளின் நடவடிக்கைகள்

### 5.1 கடலேர நாடுகளின் உரிமை மற்றும் பொறுப்புகள்

கடலோர நாடுகளுக்கு அதன் எல்லைக்குட்பட்ட நீர்ப்பகுதிகளில் மீன்வளத்தை மேலாண்மை செய்யும் இறைமையுள்ள உரிமையை பன்னாட்டு சட்டம் வழங்குகிறது. கடலோர நாடுகளின் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில்தான் உலகின் மீன்பிடிபாட்டில் 90 சதவிகிதத்திற்கு மேலான மீன்கள் பிடிக்கப்படுவதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. நம்பத்தகுந்த விபரங்கள் இல்லையென்ற போதிலும் அப்பகுதிகளில்தான் குறிப்பிடத்தக்க அளவில் சஅக மீன்பிடிப்பு நடைபெறுவதாக கருதப்படுகிறது. கடலோர நாடுகளில் பதிவு செய்யப்பட்ட கலன்கள் மூலமாகவே சஅக மீன்பிடிப்பின் பெரும் பகுதி நடைபெறுகிறது. குறிப்பாக ஒவ்வொன்றையும் குறித்து அறிவித்தல் அல்லது தவறாக அறிவித்தல் என்ற முறைகளில் நடை பெறுகிறது.

பிற நிகழ்வுகளில், எங்கேயாவது பதிவு செய்யப்பட்ட கலன்கள் கடலோர நாட்டின் அனுமதி யின்றி இயக்கப்படுகின்றன (திருட்டு மீன்பிடிப்பு) அல்லது கடலோர நாடுகளால் வழங்கப்பட்ட சென்று அடைவதற்கான நிபந்தனைகளுக்கு முரணாக மீன்பிடிக்கின்றன.[54]

தேசீய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சஅக மீன் பிடிப்பு கேள்விக்குரிய கடலோர நாடுகளுக்கும் இந்த பகுதியில் நியாயமாக மீன்பிடிப்பவர்களுக்கும் முக்கியமாக தீங்கு விளைவிக்கிறது. ஆகையால் கொடி நாடுகளின் மீதான அக்கறையால் தெளிவாக செய்ய வேண்டியது, மிகவும் நேரடியாக சஅக மீன்பிடிப்போர் பயன்களைப் பெறுவதால் அப்பகுதிகளில் சஅக மீன்பிடிப்பை தடுத்து, நிறுத்தி, நீக்க வேண்டும் என்பதே.

ஏனெனில், கூடுதலாக, மீன் இருப்புகள் (மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பில் பிற சிற்றின வகைகள்) அவற்றின் எல்லைக்குள், ஒன்றுக்கு மேற்பட்ட கடலோர நாடுகள் அல்லது தேசீய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மற்றும் ஆழ்கடலில் நகர்ந்து செல்லக் கூடியவை. சஅக மீன்பிடிப்பு மற்றவர்களின் அக்கறையையும் பாதிக்கும். இந்த ஆதாரங்களின் நகரும் போக்கினால் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன்வளத்தை நிர்வகிக்கும் இறைமையுள்ள உரிமையை கடலோர நாடுகள் பெற்றிருப்பதின் பகுதியாக மீன்வளத்தை உரியவாறு பன்னாட்டு வரையறைகளுக்கு இணங்க நிர்வகிக்க வேண்டிய பொறுப்பையும் மறைமுகமாகப் பெற்றுள்ளது.

---

[54] சில கடலோர நாடுகள், குறிப்பாக வளரும் நாடுகளில் உள்ள கடலோர நாடுகள், அதன் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் வழி அனுமதிக்கப்பட்ட அந்நிய கலன்களின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை, அவற்றின் சொந்த எல்லைக்குட்பட்ட பகுதியில் பதிவு செய்யப்பட்ட கலன்களைக் காட்டிலும் மிகவும் கடுமையாக கண்காணிக்க முயற்சி செய்கிறது. கடுமையான கண்காணிப்பை தவிர்ப்பதற்காக அந்த கடலோர நாடுகளில் கலன்களை பதிவு செய்ய இது கலன் உரிமையாளர்களை ஊக்கப்படுத்துகிறது. பார்க்கவும் ட்டி. அகோரவ், உயர்குறிப்பு 33

இந்த இறைமையுள்ள உரிமைகளை உபயோகித்து சஅுக மீன்பிடிப்பை நிறுத்த தடுக்க நீக்க முறைகளை செயல்படுத்த பசெதிந–சஅுக ஒவ்வொரு கடலோர நாட்டையும் கேட்டுக் கொள்கிறது. பெரும்பான்மையான கடலோர நாடுகளின் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் நடைபெறும் மீன்பிடிப்பு நடவடிக்கையின் பெரும் பகுதி கடலோர நாடுகளால் பதிவு செய்யப்பட்ட கலன்களால்தான் மேற் கொள்ளப் படுகிறது. அத்தகைய சூழ்நிலையில் கடலோர நாடே கொடி நாடும் ஆகும். அவ்வாறே அவற்றில் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் இயக்கப்படும் கலன்கள் குறித்தவரை கொடி நாடாக அதன் பொறுப்புகளையும் மேற் கொள்ள வேண்டும். இந்த வழிகாட்டு முறைகளின் பிரிவு 4ல் விவரிக்கப்பட்டவாறு அதன் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் இயக்கப்படும் கலன்களைக் கொண்ட ஒவ்வொரு கடலோர நாடும் செய்ய வேண்டியது:

- அதன் கலன்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது தேவையாகிறது
- அனைத்து கலன்களையும் (அவை குறித்த அனைத்து தகவல்களையும்) மீன்பிடி கலன்கள் பதிவேட்டில் சேர்க்க வேண்டும்
- மீன்பிடிக்க கலன்கள் விரைவு அங்கீகாரம் பெறுவது தேவையாகிறது. அப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட கலன்களுக்கு மட்டுமே இது வழங்கப்படும்
- சஅுக மீன்பிடிப்பு வரலாறு கொண்ட கலன்களைப் பதிவு செய்வதைத் தடுக்கவும்.
- மீன்பிடிப்பு மற்றும் அதன் தொடர்பான விபரங்களை உரிய முறையில் அறிவித்தல் மற்றும் தினக்குறிப்பு புத்தகங்களை பராமரிப்பதும் தேவையாகிறது.[55]

கடலோர நாட்டின் சொந்த கலன்கள் அல்லது எங்கேனும் பதிவு செய்யப்பட்ட கலன்கள் ஆகியவற்றால் அவற்றின் எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகை சஅுக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க ஒவ்வொரு கடலோர நாட்டிற்கும் பல்வகையான சாதனங்களை பசெதிந–சஅுக பத்தி 51 முன் வைக்கிறது. மேலே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளபடி, இச்சாதனங்களில் பெரும்பான்மையானவை கொடி நாடுகளால் மேற்கொள்ளப்படும் செய்முறைகளைப் போன்றவை. உதாரணமாக பத்தி 51.1 கடலோர நாடுகளை “தனிப்பட்ட பொருளாதார மண்டலத்தில் திறமையான (எ.க.க) முறைகளை மேற்கொள்ள” கேட்டுக் கொள்கிறது. இந்த வழிகாட்டு முறைகளில் பிரிவு 3.2.5ல் விவரித்தபடி, திறமையான எ.க.க நிறுவிட, மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க பரந்த அடிப்படையக் கொண்ட முயற்சி தேவைப்படுகிறது. சட்ட வரம்பு மீறல்களை புலன் விசாரித்தல் மற்றும் உரிய முறையில் கடுமையான தண்டனை வழங்குதல் ஆகியவையும் தேவைப்படுகிறது. ஒவ்வொரு கடலோர நாடும் அதன் எ.க.க திறமையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக அதன் எல்லைக்கு உட்பட்ட நீர்ப்பரப்பில் இயங்கும் கலன்கள் கள அமைப்பை பயன்படுத்தும் தேவையைப் பரிசீலிக்க வேண்டும்.

அவ்வாறே, பசெதிந–சஅுக பத்தி 51 கடலோர நாடுகளை, உள்நாடு அல்லது அந்நிய கலன் ஆகிய எந்த ஒரு கலனும் அதன் எல்லைகுட்பட்ட பகுதியில், அந்த கடலோர நாட்டினால் மீன்பிடிக்க வழங்கப்பட்ட உரிய அங்கீகாரம் இன்றி மீன்பிடிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது இல்லை என உறுதி அளிக்க கேட்டுக் கொள்கிறது. அத்தகைய அங்கீகாரம் கடலோர நாட்டினால் பராமரிக்கப்படும் கலன் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட கலன்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

மேலே விவாதித்தவாறு கடலில் கப்பலுக்கு ஏற்றுதல் சஅுக மீன்பிடிப்பை வழக்கமாக எளிதாக்குகிறது. இந்த காரணத்தால் பத்தி 51 ஒவ்வொரு கடலோர நாடும் அதன்

55 பிடிக்கப்பட்ட மீன் விபரத்தை அறிவிக்க அடிப்படையான விபரங்களின் தேவைக்கு, பார்க்கவும் உவே அமைப்பின் பிடிக்கப்படும் மீன் விபரங்களின் வழக்கமான சேகரிப்புக்கான வழிகாட்டு முறைகள், உவேஅு மீன்வள தொழில்நுட்ப அறிக்கை 382, ரோம் 1999. பிற பொருள்களுக்கு இடையில் இந்த வழிகாட்டு முறைகள் கலன்களின் மீன்பிடிப்பு அறிக்கைகளை சரிபார்கக செய்முறைகளைப் பரிந்துரைக்கிறது, எ.கா., அந்த அறிக்கைகளை உண்மையாக இறக்கப்பட்ட மீன்களுடன் ஒப்பிடுவது மூலம்.

எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் கடலில் மீன்களை பதப்படுத்துதல் மற்றும் கப்பலுக்கு ஏற்றுதல் ஆகிய இரண்டிற்கும் கடலோர நாடு விரைவு அங்கீகாரம் அளித்திருக்க வேண்டும் அல்லது குறைந்தது கடலோர நாடு பின் பற்றும் உரிய கட்டுப்பாடுகளுக்கு இணங்கி நடைபெற வேண்டும் என்பதனை உறுதிப்படுத்தும் படி கேட்டுக் கொள்கிறது.

நியாயமாக இயக்க விரும்பும் மீன்பிடிப்பவர்களுக்கு உதவிட, அதன் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பு தெளிவாக வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனை கடலோர நாடு உறுதி செய்ய வேண்டும். இந்த வரைபடம் எங்கு மீன்பிடிப்பு தடை செய்யப்பட்டுள்ளதோ அல்லது குறிப்பிட்ட வகை மீன் பிடிப்பவர்களுக்கு மட்டும் வரையறை செய்யபட்டுள்ளதோ அல்லது மீன்பிடி சாதனங்களின் வகை வரையறை செய்யப்பட்டுள்ளதோ அந்த இடங்களை அடையாளம் காண்பிக்க வேண்டும்.

## 5.2 சென்றடைதல் மற்றும் அதற்கான ஒப்பந்தங்கள்

கடலோர நாடு, அதன் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் இருந்து மொத்த அனுமதிக்கப்பட்ட மீன் பிடிபாட்டை அறுவடை செய்வதற்கு திறமையற்று இருந்தால் அது பிற நாட்டைச் சார்ந்த மீன்பிடிப்பவர்களை அந்த இடத்தை சென்று அடைய அனுமதிக்கும் கடமையை கொண்டுள்ளது.[56] அத்தகைய சென்று அடைதலுக்கு அனுமதிக்க, நிபந்தனைகளைத் தீர்மானிக்கும் பொழுது கடலோர நாட்டிற்கு, அப்பகுதியில் அந்நிய கலன்கள் சஅக மீன்பிடிப்பை மேற்கொள்ளும் சாத்தியத்தைக் குறைக்கும் வாய்ப்பு உள்ளது. இதன் அடிப்படையில் பசெதிந–சஅக பத்தி **51** கடலோர நாடுகளை, அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு சென்று அடைவதற்கான அனுமதியை, சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க உதவிடும் விதத்தில் கட்டுப்படுத்த கேட்டுக் கொள்கிறது.

சென்று அடைய அனுமதிக்கும் கடலோர நாடு வழக்கமாக வளரும் நாடாக இருக்கும். அதன் எல்லைக்கு உட்பட்ட நீர்ப்பகுதிகளை திறமையாக கண்காணிக்க திறமையற்று இருக்கும். அத்தகைய நிகழ்வுகளில், சாத்யமான சஅக மீன்பிடிப்பை கட்டுப்படுத்த கடலோர நாடு பிற சாதனங்களைச் சார்ந்திருக்க வேண்டும்.

ஒரு பொதுவான அணுகுமுறை, எந்த ஒரு சென்றடைய வழங்கப்படும் அனுமதியும் கொடி நாட்டுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும். அனுமதி வழங்கப்பட்ட அதன் கலன்கள் மேற்கொள்ளும் மீன்பிடிப்பு நடவடிக்கைகள் குறித்த வரை கொடி நாட்டிற்கான தொடரும் பொறுப்புகளை அது விளக்கிக் கூறுகிறது. குறைந்த அளவிலாவது கொடி நாடு சென்றடைவதற்காக வழங்கப்பட்ட அனுமதி குறித்த நிபந்தனைகளை மீறும் அதன் கலன்களை தண்டிக்கும் பொறுப்பு கொண்டதாக இருக்க வேண்டும்.[57] பிறவற்றிக்கு இடையே இந்த ஒப்பந்தம் கொடி நாட்டிற்கு கீழ்க்கண்டபொறுப்புகளையும் வழங்குகிறது:

- கடலோர நாடு மேற்கொள்ளும் எகக முயற்சிகளில் உதவி செய்தல்
- கடலோர நாட்டின் மீன்பிடிப்பு வரையறைகளை மீறுதல், கொடி நாட்டின் சட்டத்தை மீறுவதாக கருதுதல்
- கடலோர நாட்டின் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் கொடிநாடு அதன் கலன்கள் புரிந்த மீன்பிடி மீறல்களுக்காக வசூலிக்கப்பட்ட அபராதத் தொகையை கொடி நாட்டிற்கு செலுத்துதல்.[58]

---

56 பார்க்கவும் 1982 ஐக்கிய நாடுகளின் மரபு, கட்டுரை 62.2

57 இது குறித்து நடத்தை விதித்தொகுப்பின் கட்டுரை 8.2.7 கொடிநாட்டின் கொடிகளைப் பறக்க விடும் உரிமை கொண்ட கலன்கள் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை மீறினால் கொடிநாட்டை அமுல்படுத்தும் முறைகளை மேற் கொள்ள கேட்டுக் கொள்கிறது. கடலோர நாடு வகுத்த அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் பயன்படுத்தக் கூடிய முறைகளும் இதில் அடங்கும்.

58 இத்தகைய பொறுப்புகள் உள்ளன, உதாரணமாக குறிப்பிட்ட பசிபிக் தீவு நாடுகள் மற்றும் அமெரிக்க அரசுக்கு இடையேயான 1987 மீன்வள ஒப்பந்தம்.

இத்தகைய வகை, சென்று அடைவதற்கான அனுமதி ஒப்பந்தம், சஅக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த நீக்க கடலோர நாடு மற்றும் கொடி நாடுகளுக்கு இடையே சுறுசுறுப்பான தோழமையை ஏற்படுத்தும். இத்தோழமை முழுதும் திறமையாக இருக்க அனுமதி ஒப்பந்தம் வழிகேட்கும் நாட்டில் பதிவு செய்யப்பட்ட கலன்களுக்கு மட்டுமே வழி வழங்க வேண்டும். பிற வார்த்தைகளில் இந்த ஒப்பந்தத்தால் உள்ளடக்கப்படும் அனைத்து கலன்களைப் பொறுத்தவரை வழிகேட்கும் நாடு கொடி நாடாகும். பதிலாக மூன்றாவது நாட்டில் பதிவு செய்யப்பட்ட கலன்களுக்கு வழியை ஒப்பந்தம் அனுமதிக்கும் எனில் வழிகேட்கும் நாடு, அதன் கலன்களைப் பொறுத்தவரை கொடி நாட்டின் பொறுப்பை மேற் கொள்ளாது.[59]

கொடிநாட்டுடன் கடலோர நாடு சென்றடையும் வழிக்கான அனுமதி ஒப்பந்தம் செய்திருந்தாலும் அல்லது செய்யாதிருந்தாலும், கடலோர நாடு அதன் தீர்மானத்தின் படி பிற பல சாதனங்களை, அனுமதி வழங்கப்பட்ட கலன்கள் மேற்கொள்ளும் சஅக மீன் பிடிப்பை கட்டுப்படுத்த, பயன்படுத்தலாம். அவற்றில் உள்ளடங்குபவை:

- அதன் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட அந்நிய கொடி உடைய மீன்பிடி கலன்களின் பதிவேட்டை பராமரித்தல்.
- சென்று அடையும் வழிக்கு அனுமதி வழங்குவதற்கு முன்பாக கொடிநாடு கொடிநாட்டின் எல்லைக்கு அப்பால் மீன்பிடிக்க அக்கலனுக்கு அங்கீகாரம் அளித்துள்ளதா என்பதனைச் சரிபார்த்தல்
- கலன்கள் கலன் எச்சரிக்கை அமைப்பை பயன்படுத்துவது தேவையாகிறது. கடலோர நாடுகள் உடனடியாக அல்லது சிறிது நேரத்திற்குள்ளாக கலனின் இருப்பிடத்தை அடையவும், கஎ அமைப்பின் மூலம் வழக்கமான விபரங்களைப் பெறுவதற்கும் இயலும்.
- கலன்கள் அல்லது அவற்றில் குறித்த சதவிகிதத்திலாவது தனிப்பட்ட பார்வையாளர்களை ஏற்றிச் செல்வது தேவையாகிறது.

கொடி நாடுகள் சஅக மீன்பிடிப்பு வரலாறு கொண்ட கலன்களைப் பதிவு செய்தலை தவிர்ப்பது போல், கடலோர நாடுகளும் அத்தகைய கலன்களுக்கு வழி அனுமதிப்பதை தவிர்க்க வேண்டும். உதாரணமாக நார்வே நாட்டின் நீர்ப்பரப்பில் மீன்பிடிக்க உரிமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். நார்வேயில் கலன் அல்லது கலனின் உரிமையாளர் நார்வே மீன்வள எல்லைக்குள் வரையறைக்குட்பட்ட அல்லது மமீவமே நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட மீன் இருப்பு மீது பன்னாட்டு எல்லையில் நடைபெற்ற கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பில் பங்கு கொண்டிருந்தால் அந்நாட்டின் நீர்ப்பரப்பில் மீன்பிடிக்க உரிமம் மறுக்கப்படும். அக்கலனின் இயக்குபவர் மற்றும் உரிமையாளர் புதியவராக இருந்தாலும் உரிமம் மறுக்கப்படும்.[60]

## 5.3 கடலோர நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு

கடலோர நாடு அதன் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க உள்ள திறமையை அதிகரித்து கொள்ள பல்வகை நிலையில் பிற நாடுகளுடன் நெருங்கி பணிபுரிதல் வேண்டும். பசெதிந–சஅக குறிப்பாக கடலோர நாடுகளை அடுத்துள்ள கடலோர நாடுகள் மற்றும் மமீவமே நிறுவனங்கள் உள்ளிட்ட பிறருடன் ஒத்துழைத்து விபரங்களைப் பரிமாற்றம் செய்து கொள்ள கேட்டுக் கொள்கிறது.

---

59 சென்று அடைதலுக்கான அனுமதி குறித்த ஒப்பந்தங்களின் மேல் விபரங்களுக்கு பார்க்கவும் டபிள்யு. மார்டின், எம். லாட்ஜ், ஜே. காடி மற்றும் கே. மெப்போட்வோ, ''மீன் வளத்தில் சென்று அடைவதற்கான அனுமதிக்கான ஒப்பந்தம் குறித்த கையேடு.'' (உலக வன விலங்கு நிதி, 2000).

60 நார்வே அத்தகைய கலன்களுக்கு தனது கொடியைப் பறக்க விடும் உரிமையை வழங்கவும் மறுக்கிறது. அதன் துறைமுக வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதி மறுக்கிறது. இது குறித்த நார்வேயின் முறைகள் குறித்து முழுமையான விபரங்களுக்குப் பார்க்கவும் ட்டி. லோபக் உயர்ந்த குறிப்பு 34.

விபரங்களைப் பரிமாற்றம் செய்து கொள்வது, சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கை பற்றிய தகவல்கள், திருட்டு மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்கள் மற்றும் அதன் உரிமையாளர்களின் 'கறுப்பு பட்டியலை' தயாரித்து பரிமாற்றம் செய்து கொள்வது, மண்டல அளவில் பொருத்தமான சட்டம் மற்றும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துதல், அடுத்துள்ள நாடுகளுடன் குறிப்பிட்ட அமுல்படுத்தும் உரிமைகளை (விரட்டிச் சென்று பிடிப்பதற்கான உரிமை உள்ளிட்ட) வழங்கி மற்றும் பங்கிட்டுக் கொள்வது,[61] மண்டல அளவில் ஒருங்கிணைந்த கண்காணிப்பை பயன்படுத்துவது, கைது செய்வதற்கான ஆற்றல், எகக திறமையை வளர்ப்பதற்கான பிற உதவிகள் போன்ற அனைத்தும் ஒத்துழைப்பில் அடங்கும்.

உதாரணமாக மேற்கு ஆப்ரிக்காவில் சார் மண்டல மீன் வளக்குழுவில் உள்ளடங்கிய கடலோர நாடுகளைக் கொண்ட ஒரு குழு, கண்காணிப்பு பணி ஒருங்கிணைப்பு அலகு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இது எகக பணிகளை ஒருங்கிணைக்கும். அதனால் பன்னாட்டு சட்டங்களை அமுல்படுத்துவது வலுவாகும்.[62] கூடுதலாக மீன்வளம் மீதான சமீபத்தில் முடிவு பெற்ற தென் ஆப்ரிக்கா மேம்பாட்டுக் குழுவின் உடன்படிக்கை (தெஆமேகு) சட்டத்தை அமுல்படுத்துவது பற்றிய கட்டுரை ஒன்றைக் கொண்டுள்ளது. எகக பொருட்கள் மற்றும் விபரங்களை பங்கிட்டுக் கொள்வது பற்றி விபரங்களை வழங்குகிறது.[63]

அடுத்துள்ள கடலோர நாடுகளின் குழு சஅக மீன் பிடிப்பை எதிர்த்துப் போராடுவதற்கான வழியாக மீன் வளத்தைச் சென்று அடைவதற்கான வழிக்கு வழங்கப்படும் அனுமதிக்கான இணைந்த அல்லது பொதுவான விதிகளை ஏற்படுத்துவது பயன்தரக் கூடியது என அறிகிறது. அத்தகைய நடவடிக்கைக்கு நன்கு அறிந்த உதாரணம் மமீமுகமை உறுப்பினர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆகும். இந்த கடலோர நாடுகள் திறமை மிக்க மண்டல பதிவேட்டை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறே அந்நிய மீன்பிடி கலன்களுக்கான பாதைக்கான பொருந்தும்படியான குறைவான நிபந்தனைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

மமீமு பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ள அந்நியக் கலன் தானாகவே "நல்ல நிலையை" பெற்றுக் கொள்கிறது. மமீமு உறுப்பினரில் ஒருவர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையை மீறினால் நல்ல நிலையை இழந்துவிடும். அதனால். பிற 15 மமீமு உறுப்பினர்களின் யாரேனும் ஒருவருடைய கண்காணிப்பில் உள்ள நீர்ப்பரப்பிலேயும் இயக்கும் தன்மையையும் இழந்து விடும். இணக்கத்திற்கான ஆற்றல் உள்ள ஊக்கத்தை இது தோற்று விக்கிறது.

இந்த அணுகு முறையின் பயன் தரும் தன்மை மண்டல ஒத்துழைப்பு மற்றும் இணைந்து இருக்கும் ஆற்றலைப் பொறுத்தது. பொதுவான மீன்வளம் இருக்கும் இடங்களிலேயே கலன்களின் மண்டல அளவிலான பதிவு செயல்படும். மண்டல அளவில் பதிவு செய்யும் திட்டம் மையத்திலிருந்து நிர்வகிக்கப்பட வேண்டும் மற்றும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். மமீமு மண்டல பதிவேடு, ஒன்றுக்கு மேலான மமீமு உறுப்பினர்களின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இயக்க தீர்மானிக்கும் பெரும்பான்மையான மீன்பிடி கலன்களுக்கு பயன் தரும்.

---

61 விரட்டிச் சென்று பிடித்தலுக்கான உரிமை குறித்த பொதுவான விதிகள், பார்க்கவும் 1982 ஐக்கிய நாடுகளின் மரபு கட்டுரை 111.

62 லக்ஸ்எம்போர்க் இதனைத் தொடங்க உவே அமைப்பு மூலம் நிதி அளித்துள்ளது. இத்தொடக்கத்தைப் பற்றிய மேல் விபரங்கள் அறிய கண்காணிப்பு இயக்கம் ஒருங்கிணைக்கும் குழுவை luxdev@gamtel.gm வலைத்தளத்தில் அணுகவும். இம்மண்டலத்தில் சகஅ மீன்பிடிப்பு பற்றி மேல் விபரங்களுக்கு பார்க்கவும் ''மீன்பிப்பில் கடற்கொள்ளை: சூறையாடப்படும் மேற்கு ஆப்ரிக்கா,'' – க்ரீன் பீஸ்.

63 தெற்கு ஆப்பிரிக்கமேம்பாட்டு சமுதாயத்தின் 14 உறுப்பினர் நாடுகளின் பிரதிநிதிகள், மீன் வளத்திற்கான உடன்படிக்கைபடி ஆகஸ்ட் 14, 2001ல் கையொப்பம் இட்டுள்ளனர். சாதனங்களின் வைப்பிற்குப் பிறகு தெஆமேகுழுவின் உறுப்பினர் நாடுகளில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் அனுமதி அளிக்கப்பட்ட 30 நாட்களுக்குப் பிறகு இந்த உடன் படிக்கை அமலுக்கு வரும்.

கூடுதலாக சென்று அடைவதற்கான வழிக்கு அனுமதி குறித்த ஒப்பந்தங்களின் பேச்சு வார்த்தைகளில் அந்நிய கலன்களுக்கான சென்று அடைவதற்கான வழிக்கு அனுமதிக்காக ஏற்படுத்தப்பட்ட பொருந்தக்கூடிய குறைந்தபட்ச நிபந்தனைகள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதனை மமீமு உறுப்பினர்கள் உறுதி செய்ய வேண்டும்:

- உறுப்பினர் நாட்டின் தனிப்பட்ட பொருளாதார மண்டலத்தின் (தபொம) அதற்கான உரிமத்தை ஏற்படுத்தப்பட்ட பொதுவான உரிம படிவத்தில் வழங்கப்படாதவரை அந்நிய கலன் மீன்பிடிக்கக் கூடாது.
- கடலில் கப்பலுக்கு மாற்றி ஏற்றுதல் தடை செய்யப்படுகிறது. நியமிக்கப்பட்ட துறைமுகங்களில் மட்டுமே மாற்றி ஏற்றுதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- உரிமம் வழங்கிய நாட்டிலிருந்து வரும் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் அந்நியக் கலன்களின் தினசரி குறிப்பு, பிடிக்கப்பட்ட மீன் குறித்த பதிவேடுகள் ஆகியவற்றை முழுமையாக பார்க்க அனுமதிக்கப்படுகின்றனர்
- தனிப்பட்ட பொருளாதார மண்டலம் மற்றும் அடுத்துள்ள ஆழ்கடல் பகுதி இயக்கத்தில் பிடிக்கப்பட்ட மீன்களின் தினசரி குறிப்பு புத்தகத்தை பராமரித்து கலன் இயக்குபவர்கள் சமர்ப்பிக்கின்றனர். மீன்பிடிப்பு பயணம் முடிந்த 45 நாட்களுக்குள் உரிமம் வழங்கிய நாட்டிற்கு அத்தகைய அறிக்கைகள் வழங்கப்படுகின்றன.
- தனிப்பட்ட பொருளாதார மண்டலத்தில் இயக்கப்படும் பொழுது பிடிக்கப்பட்ட மீன்களின் பதிவு விபரங்களை கலன் இயக்குபவர்கள் வழங்குகின்றனர்.
- அறிக்கைகளை சரிபார்க்கவும் பார்வையாளர்களை கலன் இயக்குபவர்கள் ஏற்றிச் செல்கின்றனர். கலனின் பகுதிகளையும் பதிவேடுகளையும் முழுமையாக நிச்சயமாக பார்ப்பதற்கு பார்வையாளர்கள் கவனமாகப் பார்க்க வேண்டிய நோக்கத்திற்காக அனுமதிக்கப்படுகின்றனர்.
- இச்செய்முறை நோக்கத்திற்காக கலன் இயக்குபவர்கள், உள்ளூர் பிரதிநிதிகளை பராமரிப்பர்.
- தனிப்பட்ட பொருளாதார மண்டலத்தை கடக்கும் பொழுது மீன்பிடி சாதனங்களை ஒழுங்காக அடுக்கி வைக்க வேண்டும்.
- உரிமம் வழங்கிய நாட்டின் அதிகாரம் உடையவர்களின் ஆணைகளுக்கு கலன் இயக்குபவர்கள் இணங்கி இருக்க வேண்டும்.
- உவே அமைப்பின் மீன்பிடி கலன்களுக்கான அடையாளம் காணுதல் மற்றும் குறியிடுதல் குறித்த வரையறைகளுக்கு இணங்க கலன் இயக்குபவர்கள் கலன்களுக்கு குறியீடு செய்தல் வேண்டும்.
- கலன் இயக்குபவர்கள் அந்நிய கலன்களின் களஅமைப்பு பதிவேட்டில் தானாகவே இருப்பிடத்திற்கு தொடர்பு கொள்ளுதலை பதிவு செய்தல் வேண்டும்.[64]

## 6 துறைமுக நாடுகளின் நடவடிக்கைகள்

சஅக மீன்பிடிப்போர் கடைசியாக அவர்கள் பிடித்த மீன்களை கரை இறக்குவதற்கோ அல்லது கப்பலுக்கு ஏற்றி அனுப்புவதற்கோ துறைமுகத்திற்கு கொண்டுவர வேண்டும்.[65] சில நாடுகள் தெரியாமலோ அல்லது தெரிந்தோ இந்த நோக்கத்திற்காக அவர்களது துறை முகங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்து விடுகின்றனர். அவ்வாறு சஅக மீன்பிடிப்பை

---

64 மமீமு அந்நிய நாட்டு மீன்பிடிப்பு வழிக்கான பொருந்தக்கூடிய குறைந்த நிபந்தனைகள் (24/28 நவம்பர் 1997)ல் FFC 34ல் திருத்தப்பட்டபடி.

65 இந்த வழிகாட்டு முறைகளில் 'துறைமுகம்' என்ற வார்த்தை கரையிலிருந்து தொலைவில் கடலில் முடிவுறும் இடங்களையும் உள்ளடக்கும்.

எளிதாக்குகின்றனர். பிற நாடுகள் தனக்காக அல்லது அதே எண்ணம் உடைய நாடுகளின் ஒத்துழைப்புடன், சஅுக மீன்பிடிப்பை கட்டுப்படுத்தும் முறையாக தங்கள் துறை முகங்களை அடைவதற்கான வழியை வரையறுத்து கட்டுப்படுத்துகின்றன. பசெதிந–சஅுக மீன்பிடிப்பை விவரித்துள்ளபடி வலிமையையும் மற்றும் ஒத்துழைப்பையும் அதிகரித்துக் கொள்ளுதல் மிகவும் அவசியமாகிறது.

பன்னாட்டு சட்டம், ஒரு நாடு அதன் எல்லைக்குட்பட்ட துறைமுகங்களைப் பொறுத்தவரை இறைமையுள்ள முழு உரிமையையும் பெற்றுள்ளது என்பதனை உணர்கிறது. பொதுவாகக் கூறும் பொழுது ஒரு நாடு:

- பிற நாடுகளில் பதிவு செய்யப்பட்ட கலன்கள் துறைமுகத்திற்கு வருவதற்கான வழி தர மறுக்கலாம்.[66]
- அதன் துறைமுகங்களில் பிற நாடுகளில் பதிவு செய்த கலன்கள் பிடித்த மீன்களை இறக்குதல் அல்லது கப்பலில் மாற்றி அனுப்புதல் ஆகியவற்றை தடை செய்கிறது.
- துறைமுகத்தை அடைய விரும்பும் கலன் அதன் அடையாளம் மற்றும் நடவடிக்கைகள் குறித்த தகவல்களை வழங்குவது தேவையாகிறது.
- தனது விருப்பத்தில் துறைமுகத்தில் உள்ள கலனை ஆய்வு செய்தல்.

சில காலமாக, பக நிறுவனத்தின் சார்பில் பின்பற்றப்படும் கலன் பாதுகாப்பு மற்றும் சுற்றுப்புறச்சூழ்நிலை வரையறைகளுக்கு இணக்கத்தை உயர்த்த பன்னாட்டு சமுதாயம் துறைமுக நாடுகளின் முறைகளை மேம்படுத்துகிறது.[67] மீன்வளம் குறித்த சமீபத்திய பன்னாட்டு சாதனங்கள் குறிப்பிட்ட துறைமுக நாடுகளின் முறைகளை, மீன்வள பாதுகாப்பு மற்றும் மேலாண்மை வரையறைக்கு இணக்கத்தை உயர்த்தும் நோக்கத்தில் விரிவு படுத்த தொடங்கியுள்ளன. இந்த நோக்கத்திற்காக துறைமுக நாடுகளின் முறைகளைப் பயன்படுத்துவது பணி மற்றும் உரிமை என இரண்டாக கருதப்படுகிறது.[68]

## 6.1 அடிப்படை துறைமுக நாட்டின் நடவடிக்கைகள்

சஅுக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த நீக்க கட்டுப்பாட்டு முறைகளை மேம்படுத்தி பயன்படுத்திட அனைத்து துறைமுக நாடுகளை கோருவதன் மூலம் பசெதிந–சஅுக இந்த சமீபத்திய சாதனங்களை நிர்மாணிக்கிறது.

துறைமுக நாட்டின் முறைகள் நியாயமாக வெளிப்படையாக பாகுபாடின்றி பயன்படுத்தப்பட வேண்டும். கூடுதலாக அதன் துறைமுகத்தில், அந்நிய கலனிலிருந்து பெற்ற எந்த ஒரு விபரத்தையும் ஏதாவது பயன்படுத்தப்படும் நம்பிக்கை தேவைகளுக்கு இணங்க வைத்திருக்க வேண்டும்.

ஒரு துறைமுக நாடு கலன் அதன் துறைமுகத்தில் நுழைவதற்கு முன்பாகவே சில கட்டுப்பாட்டு முறைகளை செயல்படுத்தலாம். பசெதிந–சஅுக பத்தி 55ல் அமைந்துள்ளபடி துறைமுகத்தை அடைய அனுமதி கோரும் அந்நிய கலன் குறைந்த அளவிலேனும் கீழ்க்கண்ட விபரங்களை கொடி நாட்டிற்கு வழங்குதல் தேவையாகிறது.

---

66 இந்த விதிக்கு நன்கு அறிந்த விதிவிலக்கை பசெதிந–சஅுக மீண்டும் வலியுறுத்துகிறது; அதாவது ஒரு நாடு, கலனை, எதிர்பாராத விளைவு அல்லது இடர்ப்படும் பொழுது ஆபத்தில் அல்லது துயர்உற்றவர்களுக்கு உதவி செய்வதற்காக, தங்களது துறைமுகத்திற்குள் அனுமதிக்க வேண்டும். எனினும் துயர்உற்ற கலனுக்கு உதவி செய்வதற்காக துறைமுக நாடு, கலன் பிடித்த மீன்களை இறக்கவோ அல்லது கப்பலுக்கு மாற்றி அனுப்பவோ அனுமதிக்க தேவையில்லை

67 மேல் விபரங்களுக்கு பார்க்கவும் ''மண்டல துறைமுக நாடு கட்டுப்பாடு ஒப்பந்தங்கள்: பன்னாட்டு சட்டங்களின் சில பிரச்சினைகள்'' டெட்எல். மெக்டோருமன்.

68 பார்க்கவும் உ.ம். ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் கட்டுரை 23; நடத்தை விதித் தொகுப்பு கட்டுரை 8.3; மற்றும் உவேஅ இணக்க ஒப்பந்தம் கட்டுரை 5.2

- துறைமுகத்தில் நுழைவதற்கு நியாயமான முன்னறிவிப்பு
- மீன்பிடிக்க பெற்றுள்ள அங்கீகார நகல்
- மீன்பிடிப்பு பயணத்தில் விபரங்கள் மற்றும் கலனில் உள்ள மீனின் அளவு

மீன்பிடிப்பு குறித்த நடவடிக்கைகளில் ஈடுபடும் பிற அந்நிய கலன்களும் துறைமுக நாட்டிற்கு, துறைமுகத்தில் நுழைவதற்கு முன்பாக ஒப்பிடக்கூடிய விபரங்களை வழங்குவது தேவையாகிறது. குறிப்பாக, கடலில் மாற்றி ஏற்றப்பட்ட மீன்களை ஏற்றிச் செல்லும் போக்குவரத்து கலன்களைப் பொறுத்தவரை அத்தகைய விபரங்களைப் பெறுவது மிகவும் முக்கியமானது.

சாத்தியமான துறைமுக நுழைவிற்கு முன்பாக இந்த விபரங்களைப் பெறுதலால் துறைமுகநாடு, அக்கலன் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டதா அல்லது அதற்கு உதவி செய்ததா என்பதை தீர்மானிக்கும் திறமையை அதிகரித்துக் கொள்கிறது.

உதாரணமாக துறைமுக நாடு மற்றொரு நாட்டிலிருந்தோ அல்லது மமீவ மே நிறுவனத்திலிருந்தோ குறிப்பிட்ட கலன் ஒன்று மூடப்பட்ட பகுதியில் மீன்பிடித்ததை அல்லது தடை செய்யப்பட்ட மீன்பிடி சாதனங்களைப் பயன்படுத்தியதைப் பார்த்ததாக முன்பாகவே அறிவிப்பை பெற்றிருக்கலாம். துறைமுகத்திற்கு நுழைய அனுமதி கோரும் கலனிலிருந்து பெறப்பட்ட விபரம் முன்பே பெறப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கேள்விக்குரிய கலனாக அது இருக்குமா என்பதனைத் தெரிவிக்கும். அவ்வாறெனில் துறைமுக நாடு அனுமதி வழங்குவதை தடை செய்யலாம். அல்லது மாறாக துறைமுகத்தில் உள்ள பொழுது கலன் முழுமையாக ஆய்வு செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கப்படும்.

கலனில் ஆய்வு மேற்கொள்ள திறமை உள்ள இடங்களில் மட்டுமே நாடு அதன் துறைமுகங்களை வந்து அடைய அந்நிய மீன்பிடிகலன்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். அத்தகைய ஆய்வின் போது துறைமுக நாடு குறைந்தது கீழ்க்கண்ட விபரங்களையாவது சேகரிக்க வேண்டும். கொடி நாட்டிற்கு மற்றும் உரிய இடங்களில் தொடர்புடைய மமீவமே நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக இவற்றை சேகரிக்க வேண்டும்.

- கலனின் கொடி நாடு மற்றும் அதன் அடையாள விபரங்கள்
- பெயர், தேசீயம் கப்பலின் தலைவர் மற்றும் மீன் பிடிப்பிற்கான தலைவர் ஆகியோரது தகுதி
- மீன்பிடி சாதனங்கள்
- கலனில் உள்ள பிடிக்கப்பட்ட மீன்கள் அவற்றின் பிறப்பிடம், சிற்றின வகை, அமைப்பு மற்றும் அளவு ஆகிய விபரங்களையும் சேர்த்து சேகரித்தல்
- உரிய இடங்களில் மமீவமே நிறுவனம் அல்லது பன்னாட்டு ஒப்பந்தம் ஆகியவற்றிற்கு தேவைப்படும் பிற விபரங்கள்
- மீன்பிடிப்பில் மொத்தம் இறக்கப்பட்டவை மற்றும் கப்பலுக்கு மாற்றி ஏற்றப்பட்டவை

கலனின் ஆய்வின் பொழுது சேகரிக்கப்பட்ட விபரங்கள் துறைமுக நாட்டிற்கு கலன் சஅக மீன் பிடிப்பில் ஈடுபட்டதா அல்லது உதவி செய்ததா என்பதனைத் தீர்மானிப்பதற்கு வலுவான அடிப்படையைத் தருகின்றன. தங்களது துறைமுகத்தில் உள்ள அக்கலன் அவ்வாறு செய்தமைக்கு துறைமுக நாட்டிற்கு போதுமான அடிப்படை இருந்தால் கீழ்க்கண்டவற்றை மேற்கொள்ள துறைமுக நாட்டை பசெதிந–சஅக கேட்டுக் கொள்கிறது.[69]

[69] ஒரு கலன் சஅக மீன்பிடிப்பில் ஈடுபடுதல் அல்லது அதற்கு உதவிடுதல் பற்றிய சந்தேகம் கொள்ள "போதுமான அடிப்படை இருந்தால் துறைமுக நாட்டை குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள பசெதிந–சஅக பத்தி 59 கேட்டு கொள்கிறது. ஒரு கலன் சஅக மீன்பிடிப்பில் ஈடுபடுதல் பற்றி தெளிவான சாட்சியம் இருந்தால் அக்கலன் துறைமுகத்தில் மீன்களை இறக்குவதற்கோ அல்லது கப்பலுக்கு மாற்றுவதற்கோ துறைமுக நாடு அனுமதி மறுக்க வேண்டும் என்று பத்தி 56 கேட்டுக் கொள்கிறது.

- அதன்துறைமுகத்தில் கலன் மீன் இறக்குவதற்கோ அல்லது மீன்களை கப்பலுக்கு மாற்றி அனுப்பவோ அனுமதிக்கக் கூடாது.
- இச்செய்தியை உடனடியாக கொடி நாட்டிற்கு தெரிவித்தல்
- சந்தேகிக்கப்படும் சஅக மீன்பிடிப்பு மற்றொரு நாட்டின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அல்லது மமீவமே நிறுவனத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் நடைபெற்று இருந்தால், அவ்வாறே உடனடியாக இச்செய்தியை நாட்டிற்கு மற்றும் அல்லது மமீவமே நிறுவனத்திற்கு தெரிவித்தல்

சில நிகழ்வுகளில், துறைமுக நாடு கூடுதலான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம். உதாரணமாக, சந்தேகிக்கப்படும் சஅக மீன்பிடிப்பு துறை முக நாட்டின் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தால் கரையோர நாடாக அதற்கு உள்ள பொறுப்பான விசாரனை அதிகாரத்தைப் பயன்படுத்தி புலன் விசாரணை செய்ய வேண்டும். உரியவாறு சஅக மீன்பிடிப்பிற்கு பொறுப்பானவர்கள் மீது வழக்கு தொடர்ந்து தண்டனை வழங்க வேண்டும்.

துறைமுக நாட்டின் எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் சஅக மீன்பிடிப்பு நடைபெற்றிருக்கும் என்று சந்தேகிக்கப்படும் இடங்களில் துறைமுக நாடு கொடி நாட்டின் சம்மதத்துடன் அல்லது அதன் கோரிக்கைபடி கலன் மற்றும் இயக்குவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

துறைமுக நாடுகளின் கண்காணிப்பு கட்டாயமாக குறிப்பிடத்தக்க இருப்புகளை அவசியமாக்குவதற்கு பயன்பட வில்லை எனில் அவை வளரும் நாடுகள் செயல்படுத்துவதற்கு உறுதியான வழியை வழங்கலாம். துறைமுகத்தைப் பார்வையிடும் பொழுது அமுல்படுத்தும் அலுவலர்கள் மிகச்சிறிய அளவிலேனும் கலன்களில் ஏறிச் சென்று பார்க்க வேண்டும். தினக்குறிப்பு புத்தகங்களை சோதிக்கலாம். பிற உரிய தகவல்களை சேகரிக்கலாம். இதற்கு பெரும் அளவில் செலவினம் ஏற்படாது. ஆனால் ஏறிச் சென்று பார்த்தல் மற்றும் ஆய்வு நுட்பங்களில் சிறிது பயிற்சி தேவைப்படுகிறது. வளரும் நாடுகளுக்கு உதவிட இது மிகவும் பயன் உள்ளதாகும். இந்த வழிகாட்டு முறைகளில் பிரிவு 9ல் விரிவாக விளக்கப்படுகிறது.

## 6.2 பயன்பாட்டில் உள்ள சில துறைமுக நாட்டின் நடவடிக்கைகளுக்கான எடுத்துக் காட்டுகள்[70]

*தனிப்பட்ட நாடுகளால் மேற்கொள்ளப்படும் முறைகள்.*

மமீவமே நிறுவனத்தால் நிறுவப்பட்ட பாதுகாப்பு முறைகளுக்கு முரணாக மீன்பிடிப்பதன் மூலம் பாதுகாப்பு முறைகளை பல வீனப்படுத்தும் கலன்களுக்கு, பொதுவாக, கனடா, துறைமுகத்திற்கு வர அனுமதி மறுக்கிறது. கனடா மமீவமே நிறுவனத்தில் உறுப்பினராக உள்ளது.[71]

ஐரோப்பிய யூனியனைச் சேராத நாடுகளிலிருந்து வரும் கலன்கள் மீன்களை இறக்குவதற்கு அனுமதிக்க துறைமுக அதிகாரிகளுக்கு ஐரோப்பிய யூனியன் அறிவுரை வழங்கியுள்ளது. அதன்படி, ஆழ்கடலில் மீன்கள் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஐரோப்பிய சமுதாயம் உறுப்பினராக உள்ள ஏதேனும் தகுதி வாய்ந்த மமீவமே நிறுவனத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வெளியே மீன்கள் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது ஐரோப்பிய சமுதாயம் உறுப்பினராக உள்ள மமீவமே நிறுவனம் பின் பற்றும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணங்கி மீன்கள் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும்.[72] இவைகளைப் பற்றி திருப்தி அடைந்தால்தான் துறைமுக அலுவலர்கள் கலன்களை அனுமதிக்கலாம்.

---

70 இப்பிரிவில் உள்ள பெரும்பான்மையான விபரங்கள் ட்டி. லோபர் உயர்ந்த குறிப்பு 34ல் இருந்து எடுக்கப்பட்டது.

71 பார்க்கவும் கடலோர மீன்வள பாதுகாப்பு சட்டம் (ஆர்.எஸ்.சி 1970. சி.சிவி) பிரிவுகள் 3 மற்றும் 4 மற்றும் கடலோர மீன்வள பாதுகாப்பு கட்டுப்பாடுகள் (சி.ஆர்சி 1978 சி 413) பிரிவு 5.

72 பார்க்கவும் ஐரோப்பிய யூனியன் கண்காணிப்பு கட்டுப்பாடுகள் 2847/93 திருத்தியவாறு.

கடல் வாழ் உயிரின ஆதாரங்களைப் பயன்படுத்துதல் மற்றும் பாதுகாத்தலுக்கான ஒப்பந்தத்தில் ஐஸ்லாந்து பங்கு வகிக்கிறது. இந்த ஒப்பந்தத்தை மீறி மீன்பிடிக்கும் அந்நிய மீன்பிடிகலன் ஐஸ்லாந்து துறைமுகத்தில் மீன் இறக்குவதையோ, கப்பலுக்கு மாற்றுவதையோ அல்லது பிடித்த மீன்களை விற்பனை செய்வதையோ ஐஸ்லாந்து சட்டம் தடை செய்கிறது. ஐஸ்லாந்தின் தனிப்பட்ட பொருளாதார மண்டலம் அல்லது அதன் துறைமுகங்களில் அத்தகைய கலன்களுக்கு சேவை வழங்கப்படமாட்டாது.[73]

ஜப்பான் குறிப்பிட்ட நாடுகளின் பதிவு செய்யப்பட்ட சூரை மீன் ஒடு கயிறு கலன்கள் துறைமுகத்திற்குள் நுழைவதைத் தடை செய்கிறது. அத்தகைய நாடுகளை அசூபாபகு, அட்லாண்டிக் நீல சூரை மீன்களின் ஆதாரத்தை மேலாண்மை செய்வதைப் பொறுத்தவரை, அதில் திறமை குறைந்த நாடுகளாக அடையாளம் காண்கிறது.[74]

ஆழ்கடலில் கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பில் ஈடுபடும் அந்நிய மீன்பிடிகலன்கள் துறைமுகத்திற்கு வர அனுமதி வழங்க நார்வே மறுக்கிறது.[75]

தென் ஆப்ரிக்க துறைமுகத்தில் ஒரு கலன் நுழைவதற்கு முன்பாக, அக்கலன் அதிகாரமுடையவர்களுக்கு கொடி நாட்டின் அறிவிக்கை தேவைகளுக்கு இணக்கமாக நடந்து கொண்டதை சாட்சியத்துடன் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது மற்றும் அதன் தற்போதைய இருப்பிட நிலையை தெரிவிக்கும் பொழுது அதிகாரமுடையவர்கள், அக்கலன் தென் ஆப்ரிக்க துறைமுகத்திற்கு நுழைவதற்கு சம்மதிப்பர். அனுமதியை வழங்குவர். எனினும் வழக்கமாக கலனிலிருந்து பிடிக்கப்பட்ட மீன்களை இறக்குவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

அமெரிக்கா பொதுவாக அதன் துறைமுகங்களில் அந்நிய கலன்களின் மீன்களை இறக்கவோ அல்லது கப்பலுக்கு மாற்றவோ அனுமதிப்பது இல்லை. அமெரிக்கன் சமோவா, குவம் போன்ற எல்லைப் பகுதிகளில் உள்ள அல்லது பிற நாடுகளுடன் செய்து கொண்ட தனிப்பட்ட ஒப்பந்தங்களைத் தொடர்ந்து சில துறைமுகங்களைத் தவிர்த்து பிறவற்றில் அனுமதிக்கப் படுவதில்லை. எனினும், ஆழ்கடலில் பெரிய அளவில் வழிவலை மூலம் மீன்பிடிப்பு மேற்கொள்வதாக அடையாளம் காணப்பட்ட கலன்களுக்கு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை தீர்மானம் 46/216 ஐ மீறி நடப்பதால் துறைமுகத்திற்கு வர அனுமதி மறுக்கப்படுகிறது. அமெரிக்கா, அதன் துறைமுகங்களுக்கு தானாகவே வந்து சேரும் அந்நிய கலன்கள் மீது, பிற நாடுகளின் சட்டம் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு முரணாக, மற்றொரு நாட்டிற்குட்பட்ட நீர்ப்பரப்பில் மீன்பிடித்த தற்காக வழக்கு பதிவு செய்கிறது.[76]

*துறைமுக நாடுகளின் முறைகளில் ஈடுபடும் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு.*

சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க தனிப்பட்ட துறைமுகங்களின் நடவடிக்கை போதுமானது அல்ல. சிறப்பாக துறைமுக நாடுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு மற்றும் துறைமுக நாடுகள், கொடி நாடுகள் மற்றும் கடலோர நாடுகளுக்கு இடையே மமீவமே நிறுவனங்கள் மூலமாகவும் ஒருங்கிணைப்பு நிறைவேற்றப்பட வேண்டும். உதாரணமாக, நார்வே மற்றும் கனடா 1995ல் ஒப்பந்தம் மேற்கொண்டது. ஒவ்வொருவரின் தபொ மண்டலத்திற்கு அப்பால் உள்ள பகுதிகளில் மீன் பிடிப்பை உணர்ந்தது. அப்பகுதி மற்றும் அதற்கு அப்பால் உள்ள பகுதிகளில் உள்ள மீன் இருப்புகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்காகப் பயன்படுத்தப்படும் முறைகளின்

73 பார்க்கவும் ஐஸ்லாந்தின் தனிப்பட்ட மீன்பிடிப்பு பகுதியில் அந்நிய கலன்கள் மீன்பிடித்தல் மற்றும் பதப்படுத்துதல் தொடர்பான ஏப்ரல் 1998 சட்டம் எண் 228ன் கட்டுரை 3.

74 எம். கோமாட்சு, உயர் குறிப்பு 20.

75 நார்வே நாட்டின் எல்லைப்பகுதியில் உள்ள நீர்ப்பரப்பில் நுழைந்து செல்வது குறித்த 23 டிசம்பர் 1994 கட்டுப்பாட்டு எண். 1130.

76 லேசி சட்டம், உயர்குறிப்பு 21, அந்நிய சட்டத்திற்கு மாறாக மீன்பிடிப்பதற்காக அமெரிக்காவின் சட்ட எல்லைக்குட்பட்டு அமெரிக்க அரசு அத்தகைய நபர்களை கைது செய்வதை அனுமதிக்கிறது.

திறமையை பலவீனப்படுத்தாத வகையில் மீன்பிடிப்பு நடத்தப்பட வேண்டும். அத்தகைய முறைகளைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும் கலன்களுக்கும் எதிர்பாராத சில நிகழ்வுகளைத் தவிர்த்து துறைமுகத்திற்கு நுழைய அனுமதி மறுக்கப்படும். அக்கலன்களிலிருந்து மீன்களை இறக்குதலும் தடை செய்யப்படுகிறது.[77]

*மமீவமே நிறுவனங்களால் பின்பற்றப்படும் துறைமுக நாட்டின் முறைகள்.* மமீவமே நிறுவனம் மூலம் இயங்கும் நாடுகளை, மமீவமே நிறுவனத்தில் உறுப்பினர்கள் அல்லாதார் அறுவடை செய்யும் மீன்களை இறக்குவதையும் மற்றும் கப்பலுக்கு மாற்றி அனுப்புவதையும் கட்டுப்படுத்துவது பற்றி பரிசீலனை செய்ய பசெதிந–சஅக பத்தி 63 கேட்டுக் கொள்கிறது.

> (மமீவமே நிறுவனத்தில்) சேராத நாடுகளின் கொடியைப் பறக்கவிடும் உரிமையுள்ள மீன்பிடி கலன்கள் மற்றும் (மமீவ நிறுவனத்துடன்) ஒத்துழைக்க சம்மதிக்காத கலன்கள் ஆகியவை அந்த நிறுவனத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக அடையாளம் காணப்பட்டால், சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டிருந்ததாக உத்தேசமாக கருதப்பட்டால் (மமீவமே நிறுவனத்தில்) துறைமுக நாடுகளின் முறைகளை மேம்படுத்துவதை நாடுகள் பரிசீலிக்க வேண்டும். துறைமுக நாடுகளின் அத்தகைய முறைகள் அடையாளம் காணப்பட்ட அந்த கலன், பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணக்கமாகவே மீன்கள் பிடிக்கப்பட்டன என்பதனை நிலை நாட்டாத வரை மீன்களை இறக்குவதையும் மற்றும் கப்பலுக்கு மாற்றி அனுப்புவதையும் தடை செய்யும்.

உண்மையில், பல மமீவமே நிறுவனங்கள் சமீப வருடங்களில் துறைமுக நாட்டின் திட்டங்களை பின்பற்றுகின்றன. பசெதிந–சஅக பத்தி 63 பரிந்துரைக்கும் அணுகுமுறைகளை சில திட்டங்கள் பின்பற்றுகின்றன. அதன்படி, மமீவமே நிறுவன உறுப்பினர்களின் துறைமுகத்தை உறுப்பினர் அல்லாதார் கலன்கள் சென்று அடைவதற்கான வழி உள்ளிட்ட தனித்த சூழ்நிலைகளுக்கு நடவடிக்கை மேற்கொள்கின்றன. அவ்வாறே மமீவமே நிறுவன உறுப்பினர்களின் கலன்களும் துறைமுகத்தை சென்று அடைவதற்கான வழி உள்ளிட்டவற்றை பிற திட்டங்கள் உள்ளடக்கும். இன்றைய தேதி வரை பின்பற்றப்பட்ட திட்டங்களின் வகைகள் கீழ்க்கண்டவாறு சுருக்கமாக தெரிவிக்கப்படுகின்றன.

வமேஅமீவ நிறுவனம் அரசாங்க துறைமுகமுறைகளைப் பின்பற்றியது. வமேஅமீ நிறுவனத்தால் கட்டுப்படுத்தப்படும் இருப்புகளை பிடித்த வமேஅமீவ நிறுவன கலன்கள் பிற உறுப்பினர்களின் துறைமுகத்திற்கு தன் சொந்த விருப்பத்தில் செல்லும் பொழுது பயன்படுத்தப்பட வேண்டிய முறைகளை தெரிவிக்கிறது. அத்தகைய நிகழ்வுகளில், வமேஅமீவ நிறுவன உறுப்பினர்கள், ஆய்வாளர்கள் உடன் இருந்ததையும், பிடிக்கப்பட்டவற்றின் அளவு மற்றும் சிற்றின வகைகள் சோதிக்க மீன்கள் இறக்கப்பட்ட பொழுது, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது, தொடர்புடைய வெவ்வேறு விபரங்களும் சேகரிக்கப்பட்டன என்பனவற்றை உறுதி செய்ய வேண்டும். துறைமுக நாடு ஆய்வின் முடிவுகளை வமே அமீவ நிறுவனத்தின் செயலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். அவ்வாறே கோரினால் கொடி நாட்டிற்கும் அனுப்ப வேண்டும்.[78]

உறுப்பினர் அல்லாதவர்களின் கலன்களால் மேற்கொள்ளப்படும் சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராடுவதற்கும் வமேஅமீவ நிறுவனம் திட்டம் ஒன்றை பின்பற்றுகிறது. ஒப்பந்தமற்ற குழுவின் கலன்களை வமேஅமீவ நிறுவனம் உருவாக்கிய, பாதுகாப்பு மற்றும் அமுலாக்க முறைகளுக்கு இணங்குவதை ஊக்கப்படுத்துதலே இத்திட்டமாகும்.[79] குறிப்பிட்ட கூடுதலான முறைகளையும்

---

[77] கனடா அரசு மற்றும் நார்வே அரசுக்கு இடையேயான மீன்வளப்பாதுகாப்பு மற்றும் அமுல்படுத்துதல் குறித்த ஒப்பந்தம் (1995 ஜுன் 30ல் கையொப்பமிடப்பட்டது)

[78] பார்க்கவும் வமேஅ மீவ நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் அமுலாக்குதல் முறைகள் பகுதி 7 (வமேஅமீவநி/ஆ/01/1)

[79] வமேஅமீவநி.ஜிசிஆ.97/6, வழிகாட்டு முறைகளின் பிற்சேர்க்கை 3ஆக இணைக்கப்பட்டுள்ளது.

செயல்படுத்துவது வமேஅமீவ நிறுவனத்தின் துறைமுக நாடுகளுக்கு கடமையாகிறது. வமேஅமீவ நிறுவனத்தின் எல்லையில் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உறுப்பினரல்லாதவர் கலன், வமேஅமீவ நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் அமுலாக்க முறைகளை பலவீனப்படுத்துவதாக இத்திட்டம் கருதுகிறது.[80] அத்தகைய கலன், வமேஅமீவ நிறுவன உறுப்பினரின் துறைமுக நாட்டில் நுழையும் பட்சத்தில், அக்கலன் ஆய்வு செய்யப்படவேண்டும். வமேஅமீவ நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு வெளியே உள்ளபகுதிகளில் கலன்மீன்களை பிடித்தது அல்லது சில குறிப்பிட்ட சிற்றின வகைகளுக்கு உள்ள வமேஅமீவ நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் அமுலாக்க முறைகளுக்கு இணங்கிய வகையில் அவை பிடிக்கப்பட்டது என்பதை நிலை நாட்ட வில்லை எனில் துறைமுக நாடு கலன் மீன்களை இறக்கவோ அல்லது கப்பலுக்கு ஏற்றுவதையோ தடை செய்ய வேண்டும்.[81]

அசூபாபகு பாதுகாப்பு முறைகளுக்கு இணங்குவதை ஊக்குவிக்க பல துறைமுக நாட்டின் முறைகளைப் பின்பற்றுகிறது. துறைமுக ஆய்வுத்திட்டம், உறுப்பினரல்லாதார் கலன்கள் மீன்களை இறக்குதல் மற்றும் கப்பலுக்கு ஏற்றி அனுப்புதல் ஆகியவை மீதான கட்டுப்பாடுகளும் இவற்றுள் அடங்கும்.[82]

அசூபாபகுழுவின் திருத்தி அமைக்கப்பட்ட துறைமுக ஆய்வுத் திட்டம் **1998** முதல் செயல்படுத்தப்பட்டது.[83] அசூபாபகுழுவின் உறுப்பினர்கள் அவர்களது துறைமுகங்களில் அனைத்து சூரை மீன்கலன்களிலும் ஆய்வு மேற்கொள்ளவேண்டும். அசூபாப குழு உறுப்பினர்களின் கலன்களும் இதில் அடங்கும். பிற நாட்டில் பதிவு செய்யப்பட்ட கலன் விதிகளுக்கு மீறி செயல்படுவதாகத் தெரிந்தால், ஆய்வாளர் வரையறுக்கப்பட்ட விபரங்களைக் கொண்ட அறிக்கையை தயாரித்து கொடி நாட்டிற்கும் அசூபாபகுழுவின் செயலகத்திற்கும் **10** நாட்களுக்குள்ளாக அனுப்பி வைக்க வேண்டும். துறைமுக நாட்டின் கலன் விதிகளை மீறி செயல்படுவதாகத் தெரிந்தால் அத்தகைய அறிக்கையை தயாரித்து ஆய்வாளர் அதே கால அவகாசத்தில் அசூபாபகுழுவின் செயலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அத்தகைய அனைத்து நிகழ்வுகளிலும், கொடி நாடு உரிய இடங்களில் புலன் விசாரனை செய்து பொறுப்பானவர்கள் மீது வழக்கு பதிவு செய்து இது குறித்து மேற்கொண்ட நடவடிக்கை பற்றி அசூபாப குழுவின் செயலகத்திற்கு விபரம் தெரிவிக்க வேண்டும்.

---

80 வமேஅமீவ நிறுவனத்தின் திட்டம் மிகவும் தெளிவாக உள்ளடக்குவதற்காக ''மீன்பிடிப்பு நடவடிக்கைகளை'' கீழ்க்கண்டவாறு வரையறுக்கிறது'' மீன்பிடிப்பு, மீன்களைப்பதப்படுத்தும் நடவடிக்கைகள், மீன் மற்றும் மீன் பொருட்களை கப்பலுக்கு ஏற்றி அனுப்புதல், வமேஅமீவ நிறுவனத்தின் எல்லையில் மீன்பிடிப்பு தொடர்பாக தயார்படுத்துவதற்கான எந்த பிற நடவடிக்கைகள்'' அனைத்தும் சேர்க்கப்படுகிறது. அவ்வாறு திட்டம், மீன்பிடிகலன்கள் மட்டும் அல்லது போக்குவரத்திற்கு பயன்படும் கலன் உள்ளிட்ட தொடர்பான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பிற வகைகலன்களுக்கும் இது பயன்படுத்தப்படும்.

81 இத்திட்டம் நடைமுறை படுத்தப்பட்டது. உதாரணமாக **1999**ல் வமேஅமீவ நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் உறுப்பினரல்லாதவரின் கலன் மீன்பிடிப்பு மேற்கொண்டிருந்தது பார்க்கப்பட்டது. பரோவ் தீவில் அக்கலன் மீன்களை இறக்குவதற்கு முயற்சித்தது. ஆனால் அது அவ்வாறு செய்வது தடுக்கப்பட்டது. ஏனெனில் வமேஅ மீவ நிறுவனத்தில் கட்டுப்பாட்டில் உள்ள எல்லைக்கு அப்பால் உள்ள பகுதியில் அந்த மீன்கள் பிடிக்கப்பட்டன அல்லது வமேஅ மீ நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் அமுலாக்க முறைகளுக்கு இணங்க அந்த மீன்கள் பிடிக்கப்பட்டன என்பதனை அவர்களால் நிரூபிக்க இயலவில்லை.

82 தனிப்பட்ட பிற அசூபாபகுழுவின் பிற முறைகள் அதன் உறுப்பினர்களை (மற்றும் ஒத்துழைக்கும் நிலையில் உள்ளவர்களையும்) துறைமுக நாடுகளின் முறைப்படி நடவடிக்கை எடுக்க கோருகிறது. கலன் பார்வையில் படுதல் மீதான தீர்மானம் **94–9** (துறைமுகங்களில் உள்ள உறுப்பினர் அல்லாதவரின் சூரை மீன் கலன்களிலிருந்து விபரங்கள் சேகரிக்க கோருதல்), செயல் **1** புள்ளிஇயல் விபரங்களை முழுமையாக மேம்படுத்துதல் மீதான தீர்மானம் **96–13** (அவ்வாறே துறைமுகங்களில் உள்ள அந்நிய கலன்களிலிருந்து விபரங்கள் சேகரித்தல் மற்றும் அந்த விபரங்களை அசூபாபகுழுவின் செயலத்திற்கு அனுப்பி வைக்க கோருதல்) ஆகியவையும் இதனுள் அடங்கும்.

83 அசூபாபகுழுவின் பரிந்துரைகள் **97–10**, இந்த வழிகாட்டு முறைகளின் பிற்சேர்க்கை **4** ஆக இணைக்கப்பட்டுள்ளது.

அசூபாபகுழு திருத்தி அமைக்கப்பட்ட ஆய்வுத் திட்டத்தைப் பின்பற்றுவதில் குறிப்பிடுவதாவது:

அசூபாபகுழுவின் பெரும்பான்மையான பரிந்துரைகளை மீன்கள் இறக்கப்படும் பொழுதுதான் அமுல்படுத்த இயலும். ஆகையால் கட்டுப்பாடு மற்றும் ஆய்விற்கு இது மிகவும் திறமையான அடிப்படையான சாதனம் ஆகும். துறைமுக ஆய்வு திட்டத்தின் நோக்கம் தனிப்பட்ட கலனின் இணக்கத்தை உறுதி செய்வதே. அவ்வாறே ஒவ்வொரு குழுவின் அசூபாபகுழுவின் சிற்றின வகைகளுக்கான மீன்பிடிப்பு அனைத்தையும் உள்ளடக்கிய கண்காணிப்பை எளிதாக்குவதும் ஆகும். அசூபாபகுழு, குழுவினர் உண்மையாக குறைந்தபட்ச வரையறைகளை மீறி (திட்டத்தில் வகுக்கப்பட்டவை) செல்வர்.

சரியான நேரத்தில் சரியாக மீன்களை இறக்குதல், கப்பலுக்கு ஏற்றுதல் அசூபாபகுழுவின் மேலாண்மை முறைகளுக்கு இணக்கமாக இருத்தலை சரிபார்த்தல், ஆகியவற்றை கண்காணித்தால் ஒதுக்கீட்டின் அளவை மீற மாட்டார்கள் என்பதனை உறுதி செய்யலாம். விபரங்கள் மற்றும் இறக்குதல் மற்றும் கப்பலுக்கு ஏற்றுதல் குறித்த பிற தகவல்களையும் சேகரிக்க வேண்டும்.

1998ல், அசூபாபகுழு வமேஅமீவ நிறுவனத்தின் முறையைப் போன்ற ஒரு திட்டத்தை ஒப்பந்தமற்ற குழுவின் கலன்களின் இணக்கத்தை ஊக்குவிக்க பின் பற்றியது.[84] உறுப்பினர் அல்லாதவரின் எந்த ஒரு கலனும் அசூபாபகுழுவின் மரபு பகுதியில் பார்வையில் தெரிந்தால் அசூபாபகுழுவின் பாதுகாப்பு முறைகளை பலவீனமாக்குவதாகவும், மீன்பிடிப்பில் ஈடுபடுவதாகவும் கருதப்படும் அந்த கலன் தனது சொந்த பொறுப்பில் அசூபாபகுழு உறுப்பினரின் துறைமுகத்திற்கு நுழைந்தால் கலன் ஆய்வு செய்யப்பட வேண்டும். அசூபாபகுழுவின் பாதுகாப்பு முறைகளுக்குட்பட்ட தலைப்பில் உள்ள ஏதேனும் ஒரு சிற்றின வகை கலனுள் இருந்தால், அக்கலன் எந்த மீனையும்இறக்குவதோ கப்பலுக்கு மாற்றிஅனுப்புவதோ தடை செய்யப்படும். மரபுப் பகுதிக்கு அப்பால் அந்த மீன்பிடிக்கப்பட்டது அல்லது அசூபாபகுழுவின் முறைகளுக்கு இணங்க அந்த மீன் பிடிக்கப்பட்டது என்பதனை நிரூபிக்கும் வரை தடை செய்யப்படும். ஆய்வின் முடிவை துறைமுக நாடு அசூபாபகுழுவின் செயலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். அவ்வாறே அது அசூபாபகுழுவின் உறுப்பினர்கள் மற்றும் கொடி நாட்டிற்கு தகவல்களை அனுப்பி வைக்கும்.

எனினும் வகிஅமீவ நிறுவனம் பொதுவாக அனைத்துக் கலன்களின் துறைமுக ஆய்வை இன்னும் பின்பற்ற வில்லை. அதன் திட்டத்தில், வகிஅமீவ நிறுவனம், வமேஅமீவ நிறுவனம் நிறுவியுள்ள பரிந்துரைகளுக்கு இணையாக நிறுவிய பரிந்துரைகளுக்கு ஒப்பந்தம் அல்லாத குழுவின் கலன்கள் இணங்குவது ஊக்குவிக்கப்படுகிறது[85]

இபெசூகுழு, உவே அமைப்பிற்கு அனுப்பிய அதன் ஜுலை 28, 1999 அறிக்கையில் சூரை மீன்களுக்கான சஅக மீன்பிடிப்பை கட்டுப்படுத்துவது துறைமுக நாடுகளின் முறைகளால் மட்டுமே சாத்யமாகும் என்று தெரிவிக்கிறது. வசதிக்கேற்றபடி கொடிகளை மாற்றிக் கொள்ளும் கலன்களை இலக்காக கொள்ள வேண்டும். ஆனால் துறைமுக நாடு சஅக மீன்பிடிப்பு தொடர்பான மீன்களை இறக்கும் நடவடிக்கைகளால் பெறக்கூடிய பயன்களை இழப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். எனினும் இபெசூகுழு அல்லது பிற பொதுவான கண்காணிப்பிற்கு துறைமுக நாட்டின் ஆய்விற்கு பொதுவான தேவைகளை பின்பற்றவில்லை. இபெசூ குழு அதன் தீர்மானத்தில் அதன் உறுப்பினர்கள் மற்றும் ஒத்துழைக்கும் நிலையில் உள்ளவர்களை,

---

84 அசூபாபகுழுவின் பரிந்துரைகள் 98–11 (மீன்களை இறக்குதல் மற்றும் கப்பலுக்கு மாற்றுதல் மீதான தடை), 1999 ஜுன் 21 முதல் செயல்பாட்டிற்கு வந்தது.

85 வகிஅமீவ நிறுவனத்தின் திட்டம் 1998ல் பின்பற்றப்பட்டது. ஜுலை 1, 1999 முதல் செயல்பாட்டிற்கு வந்தது. பார்க்கவும் வகிஅமீவ நிறுவனத்தின் 17வது வருடாந்திரக் கூட்ட அறிக்கையின் பிற்சேர்க்கை ஊ

“வசதிக்கேற்றபடி கொடிகளை மாற்றிக் கொண்டு, இபெசூகுழுவால் நிறுவப்பட்ட முறைகளின் செயல் திறனை குறைக்கும் விதத்தில் மீன்பிடிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் கலன்கள் துறைமுகத்தை அடைவதற்கு வழி தர மறுக்க வேண்டும்.” என கேட்டுக் கொள்கிறது.[86]

அகவாஆபா குழு உறுப்பினர் அல்லாதவரின் கலன் குறித்த வமேஅமீவு நிறுவனத்தைப் போன்ற பொதுவான துறைமுக ஆய்வுத்திட்டத்தை இன்னும் பின்பற்றவில்லை.[87] அகவாஆபா குழுவின் Dissostichus சிற்றின வகைக்கான வழிகாட்டு முறைகளின் பிரிவு 7ல் விளக்கப்பட்டுள்ள மீன்பிடிபாடு திட்டத்திற்கு துறைமுக நாட்டின் அலுவலர்களின் பங்கான நடவடிக்கையும் தேவைப்படுகிறது.

துறைமுக நாடுகளின் முறைகள் மூலம் உறுப்பினர் அல்லாதாரின் மீன்பிடிப்பிற்காக எழுதப்பட்டு, ஏற்கனவே வமேஅமீவநி, வகிஅமீவநி, அசூபாபகு மற்றும் அகவாஆபாகு ஆகியவற்றால் பின்பற்றப்படும் திட்ட வகைகளை மேம்படுத்த பசெதிந–சஅக பத்தி **63** முயற்சிக்கிறது. எனினும், ஒரு முக்கியமான விஷயத்தில் இத்திட்ட வகைகளின் ஒரு முக்கியமான முன்னேற்றத்தை பசெதிந–சஅக பரிந்துரைக்கிறது. இந்த மமீவமே நிறுவனங்களின் தொடர்புடைய முடிவுகள் ஒவ்வொன்றும் உறுப்பினர் அல்லாதவரின் கலன் ‘பார்வையில் படுவதை’ச் சார்ந்து இருக்கும். மமீவமே நிறுவனத்தில் முறைகளைப் பலவீனப்படுத்துவதாகக் கருதுவதற்கு இது தேவைப்படும். துரதிர்ஷ்டவசமாக மமீவமே நிறுவனங்களுக்கு மிகப்பரந்த கடல் பரப்பில் மீன்வளம் தொடர்பான பொறுப்பு இருக்கும் இடங்களில் பார்வையில் படுவதை வலியுறுத்தும் திறன் நாடுகளுக்கு குறைவே (அசூபாபகு, அகவாஆபாகு, மற்றும் பல மமீவமேநி போன்றவற்றில் உள்ளதைப் போன்று)

இப்பிரச்சினையை மனதில் கொண்டு, பசெதிந–சஅக உறுப்பினரல்லாதவரின் கலன் மீன்பிடிப்பில் ஈடுபடுவதாக ‘*அடையாளம்*’ காணப்படும் பொழுது, கேள்வியாக உள்ள நம்பிக்கை தொடக்கமாக வேண்டும் என பரிந்துரைக்கிறது. உதாரணமாக வர்த்தக விபரங்களை ஆய்வு செய்யும் பொழுது, ஒரு மமீவமே நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள நீர்ப்பகுதியில் கலன் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக அறியும் பொழுது பரந்த சொல், நம்பிக்கையை தொடக்கமாகக் கொள்ள அனுமதிக்கும்.

## 6.3 ஒத்துழைப்பிற்காக பிற செய்யக் கூடியவை

வழங்கப்பட்ட பகுதியில் சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க துறைமுக நாடுகளின் முறைகளில் கூடுதலான ஒப்பந்தங்களின் சாத்யத்தைப் பரிசீலிக்கலாம். சிறப்பாக மமீவமே நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படும் மீன்களை இறக்குவதற்கும் கப்பலில் மாற்றி அனுப்புவதற்கும் யாருடைய துறைமுகங்கள் பயன்படுத்தப்படுவதாக தெரிகிறதோ அந்த மமீவமே நிறுவனங்களின் உறுப்பினர் அவ்வாறே உறுப்பினர் அல்லாதார் ஆகியோரை அத்தகைய ஒப்பந்தங்கள் உள்ளடக்க வேண்டும்.

முக்கியமாக சஅக மீன்பிடிப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மண்டலங்களின் விவகாரம் எனில் மமீவமே நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பை ஏற்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. உதாரணமாக, அட்லாண்டிக் கடலில், மீன் ஆதாரங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை பல மமீவமே நிறுவனங்களின் பொறுப்பு ஆகும். துறைமுக நாட்டின் சுருக்கமான அமைப்பு, ஒரு மமீவமே நிறுவனத்தின் பொறுப்பில் உள்ள பகுதியில் நடைபெறும் சஅக மீன்பிடிப்பு, பிற மமீவமே நிறுவனங்களின் உறுப்பினர்களைக் கொண்ட துறைமுக நாட்டின் நடவடிக்கைக்கு காரணமாக இருக்கும் என தெரிவிக்கும்.

---

86 இபெசூ குழுவின் தீர்மானம் **99/02** வசதிக்கேற்றபடி கொடிகளை மாற்றிக் கொண்டு, ஓடுகயிறு கலன்களின் பெரும் பகுதியானவற்றின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள கோருகிறது.

87 ஒப்பந்தம் அற்ற குழுவின் கலன்களை அகவாஆபாகுழுவின் பாதுகாப்பு முறைகள் **(2000/2001)** முதல் செயல்பாட்டில் உள்ள பட்டியலின் பாதுகாப்பு முறை **118/17**க்கு இணங்கச் செய்வதை ஊக்கப்படுத்தும் திட்டம்.

துறைமுக நாடுகளின் முறைகளுக்கான மண்டல அமைப்பு ஆய்வு, ஆய்வு அலுவலர்களுக்கு தேவையான தகுதி, இணக்கமாக இல்லாத கலன்களுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட விளைவுகள் ஆகியவைகளுக்கான சாதாரணமான செய்முறைகளை அவசியமாக்கும். துறைமுகத்திற்கு சென்று அடைவதற்கான வழியை மறுப்பது மற்றும் அல்லது பிடிக்கப்பட்ட மீன்களை இறக்குவது மற்றும் கப்பலுக்கு மாற்றி அனுப்ப அனுமதி மறுப்பது, கடலோர நாட்டின் நீர்ப்பரப்பிற்கு மீன்பிடிக்கச் செல்லும் வழிக்கான கோரிக்கையை மறுப்பது, கலன் பதிவு செய்தலுக்கான கோரிக்கையை மறுப்பது போன்ற சாத்தியமான சாதாரணமான பகுதிகள் இதனுள் அடங்கும்.[88]

## 7 பன்னாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்தை தொடர்பான நடவடிக்கைகள்

சமீபத்திய பத்தாண்டுகளில் வியக்கத்தக்க முறையில் மீன் மற்றும் மீன் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகம் உயர்ந்துள்ளது. உவே அமைப்பில் உள்ள புள்ளியியல் விபரங்கள், 1998ல் அனைத்து நாடுகளும் அவற்றின் மீன்வள உற்பத்தியில் பகுதியை உள்ளபடி ஏற்றுமதி செய்தன. பெரும் பாலும் பல நாடுகள் மீன் இறக்குமதி செய்ததை அறிவித்துள்ளன. 1988ல் உலக அளவில் பொருளாதார சூழ்நிலையில் சிறிய அளவிலான இறங்கு முகம் இருந்த போதிலும், உலக அளவிலான ஏற்றுமதியின் அளவு 50 மில்லியன் டன்னாக இருந்தது. அதன் மதிப்பு $51.3 பில்லியன் (அமெரிக்க) டாலராகும். 1976ன் வர்த்தக அளவை விட இது ஏறக்குறைய மூன்று மடங்கு ஆகும். இதனை உயிர் மீன்களின் எடைக்கு சரியாக மாற்றும் பொழுது இந்த வர்த்தகம் ஏறக்குறைய மீன்வள உற்பத்தியின் மூன்றில் ஒரு பங்கை பிரதி பலிக்கிறது.[89]

பன்னாட்டு வர்த்தகத்தில் எந்த அளவிற்கு மீன் மற்றும் மீன்வள பொருட்கள் சஅக மீன்பிடிப்பால் பெறப்பட்டன என்பதனைக் குறிப்பிடுவதற்கு நம்பக்கூடிய அளவில் விபரங்கள் இல்லை. எனினும், பன்னாட்டு வர்த்தகத்தில் முக்கியமாக இடம் பெறும் சூரை, வாள்மீன் உள்ளிட்ட பல சிற்றின வகைகள் சஅக மீன்பிடிப்பவர்களால் இலக்கு இடப்பட்ட சிற்றின வகைகள் என தெரிகிறது.

சஅக மீன்பிடிப்பின் மூலம் அறுவடை செய்யப்பட்ட மீன் மற்றும் மீன்வளப் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகத்தை கட்டுப்படுத்துவதற்காக ஏற்கனவே உள்ள பல்வகை முயற்சிகளின் பின்னடைவிற்கு எதிராக பசெதிந–சஅக மேம்பாடு நடைபெற்றது. பசெதிந–சஅக, சஅக மீன் பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க கூடுதலான பன்னாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்தை தொடர்பான நடவடிக்கைகளை மேம்படுத்த அனைத்து நாடுகளையும் கேட்டுக் கொள்கிறது. அத்தகைய முயற்சிகளை சரியாகப் புரிந்து கொண்டு, உவ நிறுவனம் நிறுவிய கொள்கைகள், உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க பயன்படுத்த வேண்டும்.[90] நியாயமாக வெளிப்படையாக வேறுபாடின்றி செயல்படுத்தப்பட வேண்டும். சஅக மீன்பிடிப்பு மூலமாக அறுவடை செய்யப்பட்ட மீன் மற்றும் மீன் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகத்தை தடுப்பதே இதன் நோக்கமாகும். அதே சமயத்தில் பிற மீன் மற்றும் மீன் பொருட்களை விற்பனை செய்வதற்கு தேவையற்ற தடைகளை ஏற்படுத்தாது.

---

88 உவேஅ/பகநி குறிப்பிட்ட பணிக்காக அமைக்கப்பட்ட இணைசெயற்குழு (சட்டத்திற்குப்புறம்பான, அறிவிக்கப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு மற்றும் அதன் தொடர்பானவை குறித்து) அக்டோபர் 9–11, 2000ல் ரோமில் கூடியது. மீன்பிடிகலன்கள் மீதான துறைமுக நாட்டின் கட்டுப்பாடு தொடர்பான பன்னாட்டு அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தம், நுட்பங்களை, சஅக மீன்பிடிப்பு பிரச்சினையை தெரிவிக்கவும், மீன்வள மேலாண்மையை மேம்படுத்த முக்கியமான மற்றும் திறமையான சாதனமாக பயன்படுத்துதலை ஏற்றுக் கொண்டது. கலன்களின் பாதுகாப்பு மற்றும் தூய்மைக் கேட்டை கட்டுப்படுத்துதல் போன்றவற்றிற்காக தற்போதுள்ள மண்டல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், மீன்பிடிகலன்களை கட்டுப்படுத்த துறைமுக நாட்டிற்கு பயனுள்ள மாதிரிகளை வழங்கும். கூடுதலாக கடல்சார் பிரிவின் தேசீய மற்றும் பன்னாட்டு வல்லுநர்கள், சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட முறைகளையும், ஒரே மாதிரியான சாதனங்களையும் மேம்படுத்துவதற்கான அனுபவத்தைப் பெற்று இருப்பர்.

89 SOFIA 2000 ப.34

90 மேலும் விபரங்களுக்குப் பார்க்கவும் ‘‘சட்டத்திற்குப்புறம்பான அறிவிக்கப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு: உவ நிறுவனத்தின் சீரான சஅக மீன்பிடிப்பை தெரிவிக்க வர்த்தக தொடர்பான முறைகள்’’ – லின்டா சாவ்ஸ் (உபரி விதிகள் பாதுகாப்பு நோக்கங்களுக்காக தவறாக பயன்படுத்துவதற்கு எதிராக தனித்த பாதுகாப்பிற்குட்பட்டு வர்த்தக முறைகளை பயன்படுத்துவதில் வளையும் தன்மையை வழங்குகிறது.)

பசெதிந–சஅக “சந்தை தொடர்பான முறைகளை” வரையறுக்கவில்லை என்ற போதிலும், பொதுவாக அந்த வார்த்தை, பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீதான வெவ்வேறு வகையான கட்டுப்பாடுகளையும் பொதுவாக சுற்றிவளைக்கிறது. ‘சாதனப் பெட்டி’ என்பதை தோற்றுவிப்பதைக் குறித்த வரை, சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட, பசெதிந–சஅக குறிப்பிடும் அத்தகைய முறைகளின் உதாரணங்கள் பல்வகையான மீன்பிடிப்பு சான்றிதழ்கள், வர்த்தக ஆவண தேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கும். அவ்வாறே ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளையும் உள்ளடக்கும்.[91]

## 7.1 மண்டல மீவமே நிறுவன நடவடிக்கைகள்

மேலே குறிப்பிட்டவாறு, “பன்னாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட” சந்தை தொடர்பான நடவடிக்கைகளை பசெதிந–சஅக கோருகிறது. இதில், மமீவமே நிறுவனங்கள் உதவி செய்கின்றன. சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட மேம்பாட்டிற்கான முக்கிய பன்னாட்டு குழுவாக தொடர்ந்து உதவி செய்யலாம்.

சந்தை தொடர்பான நடவடிக்கைகளை குறித்த வரை மமீவமே நிறுவனங்கள் செயல்படுத்துவதற்கு பல முக்கிய செயல்கள் உள்ளன. மமீவமே நிறுவனத்தின் எல்லைக்குட்பட்ட இருப்புகளை பிடிப்பதற்காக சஅக மீன் பிடிப்பில் ஈடுபடும் கலன்களை அடையாளம் காணுதல் நியாயமான வெளிப்படையான வேறுபாடற்ற முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட செய்முறைகள் மூலமாக நடத்தப்பட வேண்டும் என பசெதிந–சஅக தெரிவிக்கிறது. அடையாளம் காணப்பட்ட கலன்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டின் கொடியை அடிக்கடி பறக்கவிட்டால் மமீவமே நிறுவனம் அந்த கொடி நாட்டை அடையாளம் காண வேண்டும். அந்த நாட்டை, அதன் கட்டுப்பாட்டில் உள்ள கலன்களின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வற்புறுத்த வேண்டும்.

கலன்கள் மற்றும் கொடி நாடுகளை அடையாளம் காணுதல் பசெதிந–சஅகல் உள்ள சந்தை தொடர்பான நடவடிக்கைகளை தொடக்கமாக்குகிறது. குறிப்பாக பசெதிந–சஅக பத்தி **66** வழங்குவதாவது:

தொடர்புடைய (மமீவமேநி) நிறுவனத்தில் அவற்றின் எல்லையில் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டதாக அல்லது இறக்குமதி செய்ததாக கண்டறியப்பட்ட கலன்களால் பிடிக்கப்பட்ட மீன்களை பன்னாட்டு சட்டத்திற்கு இணங்க தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாடுகள் எடுக்க வேண்டும்.

இக்கடமையை நிறைவேற்றுவதற்கு, எந்த கலன் குறிப்பிட்ட வகை மீனை அறுவடை செய்தது அல்லது குறைந்தது கலனின் கொடி நாடு ஆகியவற்றையாவது தெரிந்து கொள்ள நாடுகள் சில வழியை வைத்திருக்க வேண்டும். இதனைப் பொறுத்தவரை சான்றிதழ் வழங்குதல், வர்த்தக ஆவணங்கள் திட்டம் ஆகியவற்றை மேம்படுத்தி பின்பற்றி மமீவமே நிறுவனங்கள் உதவிடலாம். மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு உதாரணமாக எங்கு எப்பொழுது யாரால் பிடிக்கப்பட்டது என்பதனைக் குறிப்பிடும் படிவங்கள் அவசியமாகின்றன. மீன்பிடிபாடு சான்றிதழ் திட்டத்திற்கு, அத்தகைய படிவங்கள் தேவையாகின்றன. அவர்கள் விண்ணப்பிக்கும் அனைத்து வகை மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு இவை தேவைப்படுகிறது. அவர்கள் பன்னாட்டு வர்த்தகத்தில் பங்கு பெற்றாலும் பெறாவிட்டாலும் இது தேவையாகிறது. வர்த்தக ஆவணங்கள் திட்டம் பன்னாட்டு வர்த்தகத்தில் ஈடுபடும் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு மட்டுமே பொருந்தும்.[92]

---

[91] துறைமுகத்தில் அந்நிய கலன்கள் மீன்களை இறக்குவது மற்றும் கப்பலுக்கு மாற்றி அனுப்புவது மீதான கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள் ‘சந்தை தொடர்பான நடவடிக்கைகளாக’ கருதப்படுகிறது. எனினும் பசெதிந–சஅக மற்றும் இந்த வழிகாட்டு முறைகள், அத்தகைய நடவடிக்கைகளை துறைமுக நாட்டின் முறைகளில் வருபவையாக கருதுகின்றன

[92] அத்தகைய திட்டங்களின் முழுமையான ஆய்விற்கு, பார்க்கவும் ‘‘மண்டல மீன்வள மேலாண்மை குழுக்கள் இடையே சான்றிதழ் அளிக்க இசைவு படுத்தும் சாத்தியக்கூறு மற்றும் மீன்பிடிபாடு சான்றிதழ்’’–பீட்டர் எம். மியேக்..

தேர்வு செய்யப்பட்ட மமீவமே நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி தடைகள், ஆவணப்படுத்துதல் திட்டங்கள் உள்ளிட்ட முறைகளுக்கான உதாரணங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன. எல்லா நிகழ்வுகளிலும் சந்தை தொடர்பான செய்முறைகள், பொதுவாக திறமையான பாதுகாப்பு மற்றும் மேலாண்மை, குறிப்பாக சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராடுதல் ஆகியவற்றை நிறைவேற்ற மமீவமே நிறுவனங்கள் பின்பற்றும் பெரும்பான்மையான முறைகளின் ஒரு பகுதியாகும்.

அசூபாபகு பல்வேறு சந்தை தொடர்பான செய்முறைகளைப் பின்பற்றியது. அசூபாபகுழுவின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முடிவுகளுக்கு அசூபாபகுழுவின் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் அல்லாதவர்கள் ஒத்துழைப்பை இணக்கத்தை ஊக்குவிக்கும் வகையிலும் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

முறையே 1994 மற்றும் 1995ல் பின்பற்றப்பட்ட நீல சூரை மீன் செயல்திட்டம் மற்றும் வாள் மீன் செயல் திட்டம், அச்சிற்றின வகைகளுக்கான அசூபாபகுழுவின் பாதுகாப்பு முறைகளின் திறமையைக் குறைக்கும் கலன்களின் உரிமையாளர்களான உறுப்பினர் அல்லாதவர்களிடமிருந்து அச்சிற்றின வகைகளின் இறக்குமதியை தடை செய்யும் கட்டாயத்திற்கு கொண்டு செல்கிறது.[93] ஒவ்வொரு செயல் திட்டத்தின் கீழ், கேள்வியாக உள்ள சிற்றின வகைகளின் தொடர்பான பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை குறைக்கும் வகையில் மீன்பிடிப்பு மேற்கொள்ளும் கலன்களின் உரிமையாளர்களான உறுப்பினர் அல்லாதவர்களை முதலாவதாக அசூபாபகு அடையாளம் காண்கிறது. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட உறுப்பினர் அல்லாதவரை அசூபாபகு இத்தகைய நடவடிக்கைகளை சரி செய்து கொள்ள கேட்டுக் கொள்கிறது. இதனைச் சரி செய்து கொள்ளத் தவறினால் அசூபாபகு அதன் உறுப்பினர்களை அடையாளம் காணப்பட்ட உறுப்பினர் அல்லாதவர்களிடமிருந்து இத்தகைய சிற்றின வகை மீன்களை இறக்குமதி செய்வதை தடை செய்ய கேட்டு கொள்கிறது. 1996ல் தொடங்கி அசூபாபகு ஒவ்வொரு செயல் திட்டத்தின் கீழ் உறுப்பினரல்லாதார் பலரை அடையாளம் கண்டுள்ளது. இவர்களில் பலரிடமிருந்து இறக்குமதி செய்வதற்கு தடை விதித்துள்ளது.

1996ல் அசூபாபகுழு செய்முறை ஒன்றை பின்பற்றியது. இதன்படி அசூபாபகுழு உறுப்பினர்களிடமிருந்து தொடர்ச்சியாக இரண்டு மேலாண்மை காலகட்டத்தில், கேள்வியில் உள்ள சிற்றின வகைகளைப் பிடிப்பதற்கான எல்லை வரையறையை உறுப்பினர் மீறும் பொழுது உறுப்பினரிடமிருந்து நீல சூரை மற்றும் வாள் மீன் இறக்குமதியை தடை செய்வதில் முடியும்.[94] இதனைத் தொடர்ந்து, அசூபாபகு 1999ல் அதன் உறுப்பினர் ஒரு வரிடமிருந்து நீல சூரை மற்றும் வாள் மீன் இறக்குமதி செய்வதை தடை செய்தது.

அட்லாண்டிக் பகுதியில் அசூபாபகு செயல்முறை ஒன்றைப் பின்பற்றியது. இது அப்பகுதியில் ஓடு கயிறு கலன்களின் அறிவிக்கப்படாத கட்டுப்பாடற்ற சூரை மீன்பிடிப்பு பிரச்சினையை மையமாகக் கொண்டது.[95] அசூபாபகுழுவின் உறுப்பினர்கள் அசூபாபகுழுவின் செயலகத்திற்கு குளிர்விக்கப்பட்ட சூரை மீன் பொருட்களை பற்றிய பல வகையான இறக்குமதி மற்றும் இறக்கப்பட்ட விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும். அந்த விபரங்கள் அடிப்படையில் மற்றும் பிற தகவல்களின் அடிப்படையில் அசூபாபகுழு, அதன் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளின் திறனைக் குறைக்கும் பெரும்பாலான ஓடு கயிறு கலன்களின் உரிமையாளர்களான உறுப்பினர் மற்றும் உறுப்பினரல்லாதாரை அடையாளம் காணும். அவ்வாறு அடையாளம் காணப்பட்ட அவர்களிடம் சரி செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ள கோரும். சரி செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வதில் ஏற்படும் தோல்வி மீண்டும் ஒருமுறை, இறக்குமதியின் தடைக்கு கொண்டு

93 பார்க்கவும் அசூபாபகுழு தீர்மானம் 94–3 மற்றும் அசூபாபகுழு தீர்மானம் 95–13.
94 பார்க்கவும் அசூபாபகுழு பரிந்துரை 96–17.
95 பார்க்கவும் அசூபாபகுழு தீர்மானம் 98–18.

செல்லும். இதனைத் தொடர்ந்து அசூபாபகுழு, அதன் உறுப்பினர் ஒருவரிடமிருந்தும், நான்கு உறுப்பினரல்லாதவரிடமிருந்தும் பெரிய கண் உடைய சூரை மீன்களை இறக்குமதி செய்வதை தடை செய்தது.

முடிவாக ஏறக்குறைய பத்தாண்டிற்கு மேலாக அசூபாபகுழு நீல சூரை மீன் புள்ளி விபரங்களை ஆவணப்படுத்தும் திட்டத்தை பராமரித்தது.[96] இத்திட்டம் முதலில் குளிர்விக்கப்பட்ட சூரை மீன்களுக்கும் பிறகு அண்மையில் பிடிக்கப்பட்டு வாடாத சூரை மீன்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. அவ்வாறே அட்லாண்டிக் பகுதியில் நீல சூரை மீன்களுக்கான சஅக மீன்பிடிப்பு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அசூபாபகுழுவின் தொடக்க முயற்சியில் விளக்கப்பட்டது. அறுவடை செய்யும் கலனின் கொடி நாடு, மீன்பிடிக்கப்பட்ட நேரம் இடம் ஆகியவற்றை சரிபார்ப்பதன் மூலம் நீல சூரை மீன் புள்ளி விபரங்களின் தவறின்மையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இவ்வாறு செய்வதால் அறிவிக்கப்படாத நீல சூரை மீன்பிடிப்பு அளவு பற்றிய அசூபாபகுவின் மதிப்பீட்டிற்கு இது உதவுகிறது.

நீல சூரை மீன் புள்ளி விபர ஆவண திட்டத்தின் கீழ் அசூபாபகுழுவின் உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு வரும் இறக்குமதி செய்த நீல சூரை மீனுக்கும் அறுவடை செய்த கலனின் கொடி நாடு உறுதிப்படுத்திய புள்ளி விபர ஆவணம் தேவையாகிறது.[97] இந்த ஆவணம் குறைந்தது கீழ்க்கண்ட விபரங்களைப் பெற்று இருக்க வேண்டும்:

- ஆவணம் வழங்கிய நாட்டின் பெயர்
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளரின் பெயர்
- கலனில் உள்ள கப்பலுக்கு மாற்றப்படும் மீன் அறுவடை செய்யப்பட்ட பகுதி (அதாவது அட்லாண்டிக் கடல் என்றால், கிழக்கு, மேற்கு அல்லது மெடிட்டரேனியன் கடல் பகுதி என பகுதி குறிப்பிடப்பட வேண்டும்)
- அந்த மீனைப்பிடிப்பதற்கு பயன்படுத்திய மீன்பிடி சாதனம்
- பொருளின் வகை மற்றும் மொத்த எடை
- ஏற்றுமதி செய்யப்படும் இடம்.[98]

**1999**ல், தென் பகுதி நீல துடுப்பு சூரை மீன்களின் பாதுகாப்பிற்கான குழு (தெநீதுசூபாகு) அசூபாபகுழுவின் திட்டத்திற்கு நெருக்கமானஅதே மாதிரியான புள்ளியியல் ஆவணத்திட்டம் ஒன்றை நீலதுடுப்பு சூரை மீன்களுக்கு பயன்படுத்தியது. தெநீதுசூபாகுழுவின் இத்திட்டத்தின் நோக்கம் தென்பகுதி நீல துடுப்பு சூரை மீன்களின் பன்னாட்டு வர்த்தகத்தை கண்காணிப்பதன் மூலம், சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராடுவதேயாகும். இது ஜுன் 1, 2000ல் செயல்பாட்டிற்கு வந்தது. இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு நீல துடுப்பு சூரை மீனுக்கும், அறுவடை செய்த கலனின் கொடிநாட்டால் உறுதி செய்யப்பட்ட புள்ளியியல் ஆவணம் இருக்க வேண்டும். அசூபாபகுழுவினருக்கு தேவைப்படும் விபரங்களுக்கு ஏற்றவாறு தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும். எனினும் தெநீதுசூபாகுழுவிற்கு ஆவணத்தில் மீன்பிடிக்கப்பட்ட நேரமும் குறிக்கப்பட வேண்டும் என்பது தேவையாகிறது. தென்பகுதி நீல துடுப்பு சூரை

---

[96] பார்க்கவும் அசூபாபகுழுவின் பரிந்துரைகள் 92–1 மற்றும் 92–3 மற்றும் அதனைப்பின் தொடர்ந்த பல்வேறு பரிந்துரைகள் மற்றும் தீர்மானங்கள் மூலம் அசூபாபகுழுவால் பிறகு சீராக்கப்பட்டது.

[97] செயல்முறையாக இத்திட்டத்தை திறன் உடையதாகச் செய்ததில், ஜப்பான் நாட்டிற்கு முக்கிய பங்கு உண்டு. பன்னாட்டு வர்த்தகத்தில் நீல துடுப்பு சூரை மீன்களின் பெரும் பகுதியை அது இறக்குமதி செய்கிறது. 2001ல், புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சி மீதான அசூபாபகுழுவின் நிலைக்குழு குறிப்பிடுவதாவது. "சஅக மீன்பிடிப்பு நடவடிக்கைகளை அடக்க அசூபாபகுழுவால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் சஅக மீன்பிடிப்பு கலன்களிலிருந்து ஜப்பானிய சந்தைக்கு இறக்குமதியாகும் நீல துடுப்பு சூரை மீன் அளவில் வீழ்ச்சி மூலமாக சாத்தியமான விளைவுகளைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது''

[98] 2000ல், அசூபாபகுழு இத்தகைய புள்ளியியல் ஆவணத் திட்டத்தை பெரிய கண் உடைய சூரை மற்றும் வாள் மீன்களுக்காக தோற்றுவிக்க தீர்மானித்தது. பார்க்கவும் அசூபாபகு பரிந்துரை 00–22.

புள்ளியியல் விபரங்களின் நகல்கள் அனைத்தும் காலாண்டிற்கு ஒரு முறை என்ற அடிப்படையில் செயற் செயலருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். செயற் செயலர் ஆண்டுக்கு இரு முறை இவற்றை சுற்றுக்கு விடுகிறார். சேகரிக்கப்பட்ட விபரங்களின் சுருக்கத்தையும் தெரிவிக்கிறார்.[99]

மார்ச் 2000ல், தெநீதுசூபாகு, 1994ல் அசூபாபகுழு பின்பற்றிய ஒன்றைப் போன்ற செயல்திட்டத்தை நீல துடுப்பு சூரை மீன் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை குறைக்கும் வகையில் மீன்பிடிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் உறுப்பினர் அல்லாதவர்களின் கலன்களை அடையாளம் காண்பதற்காக பின்பற்றியது. இத்திட்டத்தின் கீழே தெநீதுசூபாகுழு பன்னாட்டு கடமைகளுக்கு இணங்க, அதன் உறுப்பினர்கள் சரிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தவறியதாக அடையாளம் காணப்படும் உறுப்பினர் அல்லாதவர்களிடமிருந்து அதன் பகுதி நீல துடுப்பு சூரை மீன்களை இறக்குமதி செய்வதை தடுக்க வேண்டும். என்பதனை தேவையாக்குகிறது.[100]

இபெசூகு பெரியகண் உடைய சூரை மீன்களுக்காக புள்ளியியல் ஆவணத்திட்டத்தை பின் பற்றியது. ஜுலை 1, 2002 அல்லது அதற்குப்பிறகு எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக, இபெசூகு உறுப்பினர்கள், அவர்களின் எல்லைக்குள் பெரிய கண் உடைய சூரை மீன்களின் இறக்குமதிக்காக, அசூபாபகுழுவின் நீல துடுப்பு சூரை மீன்களுக்கான புள்ளியியல் ஆவணத்தைப் போன்ற மாதிரியில், புள்ளியியல் ஆவணம் ஒன்றை சேர்க்க வேண்டியது தேவையாகிறது. எனினும், தூண்டில் (இரை) பர்சீன் வலைகளால் பிடிக்கப்படும் பெரிய கண் உடைய சூரை மீன்கள் இபெசூகுழுவின் எல்லைப்பகுதிக்குள் முக்கியமாக உணவுப் பொருட்களுக்காக என தீர்மானிக்கப்பட்ட சூரை மீன்கள் இத்தேவைக்கு கட்டுப்பட வேண்டியதில்லை.[101]

அகவாஆபாகுழு சமீபத்தில் புதிய முறையாக அளவுக்கு அதிகமாக குறிப்பாக அதிக அளவில் சஅக மீன்பிடிப்பு மூலமாக பிடிக்கப்படும் மதிப்புள்ள படகோனியன் பல்மீன் அன்டார்டிக் பல்மீன் (Dissostichus spp) ஆதாரங்களுக்காக பிடிக்கப்படும் மீன்களை ஆவணப்படுத்தும் திட்டத்தைப் பின்பற்றியது அகவாஆபாகுழுவின் பிடிக்கப்படும் மீன்களை ஆவணப்படுத்தும் திட்டத்தின் சுருக்கமான விபரம் பற்றிய முடிவு இந்த வழிகாட்டு முறைகளின் பிற்சேர்க்கை 5 ஆக இணைக்கப்பட்டுள்ளது.[102]

அகவாஆபாகுழுவின் பிடிக்கப்படும் மீன்களை ஆவணப்படுத்தும் திட்டம் மற்றும் அசூபாபகு மற்றும் தெநீதுசூ பாகு புள்ளியியல் ஆவணப்படுத்தும் திட்டம் ஆகியவற்றிற்கு இடையேயுள்ள முக்கியமான வித்தியாசம் என்னவென்றால் ஒரு வேளை முந்தையது கேள்வியாக உள்ள சிற்றின வகைகளின் அறுவடையை முழுமையாக உள்ளடக்குகிறது. பிந்தையது, பன்னாட்டு வர்த்தகத்தில் இடம் பெறும் மீன் மற்றும் மீன் பொருட்களை மட்டுமே உள்ளடக்கும்.[103]

அதன் எல்லையில் இறக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட அல்லது ஏற்றுமதி செய்யப்பட்ட பல் மீன் பிடிக்கப்பட்ட இடத்தை தீர்மானிக்கவும் அகவாஆபாகுழுவின் மரபுப் பகுதிக்குள்

---

99 பார்க்கவும் தெநீதுசூபாகுழுவின் மார்ச் 2000, 6வது ஆண்டு கூட்ட (இரண்டாம் பகுதி) அறிக்கையின் பத்தி 21 மற்றும் அறிக்கையின் பிற்சேர்க்கை ஜே.

100 பார்க்கவும் தெநீதுசூபாகுழுவின் மார்ச் 2000, 6வது ஆண்டு கூட்ட (இரண்டாம் பகுதி)அறிக்கையின் பத்தி 13 மற்றும் அறிக்கையின் பிற்சேர்க்கை ஐ

101 இபெசூகு தீர்மானம் 01/06, இபெசூகுழுவின் பெரிய கண் உடைய சூரை மீன் குறித்த புள்ளியியல் ஆவணத்திட்டம் பரிந்துரை.

102 அகவாஆபாகு பாதுகாப்பு முறைகள் 170/20, பிடிக்கப்படும் மீன்களை ஆவணப்படுத்தும் திட்டம் மீதான கூடுதல் ஆவணங்கள் அகவாசூபாகுழுவின் வலைத்தளத்தில் கிடைக்கும்: www.ccamlr.org.

103 பின்பற்றியபடி அகவாஆபாகுழுவின் பிடிக்கப்பட்ட மீன்கள் குறித்தான ஆவணங்கள் அகவாஆபாகுழுவின் மரபுக்குட்பட்ட பகுதிகளில் பிடிக்கப்படும் படகோனியன் பல் மீன்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. எனினும் இந்த மரபுப் பகுதிக்கு வெளியிலும் படகோனியன் பல் மீன்பிடிக்கப்படுவதால் கொடி நாடுகளை அந்த இருப்பு வகைகளைப் பிடிப்பதற்கான உரிமத்தையாவது அக்கலன் பெற்றுள்ளதா என்பதனை மிகச் சிறிய அளவிலாவது சரிபார்க்க அகவாஆபாகுழு கேட்டுக் கொள்கிறது.

அகவாசூபாகுழுவின் பாதுகாப்பு முறைகளுக்கு இணங்க அவைகள் பிடிக்கப்பட்டனவா என்பதனைத் தீர்மானிக்க அகவாஆபாகுழுவின் உறுப்பினர்களை அனுமதிக்க இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டது. முழுமையாக பல் மீனுக்கான பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் மற்றொரு நோக்கமாகும்.

இந்த தீர்மானங்களை சாத்யமாக்க, கொடி நாடுகள், பிடிக்கப்படும் மீன்களைப் பற்றிய விபரங்களைத்தர, ஆவணங்களை கலன்களுக்கு வழங்குகின்றன. அகவாஆபாகுழுவின் மரபு பகுதிக்குள் பல் மீன்பிடிக்க அங்கீகாரம் வழங்கப்பட்ட கலன்களுக்கும் (மரபுப் பகுதிக்கு வெளியே மீன்பிடிக்க திட்டமிடும் அவர்களின் கலன்களுக்கும்) இவை வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு கலனும் பிடிக்கப்படும் மீன் விபர ஆவணங்களை முழுமையாக முடிக்க வேண்டும். அவை மீன்களை இறக்கும் ஒவ்வொரு அறுவடையிலும் பிடிக்கப்பட்ட பல் மீன், கப்பலுக்கு மாற்றி ஏற்றப்பட்ட விபரம் ஆகியவற்றை கொடி நாட்டிற்கு தெரிவிக்க வேண்டும். அவற்றின் பயண விபரங்கள் பிடிக்கப்பட்ட விபரங்கள், இறக்கப்பட்டு கப்பலுக்கு மாற்றி அனுப்பப்பட்ட விபரங்கள்என அனைத்து விபரங்களையும் தெரிவிக்க வேண்டும்.[104] மீன்பிடிக்க அளிக்கப்பட்ட அங்கீகாரத்திற்கு இணக்கமாக, கலன் அறிவித்த இறக்கப்பட்ட அல்லது மாற்றி அனுப்பப்பட்ட விபரங்கள் உள்ளனவா என்பதனை கொடி நாடு தீர்மானிக்கும். அவ்வாறெனில் கொடி நாடு அக்கலனுக்கு சிறப்பான நிரந்தரமான எண்ணை வழங்கும். அதனை பிடிக்கப்படும் மீன் விபர ஆவணத்தில் கலன் குறிப்பிடும்.

எங்கு சென்றாலும் பல் மீன் அறுவடைக்கு இந்த ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு அகவாஆபாகுழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் இறக்கப்பட்ட அல்லது மாற்றி அனுப்பப்பட்ட அனைத்து பல் மீன்களுக்கும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட பிடிக்கப்பட்ட மீன்களுக்கான ஆவணங்களை வழங்குதல் தேவையாகிறது. அவ்வாறே ஒவ்வொரு அகவாஆபாகுழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் அதன் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் அனைத்து பல் மீன் இறக்குமதிக்கும், பூர்த்தி செய்யப்பட்ட மீன்பிடிப்பு விபர ஆவணங்களை வழங்குதல் தேவையாகிறது. ஒவ்வொரு ஆவணத்திலும் ஏற்றுமதி செய்த நாடு அளிக்கும் உறுதி செய்த விபரத்தையும் (அல்லது மறு ஏற்றுமதி) சேர்க்க வேண்டும். இவை அனைத்தும் சுங்கத்துறை அல்லது உரிய அலுவலர்களால் பரிசோதிக்கப்பட்டு, சரிபார்க்கப்பட வேண்டும்.

அகவாஆபாகுழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் அகவாசூபாகுழுவின் செயலகத்திற்கு தான் வழங்கிய அல்லது பெற்ற அனைத்து உறுதி செய்யப்பட்ட ஏற்றுமதி மீன்பிடிப்பு விபரங்களின் நகல்களையும் தவறாது அனுப்ப வேண்டும். வருடாந்திர அடிப்படையில் அகவாசூபாகுழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் பிடிக்கப்பட்ட மீன்கள் குறித்தான ஆவணங்களின் அடிப்படையில், ஏற்றுமதி செய்த அல்லது இறக்குமதி செய்த பல் மீன்களைப் பிடித்த இடம், அளவு ஆகியவற்றை தெரிவிக்க வேண்டும்.

சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க இந்த பிடிக்கப்பட்ட மீன்கள் குறித்தான ஆவணங்கள் மற்றும் சான்று வழங்கும் திட்டங்கள் உதவும். அதே நேரத்தில் புதிய தேவைகளுக்கு இணங்க நியாயமாக மீன்பிடிப்பவர்கள் வர்த்தகர்கள், தரகு பெறுபவர்கள் மீது இவை சுமையாக இல்லாத அளவிற்கு கவனம் கொள்ள வேண்டும். இதனைத் தெரிவிக்க, பசெதிந–சஅக பத்தி **76**, இயன்ற அளவுக்கு இத்திட்டங்கள் வரையறுக்கப்பட வேண்டும், இயலும் இடங்களில் இவை எலக்ட்ரானிக் சாதனங்களை நம்பி இருக்க வேண்டும் என குறிப்பிடுகிறது. மேலும், பசெதிந–சஅக பத்தி **91** இதனைச் செயல்படுத்துவதற்கு பரிந்துரைகளை மேம்படுத்த வல்லுநர் கலந்தாய்வு ஒன்றை

---

104 பிடிக்கப்பட்ட மீன்கள் குறித்தான ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ள விபரங்களின் பட்டியலை அறிய இந்த வழிகாட்டு முறைகளின் பிற்சேர்க்கை **5** தயவு செய்து பார்க்கவும்.

ஏற்பாடு செய்ய உவே அமைப்பை கேட்டுக் கொள்கிறது. இந்த வல்லுநர் கலந்தாய்வு ஜனவரி 2002ல் நடைபெற்றது.[105]

## 7.2 சந்தை தொடர்பான பிற நடவடிக்கைகள்

இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் மற்றும் ஆவணப்படுத்தும் திட்டங்கள் போன்றவற்றின் மேம்பாடு மற்றும் பின்பற்றுதல் ஆகியவற்றுடன் கூடுதலாக பசெதிந–சஅக நாடுகளை சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த நீக்க பிற சந்தை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்கிறது.

உதாரணமாக பசெதிந–சஅக பத்தி 71, நாடுகளை மீன் மற்றும் மீன் பொருட்களின் அடையாளம் காண அனுமதிக்க அவற்றின் சந்தைகளின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்திட கேட்டுக் கொள்கிறது. *அடையாளம் காணும் தன்மை*யின் கருத்து *சான்று அளித்தலுடன்* தொடர்பு கொண்டுள்ளது. ஆனால் முக்கியமான ஒன்றில் வேறுபடுகிறது. முந்தைய பகுதியில் விவரிக்கப்பட்ட சான்று அளித்தல் திட்டம்ஒரு நாட்டை, மீன் எங்கு எப்பொழுது பிடிக்கப்பட்டது யாரால் பிடிக்கப்பட்டது (அகவாஆபாகுழு நிகழ்வுகளில் அகவாஆபாகுழுவின் பாதுகாப்பு விதிகளுக்கு இணங்கி உள்ளதா) என்று தீர்மானிக்க அனுமதிக்கிறது. அடையாளம் காணும் தன்மையோ வழங்கப்பட்ட பொருள், இறக்குமதி இறக்கப்படுதல் மற்றும் கப்பலுக்கு மாற்றி அனுப்புதல் அந்த நேரங்களில் மட்டும் அல்லாது அதன் அனைத்து உற்பத்தி நிலைகளின் மூலமும் வழங்குதல் மூலமும் அடையாளம் காணப் பெற அனுமதிக்கிறது.

ஐரோப்பிய யூனியன், தொடக்க நிகழ்வுகளில் மேலும் முன்னேறி உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் உடல் நலத்திற்கு தீங்கு விளைக்காத தன்மையை உயர்த்தும் பெரிய முயற்சியின் பகுதியாக மீன் பொருட்களின் அடையாளம் காணும் தன்மையை மேம்படுத்தியுள்ளது. 2002 ஜனவரியிலிருந்து ஐரோப்பிய யூனியன் பகுதியில் சந்தைப்படுத்தப்படும் அனைத்து மீன் பொருட்களும் துண்டுச்சீட்டுடன் இருக்க வேண்டும். அல்லது உரிய அடையாளம் பெற்று இருக்க வேண்டும். பொருளின் சிற்றின வகை, உற்பத்தி செய்யப்பட்ட முறை (கடலில் பிடிக்கப்பட்டதா, நன்னீரில் பிடிக்கப்பட்டதா அல்லது பண்ணையில் வளர்த்து பிடிக்கப்பட்டதா) மற்றும் பிடிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட இடம் போன்ற தகவல்களை அவை தெரிவிக்க வேண்டும்.[106] இத்தகைய தேவைகள் ஐரோப்பிய யூனியன் பகுதியில் சஅக மீன்பிடிப்பில் பெறப்பட்ட மீன்களை சந்தைப் படுத்துவதை தடுப்பதற்கு பயன்படுகின்றன.[107]

அவர்கள் எல்லையில் உள்ள மீன்பிடிப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளைக் கொண்ட தனியார் மற்றும் நிறுவனங்களுக்கு விபரங்களை பரவச் செய்வதன் மூலம் நாடுகள் சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராடலாம். பசெதிந–சஅக பத்தி 73, நாடுகளை சஅக மீன்பிடிப்பில் ஈடுபடுவதாக அடையாளம் காணப்பெறும் கலன்களுடன் வர்த்தகம் செய்வதன் மூலம் ஏற்படும் தீங்கான விளைவுகளை தனியார் மற்றும் நிறுவனங்கள் ("இறக்குமதியாளர், கப்பலுக்கு மாற்றி அனுப்புவர்கள், வாங்குபவர்கள், பயன்படுத்துபவர்கள், சாதனங்களை வழங்குபவர்கள், வங்கிகள், காப்பீடு செய்பவர்கள் மற்றும் பிற சேவை வழங்குபவர்கள் மற்றும் பொதுமக்கள்") அறிய செய்வதற்கு ஏற்பாடு செய்ய கேட்டுக் கொள்கிறது. அவ்வாறே பத்தி 74, சஅக மீன்பிடிப்போருடன்

---

105 பார்க்கவும் மீன்பிடி பாடு சான்றிதழுக்கான இசைவு மீதான மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்களின் வல்லுநர் கலந்தாய்வு அறிக்கை மமீவமே நிறுவனங்களின் எல்லைக்கு வெளியே சஅக மீன் பிடிப்பை எதிர்த்துப் போராட பல்வேறு சந்தை தொடர்பான நடவடிக்கைகளை நாடுகள் செயல்படுத்தியதற்கு உதாரணங்கள் உள்ளன. உதாரணமாக மமீமுகமை உறுப்பினர்கள், பிற மமீமுகமை உறுப்பினர்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டத்திற்குப்புறம்பாக பிடிக்கப்பட்ட மீன்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்துள்ளது.

106 ஐயூ கட்டுப்பாடு 104/2000, கட்டுரை 4.

107 மீன்களை கண்டறிதல் என்ற மற்றொரு திட்டம், ஐரோப்பிய யூனியன் பகுதிகளை அடித்தளமாகக் கொண்டது, அறுவடை செய்யப்பட்ட நொடியிலிருந்து இறுதி விற்பனைக்கு வந்த நொடிவரை மீன் மற்றும் மீன்பொருட்களை அடையாளம் காண்பதற்கான எலக்ட்ரானிக் அமைப்பு வழிகளை மேம்படுத்துகிறது.

வர்த்தகம் செய்வதால் ஏற்படும் தீங்கான விளைவுகளை நாடுகள் அவர்களின் மீன் பிடிப்பவர்கள் அறியச் செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறது.[108]

இத்தகைய கடமைகளை நிறைவேற்றுவதற்காக, நாடுகள் விளம்பர முகாம்களை நடத்த வேண்டும். இதற்காக பல ஊடகங்களை பயன்படுத்த வேண்டும். பொது மக்களுக்கு அறிவிப்புகள் தர வேண்டும். பத்திரிக்கைச் செய்திகள் தர வேண்டும். தொடர்புடைய தொழிலில் உள்ள குழுக்களுக்கு இலக்குடைய கடிதப் போக்கு வரத்து மேற் கொள்ள வேண்டும். பத்தி 73 மற்றும் 74, நாடுகள் சட்டம் இயற்ற வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறது. அத்தகைய வர்த்தகத்தை மேற்கொள்வது அல்லது சஅக மீன்பிடிப்பில் பெறப்பட்ட மீன் அல்லது மீன் பொருட்களை வர்த்தகப் படுத்துவது சட்ட மீறல் என கருத வேண்டும். உயர்அடிக்குறிப்பு 25, வழங்கும் மாதிரிகளின் அடிப்படையில் அத்தகைய சட்டம் வடிவமைக்கப்பட வேண்டும். வசதிக்காக மீண்டும் இங்கு திரும்பக் கூறப்படுகிறது:

(நாட்டின்) எல்லைக்குட்பட்டவராவது–

(அ) தானாக அல்லது பங்குதாரராக முகவராக அல்லது மற்றொருவரின் பணியாளராக, இறக்குதல் இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், விற்பனை செய்தல், பெறுதல், வாங்குதல் அல்லது அடைதல்; அல்லது

(ஆ) தனது சார்பில் மற்றொருவரை செயல்படச் செய்வது அல்லது அனுமதிப்பது அல்லது இறக்குதல், இறக்குமதி ஏற்றுமதி, விற்பனை, பெறுதல், வாங்குதல் அல்லது அடைதல் ஆகியவற்றிற்கு மீன்பிடி கலனைப் பயன்படுத்துதல், மற்றொரு நாட்டின் சட்டத்திற்கு முரணாக அல்லது மண்டல, மீன்வள மேலாண்மை நிறுவனம் பின்பற்றும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளைப் பலவீனப்படுத்தும் வகையில் எந்த ஒரு மீனையும் வைத்திருப்பது, எடுப்பது, அனுப்பி வைப்பது அல்லது விற்பது குற்றமாகும் அதற்கான அபராதத் தொகையாக தொகைக்கு மிகாமல் (தொகை குறிப்பிடவும்) கட்ட நேரிடும்.

## 8. பசெதிந–சஅக மமீவமே நிறுவனம் மூலம் செயல்படுத்துதல்

### 8.1 சஅக மீன்பிடிப்பை தெரிவிப்பதில் மமீவமே நிறுவனத்தின் பங்கு

முந்தைய பகுதிகளில் விவரித்தபடி, மமீவமே நிறுவனங்கள் சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க முக்கிய மைய பங்கு பெற்றுள்ளது.[109] உலகின் மிகவும் மதிப்பு வாய்ந்த மீன் இருப்புகளில் பல மற்றும் பெரும்பான்மையான எண்ணிக்கையில் உள்ள அவற்றின் இருப்புகள் குறிப்பிடத்தக்க வகையில் சஅக மீன்பிடிப்பிற்கு இலக்கு ஆகின்றன. சஅக மீன்பிடிப்பு மமீவமே நிறுவனத்தின் எல்லைக்கு உட்படுகிறது. அதனால் மமீவமே நிறுவனங்கள் பசெதிந–சஅக செயல்படுத்தும் முயற்சிகளை ஒருங்கிணைக்கும் மற்றும் மேம்படுத்தும் தனிப்பட்ட நிலையில் உள்ளது.

[108] பல மமீவமே நிறுவனங்கள் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள அதன் உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறது. உதாரணமாக 1999ல் இபெசூகுழு தீர்மானம் 99/02 ஐப் பின் பற்றியது ("வசதிக்கேற்றபடி கொடிகளை மாற்றி பறக்கவிடும் அதிக அளவிலான ஓடு கயிறு கலன்களின் மீன்பிடிப்பிற்கு எதிரான நடவடிக்கை") இபெசூகுழுவின் உறுப்பினர்களை, சந்தைச் சங்கிலியில் உள்ள இறக்கு மதியாளர்கள் மற்றும் பிறரை இத்தகைய மீன்பிடிபாட்டில் ஈடுபடுவோருடன் எந்த ஒரு தொடர்பையும் தவிர்க்க வேண்டும் என்று கோரியுள்ளது. இத்தகைய மீன்பிடிபாட்டில் கிடைக்கும் மீன்களை வாங்காதிருக்க பொதுமக்களை பயிற்றுவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறது. அசூபாபகுழுவில் தீர்மானம் 99–11 இதனைப் போன்றதே. இறக்குமதியாளர்கள், அனுப்பிவைப்பவர்கள், சாதனங்கள் உற்பத்தி செய்பவர்கள் ஆகியவர்களை ஜப்பான், அசூபாப குழுவால் அடையாளம் காணப் பெறும் கலன்களுடன் வர்த்தகம் கொள்வதை தானாகவே தவிர்த்துக் கொள்ள வழி முறைகளை வழங்குகிறது. பார்க்கவும். எம். கோமாட்சு, உயர் குறிப்பு 20

[109] 'மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனம்' என்ற வார்த்தை (மமீவமேநி) மண்டல 'மீன்வள அமைப்பு அல்லது ஏற்பாடு' என்ற வார்த்தைகளை விட குறுகியதாக தோன்றுகிறது. 1999 மற்றும் 2001ல் நடைபெற்ற "உவேஅ மற்றும் உவே அமைப்பின் உறுப்பினரல்லாதார் மண்டல மீன்வள அமைப்பு அல்லது ஏற்பாடுகள்' கூட்டத்தில் மீன்வளப் பிரச்சினைகள் குறித்து சில பொறுப்புகளைக் கொண்ட 30க்கும் மேற்பட்ட பன்னாட்டு நிறுவனங்களின் பிரதி நிதிகளை உள்ளடக்கியது. எனினும் இந் நிறுவனங்களில் பல மீன்வள மேலாண்மைக்கான அதிகாரத்தைப் பெற்றிருக்க வில்லை. ஆகையால் மமீவமே நிறுவனத்திற்குள் உள்ளடக்கப்பட வில்லை.

தற்போதுள்ள மமீவமே நிறுவனங்கள் அவற்றின் அதிகாரங்களில், சட்ட அங்கீகாரத்தில், உறுப்பினர்களில் மற்றும் பூகோள ரீதியாக உள்ளடக்குவதில் வேறுபடுகின்றன. சில மமீவமே நிறுவனங்கள் பல ஆண்டுகளாக உள்ளன. ஆனால் பிற சமீபத்தில் தோன்றியவை.[110] ஆனாலும் மமீவமே நிறுவனங்களுக்கிடையேயான வேறுபாடுகள் இருந்த போதிலும் சமீபத்திய பன்னாட்டு சாதனங்கள் நாடுகளை பொதுவாக மமீவமே நிறுவனங்களின் திறனை வலுப்படுத்தவும் மற்றும் மண்டலங்களை உள்ளடக்க இதுவரை சேர்க்கப்படாத மீன் இருப்புகளை உள்ளடக்க புதிய மமீவமே நிறுவனங்களை நிறுவிடவும் கோருகிறது.[111] சஅுக மீன்பிடிப்பு பிரச்சினைகளை திறமையுடன் நிர்வகிக்க மமீவமே நிறுவனங்களின் திறனையும் வலுப்படுத்த பசெதிந–சஅுக இத்தகைய அழைப்பை எதிரொலிக்கிறது.[112]

சஅுக மீன்பிடிப்பின் ஒரே மாதியான பிரச்சினைகளை பல மமீவமே நிறுவனங்கள் எதிர் கொள்கின்றன. இருப்பு குறைவதால் பல மமீவமே நிறுவனங்கள் அவை பொறுப்பு ஏற்றுள்ள மீன்வளத்தை நிர்வகிக்க கடுமையான விதிகளைப் பின்பற்றுகின்றன. சில மீன்பிடி கலன்கள் கடுமையான விதிகளுக்கு இணக்கம் தெரிவிக்கின்றன. ஆனால் பிற விதிகளைப் புறக்கணிக்கின்றன அல்லது மமீவமே நிறுவனத்தில் உறுப்பினர் அல்லாத நாடுகளில் பதிவு செய்கின்றன. அவ்வாறு நேரடியாக விதிகளுக்கு கட்டுப்படுவதைத் தவிர்க்கின்றன. இதனைப் பொறுத்தவரை சஅுக மீன்பிடிப்பில் உறுப்பினர் அல்லது உறுப்பினரல்லாதார் கலன்கள் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. சஅுக மீன்பிடிப்பை நிர்வகிக்க எந்த முறையும், இரு குழுக்களுக்கும் திறமையாக தெரிவிக்காதவரை, வெற்றி பெறாது.

மமீவமே நிறுவனம் சஅுக மீன்பிடிப்பை, அதன் எஞ்சிய அதிகாரங்களுடன் தொடர்பற்ற பிரச்சினையாக தெரிவிக்க முயற்சி செய்தால் அன்றி வெற்றிபெறாது. மாறாக மமீவமேநி சஅுக மீன்பிடிப்பை கட்டுப்படுத்த அதன் அடிப்படையான நோக்கங்களுடன் ஒருங்கிணைத்த முறைகளுக்கான வழிகளை அறிய வேண்டும். உதாரணமாக ஆதாரங்களைப் பாதுகாத்தல் மீன்பிடிப்பது மற்றும் மீன்பிடிக்கும் முயற்சி ஆகியவற்றைக்கட்டுப்படுத்துதல், மீன்பிடித்திறனை நிர்வகித்து தற்செயலாக பிடிபடுபவற்றைக் குறைத்தல், விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சி, பொதுவான தகவல்களை சேகரித்தல் அவற்றைப் பரவலாக்குதல் போன்றவற்றை உள்ளடக்கலாம்.[113]

பசெதிந–சஅுக பத்தி 83ல் தெரிவித்தவாறு, மமீவமேநி ஆதாரங்களை சென்று அடைவதற்கான வழி குறித்த பிரச்சினையை தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் ஒத்துழைப்பையும் மற்றும் வளம்குன்றாத தன்மையையும் வளர்க்க தெரிவிக்க வேண்டும். இந்த ஆதாரங்களை அடைவதற்கான வழியை சமமாக ஏற்றுக் கொள்வதற்கு இயலாத சில மமீவமே நிறுவனங்கள் சஅுக மீன்பிடிப்பிற்கு சந்தேகத்திற்கு இடமின்றி உதவி செய்கின்றன.

---

110 மேற்கு மற்றும் மத்திய பசிபிக் கடலில் பெரிதும் நகரும் மீன் இருப்புகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மரபு மேற்கு மற்றும் மத்திய பசிபிக் கடலில் பெரிதும் நகரும் மீன் இருப்புகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை குழுவை நிறுவியது. செப்டம்பர் 2000ல் கையொப்பத்திற்காக தொடங்கி வைக்கப்பட்டது. தென் கிழக்கு அட்லாண்டிக் கடலின் மீன்வள ஆதாரங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான மரபு, தென் கிழக்கு அட்லாண்டிக் மீன்வளக்குழுவை நிறுவியது. ஏப்ரல் 20, 2001ல் கையொப்பத்திற்காக தொடங்கி வைக்கப்பட்டது.

111 பார்க்கவும் உ.ம். ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் கட்டுரை 13 மற்றும் மேலும் பொதுவாக, நடத்தை விதித் தொகுப்பின் கட்டுரை 7ல் உள்ள பல்வேறு பகுதிகள்.

112 பசெதிந–சஅுக பத்தி 80 சஅுக மீன்பிடிப்பை மேலும் திறமையாக நிர்வகிக்க மமீவமே நிறுவனங்களை வலுப்படுத்த கேட்டுக் கொள்கிறது. பசெதிந–சஅுக பத்தி 78 மமீவ மே நிறுவனங்களை அவை இல்லாத இடங்களில் நிறுவிட மீண்டும் வலியுறுத்துகிறது.

113 சஅுக மீன்பிடிப்பு மற்றும் அதன் தொடர்பான சம்பவங்களை தெரிவிக்க மமீவமே நிறுவனங்கள் மேற் கொள்ளும் நடவடிக்கைளின் விரிவான விபரங்களுக்கு, பார்க்கவும் “சஅுக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட பின்பற்றும் மற்றும் செயல்படுத்தும் முறைகளில் தேசீய மீன்வள நிர்வாகம் மற்றும் மண்டல மீன்வள அமைப்புகளின் பங்கு,” ஜுடித் ஸ்வான்.

ஒரு உணர்வில், சஅக மீன்பிடிப்பை நிர்வகிப்பதில் சில மமீவமே நிறுவனங்களே திறமை பெற்று உள்ளன. அதன் உறுப்பினர்கள் (மற்றும் அவர்கள் பணியில் பங்கு கொள்ளும் பிறர்) வழிகாட்டுகின்றனர் அல்லது அவ்வாறு இருக்க அனுமதிக்கப்படுகின்றனர். மற்றொரு உணர்வில், மமீவமே நிறுவனங்கள் அடிக்கடி அதன் உறுப்பினர்களின் கருத்துகளை நிறைவேற்றுகின்றன. ஆனால் தனியான ஒருவரின் கருத்தை நிறைவேற்றுவதில்லை. இதற்கான ஒரு காரணம் என்ன வென்றால் பொதுவாக அரசுகள் மீன்பிடிகலன்களின் மீதான கட்டுப்பாடுகளை விதிக்க பிற அரசுகள் அவ்வாறு செய்வதால் பெரிதும் விரும்புகின்றன. மமீவமே நிறுவனங்கள் இத்தகைய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதிலும் மற்றும் பன்னாட்டு மீன்வளம் நடத்த' நிலை நிறைவேற்றும் களங்களை' தோற்றுவிப்பதிலும் வெளிப்படையானவை. மமீவமேநிறுவனங்களும் வர்த்தக கட்டுப்பாடு போன்ற முறைகளுக்கு நியாயத்தை வழங்குகிறது. இவற்றை ஒரு தலைப்பட்சமாக பயன்படுத்தினால் விவாதங்கள் ஏற்படும்.

இந்த வழிகாட்டு முறைகளின் முந்தைய பிரிவுகள் மமீவமே நிறுவனங்கள் சஅக மீன்பிடிப்பை நிறுத்த நீக்க தடுக்க மேற்கொள்ளும் கடுமையான முயற்சிகள் பலவற்றைப் பற்றி குறிப்பிடுகிறது. மீண்டும் பார்வையிடுதலில் மமீவமே நிறுவனம்:

- சஅக மீன்பிடிப்பு தொடர்பான விபரங்களை சேகரித்து பரவலாக்குதல்
- சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றிற்கு எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களின் நாடுகளை அடையாளம் காணுதல் மற்றும் அடையாளம் காணப்பெறும் நாடுகளை, அத்தகைய நடைமுறைகளை சரிசெய்து கொள்ள வலியுறுத்தல்
- தொடர்புடைய பகுதிகளில் மீன்பிடிக்கும் தேசீயமற்ற கலன்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அதன் உறுப்பினர்களை கோருதல்[114]
- கலனின் மீன்பிடிப்பு பயண ஏற்பாடுகள் சஅக மீன்பிடிப்பிற்கு அழைத்துச் செல்லாது என்பதனை உறுதிப்படுத்த விதிகளைப் பின்பற்றுதல்
- துறைமுக ஆய்வுத்திட்டங்கள், கடலில் கப்பலுக்கு மாற்றி அனுப்புவதை தடை செய்தல், தொடர்புடைய பகுதிகளில் உறுப்பினரல்லாதவரின் கலன் பிடித்ததாக கருதப்படும் மீன்களை உறுப்பினர்களின் துறைமுகத்தில் இறக்குவதற்கு அனுமதி வழங்காதிருத்தல் போன்ற திட்டங்களைப் பின்பற்றுதல்
- மீன்பிடிபாட்டிற்கு சான்று வழங்குதல் மற்றும்/அல்லது வர்த்தக ஆவணப்படுத்துதல் திட்டம் போன்றவற்றைப் பின்பற்றுதல்
- சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட சந்தை தொடர்பாக பிற நடவடிக்கைகளைப் பின் பற்றுதல்

## 8.2 மமீவமே நி பின்பற்றும் நடவடிக்கைகளுக்கான எடுத்துக் காட்டுகள்

எண்ணிக்கையில் வளர்ந்து வரும் மமீவமே நிறுவனங்கள் ஏற்கனவே, சஅக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த நீக்க தேவையான சில நடவடிக்கைகளை பின்பற்றுகின்றன. இவை ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியா சிட்னியில் 2000ல் மே 15 முதல் 19 வரை நடைபெற்ற சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு மீதான வல்லுநர்

[114] இந்த வழிகாட்டு முறைகளின் பிரிவு 3.2.3ல் விவரித்தபடி அசூபாபகு மற்றும் வகிஅமீவ நிறுனம் பின்பற்றிய திட்டங்கள், அதன் உறுப்பினர்களை *பன்னாட்டு சட்டத்திற்கு இணங்க* தேசீயமற்ற கலன்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறது. அத்தகைய நடவடிக்கைகளை அனுமதிக்கும் நோக்கம் குறித்து பன்னாட்டு சட்டங்களின் விதிகள் முழுமையாக தெளிவாக இல்லை எனினும் முடிந்தவரை நாடற்ற கலன்களுக்கு எதிராக எத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது குறிப்பாக வழங்கப்பட வேண்டும் என மமீவமே நிறுவனங்கள் விரும்புகின்றன.

கலந்தாய்வுக்கு முன்பாக தயாரிக்கப்பட்ட ஆய்வு மண்டல அளவில் கீழ்க்கண்ட வகையான முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று குறிப்பிட்டது:

- சஅக மீன்பிடிப்பு குறித்த விபரங்கள் மற்றும் பதிவேடுகள் (அகவாஆபாகு, மமீமு, பொமீகுமெ, அவெசூகு, பபகமீகு, அசூபாபகு இபெசூகு)
- ஆய்வு மற்றும் அமுல்படுத்தல் (அகவாஆபாகு, மமீமு, பபகமீகு, அகசூபாபகு, இபெசூகு,வமேஅமீவநி, வகிஅமீவநி, வபநஇமீநி)
- களஅ (அகவாஆபாகு, அசூபாபகு, இபெசூகு, மமீமு, வமேஅமீவநி, வகிஅமீவநி)
- உத்தேசம் (அகவாஆபாகு, அசூபாபகு, வமேஅமீவநி)
- இறக்குதல், துறைமுக ஆய்வு மற்றும் கப்பலுக்கு மாற்றி ஏற்றுதல் (அகவாஆபாகு, தெநீதுசூபாகு, இபெசூகு, வமேஅமீவநி, வகிஅமீவநி)
- வர்த்தக முறைகள் (அகவாஆபாகு, தெநீதுசூபாகு, பபகமீகு, அசூபாபகு, இபெசூகு, வபநஇமீநி)
- உறுப்பினர் அல்லாதவர்களுடன் ஒத்துழைப்பு (அகவாஆபாகு, தெநீதுசூபாகு பொமீகுமெ, அவெசூகு, அசூபாபகு, இபெசூகு, வமேஅமீவநி, வஅசாபாகு, வபநஇமீநி)[115]

இவை மற்றும் பிற மமீவமே நிறுவனங்கள், சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க என்ன செய்து கொண்டிருக்கின்றன என்பன பற்றி அன்றைய தேதி வரையிலான தகவல்களுக்கு அவற்றின் வலை தளங்களைப் பார்க்கவும். அவை இந்த வழிகாட்டு முறைகளின் பிற்சேர்க்கை 5 ஆக இணைக்கப்பட்டுள்ளன.

## 8.3 மேல்நடவடிக்கைக்காக செய்யக்கூடியவை

பசெதிந–சஅக பத்தி 80 மமீவமே நிறுவனம் மூலமாக செயல்பட நாடுகளுக்கு பல வழிகளை பரிந்துரைக்கிறது. சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க நாடுகள் அதிகமாக செய்ய வேண்டும். மேலும் விரிவாக கீழ் உள்ளவை பரிந்துரைகளை ஆய்வு செய்கின்றன.

### 8.3.1 நிறுவனங்களை வலுப்படுத்துதல்

மிகவும் அடிப்படையான நிலையில் மமீவமே நிறுவனங்களின் உறுப்பினர்கள், மமீவமேநி அதற்கு ஒதுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ள தேவையான ஆதாரங்களை பெற்றுள்ளது என்பதனை உறுதி செய்ய வேண்டும். பிறவற்றிற்கு இடையே உண்மையான வரவு செலவு மற்றும் மதிப்பிடப்பட்ட பங்களிப்பை உரியவாறு செலுத்திவிடுதல் போன்றவை அவசியமாகின்றன.

அவ்வாறே நிறுவனத்தை வலுப்படுத்துதல் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும். நாடுகளுக்கு மமீவமே நிறுவனங்களுடன் ஒத்துழைக்கும் பணி உள்ளது என்பதனை பசெதிந–சஅக மீண்டும் வலியுறுத்துகிறது. நிறுவனங்களில் உறுப்பினராகுதல் மூலம் அல்லது மமீவமே நிறுவனங்களால் பின்பற்றப்படும் முறைகளை தங்களது கலன்கள் பலவீனப்படுத்தாது என்று உறுதி அளிப்பதின் மூலம் நாடுகள் அப்பணிக்கு செயல்வடிவம் தர வேண்டும்.[116] தனது முறையில் மமீவமே நிறுவனங்கள், தொடர்புடைய மீன்வளத்தில் உண்மையான ஆர்வத்துடன், உறுப்பினர் அல்லாதாரை உறுப்பினராக்க ஊக்கம் தர வேண்டும். அல்லது மமீவமே நிறுவனங்களின் பணிகளில் உறுப்பினர் அல்லாதாரின் ஒத்துழைப்பை எளிதாக்கும் வழிகளை மேம்படுத்த வேண்டும்.[117]

---

115 சஅக மீன்பிடிப்பு மற்றும் அதன் தொடர்பானவற்றைப் பற்றி தெரிவிக்க மமீவமே நிறுவனங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய விரிவான விளக்கத்திற்கு பார்க்கவும் ஜே. சுவான், உயர்குறிப்பு 113.

116 பசெதிந–சஅக பத்தி 79 ஐப் பார்க்கவும். 1995 ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தத்தின் கட்டுரை 8 (3) பகுதியிருந்து இது எடுத்து வழங்கப்படுகிறது.

117 பசெதிந–சஅக பத்தி 83 ஐப் பார்க்கவும். 1995 ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தத்தின் கட்டுரை 8 (3)பகுதியிலிருந்து இது எடுத்து வழங்கப்படுகிறது.

இந்த எண்ணங்களின் அடிப்படையில் உறுப்பினர் அல்லாதவர்களோடு செயலாற்ற சாத்யமான அடிப்படைகளை தோற்றுவித்து சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட நிறுவனங்களின் முறைகளை மமீவ மே நிறுவனங்கள் வலுப்படுத்திக் கொள்கிறது. மேற்குறிப்பிட்டவாறு உறுப்பினர் அல்லாதாரை உறுப்பினராக மமீவமே நிறுவனங்கள் அழைப்பது அதிகமாகி வருகிறது. அல்லது "ஒத்துழைக்கும் நிலையை" அடைவது அதிகமாகி வருகிறது.[118] இத்தகைய போக்கு தொடர வேண்டும். மமீவமே நிறுவனங்கள் பின்பற்றும் முறைகளைக் கருதாது உறுப்பினர் அல்லாதவர்களின் கலன்கள் மீன்வளத்தில் ஈடுபடுவது எனில், மமீவமே நிறுவனம் திறமையான மீன்வளத்தை மேலாண்மை செய்யும் என்னும் நம்பிக்கை ஏற்படாது.

மமீவமே நிறுவனங்களில் இன்னும் சேர விரும்பாத நாடுகளுக்காக (அல்லது சேருவதற்கு அவற்றின் பொருட்களுக்கு தகுதி இல்லை எனில்) ஒத்துழைப்பு நிலை சஅக மீன்பிடிப்பை குறைக்கும் சாத்யமுள்ள வளையும் தன்மையான ஏற்பாடுகளை வழங்கும். அனைத்து மமீவமே நிறுவனங்களின் நேர்மையான அதிகரிக்கச் செய்யும் ஒத்துழைப்பு நிலையின் நிபந்தனைகள் வழங்கப்பட்ட மமீவமே நிறுவனத்தின் குறிப்பான சூழ்நிலைக்கு ஏற்ப பொருத்தமாக அமைக்கப்படும். கீழ்க்கண்டவாறு புரிந்து கொள்ளுதலை தோற்றுவிப்பதே இதன் அடிப்படையான கருத்து. மமீவமே நிறுவனத்தால் ஒத்துழைப்பு நிலை வழங்கப்பட்டால் அந்த மமீவமே நிறுவனம் பின்பற்றும் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு முறைகளுக்கு அடிப்படையில் அனுசரித்து நடப்பதற்கு ஒத்துக் கொள்வது என்பதாகும். பரிவர்த்தனையில் மமீவமே நிறுவனத்தின் எல்லையில் உள்ள மீன்வள ஆதாரங்களின் சில பகுதிகளுக்கு வழிகிடைப்பதற்கான தகுதியாக கருதப்படும்.

கடைசியாக மீன்வளத்தில் உண்மையான ஆர்வத்துடன், மமீவமே நிறுவனத்தில் சேருவதற்கு தகுதியான அனைவரும் முழுமையாக உறுப்பினர் ஆவதை நிலுவையில் வைத்து தற்காலிக ஏற்படாக இது செயல்படுத்தப்பட்டால் "ஒத்துழைப்பு நிலை" மிகவும் பயனுள்ளது நியாயமானது. இல்லையேல் "ஒத்துழைப்பு நிலை" மமீவமே நிறுவனம் அல்லது அதனைப் போன்றவற்றிற்கு தேவையான பயனை அளிக்காத நிரந்தரமான இரண்டாம் தர நிலையைத் தோற்றுவிக்கும்.

மமீவமே நிறுவனங்கள் தங்களது பன்னாட்டு முறைகளை வலுப்படுத்திக் கொள்ள மற்றொரு முறை அதன் முடிவுகளை மேற்கொள்ளும் முறைகளை மறு பரிசீலனை செய்தல் ஆகும். சஅக மீன்பிடிப்பு குறித்த அம்முடிவுகள் உரியவாறு உறுதியாக அமைக்கப்படும் என்பதனை உறுதி செய்ய வேண்டும்.[119] உதாரணமாக பெரும்பான்மையான மமீவமே நிறுவனங்கள் வருடத்திற்கு ஒரு முழுமையான கூட்டத்தை நடத்தும் (அத்துடன் குறிப்பிட்ட திட்டங்களை கையாள வழக்கமாக அதிகமான இடைய மர்வு கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யும்) எனினும் சஅக மீன்பிடிப்பு நிகழ்வுகள் வருடத்தில் எந்த நேரத்திலும் நடைபெறலாம். மமீவமே நிறுவனம் மற்றும் அதன் உறுப்பினர்களிடமிருந்து விரைவான பதிலுரை எதிர்பார்க்கப்படுகிறது. இச்சூழ்நிலையைத் தெரிவிக்க, மமீவமே நிறுவனங்களின் உறுப்பினர்கள் மமீவமே நிறுவன செயலகத்திற்கு தனிப்பட்ட சஅக மீன்பிடிப்பு நிகழ்வுகளை அது கையாள வேகமாக இருக்க அங்கீகாரம் வழங்க வேண்டும். உ.ம். தொடர்புடைய நாடுகளுக்கு உடனடியாக அறிவிக்கைகளை அனுப்பி வைக்க மற்றும் எ.க.க நடவடிக்கைக்கு உதவியாக இருக்க வேண்டும்.

மமீவமே நிறுவனங்கள் சஅக மீன் பிடிப்பு மற்றும் எதிர்ப்பு முறைகளுக்கு இடையே உள்ள உறவை பரிசீலிக்க விரும்புகின்றன. இதனைப் பொறுத்தவரை பெரும்பான்மையான மமீவமே நிறுவனங்கள் ஒப்பந்தப்படி நிறுவப்பட்டுள்ளன. அந்த ஒப்பந்தம் ஒவ்வொரு உறுப்பினருக்கும்,

---

[118] பார்க்கவும் உ.ம். பொமீகுமெ தீர்மானம் 97/2 , 22வது அமர்வில் பின்பற்றப்பட்டது. ஒப்பந்தம் அற்ற குழுவினருடன் ஒத்துழைப்பது மீதான அசூபாபகு 94.6 மற்றும் ஒத்துழைப்பு குழுவாக வருவது, உரிமை மற்றும் மீன்பிடி உரிமை மீதான அசூபாபகுழுவின் தீர்மானம் 97–17. ஒப்பந்தமற்ற குழுவினருடன் ஒத்துழைக்க அக்கறைகொள்ளுதல் மீதான இபெசூகு தீர்மானம் (இபெசூகுழுவின் 3வது அமர்வு அறிக்கையின் பிற்சேர்க்கை எம்.)

[119] 1995 ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் கட்டுரை 10 ஜே (சார்மண்டல, மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் அல்லது ஏற்பாடுகள் மூலமாக அவற்றின் கடமைகளை நிறைவேற்ற ஒத்துழைத்தல். நாடுகள்... முடிவுகளை மேற் கொள்ளும் முறைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். இது பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை உரிய நேரத்தில் திறமையாக பின்பற்றுவதை எளிதாக்குகிறது). மேலும் பார்க்கவும் பசெதிந–சஅக பத்தி 82.2

அந்த மமீவமே நிறுவனங்கள் மேற்கொள்ளும் முடிவுகளுக்கு எதிர்ப்பை தெரிவிக்கும் உரிமையை வழங்குகிறது. அந்த முடிவுகளைப் பின்பற்றிய பிறகு சிறிது காலத்திற்குள்ளாக எதிர்ப்பை தெரிவிக்கலாம். அந்த எதிர்ப்பு கேள்விக்குட்பட்ட முடிவைப் பின்பற்றும் எந்த ஒரு கடமையிலிருந்தும் எதிர்ப்பு தெரிவிக்கும் உறுப்பினரை சுதந்திரமடையச் செய்கிறது. மேலும் ஒரு உறுப்பினர் எதிர்ப்பை பதிவு செய்வதால் கூடுதலான நேரத்தில் பிற உறுப்பினர்கள் அதே முறைக்கு அவர்களது எதிர்ப்புகளையும் பதிவு செய்ய அனுமதிக்கிறது.[120]

அத்தகைய பதிவுகளை வரையறுக்க அல்லது கட்டுப்படுத்த பல்வேறு ஒப்பந்தங்களை திருத்துவது குறுகிய காலத்தில் செய்முறைக்கு உகந்தது அல்ல மற்றும் பொருத்தமானது அல்ல. ஆயினும் அத்தகைய பதிவுகள் மமீவமே நிறுவனங்களுடைய முறைகளின் நியாயத்தைப் பலவீனப்படுத்தும். சஅக மீன்பிடிப்பிற்கு குறிப்பாக 'கட்டுபாடற்ற' மீன்பிடிப்பிற்கு கொண்டு செல்லும். எனவே இத்தகைய பதிவுகளைக் குறைப்பதற்கான சாத்யத்திற்காக வழிகளை மமீவமே நிறுவனங்கள் பரிசீலிக்க வேண்டும். உதாரணமாக மமீவமே நிறுவனங்களின் தீர்மானங்கள் எதிர்ப்பை பதிவு செய்யும் உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறது **(1)** எதிர்ப்பு நியாயமானது என்பதனை நிரூபித்தல் **(2)** பயனில் எதிர்ப்பு முறைக்கு ஒப்பிடும் வகையில் தங்கள் கலன்களுக்கு கட்டுப்பாடுகள் விதித்தல் மற்றும் **(3)** எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட முறைகளுக்குப் பதிலாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அறியச் செய்தல்.

### 8.3.2 கூடுதலான இணக்கமான நடவடிக்கைகள்

பின்பற்றப்படும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு அவற்றின் உறுப்பினர்களின் இணக்கத்தை மேம்படுத்த மமீவமே நிறுவனங்கள் கூடுதலான வழிகளை ஏற்படுத்த வேண்டும். மமீவமே நிறுவனம் அதன் கட்டுப்பாட்டில் உள்ள மீன்வள ஆதாரங்களின் இடத்தை, மமீவமே நிறுவனங்கள் பின்பற்றும் மீன்வள விபரங்களைத் தெரிவிக்கும் கடமைகள் உள்ளிட்ட முறைகளுக்கு இணங்காத உறுப்பினர்களின் மீன்பிடிகலன்கள் சென்று அடைவதை தடுப்பது அல்லது கட்டுப்படுத்துவது என்பது மமீவமே நிறுவனங்களுக்காக ஈடுபடுத்தப்படும் ஒரு அடிப்படையான அணுகுமுறையாகும்.[121] அகவாஆபாகு மற்றும் வகிஅமீவநிறுவனத்தின் பரிசீலனையில் உள்ள மற்றொரு அணுகுமுறையின்படி மமீவமே நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும், மமீவமே நிறுவனத்தால் ஏதேனும் ஒரு கலன் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பெற்றால், உடனடியாக அக்கலன்கள் புது நாடுகளில் பெயர் மாற்றப்பட்டிருந்தாலும் அல்லது பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அக்கலன்களுக்கு மீன்பிடிப்பதற்கு உரிமம் மறுக்கப்படுகிறது. அவை துறைமுகத்தை அடைவதற்கான வழியும் மறுக்கப்படுகிறது.

மமீவமே நிறுவனங்கள் சஅக மீன்பிடிப்போர் மீது நிரந்தரமான தண்டனையை வழங்குதலை ஊக்கப்படுத்த வேண்டும். இதற்கு முடிவாக பசெதிந–சஅக ஒவ்வொரு நாட்டையும் கேட்டுக் கொள்வதாவது:

> கலன்களின் சஅக மீன்பிடிப்பிற்காக பெரிதும் சாத்தியமாக இயன்றவரை, அதன் எல்லையில் உள்ள நாட்டினருக்கு போதிய கடுமையான முறையில், திறமையாக சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க, மற்றும் அத்தகைய மீன் பிடிப்பால் விளையும் பயன்களை குற்றம் புரிவோர் இழக்கச் செய்யும் வகையில் அனுமதிக்கப்படுவதை உறுதி செய்தல். நிர்வாக தண்டனை திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட உள்நாட்டு அனுமதி முறையைப் பின்பற்றுதலை இது உள்ளடக்கும்.

---

120 மமீவமே நிறுவனங்கள் தீர்மானங்கள் வகுக்கும் வழிகள் இதர பிரச்சினைகள் எதிர்ப்பு முறைகள் மீதான விவாதங்களுக்கு, பார்க்கவும். " பசிபிக் மீன் இருப்புகளை பாதுகாத்து மேலாண்மை செய்திட முடிவுகளை மேற்கொள்ள தேர்வு செய்தவற்றின் மதிப்பீடு" பன்னாட்டு சுற்றுப்புறச்சூழல் சட்ட மையம் தயாரித்தது.

121 2001ல் உதாரணமாக அசூபாபகுமு அதன் இருப்புகளை ஒதுக்கீடு செய்வதற்கு புதிய உத்திகளைப் பின்பற்றியது. அளவு ஒதுக்கீடு செய்வதற்காக "அசூபாபகுமுவின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு தகுதியுள்ள பங்குபெறுபவர்கள் வழங்கிய இணக்கம் மற்றும் ஒத்துழைப்பு விபரம்" கணக்கில் கொள்ளப்பட்டது.

அனுமதிக்கான விண்ணப்பத்தில் நிரந்தரம் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்த மமீவமே நிறுவனங்கள் சமமான அல்லது வரையறுக்கப்பட்ட தண்டனை திட்டங்களை ஏற்படுத்தும் முறைகளை மேற்கொள்ள அதன் உறுப்பினர்களை வலியுறுத்த வேண்டும். உதாரணமாக வபநஇமீநிறுவன மரபு அதன் மமீவமே நிறுவனத்திற்கு "மரபு வழங்கிய நடவடிக்கைக்கு மாறாக, சமமான தண்டனை வழங்க அட்டவணைகளை அமுல்படுத்த பரிசீலித்து கருத்துரு வழங்க குழுவினருக்கு" அங்கீகாரம் கொடுத்துள்ளது.[122] அவெசூகுழு நிர்வகித்த பன்னாட்டு ஓங்கி பாதுகாப்பு திட்டத்தில் பயன்படுத்திய மற்றொரு அணுகு முறையின் கீழ் அரசு, தொழிற்சாலை மற்றும் சுற்றுப்புறச்சூழல் பிரதிநிதிகள் சூரை மீன்பிடிப்பு பயணங்களின் அறிக்கைகளை ஆய்வு செய்வர். சாத்தியமான சட்ட வரம்பு மீறல்களை ஆய்வு செய்வர். அத்தகைய அடையாளங்களை கொடிநாட்டிற்கு தெரிவிப்பர். பதிலுரையாக கொடிநாடுகளிடமிருந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரங்களைப் பெறுவர்.[123] குறைந்த அளவிலேனும் மமீவமே நிறுவனங்களுக்கு அவற்றின் உறுப்பினர்கள், அவர்களது கலன்கள் ஏற்படுத்திய முரண்பாடுகள் அதன் விளைவாக அவற்றின் மீது விதிக்கப்பட்ட தண்டனைகள் ஆகியவற்றை தெரிவிப்பது தேவையாகிறது.[124]

### 8.3.3 விபரங்களை சிறப்பாக சேகரித்தல் மற்றும் பரிமாற்றம்

மமீவமே நிறுவனங்கள், சஅக மீன்பிடிப்பு குறித்த பல்வேறு வகையான விபரங்களைச் சேகரிப்பதற்கான மையப்பகுதிகளாகும். எனினும் இதனை நிறைவேற்றுவதற்காக மமீவமே நிறுவன உறுப்பினர்கள் நம்பத்தக்க விபரங்களை மமீவமே நிறுவனத்திற்கு வழங்க வேண்டும். அவர்களது கலன்கள் பற்றிய விபரங்கள் மட்டும் அல்லாது அவர்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மீன்பிடிக்கும் மற்றும் அவர்களது துறைமுகங்களைப் பயன்படுத்தும் பிற நாடுகளின் கலன்களைப் பற்றியும் விபரங்கள் தெரிவிக்க வேண்டும். மமீவமே நிறுவன உறுப்பினர்கள் உரிய சந்தை விபரங்களையும் மமீவமே நிறுவனத்திற்கு தெரிவிக்க விருப்பம் கொண்டிருக்க வேண்டும். இறக்குமதி மற்றும் ஏற்றுமதி விபரங்களும் இதில் அடங்கும். இதனைப் பொறுத்தவரை பசெதிந–சஅக பத்தி 80.3 மமீவமே நிறுவனங்கள் "அறிவிப்பதை கட்டளையாக்க சுருக்கமான ஏற்பாடுகளை" வகுத்து செயல்படுத்த வேண்டும் என கருதுகிறது.

பசெதிந–சஅக பத்தி 80.4 சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்ட அல்லது உதவி செய்த கலன்களைப் பற்றிய விபரங்களை பரிமாற்றம் செய்து கொள்வதை ஏற்படுத்தி ஒத்துழைக்க நாடுகளை கேட்டுக் கொள்கிறது. அவ்வாறே மமீவமே நிறுவனங்கள் விபரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான இடமாக அமைகிறது. உதாரணமாக மமீவமே நிறுவனங்கள் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாகக் கருதப்படும் கலன்களின் பட்டியலை தயாரிக்கலாம். அவ்வாறே அவர்களது கண்காணிப்பிற்குட்பட்ட அந்தந்த பகுதிகளில் மீன்பிடிக்கும் அனைத்து கலன்களின் பட்டியலை தயாரிக்கலாம். சட்டத்திற்கு முரணாக செயல்படுதல் மற்றும் வழக்கு தொடர்தல் குறித்த விபரங்களுக்கான தகவல் மையங்களை மமீவமே நிறுவனங்கள் ஏற்படுத்தலாம். உதாரணமாக மமீமு அதன் உறுப்பினர்களின் மீன்பிடி சட்டங்களுக்கு முரணாக செயல்பட்ட கலன்களின் விபரங்களை நிர்வகிக்கிறது. இந்த தகவல்களை கொடி நாடுகளுக்கு கிடைக்கும்படியாக செய்வது பொதுவாக மமீவமே நிறுவனத்திற்கு சாத்தியமாகலாம். இதனால் உரிமம் அறிவது பதிவு கோரும் குறிப்பிட்ட கலன் இதற்கு முன்பு சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டதா என்பதனை இவர்கள் அறியலாம்.[125]

---

[122] வடக்கு பசிபிக் கடலில் இனப்பெருக்கம் செய்வதற்காக கடலில் இருந்து நன்னீருக்கு செல்லும் மீன் இருப்புகளின் பாதுகாப்புக்கான மரபு கட்டுரை 9.

[123] பார்க்கவும் பன்னாட்டு ஓங்கி பாதுகாப்பு திட்டம் மீதான 1999 ஒப்பந்தம் பிற்சேர்க்கை 7.

[124] பார்க்கவும் உ.ம். வடக்கு அட்லாண்டிக் பகுதியில் சால்மன் மீன்களின் பாதுகாப்பிற்கான மரபு கட்டுரை 14. தேசீய மீன்வள எல்லையின் மரபுக்குட்பட்ட பகுதிகளுக்கு வெளியே உள்ள பகுதிகளில் மீன்பிடிகலன்களை கட்டுப்படுத்துவது மற்றும் அமுலாக்கம் குறித்த 1998 வகிஅமீவ நிறுவனத்தின் பரிந்துரைகள் கட்டுரை 24.

[125] பார்க்கவும் ட்டி. அகோரவ் உயர்குறிப்பு 33.

### 8.3.4 மேம்படுத்தப்பட்ட எச்சரிக்கை கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு

சஅக மீன்பிடிப்பு “உடனடியாக” நிகழக்கூடிய சாத்தியமான நிலைகளுக்கு மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சேகரிப்பு மற்றும் பரிமாற்றம் விஸ்தரிக்கப்படும். இது குறித்து பசெதிந–சஅக பத்தி 80.7 ஊக்கப்படுத்துவதாவது:

> எ.க.க ஐ மேம்படுத்துதல்..... உடனடி மீன் பிடிப்பு மற்றும் கலன் எச்சரிக்கை அமைப்பு முறைகள், பிற புதிய தொழில் நுட்பங்கள், மீன்இறங்குதலை கண்காணித்தல், துறைமுகத்தை கண்காணித்தல், உரியவாறு ஆய்வுகள் மற்றும் கப்பலுக்கு மாற்றி அனுப்புதலை கட்டுப்படுத்துதல்

இப்பகுதிகளை செயல்படுத்துவதில் வெற்றியடைய நாடுகள் தற்சமயம் செய்து வருவதைவிட அதிக அளவில் மமீவமே நிறுவனம் மூலமாக தங்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டிய அவசியம் உள்ளது. வபநஇ மீ நிறுவனம் எக கண்காணிப்பு முயற்சிகளில் வழங்கிய வலுவான ஒத்துழைப்பை மாதிரியாகக் கொள்ளலாம். வடக்கு பசிபிக் கடல் பகுதிகளில் சால்மன் மற்றும் நன்னீரில் இனப்பெருக்கம் செய்யும் கடல் மீன்களின் இருப்பை பிடிக்கும் கலன்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள உறுப்பினர்கள் நெருங்கி ஒத்துழைப்பர்.[126]

முக்கிய மீன்வளங்களை கவனிக்க மீன்பிடிப்பு மற்றும் கலன்களை உடனடியாக கண்காணிக்க அமைப்பை ஏற்படுத்த பல நாடுகளில் பயன்பாட்டில் உள்ள மாறுபட்ட களஅமைப்பு ஏற்பாடுகளை பொருந்தச் செய்தல் மற்றும் விரிவாக்குதல் தேவையாகிறது. மமீவமே நிறுவனங்கள் மூலமாக, நாடுகள் பொதுவாக தகவல் படிவங்களையும் தகவல்களை பரிமாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகளையும், அமைப்பின் முழுமையான தொழில் நுட்பத்தை நிர்வகிக்க வரையறைகளையும் ஏற்படுத்தலாம். கள அமைப்பு தகவல்களை நடுநிலையாகப் பெறுவதற்கு மமீவமே நிறுவனங்கள் உதவலாம். எ.க.கண்காணிப்பை திறமையானதாக்க தேவையான விபரங்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதை எளிதாக்கும் பொழுது[127] இந்த தகவல்களில் உள்ள தகுதியான விபரங்களின் இரகசியத்தன்மையைப் பாதுகாக்க உதவலாம்.

அவ்வாறே அணுகு முறைக்காக “உடனடியாக” மீன்பிடி கலனின் பதிவை மாற்றிக் கொள்வதை கண்காணிக்கவும் இயலும். மமீவமேநிறுவனத்தின் எல்லைக்குட்பட்ட மீன்வளம் பகுதியில் இயங்கும் புதிதாக பதிவு செய்யப்பட்ட கலனைப் பற்றி அதன் உறுப்பினர்கள் உடனடியாக மமீவமே நிறுவனத்திற்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளனர். இத்தகைய ஏற்பாட்டை பயனுடையதாக ஆக்குவதற்கு, அவ்வாறே உறுப்பினர் அல்லாதவரும் மமீவமே நிறுவனத்துடன் விபரங்களை பகிர்ந்து கொள்வதற்கு ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

பசெதிந–சஅக பத்தி 80.8ல் வழங்கியுள்ளபடி ஆழ்கடலில் மீன்பிடி கலன்களில் ஏறிச் சென்று பார்க்கவும் மற்றும் ஆய்வு செய்வதற்குமான திட்டங்களை மமீவமே நிறுவனங்கள் ஏற்படுத்த வேண்டும்.[128] சில மீன்வளங்களுக்காக கலனுள் ஏறிச்சென்று பார்வையிடுதல் ஆய்வு செய்தல் ஆகியவற்றிற்காக அணுகு முறைகளை வரையறுக்கும் நோக்கத்தில் உறுப்பினர்கள் ஆய்வாளர்களை பரிமாற்றம் செய்து கொள்ளும் ஏற்பாடுகளை வகுக்கவும் இது பயன்படும். இணைந்து ஆய்வு நடத்தும் திட்டங்களை தோற்றுவிக்கும் சாத்யம் ஏற்படும். இதனைத் தொடர்ந்து

---

126 பார்க்கவும் உ.ம். அமுலாக்க குழுவின் அறிக்கை வபநஇமீ நிறுவனத்தின் 9வது வருடாந்திரக் கூட்டம் (2001) வபநஇமீநி, ஆவணம் 581.

127 கலன் அமைப்புகளை பொருந்தச் செய்வதற்காக விவாதங்களுக்கு பார்க்கவும் ‘‘சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட எச்சரிக்கை கட்டுப்பாடு கண்காணிப்பு மற்றும் கலன் எச்சரிக்கை அமைப்பு தேவைகள்’’ ஜான் எம். டேவிஸ்.

128 1995 ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தத்தில் உள்ளோர் ஆழ்கடலில் அவர்களது கலன்களில் உள்ளே ஏறிச் சென்று பார்க்கவும் மற்றும் ஆய்வு செய்யவும் பிற நாட்டின் அலுவலர்களை ஒப்பந்தத்தின் 21 மற்றும் 22 பிரிவிற்கு இணங்க குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அனுமதிக்கின்றனர். அத்தகைய ஆய்வுகள் மற்றும் கலனுள் ஏறிச்சென்று பார்க்கும் நடவடிக்கைகளுக்கான விதிகளை ஏற்படுத்தும் சிறந்ததாக்கும் சாத்யம் மமீவமே நிறுவனங்களுக்கு உள்ளது அல்லது இணக்கத்தை உறுதிப்படுத்த மாற்றான நுட்பத்தை நிறுவும் சாத்யமும் உள்ளது.

மமீவமே நிறுவனங்களின் உறுப்பினர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு ஆய்வாளர்களாக பணியாற்ற பணியாளர்களை வழங்கலாம். அவர்களே மமீவமே நிறுவனத்தின் சார்பாக செயல்படலாம்.[129]

இந்த தொழில் நுட்ப வழிகாட்டு முறைகளின் பிரிவு 3.2.5ல் குறிப்பிட்டபடி நாடுகள் அதன் எ.க.க. நடவடிக்கைகளை பன்னாட்டு வலைப்பணி மூலமாக மீன்வளம் தொடர்பான எச்சரிக்கை கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பிற்காக ஒருங்கிணைக்க வேண்டும்.

### 8.3.5 துறைமுக நாட்டின் சுருக்கமான அரசாட்சி

மமீவமே நிறுவனங்கள் அவ்வாறு இது வரை செய்யவில்லை என்றால் மீன்பிடி கலன்களுக்காக துறைமுக நாடுகள், சுருக்கமான அமைப்புகளை உடன் நிறுவிடுதலை பரிசீலிக்க வேண்டும். அத்தகைய அமைப்புகள், துறைமுகத்தில் கலன்களை ஆய்வு செய்வதற்கு தேவையானவற்றை சேர்க்க வேண்டும். ஆய்வில் சஅக மீன் பிடிப்பில் ஈடுபட்டதனை தெரிவிக்கும் சாத்தியம் இருப்பின் அந்த விபரத்தை துறைமுகநாடு மற்றும் கொடி நாடு ஆகிய இரண்டிற்கும் இடையில் பரிமாற்றம் செய்து தேவையானவற்றை சேர்க்க வேண்டும். உறுப்பினர் அல்லாதவர்களின் மீன்பிடி கலன்களை துறைமுகத்தில் ஆய்வு செய்வதை கட்டாயமாக்குவதை பரிசீலிக்க வேண்டும். அத்தகைய ஆய்வின் முடிவுகளை மமீவமே நிறுவனங்களுக்கு அறிவிக்கும் கடமையும் பரிசீலிக்கப்பட வேண்டும். மமீவமே நிறுவனம் அத்தகைய அறிக்கைகளை பிற உறுப்பினர்களுக்கும் பரவச் செய்யும்.

### 8.3.6 சான்று அளித்தல்/ பதிவு செய்தல் திட்டங்கள்

மேலே உள்ள பிரிவு 7ல் விவரித்தபடி சான்று அளித்தல் மற்றும் பதிவு செய்தல் திட்டங்களை மேம்படுத்தி புதியதாக்கும் கடமையைக் கொண்ட அமைப்பு மமீவமே நிறுவனமாகும். சில மமீவமே நிறுவனங்கள் ஏற்கனவே இவற்றைச் செய்து விட்ட போதிலும் கூடுதலான திட்டங்களுக்கு தேவை ஏற்படுகிறது அல்லது நடப்பில் உள்ள திட்டங்களில் அறுவடை செய்து பன்னாட்டு வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படும் புதிய சிற்றின வகைகளை சேர்ப்பதற்கு தேவை ஏற்படுகிறது. சில மீன்வளங்களுக்கு குறிப்பாக, மிகுந்த மதிப்பு வாய்ந்த மீன்களுக்கு, பசெதிந–சஅக பத்தி 80.5ல் குறிப்பிட்டபடி சஅக மீன்பிடிப்பை நிர்வகிக்க மமீவமே நிறுவனங்கள் வர்த்தக விபரங்களைத் தொகுக்க வேண்டும். எனினும் வேகமாகப் பரவிய இத்திட்டங்கள் அதற்கே உரிய பயத்தை ஏற்படுத்தி விட்டது. நியாயமான மீனவர்களுக்கான எழுதி அறிவிக்கும் பணியின் சுமை சீராக உயர்ந்துவிட்டது. இப்பிரச்சினையைத் தெரிவித்து முடிந்த வரை இத்திட்டங்களை வரையறுக்க மமீவமே நிறுவனங்கள் ஒன்றாகச் செயல்பட வேண்டும். எலக்ட்ரானிக் அமைப்புகளை பயன்படுத்துவது மூலம் மற்றும் அவ்வாறு பசெதிந–சஅக பத்தி 76 ஐ செயல்படுத்துவதில் உதவுதலும் இதில் சேர்க்கப்பட வேண்டும்.

### 8.3.7 பயணம் மீதான கட்டுப்பாடு

மேலே உள்ள பிரிவு 4ல் விவரித்தபடி மற்றும் பசெதிந–சஅக பத்தி 80.14ல் குறிப்பிட்டபடி மமீவமே நிறுவனங்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள இருப்புகளுக்கான பயண ஏற்பாடு சஅக மீன்பிடிப்பிற்கு வழிவகுக்காது என்பதனை உறுதிப்படுத்த வேண்டும். பிறவற்றிற்கு இடையே ஒரு உறுப்பினரின் ஒதுக்கீட்டிற்கு அதிகமாக வழியைப்பெற கலன்கள் “கொடிகளுக்கு தாவுதலில்” ஈடுபடாது என்பதனை உறுதி செய்யும் வகையில் பயண ஏற்பாடுகளுக்கான விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். வளரும் நாடுகளால் முறையான மீன்வள மேம்பாட்டிற்காக பயண ஏற்பாடு விதிகள் வழங்கப்பட வேண்டும். அதே சமயத்தில் , மமீவமே நிறுவனங்கள் மீன் வளஆதாரங்களுக்கான வழியை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

[129] பார்க்கவும் உ.ம். வமேஅ மீவநிறுவனத்தின் இணைந்த பன்னாட்டு ஆய்வு மற்றும் காண்காணிப்பு திட்டங்கள்

### 8.3.8 மீதமுள்ள உறுப்பினர் அல்லாத பிரச்சினைகளுக்கான நடவடிக்கைகள்

பசெதிந–சஅக பத்தி 79 முன்பே குறிப்பிட்டுள்ளபடி மமீமே நிறுவன உறுப்பினர் அல்லாதார் ஒத்துழைக்க வேண்டும் என்ற அவர்களுடைய பணியிலிருந்து விலக்கப்பட வில்லை. மமீவமேநி முக்கியமாக அவர்களது அத்தகைய ஒத்துழைப்பை தேடும். அதற்காக உறுப்பினரல்லாதவரை உறுப்பினராக ஊக்கப்படுத்தும். அல்லது குறைந்தது ஒத்துழைப்பு நிலையையாவது பெற ஊக்கப்படுத்தும். சஅக மீன்பிடிப்பில் தொடர்ந்து ஈடுபடும் கலன்களின் உரிமையாளர்களை கையாள கூடுதலான முறைகளை மமீவமே நிறுவனங்கள் பரிசீலிக்கும்.

இப்பிரிவில் முன்பே விவரிக்கப்பட்ட இத்தகைய முயற்சிகளில் சில உறுப்பினர் மற்றும் உறுப்பினர் அல்லாதவர்களின் கலன்களின் சஅக மீன்பிடிப்பை தெரிவிக்க (விபரங்கள் பரிமாற்றம், துறைமுக ஆய்வு சான்று அளித்தல் மற்றும் ஆவணப்படுத்தும் திட்டங்கள் போன்று) வடிவமைக்கப்பட்டது. கூடுதலாக பசெதிந–சஅக பத்தி 84 வழங்குவதாவது:

> ஒரு நாடு அதன் கொடியைப் பறக்கவிடும் உரிமை கொண்ட மீன்பிடி கலன்கள் அல்லது முடிந்த பெரும் அளவிலான சாத்தியத்தில் அந்நாட்டினர் தொடர்புடையதின் (மமீவமே நிறுவனத்தில்) கீழ் உள்ள மீன் இருப்புகளை பாதிக்கும் சஅக மீன்பிடிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார்கள் என்பதனை உறுதி செய்ய வேண்டும். உறுப்பினர் நாடுகள், அந்நிறுவனத்தின் மூலம் செயல்படுபவை, அந்நாட்டின் கவனத்திற்கு இப்பிரச்சினையை கொண்டு செல்ல வேண்டும். பிரச்சினை சரியாக்கப்படவில்லை என்றால் நிறுவனத்தின் உறுப்பினர்கள் பன்னாட்டு சட்டத்திற்கு இணங்க ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்மதிக்கும்.

உறுப்பினர் அல்லாத கொடி நாட்டின் கவனத்திற்கு சஅக மீன்பிடிப்பு நிகழ்வுகளை மமீவமே நிறுவனங்கள் கொண்டு செல்வது அதிகரித்துள்ளது. அசூபாபகு உறுப்பினர்கள், உதாரணமாக அசூபாபகுழுவின் செயலகத்திற்கு அசூபாபகுழுவின் முறைகளைப் பலவீனப் படுத்துவதாக தோன்றும் கலன்களுக்கு உரிமையாளர்களான உறுப்பினர் அல்லாதவர்களுக்கு பல விசாரணை மற்றும் எச்சரிக்கைகளை அனுப்பிட அறிவுறுத்தியுள்ளனர். உறுப்பினர் அல்லாதார் சரியான நடவடிக்கையை மேற்கொள்வதில் தவறுவது அசூபாப குழுவின் அடையாளத்திற்கும் கடைசியாக வர்த்தகத்தடைகளுக்கும் வழிவகுக்கும். வமேஅமீவநி மற்றும் வகிஅமீவ நிறுவன உறுப்பினர்கள் அவர்களது செயலகத்திற்கும் அதனைப் போன்ற செய்தியை அனுப்ப அறிவுறுத்தி உள்ளனர். 2001ல் அகவாஆபாகுழு, அகவாஆபாகுழுவின் பகுதியில் வசதிக்கேற்றபடி கொடியை மாற்றி இயங்கும் கலன்களின் பட்டியலை தொகுத்து பராமரிக்க அதன் செயலகத்திற்கு அறிவுறுத்தி உள்ளது. அத்தகைய கொடிகளை அடையாளம் காண்பதற்கு உறுதியான முறைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தி உள்ளது.[130]

உறுப்பினர் அல்லாதவர்களின் நிலையான சஅக மீன்பிடிப்பை தெரிவிக்க அதனைப் போன்ற முறைகளை மேற்கொள்ளுதல் பிற மமீவமே நிறுவனங்களுக்கு அவசியமாகிறது. மமீவமே நிறுவனத்தின் முறைகளைப் பலவீனப்படுத்தும் கலன்களின் கொடி நாடுகள் அவற்றின் பன்னாட்டு கடமைகளுக்கு இணங்கி நடப்பதில் தோல்வி அடைகின்றன. அத்தகைய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறுவதில் அடுத்தடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்தால் அல்லது புறக்கணிக்கப்பட்டால் மமீவமே நிறுவனங்கள் மூலம் செயல்படும் மற்ற நாடுகள், பசெதிந–சஅகல் அமைக்கப்பட்டுள்ள சாதனங்களைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[130] பார்க்கவும் அகவாஆபா குழுவின் 2001ம் வருட கூட்ட அறிக்கை பத்தி 5.20

**8.3.9 மமீவமே நிறுவனங்களுக்குள் மற்றும் மமீவமே நிறுவனங்களுக்கிடையே மற்றும் பிற பன்னாட்டு நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பு**

முடிவாக, மமீவமே நிறுவனங்கள் சஅக மீன்பிடிப்பை நிறுத்த, நீக்க, தடுக்க அவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதை அதிகரிக்க வேண்டும். பல மமீவமே நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் அவ்வாறு செய்யத் தொடங்கிவிட்டன. அல்லது குறைந்தது அவ்வாறு செய்வதற்கான நோக்கத்தை தெரிவித்துள்ளன.[131] குறிப்பாக, மமீவமே நிறுவனங்கள் சஅக மீன்பிடிப்பு குறிப்பாக கலனின் நடமாட்டம், இணக்கம், மேலாண்மை மற்றும் வர்த்தகம் மீதான விபரங்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதின் நோக்கம் மற்றும் விரைவை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.[132]

மீன்பிடி கலன்களின் நடமாட்டம் அனைத்து மமீவமே நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பை அவசியமாக்குகிறது. குறிப்பாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மமீவமே நிறுவனங்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குறிப்பாக சஅக மீன்பிடிப்பு நடைபெறும் இடங்களில் இது உண்மையே. அத்தகைய பகுதி முழுவதும் சஅக மீன்பிடிப்பை குறைப்பதற்கான ஒரு சாத்யம் என்னவெனில், அப்பகுதியில் பயன்படுத்தப்படும் ஒரு மமீவமே நிறுவனத்தின் முறைகளை மற்றவற்றின் முறைகளோடு இணைத்தலே ஆகும். உதாரணமாக அசூபாபகு, வமேஅமீவநி, வகிஅமீவநி, பொமீகுமெ மற்றும் தெகிஅமீவநிறுவனம், அட்லாண்டிக் பகுதியில் மீன்வளம் குறித்த துறைமுக நாடுகளின் முறைகளுக்காக நன்கு இணைக்கப்பட்ட கருத்தில் கொள்ளக்கூடிய அமைப்பு முறையைக் கொண்டுள்ளது.[133]

பிற பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் நுட்பங்கள் அவ்வாறே பசெதிந–சஅக செயல்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக 1999ல், ஆபபொ கழகத்தின் (ஆசியாபசிபிக் பொருளாதாரக் கழகம்) மீன்வள செயல்குழு "வசதிகளுக்கு ஏற்றபடி கொடிகளை மாற்றிக் கொள்வது" மற்றும் சஅக மீன்பிடிப்பு பற்றிய முக்கிய விஷயத்தில் பரிந்துரைகளைப் பின்பற்றுகிறது. இவை பிறவற்றிற்கு இடையே ஆபபொ கழக உறுப்பினரின் பொருளாதாரம் அந்நாட்டினர் மற்றும் நிறுவனங்களின் மீன்வளப்பாதுகாப்பு மற்றும் மேலாண்மை உரிமைகளை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளை கொண்ட கலன்களில் ஈடுபடுவதை கைவிடச் செய்ய பரிந்துரைக்கிறது. அத்தகைய நடவடிக்கைகளை தீவிரமாக நீக்குவதற்கு பன்னாட்டு ஒத்துழைப்பை அதிகரிக்கச் செய்கிறது. சஅக மீன்பிடிப்பின் வசதிக்கு ஏற்றபடி கொடிகளை மாற்றி பறக்கவிட்டு மீன்பிடிப்பில் ஈடுபடுவதில் உள்ளிட்ட அனைத்து வகை நடவடிக்கைகளையும் திறமையாகக் கையாள்வதற்கு முழுமையாக ஒத்துழைப்பதற்கு பரிந்துரைகள் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கின்றன.[134]

# 9 வளரும் நாடுகளின் தனிப்பட்ட தேவைகள்

வளரும் நாடுகள் குறிப்பாக, சிறு தீவு வளரும் நாடுகள் மற்றும் பிற வளரும் கடலோர நாடுகள் சஅக மீன்பிடிப்பின் பாதகமான விளைவுகளால் துயர் அடைகின்றன. சில பெரிய மீன்வளம் உள்ள வளரும் நாடுகளைத் தவிர, வளரும் நாடுகளில் உள்ள பெரும்பாலான அரசுகள் நிர்வகிக்கவும் மற்றும் வளர்ப்பு மீன்வளம் மீதான கட்டுப்பாடுகளை திறமையாக அமுல்படுத்துவதற்கும் தேவையான ஆதாரங்களையும் மற்றும் உள்கட்டமைப்பையும் பெற்றிருக்கவில்லை.

இதனால், சஅக மீன்பிடிப்போர், வளரும் நாடுகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். வளரும் கடலோர நாடுகளில் பதிவு செய்யப்பட்ட கலன்களை பயன்படுத்துகின்றனர் (உரிமம் பெறாது மீன்பிடிப்பு மேற்கொள்கின்றனர் அல்லது

---

131 அகவாஆபாகு, தெநீதுசூபாகு, மமீமு, அவெசூகு, பபகமீகு, அசூபாபகு இபெசூகு, வஅசாபாநி, வகிஅமீவநி, மற்றும் வபநஇமீநி, பிற மமீவமே நிறுவனங்களின் ஒருங்கிணைப்பிற்கு பங்கு பெறும் அல்லது திட்டங்கள் குறித்த அறிக்கை.

132 ஜே. ஸ்வான், உயர்குறிப்பு 113.

133 இக்கருத்து குறித்த மேல் விபரங்களுக்கு பார்க்கவும் ட்டி. லோபாச், உயர்குறிப்பு 34.

134 எம். கோமாட்சு, உயர்குறிப்பு 20.

உரிமத்திற்கான கட்டுப்பாடுகளை மீறுகின்றனர்) பிற நாடுகளில் பதிவு செய்யபட்ட கலன்களையும் பயன்படுத்துகின்றனர். (திருட்டு மீன்பிடிப்பு அல்லது சென்று அடைவதற்கான கட்டுப்பாடுகளை மீறி மீன்பிடித்தல்) வளரும் கடலோர நாடுகள் சந்திக்கும் சஅக மீன் பிடிப்பு பிரச்சினைகள் பல அவ்வாறே பிற நாடுகளுக்கும் பொதுவானதாகும். (உ.ம். மீன்பிடிப்பு பருவகாலம் முடிந்த பிறகு மற்றும் மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட பகுதிகளில் மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட மீன்பிடி சாதனங்களைப் பயன்படுத்துதல் பிடிக்கப்பட்ட மீன் விபரம் மற்றும் தற்செயலாக பிடிபடும் மீன்களின் விபரம் ஆகியவற்றை குறித்து தவறுதலாக அறிவிக்கை அனுப்புதல் மற்றும் அறிக்கை அனுப்பாது இருத்தல்.

பசெதிந–சஅக பிரிவு 5 நாடுகளை (பத்தி 85 மற்றும் 86) உவேஅமைப்பின் ஆதரவுடன், தொடர்புடைய பன்னாட்டு நிதி நிறுவனங்கள் நுட்பங்கள் ஆகியவற்றுடன் உரிய இடங்களில் பயிற்சி மற்றும் திறனை வளர்க்க கேட்டுக் கொள்கிறது. பசெதிந–சஅக கீழ் அவற்றின் கடமைகளை நாடுகள் எதிர்கொள்ள வளரும் நாடுகளுக்கு, நிதி, தொழில்நுட்பம் மற்றும் பிற உதவிகள் வழங்குவதற்கும் பரிசீலிக்க கேட்டுக் கொள்கிறது. கொடி நாடுகள், கடலோர நாடுகள் மற்றும் துறைமுக நாடுகள் என்ற நிலையில் அவற்றின் பணிகளையும் சேர்த்து பன்னாட்டு சட்டத்திற்குட்பட்டு, தொடர்புடைய பிற கடமைகளையும் ஆற்றுவதற்கும் உதவிட பரிசீலிக்கவும் கேட்டுக் கொள்கிறது. இத்தகைய உதவிகள் குறிப்பாக தேசீய செயல் திட்ட நடவடிக்கைகளை மேம்படுத்தி செயல்படுத்தும் நாடுகளுக்கு உதவிட வழங்கப்பட வேண்டும்.[135]

வளரும் நாடுகளுக்கு, பசெதிந–சஅக செயல்படுத்துவதற்காக வழிமுறைகளை பகுதிகளில் வழங்குவதே இந்த வழிகாட்டு முறைகளின் நோக்கமாகும். சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க மேற்கொள்ளும் முயற்சிகளில் வளரும் நாடுகளுக்கு உதவுவதற்காக மேற்கொள்ளப்படும் பிற உவே அமைப்பின் முயற்சிகளுக்கு கீழ்க்கண்டவை உதாரணமாகும்:

- பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பை செயல்படுத்துவதற்காக வளரும் நாடுகளுக்கு வழங்கப்படும் பன்னாட்டு – மண்டல உதவித் திட்டங்கள் (சார்திட்டம் இ: வளரும் நாடுகளுக்கு எச்சரிக்கை கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு பணிகளில் திறனை உயர்த்திக் கொள்வதற்காக உதவி வழங்குதல்)[136]

- சஅக மீன்பிடிப்பின் பிரச்சினைகளைத் தெரிவிக்க வளரும் நாடுகளுக்கு தனிப்பட்ட அறிவுரை வழங்குதல். 2001ல், உதாரணமாக உவே அமைப்பு இது குறித்து இந்திய அரசுக்கு பல்வகையான கருத்துக்களை வழங்கியது.

உவே அமைப்பு மீன் விதித் தொகுப்பு திட்டத்தின் கீழ் பரந்த அளவில் சஅக மீன்பிடிப்பை தெரிவிக்க குறையைப் பூர்த்தி செய்யும் மேலும் வலுப்படுத்தும் கூடுதலான நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. உத்தேசிக்கப்படும் விளைவு கிடைக்கக்கூடிய நிதியைப் பொறுத்தது. திறந்த பதிவேடுகளை நிர்வகிக்கும் நாடுகளின் செயல்பட்டறை மீன்வளம் தொடர்பான சான்றிதழ் மற்றும் ஆவணப்படுத்துதல், ஆகியவற்றிற்கான தேவைகளை

---

[135] ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை சமீபத்தில் அதன் உறுப்பினர்களை, வளரும் நாடுகளுக்கு, கண்காணிப்பை மேம்படுத்த, மீன்பிடிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்த மற்றும் மீன்பிடிப்பு பற்றிய கட்டுப்பாடுகளை அமுல்படுத்த உதவி வழங்கிட கேட்டுக் கொள்கிறது. பார்க்கவும் ஐநாபொச தீர்மானம் 55/8, அக்டோபர் 30 2000ல் பின்பற்றப்பட்டது.

[136] 1998 முதல் உவே அமைப்பிற்குள்/ நார்வே அரசின் கூட்டுறவு திட்டங்களில் இத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாஆகியநாடுகளுக்காக எக கண்காணிப்பில் பயிற்சி மண்டல அளவில் பயிற்சி மற்றும் செயல்பட்டறைகள் ஆகியவை 1998ல் மலேசியா கோலாலம்பூர் மற்றும் கோலாடெரிங்கானு பகுதிகளில் நடத்தப்பட்டன. 1999ல் ஓமன் மஸ்கட்டில் வடமேற்கு இந்திய பகுதி மற்றும் 2000ல் தாய்லாந்து சோங்க்காலாவில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்காக நடத்தப்பட்டது. மீன்வள மேலாண்மை மற்றும் சட்ட ஆலோசனை திட்டத்திற்கு முன்பாக இவை மேற்கொள்ளப்பட்டன. நார்வே பண உதவி செய்தது. இன்று பசெதிந–சஅகல் உள்ளவை மீது அறிவுரை மற்றும் உதவி வழங்கியது.

வரையறுக்கும் முயற்சிகளில் பங்கு கொள்ளுதல், மேலும் சஅுக மீன்பிடிப்பிற்கு வழங்கப்படும் காரணிகளை மேலும் ஆய்வு செய்தல் ஆகியவை இதனுள் அடங்கும்.[137]

மேலே குறிப்பிட்டவாறு பசெதிந–சஅுக பிரிவு 5 வளரும் நாடுகளுக்கான அத்தகைய உதவிகளை வழங்குவதை பிற பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் நுட்பங்கள் ஆதரிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது. உதாரணமாக உலக வங்கி மற்றும் பல மண்டல மேம்பாட்டு வங்கிகள் மீன்வளப் பிரிவில் வளரும் நாடுகளுக்கு உதவி வழங்கிட தற்சமயம் செயல்படும் பல திட்டங்களை வைத்துள்ளன. வளரும் நாடுகளின் எகக திறனை வளர்ப்பதற்ககன வகையில் அவற்றில் சில வடிவமைக்கப்பட்டுள்ளன.[138]

வளர்ந்த நாடுகளில் இருந்து வளரும் நாடுகளுக்கு நேரடியாக உதவிகள் வழங்கப்பட வேண்டும். அவ்வுதவியை வழங்குவதற்கான சாதனங்களில் ஒன்று மீன்வளத்தை சென்று அடைவதற்கான வழி குறித்த ஒப்பந்தமாகும். வளரும் நாடு அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் அதன் கலன்கள் மீன்பிடிக்க செல்வதற்கான வழி பெற்றமைக்கு பதிலாக, வளர்ந்த நாடு வளரும் நாட்டிற்கு சஅுக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட உதவி வழங்க வேண்டும்.

உதாரணமாக பிரிவு 4ல் மேலே குறிப்பிட்டபடி அமெரிக்கா மற்றும் குறிப்பிட்ட பசிபிக் தீவுகள் இரண்டிற்கும் இடையேயான ஒப்பந்தம் அமெரிக்கா பசிபிக் தீவுகளுக்கு எகக முயற்சிகளில் உதவி வழங்க வேண்டும். ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அமெரிக்க கலன்கள் கலன்களில் பார்வையாளர்களை ஏற்றிச் செல்வதற்கான முழுச் செலவினத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அனைத்து கடல் பயண ஏற்பாடுகளில் 20 சதவிகிதத்தை உள்ளடக்க வேண்டும் என்பதனை நிறைவேற்றுவதற்காக இவ்வாறு செய்ய வேண்டும். மிகவும் விரிவாக ஒப்பந்தம் பசிபிக் தீவுகள் அதன் மீன்வள ஆதாரங்களை மேம்படுத்திக் கொண்டு மிகுந்த பயனைப்பெறும் வகையில் அமெரிக்கா தொழில் நுட்பம் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்க வேண்டும் என குறிப்பிடுகிறது. மீன்பிடி தொடர்பான விதிகளை அமுல்படுத்தும் அவர்களது திறனை மேம்படுத்துவதும் இதில் அடங்கும்.

பிற பல வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகளுக்கு மீன்வளப்பிரிவில் உதவிகள் வழங்குகின்றன. மீன்பிடிக்கும் இடத்தை சென்று அடைவதற்கான வழி குறித்த ஒப்பந்தத்திற்கு அப்பாற்பட்டு உதவுகின்றன.[139] பசெதிந–சஅுக பின்பற்றுதலுடன், அத்தகைய உதவி தெளிவாக சஅுக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த நீக்க மேற்கொள்ளும் முயற்சிகளை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக வளரும் நாடுகளுக்கு அவற்றின் ஆதாரங்களைப் பங்கிட்டுக் கொள்வது அல்லது ஒன்று சேர்ப்பது குறிப்பாக முக்கியமானது ஆகும். அத்தகைய ஏற்பாடுகளுக்கான மாதிரிகள்,

---

137 சஅுக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க பகுதிகளில் தொடர்புள்ள சில உவே அமைப்பின் மீன்வளப்பிரிவின் திட்டங்களின் மேல் விபரங்களுக்கு பார்க்கவும். http: //www.fao.org/fi/projects/projects.asp.

138 உதாரணமாக கானா நாட்டில் தற்சமயம் உலக வங்கி திட்டம் செயல்பாட்டில் உள்ளது. பிறவற்றிற்கு இடையே எச்சரிக்கை கட்டுப்பாடு கண்காணிப்பு மற்றும் அமுல்படுத்துதல் ஆகியவற்றிற்கான திறனை மீன்வளத்தில் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேல் விபரங்களுக்கு கீழ்க்கண்ட வலைதளத்தைப் பார்க்கவும். http//www.4.worldbank.org/sprojects/Project.asp?pid=P000962. கண்காணிப்பு அமைப்புகளை மேம்படுத்துதல் பயிற்சி திறனை மேம்படுத்துதல் போன்றவை உள்ளிட்ட வளம் குன்றாத மீன் வளத்திற்கான அடிப்படைகளை அமைக்க பிற நாடுகளுக்கு உலக வங்கி உதவுகிறது.

139 பார்க்கவும் உ.ம். வளர்ந்து வரும் உலகின் மீன்வளத்திற்கான கனடா நாட்டு உதவி http://www.acdi- cida.gc.ca/cidaind.rest/ULUallDOCbyIDEN/C57D4C98574LD8IF 8525644500596337? open document. உயர் குறிப்பு 62ல் குறிப்பிட்டபடி பெக்ஸ்பெர்க் உவேஅ மூலமாக நிதி வழங்கியது. சார் மண்டல மீன்வள குழுவின் கண்காணிப்பு பணிகளின் ஒருங்கிணைப்பு பணிக்காக வழங்கப்பட்டது. ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் பிரான்சு (புது கலிடோனியா) ஆகிய ஒவ்வொன்றும் மமீமுகமையின் இதர உறுப்பினர்களுக்கு உதவி வழங்கின. குறிப்பாக இவை எ.க.க முயற்சிகளுக்காக வழங்கப்பட்டது. ஐரோப்பிய கூட்டமைப்பு மற்றும் அதன் உறுப்பினர் நாடுகள், ஜப்பான், நார்வே போன்ற பிற வளர்ந்த நாடுகள் உதவி வழங்கின. சஅுக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட உதவி செய்வதற்காக வளரும் நாடுகளுக்கு இவை வழங்கப்பட்டன.

இந்த வழிகாட்டு முறைகளின் பிரிவு 5.3ல் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மமீமு (அதன் பெரும்பாலான உறுப்பினர்கள் வளரும் நாடுகளில் உள்ளவர்களாவர்) மற்றும் மேற்கு ஆப்ரிக்காவில் உள்ள சார் மண்டல குழுவையும் உள்ளடக்கும்.

## 10 தேசீய செயல் திட்டங்கள் மற்றும் செயல்படுத்துதல் மீதான அறிக்கை

### 10.1 தேசீய செயல்திட்ட நடவடிக்கைகளின் வளர்ச்சி

பசெதிந–சஅக அனைத்து நாடுகளையும் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக ஆனால் பசெதிந–சஅக பின்பற்றிய பிறகு 3 ஆண்டுகளுக்கு மேற்படாமல் மார்ச் 2004க்குள் பசெதிந–சஅக நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேசெதி நடவடிக்கைகளை ஏற்படுத்தி பின்பற்ற கேட்டுக் கொள்கிறது. மீன்வள மேலாண்மை திட்டங்களிலும் மற்றும் வரவு செலவு திட்டங்களிலும் ஒருங்கிணைந்த பகுதியாக இதனைக் கருதி முழு அளவில் செயல்படுத்த வேண்டும். இந்த வழிகாட்டு முறைகளின் முக்கிய நோக்கம் இந்த தேசெதிநடவடிக்கைகள் மீதான வளர்ச்சி குறித்து தேசீய அரசுகளுக்கு பரிந்துரைகளை வழங்குதலே ஆகும்.

மேலே குறிப்பிட்டபடி பசெதிந–சஅக என்பது ஒரு சாதனப் பெட்டி ஆகும். சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட வெவ்வேறான பல சூழ்நிலைகளிலும் சாதனங்கள் கிடைக்கும். ஒவ்வொரு நாடும் பெட்டியில் உள்ள அனைத்து சாதனங்களையும் பொருத்தமாக பயன்படுத்த இயலாது. எனினும் முடிந்தவரை, ஒவ்வொரு நாட்டின் தேசெதிநடவடிக்கை அடிப்படையான சாதனம் ஒவ்வொன்றும் எவ்வாறு, அது சம்மந்தப்படும் மீன்வளத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதனைப் பரிசீலிக்க வேண்டும்.

பசெதிந–சஅக பத்தி 26ல் குறிப்பிட்டவாறு தேசீய திட்ட நடவடிக்கைகளைப் பின்பற்றியதிலிருந்து, ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் நாடுகள் அவற்றின் தேசீய செயல்திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துவதை ஆய்வு செய்ய வேண்டும். திறமையை அதிகரிக்கச் செய்ய சிக்கனமான முறைகளை அடையாளம் காண்பது ஆய்வின் நோக்கமாக இருக்க வேண்டும். பசெதிந–சஅக பகுதி 6ன் கீழ் உள்ள கடமைப்படி, உவே அமைப்பிற்கு அறிக்கை தர வேண்டியதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

### 10.2 தேசீய செயல்திட்ட நடவடிக்கைக்காக பரிந்துரைக்கப்படும் படிவங்கள்

குறிப்பிட்ட சூழ்நிலைக்கு பயன்தரும் வழியில் தேசெதிந ஒவ்வொரு நாடும் அமைத்துக் கொள்ளலாம். எனினும் தேசெதிநடவடிக்கையை அமைக்க எளிதான ஒரு வழி பசெதிந–சஅக குறிப்பை பின்பற்றுவதேயாகும். “அனைத்து நாடுகளின் பொறுப்புகள்” “கொடி நாடுகளின் பொறுப்புகள்” “கடலோர நாடுகளின் செய்முறைகள்” போன்ற தலைப்புகளை பயன்படுத்தலாம். ஒவ்வொரு தலைப்பிலும் சேர்க்கப்பட்டு உள்ள விஷயங்களை கீழ்க்கண்டபடி மேம்படுத்திக் கொள்ளலாம்:

1 அனைத்து நாடுகளின் பொறுப்புகள்

- **1.1** சஅக மீன்பிடிப்பு குறித்த தேசீய சட்டங்களும் கட்டுப்பாடுகளும் செய்முறைகளும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.
- **1.2** தேசீய சட்டடங்கள் கட்டுப்பாடுகள் மற்றும் செய்முறைகள் பன்னாட்டு வரைமுறைகளுக்கு ஏற்ப இருப்பதற்கு பொதுவான முறைகள் தேவைப்படுகின்றன.
- **1.3** தொடர்புடைய பன்னாட்டு சாதனங்களை செயல்படுத்த (1982 ஐக்கிய நாடுகளின் மரபு, 1993 உவே அமைப்பின் இணக்க ஒப்பந்தம் 1995 ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் நடத்தை விதித் தொகுப்பு மமீவமேநிறுவனங்கள் நிறுவுதல் தொடர்பான ஒப்பந்தங்கள்) மற்றும் /அல்லது இணக்கமான கூடியவரை இதுவரை செய்யப்படாத திட்டங்களாக இருக்க வேண்டும்.

1.4 அந்நாட்டினர் மீதான நாட்டின் கண்காணிப்பை மேம்படுத்த முறைகள் இருக்க வேண்டும்.
1.5 தேசீய மற்றும் சஅுக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களைக் கையாள்வதற்கு முறைகள் இருக்க வேண்டும்.
1.6 சஅுக மீன்பிடிப்பு தொடர்பான பொருளாதார உதவி மற்றும் மான்யங்களை நீக்க வேண்டும்.
1.7 எச்சரிக்கை கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பை மேம்படுத்த முறைகள் இருக்க வேண்டும்.

2 கொடி நாடுகளின் கடமைகள்

2.1 மீன்பிடிகலன்களுக்கான பதிவு செய்யும் அமைப்பை மேம்படுத்த முறைகள் இருக்க வேண்டும்

2.1.1 சிறிய கலன்களையும் சேர்த்து இயன்ற அளவிற்கு அதிகமான கலன்களுக்கு பதிவு செய்வதை விரிவுபடுத்த வேண்டும்.
2.1.2 பதிவினை வழங்குவதற்கு முன்பாக கலனை கட்டுப்படுத்தும் திறமையை உறுதி செய்ய முறைகள் இருக்க வேண்டும்.
2.1.3 பதிவு செய்யும் முறையில் ஈடுபட்டுள்ள தொடர்புடைய அரசு நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க முறைகள் இருக்க வேண்டும்.
2.1.4 கடற்பயண ஏற்பாடுகள் சஅுக மீன்பிடிப்பிற்கு வழி வகுக்காது என்பதனை உறுதி செய்திட முறைகள் இருக்க வேண்டும்.

2.2 மீன்பிடி கலன்களின் விபரங்களின் சுருக்கமாக பதிவை ஏற்படுத்துதல் வேண்டும்.

2.2.1 இந்த வழிகாட்டு முறைகளின் பெட்டி 2ல் உள்ள விபரங்களை சேர்க்க வேண்டும்.
2.2.2 உவே அமைப்பிற்கு ஆழ்கடலில் மீன்பிடிக்கும் கலன்களின் விபரங்களை சமர்ப்பிக்க ஏற்பாடுகள் வேண்டும்.

2.3 மீன்பிடிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்பாக மீன்பிடிக்க அங்கீகாரம் பெறுவதை கலன்களுக்கு தேவையாக்குவதற்கு முறைகள் இருக்க வேண்டும்.
2.4 போக்குவரத்து மற்றும் உதவிக்கான கலன்களை கட்டுப்படுத்துவதற்கு முறைகள் இருக்க வேண்டும்
2.5 பிற கட்டுப்பாட்டு முறைகள்

2.5.1 மீன்பிடிகலன்களின் நடவடிக்கைகளையும் அவை செல்லும் பாதைகளையும் அறிவதற்கு முறைகள் இருக்க வேண்டும் (தகவல் சேகரித்தல், அறிக்கைஅனுப்புதல், களஅ பார்வையாளர் திட்டம் போன்றவற்றையும் சேர்த்து)
2.5.2 ஆழ்கடலில் கலனில் ஏறிச் சென்று பொதுவான இசைவுடன் பார்வையிடுவது மூலம் ஆய்வுசெய்வதற்கான ஏற்பாடுகள் உள்ளிட்ட ஆழ்கடலில் கண்காணிப்பை மேம்படுத்துவதற்கான முறைகள் இருக்க வேண்டும்.
2.5.3 மீன்பிடிகலன்கள் மற்றும் மீன்பிடி சாதனங்கள் உரியவாறு அடையாளம் இடப்படுவதை உறுதி செய்வதற்கு முறைகள் இருக்க வேண்டும்.
2.5.4 சஅுக மீன்பிடிப்பிற்கு போதிய அளவில் கடுமையான தண்டனை விதிக்கப்படுதல் வேண்டும்.

3 கடலோர நாடுகளின் முறைகள்

3.1 தேசீய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடலோர நாடுகளின் கலன்கள் மேற்கொள்ளும் சஅுக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட கொடி நாடுகளின் முறைகளை சீராக்குதல் வேண்டும்.

3.2 தேசீய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அந்நிய கலன்களின் சஅக மீன்பிடிப்பை எதிர்த்து போராட வழியை அடைவதற்கான ஒப்பந்தங்களை பயன்படுத்துவதன் மூலமாக உள்ளதையும் சேர்த்து முறைகள் இருக்க வேண்டும்.

3.3 சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட பிற கடலோர நாடுகளின் ஒத்துழைப்பு இருக்க வேண்டும்

4 துறைமுக நாடுகளின் முறைகள்

4.1 சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட துறைமுக நாடுகளின் முறைகளை மேம்படுத்துதல்

4.1.1 துறைமுகத்தை அடைவதற்கான வழியை கோருவதற்கு அந்நிய மீன்பிடிகலன்கள் அறிவிக்கையை முன்னதாகவே அனுப்புதல் தேவைப்படுகிறது.

4.1.2 துறைமுகத்தில் மீன் பிடிகலன்களை ஆய்வு செய்வதை மேம்படுத்துவதற்கான முறைகள் இருக்க வேண்டும்.

4.1.3 துறைமுகத்தில் அந்நிய கலன் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டது அல்லது அதற்கு உதவியது என்பதற்கு சாட்சியம் இருப்பின் அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ள முறைகள் இருக்க வேண்டும். அவற்றுள் அத்துறைமுகத்தில் மீன்களை இறக்கவோ அல்லது கப்பலுக்கு மாற்றி அனுப்புவதற்கோ தடை செய்யப்படுவதும் உள்ளடங்கும்.

4.1.4 சஅக மீன்பிடிப்பில் ஈடுபடுவதாகவோ அல்லது அதற்கு உதவி செய்ததாகவோ சந்தேகப்படும் அந்நிய கலனுக்கு துறைமுகத்திற்குள் வர அனுமதி மறுக்கப்பட வேண்டும்.

4.2 சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட பிற துறைமுக நாடுகளுடன் ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.

4.3 மமீவமே நிறுவனங்களால் பின்பற்றப்படும் துறைமுக நாட்டின் முறைகளை செயல்படுத்த வேண்டும்.

5. பன்னாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்தை தொடர்பான நடவடிக்கைகள்

5.1 மமீவமே நிறுவனங்களால் பின்பற்றப்படும் சந்தை தொடர்பான நடவடிக்கைகளை செயல்படுத்துதல்.

5.1.1 சஅக மீன் பிடிப்பில் ஈடுபடுவதாகவோ அல்லது அதற்கு உதவி செய்ததாகவோ சந்தேகப்படும் கலன்கள் குறித்த விபரங்களை மமீவமே நிறுவனங்களுக்கு வழங்குதல் வேண்டும்.

5.1.2 சஅக மீன்பிடிப்பில் ஈடுபடுவதாகவோ அல்லது அதற்கு உதவி செய்ததாகவோ மமீவமே நிறுவனங்களால் அடையாளம் காணப்படும் கலன் மற்றும் / அல்லது நாடுகளிலிருந்து மீன் மற்றும் மீன் பொருட்களை இறக்குமதி செய்வதை தடை செய்வதற்கு முறைகள் வேண்டும்.

5.1.3 மமீவமே நிறுவனங்களால் பின்பற்றப்பட்ட பிடிக்கப்பட்ட மீன் விபரங்களை ஆவணப்படுத்துதல் மற்றும் சான்றிடுதல் ஆகியவற்றைச் செயல்படுத்த முறைகள் வேண்டும்

5.2 பிற சந்தை தொடர்பான முறைகளை செயல்படுத்துதல்

5.2.1 மீன் மற்றும் மீன் பொருட்களை அடையாளம் காண்பதற்கு அனுமதிக்கும் சந்தையின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த முறைகள் வேண்டும்.

5.2.2 மீன்வளத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளைக் கொண்ட நிறுவனங்கள்

மற்றும் தனியார்களுக்கு சஅக மீன்பிடிப்பு பற்றிய விபரங்களை பரவ செய்தலுக்கான முறைகள் வேண்டும்.

5.2.3 சஅக மீன்பிடிப்பின் மூலம் பெறப்பட்ட மீன் மற்றும் மீன் பொருட்களை சந்தைப்படுத்துவது அல்லது வர்த்தகம் செய்வது விதிகளை மீறிய செயல் என்று குறிப்பிடும் வகையில் சட்டம் இயற்றுதல் வேண்டும்.

6. பசெதிந–சஅக மமீவமே நிறுவனங்கள் மூலம் செயல்படுத்துதல்.

6.1 சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட மமீவமே நிறுவனங்கள் பின்பற்றும் முறைகளை செயல்படுத்த நடவடிக்கைகளை சீராக்குதல்

6.2 மமீவமேநிறுவனங்களை வலுப்படுத்துவதற்கான கருத்துருக்கள்

6.3 மமீவமே நிறுவனம் பின்பற்றுவதற்காக கூடுதலான இணக்க நுட்பங்களுக்கான கருத்துருக்கள்

6.4 மமீவமே நிறுவனங்கள் மூலமாக சிறந்த முறையில் விபரங்கள் சேகரித்தல் மற்றும் பரிமாற்றம் சிறந்த முறையில் செய்திட கருத்துருக்கள்

6.5 மமீவமே நிறுவனங்கள் மூலமாக எச்சரிக்கை கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பை வலுப்படுத்த கருத்துருக்கள்.

6.6 மமீவமே நிறுவனங்கள் மூலமாக சுருக்கமான துறைமுக நாட்டின் அமைப்புக்கான கருத்துருக்கள்

6.7 மமீவமே நிறுவனங்களின் ஆவணப்படுத்துதல் மற்றும் சான்றிடுதல் திட்டங்களை மேம்படுத்த கருத்துருக்கள்

6.8 மமீவமே நிறுவனங்கள் மூலமாக கடற்பயண ஏற்பாடுகளை ஒழுங்கு படுத்த கருத்துருக்கள்

6.9 மமீவமே நிறுவனங்கள் மூலமாக உறுப்பினர் அல்லாதவரின் சஅக மீன்பிடிப்பு தொடர்வதை தெரிவிக்க கருத்துருக்கள்

6.10 மமீவ மே நிறுவனங்களுக்கும் அவற்றிற்கு இடையே மற்றும் பிற பன்னாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை ஏற்படுத்த கருத்துருக்கள்

7 வளரும் நாடுகளுக்கான தனிப்பட்ட தேவைகள்

7.1 பல்வகை நுட்பங்கள் மூலமாக வளரும் நாடுகளுக்கு உதவிடும் முயற்சிகளில் பங்கு கொள்ளுதல்

7.2 வளரும் நாடுகளுக்கு இருவகை உதவிகள்

## 10.3 செயல்படுத்துவது மீதான உவே அமைப்பிற்கு அனுப்பப்படும் அறிக்கைகளுக்கு பரிந்துரைக்கப்படும் படிவங்கள்

பசெதிந–சஅக பத்தி 87ல் வழங்கப்பட்டவாறு நாடுகள் மற்றும் மமீவமே நிறுவனங்கள் அவர்களால் செயல்படுத்தப்படும் பசெதிந–சஅக மற்றும் தேசெதி நடவடிக்கை முன்னேற்றம் குறித்து உவே அமைப்பிற்கு தெரிவிக்க வேண்டும். இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தை விதித் தொகுப்பு மீது உவே அமைப்பிற்கு அறிவிக்கப்படும் அறிக்கையின் பகுதியாக இது அமையும். உவேஅ அதன் முறையில் அந்த அறிக்கைகளை கால முறைப்படி வெளியிடும்.

தேசெதிநடவடிக்கையுடன் ஒவ்வொரு நாடு மற்றும் மமீவமே நிறுவனம், குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்ப சிறப்பான முறையில் பொருந்தும் வகையில் இந்த அறிக்கைகளை அமைக்க சுதந்திரம் பெற்றுள்ளது. எனினும் பசெதிந–சஅக வின் குறிப்புப்படி “அனைத்து நாடுகளின் பொறுப்புகள்” “கொடி நாட்டின் பொறுப்பு” மற்றும் “கடலோர நாட்டின் முறைகள்” போன்ற தலைப்புகளை தேசெதிநடவடிக்கைகளுக்கான மேலே குறிப்பிட்டபடி குறிப்புகளைப் பின்பற்றினால், இந்த அறிக்கைகளை ஆய்வு செய்வது எளிதாகும்.

## 11 பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான சரிபார்ப்பு பட்டியல்

**<u>அனைத்து நாடுகளுக்கும்</u>**

- 1982 ஐக்கிய நாடுகளின் மரபு, 1993 உவேஅ இணக்க ஒப்பந்தம் மற்றும் 1995 ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் ஆகியவற்றில் இதுவரை அங்கம்வகிக்காத அனைத்து நாடுகளும் அவற்றில் அங்கம் பெறுதல் வேண்டும்.
- நடத்தை விதித் தொகுப்பு மற்றும் அதன் தொடர்பான பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கைகளை அனைத்து நாடுகளும் முழுமையாக செயல்படுத்த வேண்டும்.
- நாடுகள், அந்த மமீவமே நிறுவனத்தில் உறுப்பினர்களாக வேண்டும். அல்லது குறைந்த அளவிலேனும் அந்த மமீவமே நிறுவனங்கள் பின்பற்றும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை தங்களது கலன்களுக்கு பயன்படுத்த வேண்டும். அல்லது அத்தகைய பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணக்கமான முறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- மீன் இருப்புகளின் ஒருங்கிணைந்த பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கு தேவையான புதிய மமீவமே நிறுவனங்களை நிறுவுவதற்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும்.
- பசெதிந–சஅக பத்தி 25ல் வழங்கப்பட்டவாறு அனைத்து நாடுகளும் சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க தேசீய செயல் திட்டங்களை வகுக்க வேண்டும்.
- சஅக மீன்பிடிப்பு தொடர்பாக தற்போது செயல்பாட்டில் உள்ள சட்டம் கட்டுப்பாடு மற்றும் செய்முறைகளை முழுமையாக அனைத்து நாடுகளும் ஆய்வு செய்ய வேண்டும்.
- பிற நாட்டின் மீன்வள பாதுகாப்பு மற்றும் மேலாண்மை சட்டங்களை தங்கள் நாட்டினர் மீறுவது அல்லது மமீவமே நிறுவனங்கள் பின்பற்றும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை பலவீனப்படுத்துவது ஆகியவை சட்டத்தை மீறும் செயல் என தெரிவிக்க வேண்டும்.
- மீன்பிடிகலன்களுக்கு தங்கள் நாட்டினர் மறு கொடியிடுதலையோ அல்லது மமீவமே நிறுவனம் பின்பற்றும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை பலவீனப்படுத்துவதாக நாடுகளில் மமீவமே நிறுவனத்தால் அடையாளம் காணப்பட்ட கலன்களை பதிவு செய்வதையோ நாடுகள் கைவிடுதல் வேண்டும்.
- தங்கள் நாட்டினர் சஅக மீன் பிடிப்பின் விளைவுகளைப் பற்றி அறிந்துள்ளனர் மற்றும் சஅக மீன்பிடிப்பில் ஈடுபடுவோருடன் தங்கள் நாட்டினர் வர்த்தகம் செய்வதை கைவிடுதல் வேண்டும் என்பனவற்றை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்து நாடுகளும் சஅக மீன்பிடிப்பிற்கு அனைத்து பொருளாதார உதவிகளையும், மான்யங்களையும் நிறுத்த வேண்டும்.
- மீன்வளம் தொடர்பான எச்சரிக்கை கட்டுப்பாடு கண்காணிப்புக்கான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்புக்காக பன்னாட்டு வலைப்பணியில் பங்கு கொள்வதை அனைத்து நாடுகளும் பரிசீலிக்க வேண்டும்.

**<u>கொடி நாடுகள்</u>**

- இயன்றவரை சிறிய பல மீன்பிடி கலன்களையும் சேர்த்து மீன்பிடிகலன்கள் பதிவு செய்யப்படுவது கொடி நாட்டிற்கு தேவையாகிறது.

- கொடிநாடு, ஒரு கலனை பதிவு செய்வதற்கு முன்பாக அக்கலனின் மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான வழிகளைக் கொண்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

- சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக வரலாறு உடைய கலனையும் "கொடி மாற்றுதலில்" ஈடுபடுவதாக தோன்றும் கலன்களையும் பதிவு செய்வதை பொதுவாக கொடி நாடுகள் தவிர்க்க வேண்டும்.

- ஒரு கொடி நாடு அதன் கொடியைப் பறக்கவிடும் உரிமை பெற்ற கலன்களின் சுருக்கமான விபரங்களை இந்த வழி காட்டு முறைகளின் பெட்டி 2ல் குறிப்பிடப்பட்டவற்றை பராமரிக்க வேண்டும்.

- ஒரு கொடி நாடு அதன் கலன்கள் விரைவு அங்கீகாரம் இன்றி மீன்பிடிப்பதை தவிர்க்க வேண்டும். உரிய முறையில் அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் பதிவு செய்யப்பட்டு மீன்பிடிகலன்களின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட கலன்களுக்கு மட்டுமே அத்தகைய அங்கீகாரம் வழங்கப்படும்.

- பொறுப்பான அரசு நிறுவனங்களுக்கு இடையே மீன் பிடிக்க கலன்களை பதிவு செய்து அங்கீகாரம் வழங்குவதை கொடிநாடு ஒருங்கிணைக்கும்.

- ஒரு கலன் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்டால் கொடிநாடு அதன் பிற கலன்கள் அக்கலனிலிருந்து மீன்களை மாற்றி அனுப்புவதற்கு அல்லது அக்கலனுக்கு மறுவிநியோகம் செய்வதற்கு அல்லது பிற வழிகளில் அக்கலனுக்கு உதவி செய்வதற்கு முன்வராது என்பதனை (பேரிடர் போன்ற மனிதாபிமான நோக்கங்கள் தவிர்த்து) கொடிநாடு உறுதி செய்ய வேண்டும்.

- கொடிநாடு கப்பலுக்கு மாற்றி ஏற்றும் முறைகளை நெருங்கி கண்காணிக்க வேண்டும்.

    - கடலில் மீன்களை கப்பலுக்கு மாற்றி அனுப்புவதை முழுமையாக தவிர்ப்பதை கொடி நாடுகள் பரிசீலிக்க வேண்டும்.

    - குறைந்த அளவிலேனும் கொடிநாடுகளுக்கு கடலில் மீன்களை கப்பலுக்கு மாற்றி அனுப்புவதற்கு முன்கூட்டியே அங்கீகாரம் பெறுவது தேவையாகிறது. பசெதிந–சஅக பத்தி 49ல் உள்ளபடி விபரங்களை கலன்கள் அறிவிப்பதும் தேவையாகிறது.

- ஆழ்கடலில் எந்தப்பகுதியிலும் பயன்படுத்தப்படும் மீன்வளப் பாதுகாப்பை தங்கள் கலன்கள் பலவீனப்படுத்தாது என்பதனை கொடிநாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

    - கொடிநாட்டால் வழங்கப்படும் விரைவு அங்கீகாரம் இல்லாது ஆழ்கடலில் கலன்கள் மீன்பிடிக்கக் கூடாது.

    - கலன் இயக்கப்படும் இடத்தில், ஆழ்கடலில் பயன்படுத்தப்படும் மீன்வளப்பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை கலன் பலவீனப்படுத்தாது என உறுதி செய்யாதவரை, கொடிநாடு அத்தகைய அங்கீகாரத்தை வழங்காது.

- கொடிநாடு, ஆழ்கடலில் அதன் கலன்களின் மீன்பிடி நடவடிக்கைகளை கண்காணிக்க இயலவில்லை என்றால் அதன் சார்பாக பிற நாடுகளை அக்கலன்களில் ஏறி ஆய்வு செய்வதற்கு அங்கீகாரம் அளிக்க பரிசீலிக்க வேண்டும்.

- கொடிநாடுகள் அதன் ஆழ்கடல் கலன்களின் மீன்பிடிப்பு பற்றிய விபரங்களை உவே அமைப்பிற்கு சமர்ப்பிக்க வேண்டும். தவறாது அவற்றை அன்றைய தேதி வரை சரிப்படுத்த வேண்டும்.

**கடலோர நாடுகள்**

- கடலோர நாடு அதன் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் மீன்பிடிக்கும் அனைத்து கலன்களின் இருப்பிடத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும்.
    - கலன்கள் செல்லும் பாதையை அறியும் சாதனங்களில் ரேடியோ மூலம் இருப்பிடத்தை அறிவிக்க வேண்டிய கடமை, அடிக்கடி கலன்களின் இருப்பிடத்தை குறிப்பிட்டு தினசரிக் குறிப்பு புத்தகத்தை பரமாரிக்கும் கடமை ஆகியவையும் அடங்கும்.
    - கலன்களின் மீன்பிடிப்பைப் பார்வையிடவும் மற்றும் கலன்களின் இருப்பிடத்தை கவனமாக பார்ப்பதற்கும் கலன்களில் தனிப்பட்ட பார்வையாளர்களை ஏற்றி அனுப்புவதற்கான திட்டங்களை கடலோர நாடுகள் பரிசீலிக்க வேண்டும்.
    - கலன்கள் மீன்பிடிக்கும் பகுதிகளில் வழக்கமான கண்காணிப்பை மேற்கொள்வதற்காக கடலோர நாடுகள் அவர்களின் திறமையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.
    - தங்கள் எல்லையில் மீன்பிடிக்கும் கலன்கள் கலன் எச்சரிக்கை அமைப்பை படிப்படியாக பயன்படுத்துவது கடலோர நாடுகளுக்கு தேவையாகிறது.
- கடலோர நாடுகள் அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன்பிடிக்கும் ஒவ்வொரு கலனிலும் பிடிக்கப்பட்ட மீன்களை தீர்மானிக்கும் திறமை கொண்டதாக இருக்க வேண்டும்.
    - அத்தகைய கலன்கள் அவற்றின் மீன்பிடிப்பு நடவடிக்கைகளைப் பற்றி வழக்கமான இடைவெளியில் அறிக்கை அனுப்புவது கடலோர நாடுகளுக்கு தேவையாகிறது. மீன் பிடிக்க அங்கீகாரம் பெறுவதற்கு அதுவே ஒரு நிபந்தனையாகவும் அமையும்.
    - அத்தகைய அறிக்கைகளுக்கு கஎஅ ரேடியோ மற்றும் தொலையச்சு போன்றவை நேரத்தை உணர்ந்து செயல்படுவதற்கான முறைகளாகும்.
    - தினசரி நாட்குறிப்பு புத்தகங்கள் மூலமாக பிடிக்கப்பட்ட மீன்களின் விபரத்தை அறிவிக்கும் கடமையும் பொதுவானதே
- அறிவிக்கப்பட்ட விபரங்களின் தவறின்மையை சரிபார்க்கக் கூடிய திறமை உடையதாக கடலோர நாடு இருக்க வேண்டும். அறிக்கை தர தவறினால் அல்லது தவறான தகவல்களை அறிவித்தால் தண்டனை தர வேண்டும். இதற்கான அணுகுமுறைகளில் துறை முகத்தில் ஆய்வு மற்றும் தனிப்பட்ட பார்வையாளர்கள் கலனில் ஏற்றி அனுப்புவது போன்றவை அடங்கும்.
- கடலோர நாடு அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகள் விளக்கமாக கூறப்பட்டு வரைபடத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன என்பதனை உறுதி செய்ய வேண்டும்.
- அந்நிய கலன்கள் மீன்பிடிக்கும் இடத்தை சென்று அடைவதை கடலோர நாடு கவனத்துடன் கண்காணிக்க வேண்டும்.
    - சஅக மீன்பிடிப்பு வரலாறு உடைய கலன்களுக்கு சென்று அடையும் அனுமதி அளிப்பதை கடலோர நாடு தவிர்க்க வேண்டும்.
    - கடலோர நாடு அதன் எல்லையில் மற்றொரு நாட்டில் பதிவு செய்யப்பட்ட கலனுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்குவதற்கு முன்பாக கொடி நாட்டின் எல்லைக்கு அப்பால் சென்று மீன்பிடிக்க குறிப்பான அங்கீகாரத்தை கொடிநாட்டிடமிருந்து அக்கலன் பெற்றுள்ளதா என்பதனை சரிபார்க்க வேண்டும்.

- கடலோர நாடு அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன்பிடிக்க அந்நியக்கலனை கொடிநாடு அவ்வாறு கோரிக்கை கொடுத்தால் மட்டும் அல்லது தீர்மானிகப்பட்ட மீன்பிடிப்பை நடத்த அதற்கு ஏதும் எதிர்ப்பு இல்லை என்று தெரிவித்தால் மட்டுமே சிறப்பாக அனுமதிக்க வேண்டும்.
- கடலோர நாடு அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன்பிடிக்க அங்கீகாரம் வழங்கிய அந்நிய நாட்டு கலன்களின் விபரத்தைப் பதிவு செய்து பராமரிக்க வேண்டும்.
- மீன்பிடிக்கும் இடத்தை சென்று அடைவதற்கு அனுமதி வழங்கப்பட்ட அந்நிய கலன்கள் கள அமைப்பை பயன்படுத்துவது கடலோர நாட்டிற்கு தேவையாகிறது உடனடியாக கலனின் இருப்பிடத்தை அறியவும் மற்றும் வழக்கமாக விபர அறிக்கைகளுக்கும் இது தேவையாகிறது.
- அந்நிய கலன்கள் அல்லது அவற்றில் குறிப்பிட்ட சதவிகிதம் தனிப்பட்ட பார்வையாளர்களை ஏற்றிச் செல்ல வேண்டிய தேவையை கடலோர நாடு பரிசீலிக்க வேண்டும்.

• வழங்கப்பட்ட பகுதியில் கடலோர நாடு, மீன்பிடிக்கும் இடத்தைச் சென்று அடைவதற்கான வழிக்காக இணைந்த அல்லது பொதுவான விதிகளை ஏற்படுத்துவது நன்மை பயக்குமா என்பது பற்றி பரிசீலிக்க வேண்டும்.

**<u>துறைமுக நாடுகள்</u>**

- துறைமுகத்தை அடைவதற்கான அனுமதி கோரும் அந்நிய மீன்பிடிகலன் துறைமுக நாட்டிற்கு குறைந்தது கீழ்க்கண்டவற்றையாவது வழங்க வேண்டும்:
    - துறைமுகத்தில் நுழைவதை போதிய அளவில் முன்னதாகவே அறிவித்தல்;
    - மீன்பிடிக்க பெற்றுள்ள அங்கீகாரத்தின் நகல்; மற்றும்
    - அவற்றின் மீன்பிடிப்பு பயண ஏற்பாடுகள் மற்றும் கலனில் உள்ள மீன்களின் விபரம்.
- மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகளில் தொடர்பு கொண்ட அதுவும் குறிப்பாக போக்குவரத்து கலன்கள் உள்ளிட்ட பிற அந்நிய நாட்டுகலன்கள் துறைமுகத்தில் நுழைவதற்கு முன்பாக இதனைப் போன்ற தகவல்களை வழங்க வேண்டும்.
- கலன்களில் ஆய்வு நடத்துவதற்கு நாடு திறமை பெற்றுள்ள இடங்களில் துறைமுகத்தை அடைவதற்கு மட்டுமே அந்நிய நாட்டு மீன் பிடிகலன்களுக்கு நாடு அனுமதி வழங்கும். அத்தகைய ஆய்வுகளில், துறைமுக நாடு கீழ்க்கண்ட தகவல்களையாவது சேகரிக்க வேண்டும். இவற்றை கொடி நாட்டிற்கு வழங்க வேண்டும். பொருந்தும் இடங்களில் தொடர்புடைய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்களுக்கும் வழங்க வேண்டும்:
    - கலனின் கொடிநாடு மற்றும் அடையாள விபரங்கள்;
    - பெயர் தேசீயம், கலனின் தலைவர் மற்றும் மீன்பிடிப்பில் ஈடுபடும் தலைவரின் தகுதி;
    - மீன்பிடி சாதனங்கள்;
    - கலனில் உள்ள பிடிக்கப்பட்ட மீன்களின் விபரம் சிற்றின வகை, பிடிக்கப்பட்ட இடம், அமைப்பு மற்றும் அளவு;
    - பொருந்தக்கூடிய இடங்களில், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் மமீவமே நிறுவனங்களுக்குத் தேவைப்படும் தகவல்கள்; மற்றும்

- ➢ பிடிக்கப்பட்டவையின் மொத்த அளவு மற்றும் கப்பலுக்கு மாற்றி அனுப்பப்பட்டவற்றின் அளவு.

- நாடு அதன் துறைமுகத்தில் உள்ள ஒரு கலன் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டது அல்லது அதற்கு உதவி செய்தது என்று சந்தேகிப்பதற்கு போதுமான காரணங்கள் இருந்தால் துறைமுக நாடு:

    - ➢ அதன் துறைமுகத்தில் கலன் மீன்களை இறக்கவோ அல்லது மீன்களை கப்பலுக்கு மாற்றி அனுப்பவோ அனுமதிக்க கூடாது;

    - ➢ இதனை உடனடியாக கொடி நாட்டிற்கு தெரிவிக்க வேண்டும்; மற்றும்

    - ➢ சந்தேகப்படும் சஅக மீன்பிடிப்பு மற்றொரு நாட்டின் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் அல்லது மமீவமே நிறுவனத்திற்குட்பட்ட கண்காணிப்பிற்குட்பட்ட பகுதியில் நடைபெற்றால் அந்த நாட்டிற்கு மற்றும் அல்லது மமீவமே நிறுவனத்திற்கு உடனடியாக இத்தகவலைத் தெரிவிக்க வேண்டும்.

- சந்தேகப்படும் சஅக மீன்பிடிப்பு துறைமுக நாட்டின் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில் நடைபெற்றால் அந்த நாடு கடலோர நாடாக செயல்பட்டு அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் விசாரணை மேற்கொள்ள வேண்டும். பொருந்தும் எனில், சஅக மீன்பிடிப்பிற்கு பொறுப்பானவர்கள் மீது வழக்கு தொடர்ந்து தண்டிக்க வேண்டும்.

- சந்தேகப்படும் சஅக மீன்பிடிப்பு, துறைமுகநாட்டின் எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதியில் நடைபெற்றால் துறைமுக நாடு கலன் மீதும் மற்றும் அதனை இயக்குபவர்கள் மீதும் கொடி நாட்டின் விருப்பம் அல்லது அதன் கோரிக்கைபடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ஒத்துழைத்து குறிப்பாக மமீவமே நிறுவனம் மூலமாக செயல்படும் துறைமுக நாடுகள் சஅக மீன்பிடிப்பு மூலம் பிடிக்கப்பட்ட மீன்களை இறக்குவதையோ அல்லது கப்பலுக்கு மாற்றி அனுப்புவதையோ தடுப்பதற்கான திட்டங்களைப் பின்பற்ற வேண்டும் மற்றும் அல்லது வலுப்படுத்த வேண்டும்.

- மமீவமே நிறுவனங்கள் மூலமாக செயல்படும் துறைமுக நாடுகள், திட்டங்களை வலுப்படுத்த வேண்டும். உறுப்பினர் அல்லாதவர் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக *அடையாளம் காணப்பட்ட* உறுப்பினர் அல்லாதவரின் கலன்கள் (மற்றும் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டிருந்த பொழுது உண்மையாகவே பார்க்கப்பட்ட கலன்கள் மீதும்)

**<u>பன்னாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்தை தொடர்பான நடவடிக்கைகள்</u>**

- சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க நாடுகள் பன்னாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்தை தொடர்பான நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும். உவநிறுவனத்தால் நிறுவப்பட்ட கடமைகள் கொள்கைகள் மற்றும் உரிமைகளுக்கு இணங்க புரிந்து கொண்டு பயன்படுத்தப்பட வேண்டும். நியாயமான முறையில் வெளிப்படையாக வேறுபாடற்ற நிலையில் செயல்படுத்தப்பட வேண்டும்.

- சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்ட கலன்களை மமீவமே நிறுவனங்கள் அடையாளம் காண வேண்டும். அடையாளம் காணப்பட்ட கலன்கள் மீண்டும் மீண்டும் குறிப்பிட்ட ஒரு நாட்டின் கொடியை பறக்கவிடும் இடங்களில், மமீவமே நிறுவனம் அந்த கொடி நாட்டை அடையாளம் காண வேண்டும். அக்கலனை அதன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர கொடி நாட்டை விரைவு படுத்த வேண்டும்.

- நாடுகள் அதன் எல்லைக்குள் மமீவமே நிறுவனத்தால் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்ட கலன்களால் பிடிக்கப்பட்ட மீன்களை வர்த்தகம் செய்வதையோ அல்லது ஏற்றுமதி செய்வதையோ தடுப்பதற்கு பன்னாட்டு சட்டங்களுக்கு இணங்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

- இதனை செயல்படுத்தும் நாடுகளுக்கு உதவிட மமீவமே நிறுவனங்கள் மீன்பிடிப்பிற்கான சான்று மற்றும் வர்த்தகத்தை ஆவணப்படுத்தும் திட்டங்களை பின்பற்ற மற்றும் அல்லது வலுப்படுத்த வேண்டும்.

- நாடுகள் அதன் எல்லையில் மீன்பிடிப்புடன் தொடர்புடைய தனியார் மற்றும் நிறுவனங்களுக்கு சஅக மீன்பிடிப்பு விபரங்களை தெரிவிக்க வேண்டும். சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டவர்கள் மற்றும் அதற்கு உதவி செய்த பிறருடன் வர்த்தகத் தொடர்பு கொள்ளாதிருக்க அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

- சஅக மீன்பிடிப்பு மூலம் பெறப்பட்ட மீன், மீன் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வது வாணிபம் நடத்துவது போன்றவை சட்டத்திற்கு முரணான செயல் என்பதற்கான சட்டத்தை நாடுகள் அமுல் படுத்த வேண்டும்.

**<u>பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கை—சஅக மமீவமே நிறுவனங்கள் மூலம் செயல்படுத்துதல்.</u>**

- சஅக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த நீக்க உதவிட மமீவமே நிறுவனங்கள் செய்ய வேண்டியவை:
  - ➢ சஅக மீன்பிடிப்பு தொடர்பான தகவல்களை சேகரித்து பரப்ப வேண்டும்;
  - ➢ சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களை அடையாளம் காணவேண்டும். அவற்றிற்கு எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டும்;
  - ➢ சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களின் நாடுகளை அடையாளம் காண வேண்டும். அந்த நாடுகளை கலன்களின் அத்தகைய நடவடிக்கைகளை சரிசெய்து கொள்ள வலியுறுத்தி விரைவு படுத்த வேண்டும்;
  - ➢ தொடர்புடைய பகுதிகளில் மீன்பிடிப்பில் ஈடுபடும் தேசீய மற்ற கலன்கள் மீது நடவடிக்கை எடுக்க உறுப்பினர்கள் கேட்டு கொள்ள வேண்டும்
  - ➢ மீன்பிடிப்பு பயண ஏற்பாடுகள் சஅக மீன்பிடிப்பிற்கு வழி வகுக்காது என்பதனை உறுதி செய்யும் விதிகளைப் பின்பற்ற வேண்டும்
  - ➢ துறைமுகத்தில் ஆய்வு திட்டங்கள் கடலில் மீன்களை ஏற்றி அனுப்புவது மீதான கட்டுப்பாடுகள் மற்றும் உறுப்பினர்களின் துறைமுகங்களில் தொடர்புடைய பகுதியில் உறுப்பினர் அல்லாதவர்களின் கலன்கள் பிடித்த மீன்களை இறக்க இயலாது என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும்.
  - ➢ மீன்பிடிப்பு சான்றிதழ் மற்றும் / அல்லது வர்த்தகத்தை ஆவணப்படுத்தும் திட்டங்கள் ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும்.
  - ➢ சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட பிற சந்தை தொடர்பான நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

- மமீவமே நிறுவன உறுப்பினர்கள் மமீமே நிறுவனத்திடம் அதன் பணிகளை மேற் கொள்வதற்கு தேவையான ஆதாரங்கள் உள்ளன என்பதனை உறுதி செய்ய வேண்டும்.

- மீன்வளம் பற்றிய உண்மையான ஆர்வமுடைய அல்லது மீன்வள தொடர்புடைய உறுப்பினர் அல்லாதவர்கள் உறுப்பினர்களாக சேர்வதை ஊக்கப்படுத்த வேண்டும். குறைந்தது மமீவமே நிறுவனத்தின் பணிகளில் உறுப்பினர் அல்லாதவர்களின் ஒத்துழைப்பை எளிதாக்குவதை மேம்படுத்த வேண்டும்.

- சஅுக மீன்பிடிப்பு தொடர்பான தீர்மானங்கள் உரியவாறு இணக்கமான முறையில் எடுக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்வதற்கு மமீவமே நிறுவனங்கள் தங்களது முடிவு மேற்கொள்ளும் முறைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

- மமீவமே நிறுவனங்கள் பின்பற்றும் முறைகளுக்கு மீன்வள விபரங்களை அறிவிக்கும் கடமையையும் சேர்த்து இணக்கமாக இல்லாத உறுப்பினர்களின் மீன்பிடி கலன்கள் தங்களது கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் மீன்வள ஆதாரங்களை அடைவதை மமீவமே நிறுவனங்கள் கட்டுப்படுத்த வேண்டும் அல்லது அதற்கான வழிவழங்குவதை மறுக்க வேண்டும்.

- சஅுக மீன்பிடிப்போர் மீது போதுமான அளவில் இணக்கமான முறையில் தண்டனை விதிக்க மமீவமே நிறுவனங்கள் அதன் உறுப்பினர்களை ஊக்குவிக்க வேண்டும்.

- சஅுக மீன்பிடிப்பில் ஈடுபடும் அல்லது அதற்கு உதவிடும் கலன்களைப் பற்றிய விபரங்களை சேகரித்து மற்றும் பரப்புவதை சீர்படுத்துவதில் மமீவமே நிறுவனம் மையமாக செயல்பட வேண்டும். உதாரணமாக மமீவமே நிறுவனங்கள் செய்ய வேண்டியவை:

  - சஅுக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக நம்பப்படும் கலன்களின் பட்டியலை மேம்படுத்த வேண்டும். அவ்வாறே அவைகளின் கண்காணிப்பிற்குட்பட்ட பகுதிகளில் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ள கலன்களின் பட்டியலையும் மேம்படுத்த வேண்டும்; மற்றும்

  - மீன்பிடிப்பில் விதி மீறல்கள் மற்றும் வழக்கு தொடர்பு குறித்த விபரங்கள் பற்றிய தகவல் அமைப்பு மையங்களை மேம்படுத்த வேண்டும்.

- தற்சமயம் பயன்பாட்டில் உள்ள கள அமைப்பிலிருந்து வேறுபடுவதை உகந்தது ஆக்குவதற்கும் மற்றும் அதனை விரிவு படுத்துவதற்கும் மமீவமே நிறுவனம் செயல்படுதல் வேண்டும். மமீவமே நிறுவனங்கள் மூலமாக நாடுகள் செய்யக் கூடியவை:

  - பொதுவான விபர படிவங்களை மேம்படுத்துதல் தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்வதற்கான ஏற்பாடுகள் களஅமைப்பின் சிறந்த தொழில் நுட்பத்தை பராமரிப்பதற்கான வரையறைகள் ஆகியவற்றை மேம்படுத்துதல்; மற்றும்

  - திறமையான எக கண்காணிப்பிற்கு தேவையான விபரங்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதை எளிதாக்கும். அதே நேரத்தில் விபரங்களின் நம்பகத்தன்மையின் நேர்மையை பாதுகாத்திட உதவும் வகையில் அமைப்பின் விபரங்களைப் பெறும் நடு நிலையாளர்களை தோற்றுவித்தல்.

- மமீவமே நிறுவனங்கள் பசெதிந–சஅுக பத்தி **80.8**ல் குறிப்பிட்டுள்ளவாறு ஆழ்கடலில் மீன்பிடிகலனில் ஏறிச் சென்று ஆய்வு செய்வதற்கான திட்டங்களை மமீவமேநி பரிசீலிக்க வேண்டும்.

- இதுவரை இவ்வாறு செய்யாத மமீவமே நிறுவனங்கள் மீன்பிடி கலன்களுக்கான துறைமுக நாட்டின் நடவடிக்கைகளுக்காக சுருக்கமான அமைப்பை நிறுவிடுவதைப் பரிசீலிக்க வேண்டும்.

## 12. பார்வைக்குறிப்புகள்


அக்நியு, டி.ஜே. 2000. தென்கடலில் பல்மீனுக்காக சட்டத்திற்குப் புறம்பான கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு மற்றும் அகவா சூபாகுழுவின் மீன்பிடிப்பை ஆவணப்படுத்தும் திட்டம். *கடல்வளக் கொள்கை*, 24:361–374

அக்ரோவ், ட்டி. 2000. வளரும் நாடுகளின் சிறு தீவுகளில் சட்டத்திற்குப்புறம்பான மீன்பிடிப்பு மற்றும் மீன்வள சட்டங்களை அமுல்படுத்துதல்:பசிபிக் தீவுகளின் அனுபவம். *கடல்வளம் மற்றும் கரையோர சட்டம் குறித்த பன்னாட்டு சஞ்சிகை*, 15 (1):37–64.

அக்ரோவ், ட்டி. 2000. சட்டதிற்குப்புறம்பான கட்டுப்பாடற்ற மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு: வளரும் நாடுகளுக்கான பரிசீலனைகள். ஆஸ்திரேலியா, சிட்னியில், மே 15–19, 2000ல் உவே அமைப்பின் ஒத்துழைப்புடன்ஆஸ்திரேலிய அரசு நடத்திய சட்டத்திற்குப் புறம்பான, கட்டுப்பாடற்ற மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு மீதான வல்லுநர் கலந்தாய்வு குழுவிற்கு தயாரிக்கப்பட்ட பின்னணி ஆவணங்களின் ஒரு தொகுதி.

பால்டன், டி. 1999. கடல்வளத்தில் "தவறு செய்பவர்களைக் கையாளுதல்". மீன்வள மேலாண்மை கூட்டத்தில் சொற்பொழிவு நார்வேயின் பொருளாதார பட்டபடிப்பு பள்ளி, பெரிஜன், நார்வே, 20 மே 1999.

ப்ரே. கே. (பதி) 2000. சட்டத்திற்குப்புறம்பான கட்டுப்பாடற்ற அறிவிக்கப்படாத (சஅக) மீன்பிடிப்பு. ஆஸ்திரேலியா, சிட்னியில் மே 15–19, 2000ல் உவே அமைப்பின் ஒத்துழைப்புடன் ஆஸ்திரேலிய அரசு நடத்திய சட்டத்திற்குப்புறம்பான கட்டுபாடற்ற மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு மீதான வல்லுநர் கலந்தாய்வு குழுவிற்கு தயாரிக்கப்பட்ட பின்னணி ஆவணங்களின் ஒரு தொகுதி.

பன்னாட்டு சுற்றுப்புறச் சூழ்நிலைக்கான சட்டத்திற்கான மையம். 2000. பசிபிக் மீன் இருப்புகளை நிர்வகிக்க மற்றும் பாதுகாக்க முடிவுகள் மேற்கொள்வதற்காக தேர்ந்தெடுக்கும் உரிமைகளை மறு ஆய்வு செய்தல். மேற்கு மற்றும் மத்திய பசிபிக் பகுதியில் பெரிதும் நகரும் மீன் இருப்புகளை பாதுகாக்கவும் மற்றும் நிர்வகிக்கவும் நடத்தப்பட்ட பல் நோக்கு உயர்மட்ட கூட்டத்தின் மூன்றாவது அமர்வில் கட்டுரை படிக்கப்பட்டது.

சேவ்ஸ், எல். ஏ. 2000. சட்டத்திற்குப் புறம்பான கட்டுப்பாடற்ற அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு: சஅக மீன்பிடிப்பை தெரிவிக்க உவநிறுவனத்திற்கு இணக்கமான நடவடிக்கைகள். ஆஸ்திரேலியா, சிட்னியில் மே 15–19, 2000ல் உவே அமைப்பின் ஒத்துழைப்புடன் ஆஸ்திரேலிய அரசு நடத்திய சட்டத்திற்குப் புறம்பான கட்டுப்பாடற்ற மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு மீதான வல்லுநர் கலந்தாய்வு குழுவிற்கு தயாரிக்கப்பட்ட பின்னணி ஆவணங்களின் ஒரு தொகுதி.

டேவிஸ், ஜே.எம்.2000. சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட எச்சரிக்கை, கட்டுப்பாடு கண்காணிப்பு மற்றும் கலன் எச்சரிக்கை அமைப்பு தேவைகள் ஆஸ்திரேலியா, சிட்னியில் மே 15–19, 2000ல் உவே அமைப்பின் ஒத்துழைப்புடன் ஆஸ்திரேலிய அரசு நடத்திய சட்டத்திற்குப் புறம்பான கட்டுப்பாடற்ற மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு மீதான வல்லுநர் கலந்தாய்வு குழுவிற்கு தயாரிக்கப்பட்ட பின்னணி ஆவணங்களின் ஒரு தொகுதி.

எடிசன், டபிள்யு.2000. சஅக மீன்பிடிப்பை தெரிவிக்க சாதனங்கள்: தற்போதைய சட்டநிலை ஆஸ்திரேலியா, சிட்னியில் மே 15–19, 2000ல் உவே அமைப்பின் ஒத்துழைப்புடன் ஆஸ்திரேலிய அரசு நடத்திய சட்டத்திற்குப் புறம்பான கட்டுப்பாடற்ற மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு மீதான வல்லுநர் கலந்தாய்வு குழுவிற்கு தயாரிக்கப்பட்ட பின்னணி ஆவணங்களின் ஒரு தொகுதி.

எடிசன், டபிள்யு., ப்ரீஸ்டோன், டி. மற்றும் குட்மண்ட்ஸ் டோட்டிர், இ. 2001. *வளம்குன்றாத மீன்வளத்திற்காக சட்டமியற்றுதல்: 1993 உவே அமைப்பின் இணக்க ஒப்பந்தம் மற்றும் 1995*

*ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள்*. வாஷிங்டன், டி.சி. உலக வங்கி. 150 பக்.

உவேஅ. 1995. பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பு. ரோம்.

உவேஅ. 1998. உவே அமைப்பின் பொறுப்பார்ந்த மீன்வளத்திற்கான தொழில் நுட்ப வழிகாட்டு முறைகள். மீன்பிடிப்பு நடவடிக்கைகள்: கலன் எச்சரிக்கை அமைப்புகள். ரோம்

உவேஅ. 1999. மீன்வளத் தகவல்கள் சேகரிப்புக்கான சட்டமுறைகள் (உவேஅ மீன்வள சுற்றறிக்கை எண். 953). ரோம்.

உவேஅ. 1999. பிடிக்கப்பட்ட மீன்களின் தகவல்களின் வழக்கமான சேகரிப்புக்கு வழிகாட்டு முறைகள். உவே அமைப்பின் மீன்வள தொழில்நுட்ப அறிக்கை 382. ரோம்.

உவே அ. 1999. ஒடுகயிறு மீன்பிடிப்பில் கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைக் குறைக்க பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை, சுறா மீன்கபைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை, மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை நிர்வகித்தலுக்கான பன்னாட்டு திட்ட செயல்நடவடிக்கை. ரோம்.

உவேஅ. 1999. மீன்வளக்குழுவின் 23வது அமர்வு அறிக்கை ரோம், இத்தாலி, 15–19 பிப்ரவரி 1999. ரோம்.

உவேஅ. 2000. உலக மீன்வளம் மற்றும் உயிரின வளர்ப்பு நிலை. ரோம்.

உவேஅ 2001, மீன்வள புள்ளியியல் மீதான ஒருங்கிணைப்பு குழுவின் 19வது அமர்வு அறிக்கை. ரோம்.

உவேஅ. 2001. சட்டத்திற்குப்புறம்பான கட்டுப்பாடற்ற மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு மீதான வல்லுநர் கலந்தாய்வு அறிக்கை. ரோம்.

உவேஅ. 2001. உவே அமைப்பு மற்றும் உவே அமைப்பைச் சாராத மண்டல மீன்வள அமைப்புகள் அல்லது ஏற்பாடுகள் குறித்த இரண்டாவது கூட்ட அறிக்கை. ரோம்.

உவேஅ. 2002. மீன்பிடிப்பு சான்றிதழ் குறித்த இணக்கம் மீதான மண்டல மீன்வள மேலாண்மை அமைப்புகளின் வல்லுநர் கலந்தாய்வு அறிக்கை. ரோம்.

கிரின்பீஸ். 2001. கடற்கொள்ளை மீன்பிடிப்பு: மேற்கு ஆப்ரிக்காவை கொள்ளையிடுதல். பன்னாட்டு மீன்வள சட்டத்திற்கான வழிகாட்டியில் கிடைக்கும் கட்டுரை, www.oceanlaw.net.

கொமாட்சு, எம். 2000. சூரை மீன்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்யும் திறனை குறைக்கும் மீன்பிடி கலன்களுக்கு எதிராக ஒருங்கிணைந்த நடவடிக்கையின் முக்கியத்துவம். ஆஸ்திரேலியா, சிட்னியில் மே 15–19, 2000ல் உவே அமைப்பின் ஒத்துழைப்புடன் ஆஸ்திரேலிய அரசு நடத்திய சட்டத்திற்குப் புறம்பான கட்டுப்பாடற்ற மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு மீதான வல்லுநர் கலந்தாய்வு குழுவிற்கு தயாரிக்கப்பட்ட பின்னணி ஆவணங்களின் ஒரு தொகுதி.

குயும்லங்கன், பி. 2000. சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட தேசீய சட்டப்படியாக தேர்வு செய்யும் உரிமைகள். ஆஸ்திரேலியா, சிட்னியில் மே,2000ல் உவே அமைப்பின் ஒத்துழைப்புடன் ஆஸ்திரேலிய அரசு நடத்திய சட்டத்திற்குப் புறம்பான கட்டுப்பாடற்ற மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு மீதான வல்லுநர் கலந்தாய்வு குழுவிற்கு தயாரிக்கப்பட்ட பின்னணி ஆவணங்களின் ஒரு தொகுதி.

லுாடர்பச்ட், எச். (பதி). 1948. *ஒப்பன் ஹெய்ம்ஸ் பன்னாட்டு சட்டம், 7வது பதிப்பு. தொகுதி. 1* .லண்டன்.

லோபக், ட்டி. 2000. சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட துறைமுக நாடு பின்பற்றும் முறைகள் ஆஸ்திரேலியா, சிட்னியில் மே 15–19. 2000ல் உவே அமைப்பின் ஒத்துழைப்புடன் ஆஸ்திரேலிய அரசு நடத்திய சட்டத்திற்குப் புறம்பான கட்டுப்பாடற்ற மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு மீதான வல்லுநர் கலந்தாய்வு குழுவிற்கு தயாரிக்கப்பட்ட பின்னணி ஆவணங்களின் ஒரு தொகுதி.

மார்ட்டின், டபிள்யு., லாட்ஜ், எம்.., கேடி, ஜே. மற்றும் ம்பாட்வோ, கே. 2000. *மீன்வளத்தை சென்று அடைவதற்கான ஒப்பந்தத்திற்காக கலந்துபேச ஒரு கையேடு.* வாஷிங்டன், டி.சி. உலகவன விலங்கு நிதி.

மேக்டார்மன், ட்டி. எல். 2000. மண்டல துறைமுக நாட்டின் கட்டுப்பாடு ஒப்பந்தங்கள்: பன்னாட்டு சட்டம் பற்றிய சில பிரச்சினைகள். *கடல் மற்றும் கரையோர சட்ட சஞ்சிகை* 5: 207–225.

மியேக், ப்பி. 2001. மீன்பிடிப்பு சான்றிதழ் மற்றும் மண்டல மீன்வள அமைப்புகளுக்கு இடையே சான்றிதழை இணக்கமாக்குவதற்கு தகுந்த தன்மை. உவேஅ மற்றும் உவே அமைப்பைச் சாராத மண்டல மீன்வள அமைப்புகள் அல்லது ஏற்பாடுகள் குறித்த கூட்டத்தில் படிக்கப்பட்ட கட்டுரை, லாஜோல்லா, 9–11 சனவரி 2002.

ஸ்மித், ஏ. 2000. கலன் எச்சரிக்கை அமைப்புகள். கடல் சட்டம் மற்றும் கொள்கைக்கான வருடாந்திர கூட்டத்தில் படிக்கப்பட்ட கட்டுரை, வர்ஜீனியா பல்கலைக்கழகம் மற்றும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு தற்போதுள்ள மீன்வள பிரச்சினைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, ரோம், மார்ச் 16–17, 2000

ஸ்வான், ஜே. 2000. சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட பின்பற்றப்படும் மற்றும் செயல்படுத்தப்படும் நடவடிக்கைகளில் மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் தேசீய மீன்வள நிர்வாகத்தின் பங்கு. ஆஸ்திரேலியா, சிட்னியில் மே 15–19, 2000ல் உவே அமைப்பின் ஒத்துழைப்புடன் ஆஸ்திரேலிய அரசு நடத்திய சட்டத்திற்குப் புறம்பான கட்டுப்பாடற்ற மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு மீதான வல்லுநர் கலந்தாய்வு குழுவிற்கு தயாரிக்கப்பட்ட பின்னணி ஆவணங்களின் ஒரு தொகுதி.

**பிற்சேர்க்கை I**

## சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க பன்னாட்டு செயல்திட்டநடவடிக்கைகள்

### I. முன்னுரை

1. பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பிற்குட்பட்டு முழுமையான அதன் குறிக்கோளான வளம்குன்றாத மீன்வளத்திற்காக உலக மீன்வளத்தில் சட்டத்திற்குப்புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடு அற்ற சஅுக மீன்பிடிப்பு பிரச்சனை அதிகமாவதோடு ஆபத்தானதும் ஆகும். பிடிக்கப்படும் அனைத்து மீன்வளத்தின் இருப்பை நிர்வகித்தலும் பாதுகாப்பதிலுமான முயற்சிகளை சஅுக மீன்பிடிப்பு வளமற்றதாக்கிவிடும். சஅுக மீன்பிடிப்பை எதிர்த்து நிற்கும் பொழுது, மேலாண்மை நோக்கங்களை அடைவதில் தேசீய மற்றும் மண்டல நிறுவனங்கள் மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் தவறி விடுகின்றன. இத்தகைய சூழ்நிலை குறுகிய மற்றும் நீண்டகால சமூகபொருளாதார வாய்ப்புகள் ஆகிய இரண்டையும் இழப்பதற்கு வழிநடத்துகிறது. மேலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் உணவுப்பாதுகாப்பு ஆகியவற்றின் மீது எதிரிடையான பயனை ஏற்படுத்துகின்றன. ச.அ.க மீன்பிடிப்பு மீன்வளத்தின் வீழ்ச்சிக்கு வழிநடத்தும் அல்லது ஏற்கனவே குறைந்துவரும் மீன்வளத்தின் இருப்பினை மீண்டும் அமைப்பதற்கான முயற்சிகளை ஆபத்தான வழியில் வளமற்றதாக்கி விடும். அரசியல் உறுதி, முதன்மை, திறன், உறுதி செய்ய அல்லது இணக்கம் தெரிவிக்க மற்றும் அவற்றை செயல்படுத்த ஆதாரங்கள் ஆகியவை இன்மையால் சஅுக மீன்பிடிப்பை தெரிவிக்கும் தற்போதைய பன்னாட்டு சாதனங்கள் திறன் பெற்றிருக்க வில்லை.

2. உவே அமைப்பின் மீன்வளக்குழுவின் (மீவகு) 23 வது அமர்வு பிப்ரவரி 1999ல் சஅுக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த நீக்க தேவையை தெரிவித்தது வசதிக்கு ஏற்றவாறு கொடிகளை பறக்கவிடும் மீன்பிடிகலன்கள் உள்ளிட்ட சஅுக மீன்பிடிப்பு அதிகமாகி வருவதையும் தெரிவித்த விபரம் பற்றி குழு கவலையுற்றது. அதன் பிறகு, மார்ச் 1999ல் மீன்வளம் மீதான உவே அமைப்பின் செயல்கூட்டத்தில் பன்னாட்டு சட்டத்தின் கீழ் நாடுகளின் உரிமை மற்றும் கடமைகளுக்கு கேடு செய்யாதவகையில் உவே அமைப்பு வசதிக்கு ஏற்றவாறு கொடிகளைப்பறக்கவிடும் மீன்பிடிகலன்கள் உள்ளிட்ட சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத அனைத்து வகையான மீன்பிடிப்பையும் திறமையுடன் சமாளிக்க உலக அளவில் செயல் திட்டங்களை அமைக்க உள்ளதாக அறிவித்தது. நாடுகள் உவே அமைப்பு தொடர்புடைய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் பன்னாட்டு கடல்வள அமைப்புகள் (பகஅ) போன்ற பிற தொடர்புடைய பன்னாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்பு முயற்சிகளுடன் விதித்தொகுப்பின் பிரிவு 4ல் உள்ளவாறு இது அமைக்கப்படும். ஆஸ்திரேலியா, சிட்னியில் 2000ம் ஆண்டு மே 15 முதல் 19 வரை உவே அமைப்பின் ஒத்துழைப்புடன் ஆஸ்திரேலியா அரசு சட்டத்திற்குப் புறம்பான, அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பு மீதான வல்லுநர் கலந்தாய்வு ஒன்றை ஏற்பாடு செய்தது. இதனைத்தொடர்ந்து 2000ம் ஆண்டு அக்டோபர் 2 முதல் 6 வரை சட்டத்திற்குப்புறம்பான, அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பு மீது உவே அமைப்பின் தொழில்நுட்பக்கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் 2001 பிப்ரவரி 22 முதல் 23 வரை தொழில்நுட்பக்கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. பிப்ரவரி 23, 2001ல் சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பைத்தடுக்க, நீக்க, நிறுத்த பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கையின் வரைவு ஏற்றுக் கொள்ளப்பட்டது. மீன்வளக்குழுவின் 24வது அமர்வின் பரிசீலனைக்கும் பயனான பின்பற்றுதலுக்கும் அறிக்கை சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. மார்ச் 2, 2001ல் மீன்வளக்குழு பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்தது. அவ்வாறு ஒப்புதல் அளிக்கும் பொழுது பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கையை திறமையாக செயல்படுத்திட அனைத்து வழிகளையும் மேற்கொள்ளும்படி அனைத்து உறுப்பினர்களையும் குழு கேட்டுக்கொண்டது.

## II. சஅக மீன்பிடிப்பின் நோக்கம் நிலை மற்றும் பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கை

3. இந்த ஆவணத்தில்

3.1 சட்டத்திற்குப்புறம்பான மீன்பிடிப்பு குறிப்பிடும் நடவடிக்கைகள்:

3.1.1 ஒருநாட்டின் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பில், அந்த நாட்டின் அனுமதி இன்றியோ அல்லது அதன் சட்டம் மற்றும் விதிகளுக்கு முரணாகவோ தேசீய அல்லது அந்நிய மீன்பிடிகலன் மீன்பிடிப்பை மேற்கொள்வது

3.1.2 தொடர்புடைய மண்டல நிறுவனங்களுக்குட்பட்ட நாடுகளின் கொடிகளைப் பறக்கவிடும் மீன்பிடிகலன்கள் அந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அந்த நாடுகள் கட்டுப்படும் அல்லது பன்னாட்டு சட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள தொடர்பு உடைய பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு முரணாக மீன்பிடிப்பை மேற்கொள்வது.

3.1.3 தொடர்புடைய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்களின் பன்னாட்டு கடமைகள் தேசீய சட்டங்கள் ஆகியவற்றையும் சேர்த்து அந்த நாடு மேற்கொண்டிருப்பவைக்கு முரணாக மீன்பிடிப்பை மேற்கொள்வது.

3.2 அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு குறிக்கும் மீன்பிடிப்பு நடவடிக்கைகள்

3.2.1 தேசீய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை முரண்பாடுகள் குறித்து தொடர்பு உடைய தேசீய அங்கீகாரம் பெற்றவரிடம் அறிவிக்காதது அல்லது தவறுதலாக அறிவிப்பது.

3.2.2 நிறுவனத்தின் அறிவிக்கும் முறைகளுக்கு முரணாக தொடர்புடைய மண்டல மீன்வள நிறுவனத்தின் பொறுப்பில் உள்ள பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மீன்பிடிப்பை அறிவிக்காதது அல்லது தவறுதலாக அறிவிப்பது.

3.3 கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பு குறிக்கும் மீன்பிடிப்பு நடவடிக்கைகள்:

3.3.1 மீன்பிடி உரிமையோ அல்லது அந்த நிறுவனத்திற்கு உட்படாத நாட்டின் கொடியை பறக்க விட்டுக் கொண்டோ அல்லது தேசீயம் இன்றியோ அந்த நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு முரணாகவோ அல்லது பொருத்தம் இல்லாத முறையிலோ தொடர்புடைய மண்டல மேலாண்மை நிறுவனத்திற்குட்பட்ட பகுதிகளில் மீன்பிடிப்பை மேற்கொள்வது.

3.3.2 பொருத்தமான பாதுகாப்பு மற்றும் மேலாண்மை இல்லாத மீன் இருப்புகளுக்காகவும் அல்லது அத்தகைய பகுதிகளிலும் மீன்பிடிப்பை மேற்கொள்வது. பன்னாட்டு விதிகளின் கீழ் கடல்வாழ் உயிரின ஆதாரங்களைப்பாதுகாக்கும் நாட்டின் பொறுப்பிற்கு முரணான வகையில் அத்தகைய மீன்பிடிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது.

3.4 பத்தி 3.3ல் குறிப்பிடாதபடி சில கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பு நிகழக்கூடும். இது பொருந்தக்கூடிய பன்னாட்டு விதிகளுக்கு முரணாக இருக்காது பன்னாட்டு செயல் திட்டநடவடிக்கையில் (பசெதிந) சிந்திக்கக் கூடிய முறைகளின் பயன்பாடும் இதற்கு தேவையற்றது ஆகும்.

4. பசெதிந தன்னார்வமானது உவே அமைப்பின் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தைப்பிரிவு 2(ஈ) ன் கீழ் சிந்தித்தவாறு அதன் எல்லைக்குட்பட்டு இது விரிவாக்கப்பட்டுள்ளது.

5. பசெதி நடவடிக்கையின் பயன்பாடு மற்றும் விளக்கத்திற்கு உவே அமைப்பின் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பு குறிப்பாக பிரிவுகள் 1.1, 1.2, 1.3, மற்றும் 3.2 பொருந்துகிறது.

பிற பன்னாட்டு சாதனங்களின் தொடர்புக்கும் பொருந்துகிறது. விதித்தொகுப்பில் குறிப்பிட்டவாறு மீன்பிடிக்கும் உரிமைக்கும் பொருத்தம் உடையதாக பசெதிந கருதப்படுகிறது. மீன்வளத்தில் குறிப்பான பிரச்சனைகளுக்கு தீர்வு தருகிறது. நாடுகளின் நிலைக்கு பிற வகையில் கேடு விளைவிக்கும் ஏதும் அதனுள் இல்லை.

6. இந்த ஆவணத்தில்

(அ) நாடு என்பதின் குறிப்பு அவற்றின் ஆற்றலுக்குட்பட்ட பொருட்களில் மண்டல பொருளாதார ஒருங்கிணைப்பையும் உள்ளடக்கும்.

(ஆ) மண்டலம் என்பது பொருத்தமான இடங்களில் சார் மண்டலத்தையும் உள்ளடக்கும்.

(இ) மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனம் என்பது பொருத்தமான இடங்களில் மீன்வளப்பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை நிர்வகிக்கும் ஆற்றலைக் கொண்ட அரசுகளுக்கு இடையேயான மீன்வள நிறுவனம் அல்லது ஏற்பாடுகளைக் குறிக்கும்.

(ஈ) பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் பன்னாட்டு சட்டங்களின் விதிகளுக்கு உட்பட்டு பயன்படுத்தப்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடல்வாழ் உயிரினங்களின் சிற்றின வகைகளை பாதுகாப்பது என்பதனைக் குறிக்கும்.

(உ) 1982 ஐநா நடைமுறை (மரபு) என்பது டிசம்பர் 10 1982 ம் வருடத்திய ஐக்கிய நாடுகளின் கடல்சட்டத்தின் மீதான நடைமுறையைக்குறிக்கும்.

(ஊ) 1993 உவே அமைப்பின் இணக்க ஒப்பந்தம் என்பது ஆழ்கடல் மீன்பிடி கலன்கள் பன்னாட்டு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணங்குதலை ஊக்குவிக்கும் 1993 ம் ஆண்டு நவம்பர் 24 ல் உவேஅ அங்கீகரித்த ஒப்பந்தத்தைக் குறிக்கும்.

(எ) ஐநா மீன் இருப்பு ஒப்பந்தம் என்பது இடம்பெயரத மற்றும் பெரிதும் இடம்பெயரும் மீன் இருப்பை பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல் தொடர்பான 1982ம் ஆண்டு டிசம்பர் 10 கடல்சட்டத்தின் மீதான ஐக்கிய நாடுகளின் நடைமுறையினை செயல் படுத்துவதற்கான ஒப்பந்தத்தைக்குறிக்கும்

(ஏ) நடத்தை விதித்தொகுப்பு என்பது உவே அமைப்பின் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பைக் குறிக்கும்.

7. அனைத்து நாடுகளுக்கும் நடத்தை விதித்தொகுப்பை செயல்படுத்த இந்த ஆவணம் மேலும் ஒரு பொறுப்பாக அமையும்.

## III. நோக்கம் மற்றும் கோட்பாடுகள்

8. பசெதி நடவடிக்கையின் நோக்கம் சஅக மீன்பிடிப்பை அனைத்து நாடுகளுக்கும் பரந்த திறமையான வெளிப்படையான முறைகளை வழங்கி தடுத்து, நிறுத்தி, நீக்குதலே ஆகும். இதற்காக பன்னாட்டு சட்டங்களுக்கு இணங்கி நிறுவப்பட்ட பொருத்தமான மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மூலமாக செயல் படுதல் இதனுள் அடங்கும்.

9. சஅக மீன்பிடிப்பை தடுக்க. நிறுத்த, நீக்க பசெதிந கீழ்க்கண்ட கோட்பாடுகளையும், திட்டங்களையும் உருவாக்கியுள்ளது. நடத்தை விதித்தொகுப்பு பிரிவு 5 க்கு இணங்கி வளரும் நாடுகளின் தனித்தேவைகளுக்குப்போதிய கவனம் வழங்கப்படுகிறது.

9.1 <u>பங்குபெறுதல் மற்றும் ஒத்துழைத்தல்</u> : முழுதும் திறமை உடையதாக்க அனைத்து நாடுகளும் நேரடியாக பிற நாடுகளின் ஒத்துழைப்புடன் அல்லது மறைமுகமாக உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மூலமாக பசெதி நடவடிக்கையை செயல் படுத்தும் வெற்றிகரமான செயல்பாட்டிற்கு முக்கியமானது நெருக்கமான திறமையான ஒத்துழைப்பு கலந்தாய்வு மற்றும் சஅுக மீன்பிடிப்பைக் குறைக்க நாடுகளுக்கு இடையேயும் மற்றும் பொருத்தமான மண்டல மற்றும் உலக நிறுவனங்களுக்கும் இடையேயும் விபரங்களை பகிர்ந்து கொள்ளுதலும் ஆகும். தொழிற்சாலை, மீனவசமுதாயம் அரசு சாரா நிறுவனங்கள் போன்றவை உள்ளிட்ட அனைத்து பங்குதாரர்களின் முழுப்பங்குபெறுதல் ச.அ.க மீன்பிடிப்பில் போராட ஊக்கப் படுத்தப்படுதல் வேண்டும்.

9.2 <u>படிப்படியாக செயல்படுத்துதல்</u>: சஅுக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த நீக்குவதற்கான முறைகள் விரைவில் இயலும் வகையில் படிப்படியாக தேசீய செயல் திட்டங்களையும் மண்டல மற்றும் உலகளாவிய நடவடிக்கைகளையும் ப.செ.தி நடவடிக்கைக்கு இணங்க செயல்படுத்துதலை அடிப்படையாகக்கொண்டு இருக்க வேண்டும்.

9.3 <u>விரிவான மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறை</u>: சஅுக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த நீக்குவதற்கான முறைகள், பிடிக்கப்படும் அனைத்து மீன்வளத்திற்கும் பாதிப்பு ஏற்படுத்துபவைபற்றி தெரிவிக்க வேண்டும். இத்தகைய அணுகுமுறையை மேற்கொள்ளும் பொழுது கடலோர நாட்டின் முறைகள், துறைமுக நாட்டின் முறைகள், சந்தை தொடர்பான முறைகள் ஆகியவற்றை உள்ளடக்கி, பன்னாட்டு சட்டத்தின் எல்லைக்குட்பட்டு இருக்கும் அனைத்தையும் பயன்படுத்தி கொடிநாட்டின் முதன்மையான பொறுப்பை நிர்மாணிக்கும் முறைகளை மேற்கொள்ள வேண்டும். நாடுகள் சஅுக மீன்பிடிப்பில் ஈடுபடவோ அல்லது அதற்கு உதவிடுதலோ கூடாது என்பதனை உறுதி செய்ய வேண்டும். பொருத்தமான இடங்களில் இம்முறைகள் அனைத்தையும் பயன்படுத்த நாடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஒருங்கிணைந்த முறையில் இம் முறைகள் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய ஒத்துழைக்க வேண்டும். தேசீய செயல்திட்ட நடவடிக்கை சஅுக மீன்பிடிப்பால் ஏற்படும் அனைத்து பொருளாதார சமூக சுற்றுச்சூழல் பாதிப்புகளையும் தெரிவிக்க வேண்டும்.

9.4 <u>பாதுகாத்தல்</u> : பாதுகாத்தல், மீன் இருப்பை நீண்ட காலத்திற்கு வளம் குன்றாத வகையில் பயன்படுத்துதல் சுற்றுச்சூழலைப்பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு முரண்பாடு இல்லாத வகையில் சஅுக மீன்பிடிப்பை தடுக்கும் நீக்கும் நிறுத்தும் முயற்சிகள் இருக்க வேண்டும்.

<u>9.5</u> <u>வெளிப்படை</u> : விதித்தொகுப்பு பிரிவு 6.13க்கு இணங்க ப.செ.தி.ந வெளிப்படையான முறையில் செயல் படுத்தப்பட வேண்டும்.

<u>9.6</u> <u>வேறுபாடின்மை</u> : எந்த ஒரு நாட்டிற்கோ அல்லது மீன்பிடிகலனுக்கோ எதிராக அமைப்பிலோ அல்லது நடப்பிலோ எந்த வித வேறுபாடும் இன்றி ப.செ.தி.ந அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.

## IV. சஅுக மீன்பிடிப்பைத்தடுக்க நிறுத்த நீக்க முறைகளை செயல் படுத்துதல்

### அனைத்து நாடுகளின் பொறுப்புகள்

***பன்னாட்டு சாதனங்கள்***

10. சஅுக மீன்பிடிப்பைத்தடுக்க நிறுத்த நீக்க பன்னாட்டு சட்டத்தில் பொருந்தக் கூடிய மாதிரிகளை குறிப்பாக 1982 ஐநா நடைமுறை (மரபு) பிரதிபலிப்பவற்றிற்கு, நாடுகள் முழுமையான செயல் ஊக்கம் அளிக்க வேண்டும்.

11. பொருந்திய வகையில் 1982 ஐ நா நடைமுறை 1995 ஐநா மீன் இருப்பு ஒப்பந்தம் மற்றும் 1993 உவே அமைப்பின் இணக்க ஒப்பந்தம் ஆகியவற்றை முதன்மையாகக் கொண்டு

ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது இணக்கம் கொள்வதற்கும் உறுதி செய்வதற்கும் நாடுகள் ஊக்குவிக்கப் பட வேண்டும். இத்தகைய பொருத்தமான பன்னாட்டு சாதனங்களை உறுதி செய்யாத ஏற்றுக்கொள்ளாத அல்லது இணக்கம் கொள்ளாத நாடுகள் இச்சாதனங்களுக்கு இணங்காத வகையில் செயலாற்றுதல் கூடாது.

12. அவை ஏற்றுக் கொண்ட இணக்கம் தெரிவித்த உறுதிசெய்த பொருந்தக் கூடிய பன்னாட்டு மீன்வள அனைத்து சாதனங்களை நாடுகள் முழுமையாகவும் திறமையுடனும் செயல் படுத்துதல் வேண்டும்.

13. பன்னாட்டு சட்டத்தின் கீழ் நாடுகளின் உரிமைகளையும் பொறுப்புகளையும் பசெதி நடவடிக்கையில் உள்ள எந்த ஒரு பகுதியும் பாதிக்காது. பாதிக்கும் என கருதுதலும் கூடாது. 1995 ஐநா மீன் இருப்பு ஒப்பந்தம் 1995 உவே அமைப்பின் இணக்க ஒப்பந்தம் ஆகியவற்றுள் உள்ள அச்சாதனங்களுக்கு உறுப்பினராகும் நாடுகளின் உரிமைகளையும் பொறுப்புகளையும் பசெதி நடவடிக்கையில் உள்ள எந்த ஒரு பகுதியும் பாதிக்காது, பாதிக்கும் என கருதுதலும் கூடாது.

14. நடத்தை விதித்தொகுப்பு மற்றும் அதனுடன் தொடர்பு உடைய பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கைகளை நாடுகள் முழுமையாகவும் திறமையுடனும் செயல் படுத்த வேண்டும்.

15. பொருத்தமான மீன்வள மேலாண்மை நிறுவனம் கண்காணிக்காத மீன்வளத்தில் ஆழ் கடலில் மீன்பிடிக்கும் நபர்களைக் கொண்ட நாடுகள் 1982 ஐநா நடைமுறை (மரபு) பகுதி 7ன் கீழ் அவற்றின் பொறுப்புகளை செயல்படுத்தி ஆழ்கடலில் தேவையெனில் உயிரின ஆதாரங்களைப்பாதுகாத்திட தங்கள் நாட்டினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தேசீய சட்டம்**

**<u>சட்டம்</u>**

16. தேசீய சட்டம் சஅக மீன்பிடிப்பின் அனைத்து அமைப்பையும் திறமையான வகையில் தெரிவிக்க வேண்டும்.

17. மின் அணு சாட்சியங்கள், புதியதொழில் நுட்பங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துதலையும் உள்ளடக்கி சாட்சிய மாதிரிகளையும், ஏற்றுக் கொள்ளத் தக்கவைகளையும் தேசீய சட்டங்கள் தெரிவிக்க வேண்டும்.

**<u>தேசத்தின் மீது நாட்டின் கண்காணிப்பு</u>**

18 1982 ஐநா நடைமுறை (மரபு) வழங்கும் பொருத்தமான பகுதிகளுக்கு இணங்கியும் ஆழ்கடலில் கொடிநாட்டின் அடிப்படை பொறுப்பிற்கு ஏதும் கேடு இல்லாத வகையில் இயன்றவரை நாடு தங்கள் நாட்டினர் தங்கள் எல்லைக்குட்பட்டவாறு சஅக மீன்பிடிப்பில் ஈடுபடவோ அல்லது அதற்கு உதவிடவோ முற்படுதல் இல்லை என்பதை உறுதி செய்ய ஒத்துழைக்க வேண்டும். சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களை இயக்குபவர் அல்லது பயன்பெறும் உரிமையாளர்களான தங்கள் நாட்டினரை அடையாளம் காண அனைத்துநாடுகளும் ஒத்துழைக்க வேண்டும்.

19. நாட்டின் எல்லைக்குள் கொடிநாட்டின் பொறுப்புகளை எதிர்கொள்ளாத கலன்களுக்கு கொடியிடும் தங்கள் நாட்டினரின் ஊக்கத்தை குறைக்க வேண்டும்.

**<u>தேசீயம் இல்லாத கலன்கள்</u>**

20. சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்கள் மீது ஆழ்கடலில் தேசீயம் இல்லாது இயங்கும் கலன்கள் தொடர்பான பன்னாட்டு சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**அனுமதி**

21. இயன்றவரை போதுமான கடுமையுடன் அதன் எல்லைக்குள் நாட்டினர் திறமையுடன் சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க மற்றும் அத்தகைய மீன்பிடிப்பால் சேரும் பயன்களை குற்றம் இழைத்தவர் பெறாத வண்ணம் அனுமதி வழங்குவதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும். நிர்வாக அபராத திட்டத்தை அடிப்படையாககொண்ட சமூக அனுமதி ஆட்சியைபின்பற்றுதலையும் இது உள்ளடக்கும். அனுமதிக்கான விண்ணப்பங்கள் இணக்கமானவை வெளிப்படையானவை என்பதனை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

**ஒத்துழைக்காத நாடுகள்**

22. பொருத்தமான மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனத்துடன் ஒத்துழைக்காத சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் நாடுகளின் நடவடிக்கைகளை தடுக்க நிறுத்த நீக்க பன்னாட்டு சட்டத்திற்குட்பட்டு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்.

**பொருளாதார ஊக்கம்**

23. இயன்றவரை நாடுகள் தங்கள் தேசீயசட்டத்தில் மான்யம் உள்ளிட்ட பொருளாதார உதவிகள் சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் நபர்கள் அல்லது கலன்களுக்கு வழங்குவதைத்தவிர்க்க வேண்டும்.

**எச்சரிக்கை கட்டுப்பாடு கவனமான கண்காணிப்பு**

24. நாடுகள் மீன்பிடிப்பின் மீது அதன் தொடக்கத்தில் இருந்து இறங்குதளம் மூலமாக முடிவுவரை விரிவான திறமையான எச்சரிக்கை கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும். இதில் உள்ளடங்கு பவை:

24.1 கலன்களுக்கு அங்கீகாரம் அளிப்பது உட்பட நீர்ப்பரப்பையும் ஆதாரங்களையும் அடைவதற்கான வழிக்காக திட்டங்களை அமைத்தல் செயல்படுத்துதல்.

24.2 அனைத்து கலன்கள், அவற்றின் தற்போதைய உரிமையாளர்கள், அதன் எல்லைக்குள் மீன்பிடிப்பை மேற் கொள்ள அங்கீகாரம் பெற்ற இயக்குவோர் பற்றிய பதிவேடுகளை நிர்வகித்தல்.

24.3 கலன்நிர்வகிக்கும் அமைப்பை, பொருந்திய இடங்களில், அதன் எல்லைக்குள் தளத்தில் கள அமைப்பை எடுத்துச் செல்வதற்கான தேவைகளை உள்ளடக்கிய பொருத்தமான தேசீய, மண்டல அல்லது பன்னாட்டு மாதிரிகளுக்கு இணங்க செயல்படுத்துதல்.

24.4 அதன் எல்லைக்குள் தளத்தில் பார்வையாளர்களை ஏற்றிச்செல்வதற்கான தேவைகளை உள்ளடக்கிய பொருத்தமான தேசீய மண்டல அல்லது பன்னாட்டு மாதிரிகளுக்கு இணங்கியவாறு பொருந்திய இடங்களில் பார்வையாளர் திட்டங்களை செயல்படுத்துதல்.

24.5 எ.க கண்காணிப்பில் ஈடுபடும் அனைவருக்கும் கல்வி மற்றும் பயிற்சி அளித்தல்.

24.6 சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க அவர்களின் திறனை முடிந்த அளவிற்கு பெரிதாக்கும் வகையில் எ.க.க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் திட்டமிடுதல் மற்றும் நிதி அளித்தல்.

24.7 சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க தொழில் அறிவை ஊக்குவித்தல் தேவையையும் எ.க.க நடவடிக்கைகளில் அவர்களது ஒற்றுமையான பங்களிப்பையும் உணரச் செய்தல்.

24.8 தேசீய நீதிமன்ற அமைப்புகளில் எ.க.க பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளுதலையும் அறிவையும் ஊக்குவித்தல்.

24.9 ரகசியமான தேவைகளின் பயன்பாட்டை கருத்தில் கொண்டு எ.க.க விபரங்களை அடைதல் சேமித்தல் பரப்புதல் ஆகியவற்றிற்கான அமைப்புகளை நிறுவி நிர்மாணித்தல்.

24.10 தேசீய மற்றும் பொருந்திய இடங்களில் பன்னாட்டு ஒப்புதல்படி நுழைதல் கலனின் தலைவர் மற்றும் ஆய்வு அலுவலர்களின் உரிமை மற்றும் பொறுப்புகளையும் உணர்ந்து பன்னாட்டு சட்டத்திற்கு இணங்க ஆய்வு, அரசாட்சி அமைப்பை திறமையாக செயல் படுத்துவதை உறுதி செய்தல் 1995 ஐ நா மீன் இருப்பு ஒப்பந்தம் போன்ற சில பன்னாட்டு ஒப்பந்தங்களில் அத்தகைய அமைப்புகள் வழங்கப்பட்டுள்ளன அத்தகைய ஒப்பந்தங்களில் பங்கு கொள்வோருக்கே அவை பயன்படும் என்பதனையும் குறிப்பில் கொள்ள வேண்டும்.

**தேசீய செயல் திட்டங்களின் நடவடிக்கை**

25. இயன்ற வரை விரைவாக ஆனால் பசெதிந பின்பற்றியதற்குப் பிறகு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக நாடுகள் தேசீய செயல்திட்டங்களின் நடவடிக்கைகளை அமைத்து செயல்படுத்த வேண்டும். மேலும் பசெதி நடபடிக்கையின் நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும். அதன் ஒருங்கிணைந்த பகுதியான மீன்வள மேலாண்மை திட்டங்களுக்கும் நிதிக்குமான ஏற்பாடுகளில் முழுமையான செயல் ஊக்கம் அளிக்க வேண்டும் சஅக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த நீக்க உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மேற்கொண்ட தொடக்க நிகழ்ச்சிகளை செயல்படுத்தும் நடவடிக்கைகளை உரியவாறு இத்திட்டங்கள் உள்ளடக்க வேண்டும். அத்தகைய நிகழ்வில் தொழில்சார்ந்தோர் மீனவசமுதாயத்தினர் அரசு சாரா நிறுவனத்தினர் ஆகியோரை உள்ளடக்கிய ஆர்வமுள்ள பங்குதாரர்களின் முழு ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாட்டை நாடுகள் ஊக்குவித்தல் வேண்டும்.

26. தங்களின் தேசீய திட்டங்களின் செயல் திட்ட நடவடிக்கையைப் பின் பற்றத் தொடங்கியதிலிருந்து, குறைந்தது நான்கு வருடங்களுக்கு ஒரு முறையாவது நாடுகள் திட்டங்களின் செயல் பாட்டை ஆய்வு செய்தல் வேண்டும். அவற்றின் திறனை மேம்படுத்த செலவு குறைந்த முறைகளைக்கண்டறிவது ஆய்வின் நோக்கமாக இருக்க வேண்டும். பசெதிந பிரிவு 6ன் கீழ் உவே அமைப்பிற்கு நாடுகள் அறிவிக்கும் பொறுப்பை கொண்டுள்ளதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

27. சஅக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த நீக்க தேசீய அளவிலான முயற்சிகள் உட்புற ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளது என்பதனை நாடுகள் உறுதி செய்திட வேண்டும்.

**நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு**

28. பொருந்தியவாறு உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனம் மூலம் சஅக மீன்பிடிப்பை தடுக்க. நிறுத்த, நீக்க நாடுகள் அவைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டும். நேரடியாக ஒத்துழைக்க வேண்டும். குறிப்பாக நாடுகள் செய்ய வேண்டியவை:

28.1 பயன்பாட்டில் உள்ள நம்பிக்கையான தேவைகளுக்கு இணங்கும் வகையில் மீன்பிடிக்க அவர்களால் அங்கீகாரம் வழங்கப்பட்ட கலன்களின் பதிவேடுகளில் இருந்து விபரங்களை அல்லது தகவல்களை நிலைப்படுத்தப்பட்ட படிவத்தில் பரிமாற்றம் செய்து கொள்ளுதல்;

28.2 மீன்பிடிப்பில் இருந்து உரிய அனைத்து விபரங்களையும் தகவல்களையும் அடைதல் நிர்வகித்தல் மற்றும் சரிபார்த்தல் ஆகியவற்றுள் ஒத்துழைத்தல்;

28.3 எ.க.க.ல் ஈடுபட்டோரையும் அல்லது நடைமுறைக்கு கொண்டு வரும் பணியில் உள்ளோரையும் சஅக மீன்பிடிப்பை கண்டு அறிவதில் ஒத்துழைக்க அனுமதித்து அதிகாரம் வழங்குதல். இம்முனையில் நாடுகள் அத்தகைய மீன்பிடிப்பு பற்றிய விபரங்களையும் தகவல்களையும் சேகரித்து நிர்வகித்தல்;

**28.4** சிறப்பான அறிவு மற்றும் தொழில் நுட்பத்தை மாற்றிக் கொள்வதற்கு ஒத்துழைத்தல்;

**28.5** கொள்கைகளை அமைக்கவும் முறைகளை இணக்கமாக்குவதற்கும் ஒத்துழைத்தல்;

**28.6** சஅுக மீன்பிடிப்பிற்கு விரைவான கூட்டுறவு நுட்பத்தை அமைத்தல்;

**28.7** பன்னாட்டு ஒப்பந்தங்கள் வழியானதையும் சேர்த்து எ.க. கண்காணிப்பில் ஒத்துழைத்தல்.

**29.** உவே அமைப்பின் இணக்க ஒப்பந்தத்தின் பிரிவு **6**ன் படி கொடி நாடுகள், உவே மற்றும் பிறநாடுகள் உரிய மண்டல அல்லது பன்னாட்டு நிறுவனங்களுக்கு தங்கள் பதிவேடுகளில் இருந்து நீக்கப்பட்ட கலன்களைப் பற்றிய அல்லது மீன்பிடிக்க வழங்கப்பட்ட யாருடைய அங்கீகாரம் நீக்கப்பட்டது அதற்கான காரணங்கள் ஆகிய விபரங்களை முடிந்தவரை கிடைக்கச் செய்ய வேண்டும்.

**30.** ஒத்துழைப்பு மற்றும் விபர பரிமாற்றத்தை எளிதாக்க நாடு, மண்டல அல்லது பன்னாட்டு நிறுவனங்கள் ஒவ்வொன்றும் தொடக்க முறைசார்ந்த தொடர்பு நிலைகளை நியமித்து விளம்பரப்படுத்த வேண்டும்.

**31.** கொடிநாடுகள் பிறநாடுகளுடன் ஒப்பந்தம் அல்லது ஏற்பாடுகளில் ஈடுபடுவதைப்பற்றி பரிசீலிக்கவேண்டும். இல்லையெனில் பயன்படுத்தப்படும் சட்டம் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைககள் அல்லது தேசீய மண்டல அல்லது உலக அளவில் பின்பற்றப்படும் பகுதிகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக முறைப்படுத்துவதற்காக ஒத்துழைத்தல் வேண்டும்.

**விளம்பரம்**

**32.** சஅுக மீன்பிடிப்பின் விபரங்களையும் பயன்பாட்டில் உள்ள நம்பிக்கையான தேவைகளுக்கு இணங்கிய வகையில் அதனைத்தடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் பிறநாடுகளின் ஒத்துழைப்பு மூலமாகவும் நாடுகள் விரிவாக விளம்பரம் செய்ய வேண்டும்.

**தொழில் நுட்பத்திறன் மற்றும் ஆதாரங்கள்**

**33.** பசெதி நடவடிக்கையை செயல்படுத்திட தேவையான தொழில்நுட்பத்திறன் மற்றும் ஆதாரங்கள் கிடைக்கச் செய்ய நாடுகள் முயற்சிக்க வேண்டும். தேசீய மண்டல அல்லது உலக அளவில் பொருத்தமான இடங்களில் சிறப்பு நிதி நிறுவிடுதலையும் சேர்க்க வேண்டும் இதில் பன்னாட்டு ஒத்துழைப்பு முக்கிய பங்கு வகிக்கும்.

**கொடி நாடுகளின் பொறுப்புகள்**

***மீன்பிடிகலன் பதிவு செய்தல்.***

**34.** தங்கள் கொடிகளை பறக்கவிடும் உரிமை பெற்ற கலன்கள் சஅுக மீன்பிடிப்பில் ஈடுபடுவதோ உதவிடுவதோ இல்லை என்பதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

**35.** கொடிநாடு, ஒரு கலனை பதிவு செய்வதற்கு முன்பாக அக்கலன் ச.அ.க. மீன்பிடிப்பில் ஈடுபடுவது இல்லை என்பதை உறுதி செய்யவேண்டிய தனது பொறுப்பான கடமையைச் செய்ய வேண்டும்.

**36.** சில இடங்களைத்தவிர்த்து இணங்காத வரலாறு கொண்ட கலன்களுக்கு கொடி இடுவதை நாடுகள் தவிர்க்க வேண்டும்:

**36.1** கலனின் உரிமையாளர் பிறகு மாற்றப்பட்டிருந்தால் புதிய உரிமையாளர் முந்தைய உரிமையாளர் அல்லது இயக்குபவர் சட்டரீதியாக பயன்பெறுதல் அல்லது நிதிகுறித்த ஆர்வம் அல்லது கண்காணிப்பு ஆகியற்றை இந்த கலனில் மேலும் பெற்று இருக்க வில்லை என்பதனைத் தெரிவிக்க போதுமான சாட்சியத்தை வழங்கும் பொழுது; அல்லது,

**36.2** தொடர்புடைய அனைத்தையும் கவனத்தில் கொண்டபின் கலனுக்கு கொடியிடுதல் சஅக மீன்பிடிப்பில் முடிவடையாது என்று கொடி நாடு தீர்மானிக்கும் பொழுது.

**37.** கலன்களை வாடகைக்கு அமர்த்தும் ஏற்பாடுகளில் ஈடுபடும், அந்த ஏற்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் கொடிநாடுகள் மற்றும் பிற நாடுகள் உட்பட அனைத்து நாடுகளும் அவைகளின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கலன்கள் சஅக மீன்பிடிப்பில் ஈடுபடாது என்பதை உறுதி செய்யும் முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

**38.** பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைமுறைகளுக்கும் அல்லது தேசீய மண்டல அல்லது உலக அளவிலான பகுதிகளுக்கும் இணங்காது இருப்பதற்காக கலன்கள் மறுகொடி இடுதலை கொடி நாடுகள் தடுக்க வேண்டும். இயன்றவரை கொடிநாடுகள் பயன்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் வரையறைகள் ஒரே மாதிரியானவையாக இருக்க வேண்டும். பிறநாடுகளில் தங்கள் கலன்களுக்கு மறுகொடியிடும் உரிமையாளர்களுக்கு ஊக்கம் ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

**39.** கொடிதாவுதலை தடுப்பதற்காக நாடுகள் அனைத்து செய்முறைகளையும் மேற்கொள்ள வேண்டும். மீன்பிடிக்க கலனுக்கு அங்கீகாரம் மறுத்தல், நாட்டின் கொடியைப்பறக்கவிடும் உரிமையை மறுத்தல் போன்றவை இதனுள் அடங்கும். அடிக்கடி அல்லது உடனடியாக பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகள் அல்லது தேசீய மண்டல அல்லது உலக அளவிலான பகுதிகள் ஆகியவற்றில் இருந்து தந்திரமாக சூழ்ச்சி செய்து தப்பிக்கவும் அல்லது அம்முறைகள் அல்லது பகுதிகளுக்கு இணங்காது இருக்க உதவிடுவதற்காக கலனின் கொடியை மாற்றிடும் பழக்கத்தை கொடிதாவுதல் எனலாம்.

**40.** கலனைப்பதிவு செய்தல் மீன்பிடிக்க அங்கீகாரம் அளித்தல் ஆகியவை வெவ்வேறு பணிகள் எனினும் ஒவ்வொன்றும் மற்றொன்றிற்கு உரிய மதிப்பு வழங்குவதை உறுதி செய்யும் விதத்தில் கொடிநாடுகள் இப்பணிகளைப்பரிசீலிக்க வேண்டும். கொடி நாடுகள் அவைகளின் கலன் இயக்கப் பதிவேடுகள் மற்றும் நாடுகள் பேணும் தங்கள் மீன்பிடிகலன்களின் பதிவேடுகள் ஆகியவற்றிற்கு போதிய தொடர்பு இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அத்தகைய பணிகள் ஒரே நிறுவனத்தால் மேற்கொள்ளப்படாத இடங்களில் அப்பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு இடையே போதிய அளவு ஒத்துழைப்பு மற்றும் விபரங்களைப் பகிர்ந்துகொள்ளுதல் இருப்பதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

**41.** நிபந்தனையின் பேரில் கலனைப் பதிவு செய்ய தீர்மானிப்பதை கொடிநாடு பரிசீலிக்கலாம். அதன் எல்லைக்குள் அல்லது ஆழ்கடலில் மீன்பிடிக்க நிபந்தனையின் பேரில் அங்கீகாரம் வழங்க தீர்மானிப்பதை பரிசீலிக்கலாம். கொடிநாட்டின் கட்டுப்பாட்டில் உள்ள கடலோர நாடு அதன்கலனுக்கு மீன்பிடிக்க நிபந்தனையின் பேரில் அங்கீகாரம்வழங்க தீர்மானிப்பதையும் கொடிநாடு பரிசீலிக்கலாம்.

**மீன்பிடிகலன்களின் பதிவேடுகள்**

**42.** ஒவ்வொரு கொடிநாடும், அதன் கொடியைப்பறக்கவிடும் உரிமை பெற்ற மீன்பிடிகலன்களின் பதிவேடுகளை நிர்வகிக்க வேண்டும். கொடிநாட்டில் மீன்பிடிகலன்களின் பதிவேடு ஆழ்கடலில் மீன்பிடிக்க அங்கீகாரம் பெற்ற மீன்பிடிகலன்களையும் உள்ளடக்க வேண்டும் மேலும் **1993** உவே அமைப்பின் இணக்க ஒப்பந்தம் பிரிவு **6** பத்தி எண் **1** மற்றும் **2**ல் உள்ள அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

**42.1** ஏதும் இருப்பின் தெரியும் எனில் முந்தைய பெயர்கள்;

**42.2** இயற்கையாக அல்லது சட்டரீதியாக கலன் யார் பெயரால் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அவர் பெயர் முகவரி தேசீயம்;

42.3 கலனின் இயக்கத்தை இயற்கையாக அல்லது சட்டரீதியாக நிர்வகிக்கும் பொறுப்பான நபரின் பெயர், தெருமுகவரி, அஞ்சல் முகவரி மற்றும் தேசீயம்;

42.4 கலனின் பயன்பெறும் உரிமை உடைய இயற்கையாக அல்லது சட்டரீதியாக நபர்களின் பெயர், தெருமுகவரி, அஞ்சல் முகவரி மற்றும் தேசீயம்;

42.5 கலனின் பெயர் கலனின் உரிமை உடையவர் வரலாறு தெரியும் இடங்களில் பன்னாட்டு சட்டங்கள் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகள் அல்லது தேசீய மண்டல அல்லது உலக அளவிலான பகுதிகளுக்கு இக்கலன் இணங்காது இருந்த வரலாறு;

42.6 கலனின் அளவு பொருந்திய இடங்களில் பதிவு செய்யப்பட்ட பொழுதோ அல்லது சமீபத்திய பிற அமைப்பு மாற்றங்களை ஏற்படுத்திய பிறகோ எடுக்கப்பட்ட கலனின் பக்கதோற்ற புகைப்படம்;

43. ஆழ்கடலில் மீன்பிடிக்க அங்கீகாரம் அளிக்கப்படாத கலன்களுக்கும் பத்தி 42ல்குறிப்பிடப்பட்ட விபரங்களை மீன்பிடிகலன்களின் பதிவேட்டில் பதிவு செய்வது கொடிநாடுகளுக்கு தேவையாகிறது.

**மீன்பிடிக்க அங்கீகாரம்**

44. ஆழ்கடலுக்கான பன்னாட்டு சட்டங்களுக்கும் குறிப்பாக 1982 ஐ நா நடைமுறை (மரபு) பிரிவு 116 மற்றும் 117ல் உள்ள உரிமை மற்றும் கடமைகளுக்கும் இணங்கும் வகையில் அல்லது தேசீய சட்டத்திற்கு உட்பட்டும் வழங்கப்படுகிற அங்கீகாரம் இல்லாது எந்த ஒரு கலனும் மீன்பிடிக்க அனுமதிக்கப்படமாட்டாது என்பதை உறுதி செய்யும் முறைகளை நாடுகள் பின்பற்ற வேண்டும்.

45. அதன் கொடியைப்பறக்க விடும் உரிமை பெற்ற எந்த ஒரு கலனும் அதன் உரிமை அல்லது எல்லைக்கு அப்பால் உள்ள பகுதியில் மீன்பிடிக்க கொடிநாடு வழங்கிய உரிய அங்கீகாரத்தைப் பெற்று இருக்கும் என்பதை கொடிநாடு உறுதி செய்யும். கடலோர நாடு மீன்பிடிகலனுக்கு அங்கீகாரம் வழங்கும் இடங்களில், அக்கலனின் கொடிநாடு வழங்கிய அங்கீகாரம் இல்லாது நீர்ப்பரப்பில் மீன்பிடிப்பு நடைபெறாது என்பதை கொடிநாடு உறுதி செய்யும்.

46. மீன்பிடிக்க கலன்கள் அங்கீகாரம் பெற்று இருக்கவேண்டும். தேவைப்படும் இடங்களில் அவற்றை தளத்தில் கொண்டு செல்ல வேண்டும் ஒவ்வொரு நாட்டின் அங்கீகாரமும் உள்ளடக்க வேண்டியவை ஆனால் வரையறுக்கும் தேவை அற்றவை ஆவன :

46.1 கலனின் பெயர் பொருந்தும் இடங்களில் இயற்கையாக அல்லது சட்டரீதியாக மீன்பிடிக்க அங்கீகாரம் பெற்ற நபரின் பெயர்;

46.2 மீன்பிடிக்க பெற்ற அங்கீகாரப்பகுதி, நோக்கம், காலக்கெடு;

46.3 அங்கீகரிக்கப்பட்ட மீன்பிடிச்சாதனம் சிற்றின வகை. பொருந்தும் இடங்களில் பயன்பாட்டில் உள்ள மேலாண்மை முறைகள்.

47. தேவைப்படும் இடங்களில் அங்கீகாரம் வழங்கப்படுவதற்கான நிபந்தனைகளையும் சேர்க்கலாம்:

47.1 கலன் எச்சரிக்கும் அமைப்பு;

47.2 மீன்பிடிப்பு அறிவிக்க நிபந்தனைகள் போன்றவை;

47.2.1 கலனின் மீன்பிடிப்பு காலவரிசை மற்றும் உழைப்பு பற்றிய புள்ளி விபரம்;

47.2.2 சிற்றினவகை வாரியாக எண்ணிக்கையில் மொத்த மீன்பிடிப்பு சாதாரணமான

எடை அல்லது இரண்டும் (இலக்கு மற்றும் இலக்கு அற்ற இரண்டிற்கும்) பொருந்தும் இடங்களில் ஒவ்வொரு மீன்வளத்தின் காலம். (சாதரண எடை என்பது உயிருடன் பிடிக்கப்படும் பொழுது உள்ள எடையைக் குறிக்கும்);

47.2.3 ஒதுக்கப்படுபவை பற்றிய புள்ளி விபரங்கள் தேவைப்படும் இடங்களில் மதிப்பீடும் சேர்க்கப்படவேண்டும். ஒவ்வொரு மீன்வளத்திற்கும் பொருந்தியவாறு சிற்றின வகைவாரியாக எண்ணிக்கை அல்லது சாதரண எடை என அறிவிக்கப்படுதல்;

47.2.4 ஒவ்வொரு மீன்பிடிமுறைக்கும் ஏற்றவாறு உழைப்பு பற்றிய புள்ளி விபரம்.

47.2.5 மீன்பிடிப்பு நடைபெற்ற இடம் நாள் மீன்பிடிப்பு நடைபெற்ற கால அளவு மற்றும் மீன்பிடிப்பு முறைகள் பற்றிய இதர புள்ளி விபரங்கள்.

47.3 அறிவித்தல் மற்றும் கப்பலில் ஏற்றுதல் அனுமதிக்கப்பட்ட இடங்களில் கப்பலில் ஏற்றுதலுக்கான பிற நிபந்தனைகள்.

47.4 பார்வையாளர்களை பங்கு பெறச் செய்தல்.

47.5 மீன்பிடிப்பு மற்றும் தொடர்புடைய தினசரி குறிப்பு புத்தகங்களை நிர்வகித்தல்.

47.6 கட்டுப் படுத்தப்பட்ட பகுதிகள் மற்றும் எல்லைகளுக்கு இணக்கமாக செயல்படுவதை உறுதி செய்ய கடல் பயண சாதனங்கள்;

47.7 கடல்சார் பாதுகாப்பு குறித்து பயன்படுத்தப்படும் பன்னாட்டு மரபு தேசீய சட்டங்கள் கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கு இணக்கமாக கடற்புற சுற்றுச்சூழலை காப்பாற்றுதல் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகள் அல்லது தேசீய மண்டல அல்லது உலக அளவிலான பகுதிகள்;

47.8 மீன்பிடிகலன்களை அடையாளம் காணவும் அடையாளம் இடவும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் வரையறுக்கப்பட்ட விபரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டுதல் போன்ற பன்னாட்டு அங்கீகாரம் பெற்ற வரையறைகளுக்கு இணங்கி அதன் மீன்பிடிகலன்களுக்கு அடையாளம் இடுதல். பன்னாட்டு அங்கீகாரம் பெற்ற வரையறைகளுக்கு இணங்க கலனின் மீன்பிடிச் சாதனங்களும் அடையாளம் இடப்பட வேண்டும்;

47.9 பொருந்திய இடங்களில் கொடிநாட்டிற்கு பொருத்தமான இதர மீன்வள ஏற்பாடுகளின் பிரிவுகளுக்கும் இணக்கமாயிருத்தல்; மற்றும்

47.10 இயன்றவரை காலப்போக்கில் பதிவு அல்லது பெயரில் மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் அடையாளம் காண்பதற்கு ஏற்றவகையில் கலன்தனித்த பன்னாட்டு அங்கீகாரம் பெற்ற அடையாள எண்ணைப்பெற்று இருக்க வேண்டும்.

**48.** அவற்றின் மீன்பிடி போக்குவரத்து மற்றும் உதவிக்கான கலன்கள் சஅக மீன்பிடிப்பில் ஈடுபடாது அல்லது உதவாது என்பதனை கொடி நாடு உறுதி செய்ய வேண்டும். முடிவாக அவற்றின் கலன்கள் ஏதும் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கலன்களுக்கும் அல்லது அக்கலன்களிலிருந்தும் அக்கலன்களுக்கும் மீன்களை ஏற்றிச்செல்லும் கலன்களுக்கும் மறுவிநியோகம் வழங்காது என்பதனை கொடிநாடுகள் உறுதி செய்ய வேண்டும். கலன் இயக்குவோரது பாதுகாப்பு உள்ளிட்ட மனிதாபிமான நோக்கங்களுக்காக தேவையான உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இப்பத்தி முரண்பாடாக அமையாது.

**49.** பெரிதும் இயன்றவரை அவற்றின் மீன்பிடி போக்குவரத்து மற்றும் கடலில் ஏற்றிச் செல்வதில் ஈடுபட்டுள்ள உதவிக்கான கலன்கள் அனைத்தும் கப்பலில் மாற்றுவதற்கு கொடிநாடு வழங்கும்

அங்கீகாரத்தை முன்பே பெற்றிருக்க வேண்டும். தேசீய மீன்வள நிர்வாகத்திற்கோ அல்லது பிற நியமிக்கப்பட்ட நிறுவனங்களுக்கோ தெரிவிக்க வேண்டும் என்பதனை கொடிநாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

49.1 கடலில் மீன்களை ஏற்றிச் செல்லுதல் அனைத்தும் நடைபெற்ற இடம் நாள்;

49.2 ஏற்றிச் செல்லப்பட்ட மீன்களின் எடை சிற்றினம் வகை வாரியாக மற்றும் அவை பிடிக்கப்பட்ட இடம்;

49.3 ஏற்றிச் செல்லுதலில் ஈடுபட்ட கலனின் அடையாளம் காண்பதற்காக கலனின் பெயர், பதிவு, கொடி மற்றும் பிற விபரங்கள்.

49.4 ஏற்றப்பட்டவை இறக்கப்படும் துறைமுகம்.

50. கொடிநாடுகள் மீன்பிடிப்பு மற்றும் ஏற்றிச் சென்றமை பற்றிய அறிக்கைகளில் இருந்து விபரங்களை தொகுக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் வழக்கமான முறையில் முழுதுமாக பகுதி மற்றும் சிற்றின வகைக்கு ஏற்ப விபரங்களை ஒருங்கிணைக்க வேண்டும். பயன்பாட்டில் உள்ள நம்பிக்கை தேவையை கருத்தில் கொண்டு உவே அமைப்பு உள்ளிட்ட உரிய தேசீய, மண்டல மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு பொருத்தமான விபரங்கள் கிடைக்க செய்ய வேண்டும்.

**கடலோர நாடுகளின் முறைகள்**

51. 1982 ஐநா நடைமுறை மற்றும் பன்னாட்டு சட்டத்திற்கு இணங்கி அவற்றின் எல்லைக்குள் கடல் வாழ் உயிரன ஆதாரங்களைக்கண்டறிதல் பயன்படுத்துதல், பாதுகாத்தல் நிர்வகித்தல் ஆகியவற்றிற்காக கடலோர நாடுகள் முக்கியத்துவ உரிமைகளை உபயோகித்து கடலோர நாடுகள் தனிப்பட்ட பொருளாதார மண்டலத்தில் சஅக மீன்பிடிப்பை நிறுத்த, நீக்க, தடுக்க முறைகளை செயல்படுத்துதல் வேண்டும். தேசீய சட்டம் மற்றும் பன்னாட்டு சட்டத்திற்கு இணங்கி செய்முறைக்கு இயன்றவரை முறைகளில் பொருத்த மானதாக கடலோர நாடுகள் பரிசீலிக்கத்தக்கவையாவன :

51.1 தனிப்பட்ட பொருளாதார மண்டலத்தில் மீன்பிடி நடவடிக்கைகளை எச்சரித்து கட்டுப்படுத்தி கண்காணிப்பு செய்தல்;.

51.2 பொருத்தமான இடங்களில் அண்டைய கடலோர நாடுகள் மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றையும் சேர்த்து பிற நாடுகளுடன் ஒத்துழைப்பு மற்றும் விபரங்களை பரிமாற்றம் செய்து கொள்ளுதல்;

51.3 அந்த கடலோர நாடு வழங்கும் உரிய அங்கீகாரம் இன்றி அவற்றின் நீர்ப்பரப்பில் எந்த ஒருகலனும் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாது என்பதனை உறுதி செய்தல்;

51.4 மீன்பிடிக்க கலனை அங்கீகரித்தல் குறிப்பிட்ட கலன் கலன்கள் பதிவேட்டில் பதியப்பட்டதற்குப் பிறகே என்பதனை உறுதி செய்தல்;

51.5 தங்கள் நீர்ப்பரப்பில் மீன்பிடிக்கும் ஒப்வொரு கலனும் தினசரிக்குறிப்பு புத்தகத்தை நிர்வகித்து பொருந்தும் இடங்களில் அதன் மீன்பிடிப்பு நடவடிக்கைகளைப் பதிவு செய்கிறது என்பதனை உறுதி செய்தல்;

51.6 கடலில் ஏற்றிச் செல்லுதல் மீன்களையும் மீன்பொருட்களையும் கடலோர நாட்டின் நீர்ப்பரப்பில் பதப்படுத்துதல் ஆகியவற்றிற்கு அந்த கடலோர நாடு அங்கீகாரம் அளித்து இருப்பதையும் அல்லது உரிய மேலாண்மை கட்டுப்பாடுகளுக்கு இணக்கமாகவே அவை நடைபெறுகின்றன என்பதனையும் உறுதி செய்தல்;

51.7 சஅுக மீன்பிடிப்பை தடுத்து நிறுத்தி நீக்குவதற்கு உதவும் வகையில் தனது நீர்ப்பரப்பில் மீன்பிடிக்கச் செல்லும் வழியை கட்டுப்படுத்துதல்;

51.8 பத்தி 36 ல் உள்ள பகுதிகளை கருத்தில் கொண்டு சஅுக மீன்பிடிப்பு வரலாறு கொண்ட குறிப்பிட்ட கலனுக்கு தனது நீர்ப்பரப்பில் மீன்பிடிக்க உரிமம் வழங்குவதைத்தவிர்த்தல்;

**துறைமுக நாடுகளின் முறைகள்**

52. சஅுக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த நீக்க மீன்பிடிகலன்களை கட்டுப்படுத்தும் துறைமுக நாட்டிற்காக பன்னாட்டு சட்டத்திற்கு இணங்கி துறை முக நாடு முறைகளைப்பயன்படுத்த வேண்டும். அம் முறைகள் நியாயமான வெளிப்படையான வேறுபாடுகள் காட்டாத முறையில் செயல்படுத்தப்பட வேண்டும்.

53. பத்தி 52 முதல் 64 வரை பயன்படுத்தப்படும் பொழுது துறைமுகத்தை அடைவது என்பது 1982 ஐநா நடைமுறை பிரிவு 25.2, தேசீய சட்டங்கள் மற்றும் பிற உரிய பன்னாட்டு சட்டங்களுக்கு இணக்கமான வகையில் கடலோர நாடுகளின் உரிமைகளுக்கு முரண்பாடு ஏதும் இன்றி இறக்குதல், கப்பலுக்கு ஏற்றுதல், மறுவிநியோகம், எரிபொருள் பெறுதல் ஆகிய நோக்கங்களுக்காக துறைமுகத்திற்குள் அல்லது தொலைதூரக்கடல் பகுதி இடத்திற்குள் நுழைவதைக் குறிக்கும்.

54. பத்தி 52,53 மற்றும் 55ஐ கருதாது, துயர்அடையும் பொழுது அல்லது force majeure ஆட்கள் கப்பல் அல்லது வான ஊர்திகளுக்கு துயர் மற்றும் ஆபத்துக்காலங்ளில் உதவிகள் வழங்குவதற்காக பன்னாட்டு சட்டத்திற்கு இணங்கி கலன்கள் துறைமுகத்தை அடைவதற்கு அனுமதிக்கலாம்.

55. கலன்துறைமுகத்தை அடைவதற்கு முன்பாக துறைமுகத்தை அடைவதற்கு அனுமதி கோரும் மீன்பிடிகலன்கள் மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் கலன்கள் துறைமுகத்தை அடைவதை போதிய அளவு முன்னதாகத் தெரிவிக்க வேண்டும். மீன்பிடிக்க வழங்கப்பட்ட அங்கீகார நகல் மீன்பிடிப்பு பயண தகவல்கள், தளத்தில் உள்ள மீன்களின் எடை ஆகியவற்றை நம்பிக்கையான தேவையின் நிமித்தம் அக்கலன் சஅுக மீன்பிடிப்பில் ஈடுபட்டதா அல்லது அதற்கு உதவியதா என்பதனைத் தீர்மானிப்பதற்காக வழங்க வேண்டும்.

56. தங்கள் துறைமுகத்தை அடைவதற்கு அனுமதிக்கபட்ட கலன் சஅுக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக தெளிவான சாட்சியங்களுடன் தெரிந்தால் அதன் துறைமுகத்தில் அக்கலன் மீன்களை இறக்குவதற்கோ அல்லது கப்பலில் ஏற்றுவதற்கோ துறைமுக நாடு அனுமதிக்ககூடாது. அக்கலனின் கொடி நாட்டிற்கு இத்தகவலை தெரிவிக்க வேண்டும்.

57. துறைமுகத்திற்கு அந்நிய கொடியுடைய எந்த கலன்கள் அனுமதிக்கப்பட்டன என்ற விபரத்தை நாடுகள் விளம்பரப்படுத்த வேண்டும். இத்துறைமுகங்கள் ஆய்வு செய்யும் திறன் பெற்றுள்ளன என்பதையும் நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

58. கலன்களை ஆய்வு செய்யும் உரிமையைப்பயன்படுத்தும் விதமாக துறைமுகநாடுகள் கீழ்க்கண்ட விபரங்களை சேகரித்து கொடிநாட்டிற்கு அனுப்ப வேண்டும். பொருந்தும் இடங்களில் உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்களுக்கு அனுப்புதல் வேண்டும். அவையாவன

58.1 கலனின் அடையாள விபரங்கள் கொடிநாடு;

58.2 தலைவர் மற்றும் மீன்பிடிப்பிற்கான தலைவர் ஆகியோரது பெயர் தேசீயம் மற்றும் தகுதி

58.3 மீன்பிடிச்சாதனம்;

**58.4** தளத்தில் உள்ள பிடிக்கப்பட்ட மீன்களின் நிலை அளவு சிற்றின வகை பிடிக்கப்பட்ட இடம் ஆகியவற்றையும் சேர்த்து விபரங்கள்;

**58.5** பொருந்தும் இடங்களில் தொடர்புடைய மண்டல மீன்வள நிறுவனங்கள் அல்லது பிற பன்னாட்டு ஒப்பந்தங்கள் கோரும் பிற விபரங்கள்;

**58.6** மொத்தமாக இறக்கப்பட்ட மீன்கள் மற்றும் கப்பலில் அனுப்பப்பட்ட விபரங்கள்.

**59.** துறைமுக நாட்டின் எல்லைக்கு அப்பால் கலன் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டது அல்லது அதற்கு உதவியது என்று சந்தேகம் கொள்வதற்கு போதுமான ஆதாரம் இருப்பதாக ஆய்வின் பொழுது தெரிய வந்தால் துறைமுகநாடு பன்னாட்டு சட்டத்திற்கு இணங்கி மேற்கொள்ளும் எத்தகைய பிற நடவடிக்கைக்கு கூடுதலாக கலனின் கொடி நாட்டிற்கு உடனடியாக இந்த விபரத்தை தெரிவிக்க வேண்டும். பொருந்தும் இடங்களில் தொடர்புடைய கடலோர நாடுகள் மற்றும் மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்களுக்கும் தெரிவிக்க வேண்டும். கொடிநாட்டின் சம்மதத்துடன் அல்லது அதன் கோரிக்கையின் பேரில் துறைமுக நாடு பிற நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

**60.** அவற்றின் தேசீய சட்டத்திற்கு இணங்க பத்தி **58** மற்றும் **59** ஐ பயன்படுத்தும் பொழுது சேகரிக்கப்பட்ட விபர ரகசியத்தன்மையை நாடு பாதுகாக்க வேண்டும்.

**61.** மீன்பிடிப்பு மற்றும் அதன் தொடர்பான நடவடிக்கைளில் ஈடுபடும் கலன்களை கண்காணிக்கும் துறைமுக நாட்டிற்காக தேசீய செயல் படுத்தும் திட்டங்களையும் முறைகளையும் நாடுகள் நிறுவி விளம்பரப்படுத்துதல் வேண்டும். பயிற்சி, துறைமுகநாட்டின் கண்காணிப்பு அலுவலர்களுக்கான இயக்க வழிகாட்டு முறைகள் ஆகியவை உள்ளடக்கப்பட வேண்டும். செயல் படுத்தும் திட்டங்களை அமைக்கவும் செயல்படுத்தவும் தேவையான கட்டுமானத்திறனையும் நாடுகள் பரிசீலிக்க வேண்டும்.

**62.** தொடர்புடைய மண்டல மேலாண்மை நிறுவனங்களுடன் பொருந்திய வகையில் நாடுகள் இருமுனையாக பல்முனையாக ஒத்துழைத்து மீன்பிடிகலன்களின் துறைமுக நாட்டு கண்காணிப்பிற்காக இணக்கமான முறைகளை அமைக்க வேண்டும். துறைமுக நாடுகளால் சேகரிக்கப்படும் விபரங்கள், விபரங்கள் சேகரிப்பதற்கான முறைகள், தேசீய மண்டல அல்லது பன்னாட்டு அமைப்புகளின் கீழ் பயன்படுத்தப்படும் முறைகளுக்கும் புறம்பான கலனின் சந்தேகத்துக்குரிய செயல்பாடுகளை சமாளிக்கும் முறைகள் ஆகியவற்றை இம்முறைகள் கையாள வேண்டும்.

**63.** நாடுகளின் கொடிகளைப்பறக்கவிடும் உரிமை பெற்ற கலன்கள் மீன்வள மேலாண்மை நிறுவனத்தில் பங்கு கொள்ளாதவை, அந்த மீன்வள மேலாண்மை நிறுவனத்துடன் ஒத்துழைக்க சம்மதிக்காதவை குறிப்பிட்ட அந்த நிறுவனத்தின் பகுதிக்குள் மீன்பிடிப்பு நடத்தியதாக அடையாளம் காணப்பட்டவை சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளதாக கருதப்படும் நிலையில் தொடர்புடைய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனத்துடன் துறைமுக நாடு முறைகள் வகுப்பது பற்றி நாடுகள் பரிசீலிக்க வேண்டும். அத்தகைய துறை முக நாட்டு முறைகள் அடையாளம் கண்ட அந்த கலன் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணக்கமாகவே மீன்பிடிப்பு நடத்தப்பட்டது என்பதனை நிலைநிறுத்தும் வரை கலன் மீன்களை இறக்குவதையோ அல்லது கப்பலுக்கு ஏற்றி அனுப்புவதையோ தவிர்க்க வேண்டும். மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனம் நியாயமான வெளிப்படையான வேறுபாடுகள் காட்டாத முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகள் மூலமாக இக்கலனை அடையாளம் காணுதல் வேண்டும்.

**64.** துறைமுக நாட்டின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நாடுகள் மற்றும் உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்களுக்கு இடையிலும் மற்றும் அவர்களுக்கு இடையிலும் உரியதகவல்கள் தடையின்றி பெறுதலையும் சேர்த்து நாடுகள் ஒத்துழைப்பை அதிகப்படுத்த வேண்டும்.

**பன்னாடுகளும் ஏற்றுக்கொண்ட சந்தை தொடர்பான முறைகள்.**

**65.** அறுவடை செய்யப்பட்ட மீன் மற்றும் மீன் பொருட்களை பொருத்தமான முறையில் விற்பனை செய்யும் உரிமையை நாடுகள் பெற்றுள்ளதை கருத்தில் கொண்ட வகையில் பத்தி **66** முதல் **76** வரையிலான முறைகளை செயல் படுத்திட வேண்டும். நியாயமான வெளிப்படையான வேறுபாடுகள் காட்டாத முறையில் உலகவர்த்தக நிறுவனம் நிறுவிய கோட்பாடுகள் உரிமைகள் கடமைகள் ஆகியவற்றிற்கு இணங்கி விளக்கவும் பயன்படுத்தவும் வேண்டும்.

**66.** தொடர்புடைய மீன்வள மேலாண்மை நிறுவனத்தால் சஅுக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்ட கலன்களால் பிடிக்கப்பட்ட மீன்கள் வர்த்தகம் செய்யப்படுவதையோ அவர்களின் எல்லைக்குள் இறக்குமதி செய்யப்படுவதையோ பன்னாட்டு சட்டத்திற்கு இணங்கி தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை நாடுகள் மேற்கொள்ள வேண்டும். நியாயமான வெளிப்படையான வேறுபாடுகள் காட்டாத முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகள் மூலமாக கலன்கள் மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனத்தால் அடையாளம் காணப்பட்டிருக்க வேண்டும். நியாயமான வெளிப்படையான வேறுபாடுகள் காட்டாத முறையில் உலகவர்த்தக நிறுவனத்தால் நிறுவப்பட்ட கோட்பாடுகள், உரிமை மற்றும் கடமைகளையும் சேர்த்து பன்னாட்டு சட்டத்திற்கு இணங்க வர்த்தகம் தொடர்பான முறைகள் பயன்படுத்தப்பட வேண்டும். மற்றும் செயல்படுத்தப்பட வேண்டும். சஅுக மீன்பிடிப்பைத்தடுக்க, நிறுத்த, நீக்க, பிறமுறைகள் வெற்றிகரமானவை அல்ல என நிரூபிக்கும்பட்சத்தில் அசாதாரணமான சூழ்நிலைகளில் மட்டுமே அதுவும் தொடர்புடைய நாடுகளுடன் கலந்து பேசிய பின்பே வர்த்தகம் தொடர்புடைய முறைகள் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு தலைப்பட்சமான வர்த்தகம் தொடர்புடைய முறைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**67.** மீன் மற்றும் மீன்பொருட்களின் பன்னாட்டு வர்த்தகம் மீதான முறைகள் வெளிப் படையானவை, பொருந்தும் இடங்களில் விஞ்ஞான சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டவை, பன்னாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கு இணக்கமானவை என்பதனை நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும்.

**68.** குறிப்பிட்ட மீன் இருப்பு அல்லது சிற்றின வகைகளுக்காக சஅுக மீன்பிடிப்பில் ஈடுபடுவதைத் தவிர்க்க தடுக்க, நீக்க தேவையான உவநி உடன் இணக்கமாக பல்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிய வர்த்தகம் தொடர்பான முறைகளைப்பயன்படுத்திட உலகளவில் மற்றும் உரிய மண்டல மீன்வள மேலாண்மை மூலமாகவும் நாடுகள் ஒத்துழைக்க வேண்டும். மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனத்தில் சிந்திக்கப்படும் பல்வகையான வர்த்தகம் தொடர்பான முறைகள், ஒத்துழைப்பு முயற்சிகளுக்கு உதவிட பயன்படுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட மீன் மற்றும் மீன் பொருட்களின் வர்த்தகம் எந்த ஒரு வகையிலும் சஅுக மீன்பிடிப்பை ஊக்குவிக்காது என்பதனை உறுதி செய்யவும் அல்லது வேறுவகையாக **1982** ஐ நா நடைமுறைக்கு இணக்கமான பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகளை வலிவற்றதாக்காது என்பதனை உறுதி செய்யவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

**69.** சஅுக மீன்பிடிப்பில் பெறப்பட்ட மீன் மற்றும் மீன் பொருட்களின் வர்த்தகத்தை விலக்க அல்லது குறைக்க வர்த்தக தொடர்புடைய முறைகள், பல்வகையான மீன்பிடிப்பு ஆவணங்கள் மற்றும் சான்றிதழ் தேவைகளைப் பயன்படுத்துதலை உள்ளடக்கும். அவ்வாறே ஏற்றுமதி மற்றும் இறக்கு மதி கட்டுப்பாடுகள் அல்லது தடைகள் போன்ற பொருத்தமான பல்வகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிற முறைகளையும் உள்ளடக்கும். நியாயமான வெளிப்படையான வேறுபாடுகள் காட்டாத முறையில் இம்முறைகள் பயன்படுத்தப்படும். அவற்றின் இணக்கமான மற்றும் திறமையான செயல்படுத்துதலுக்கு நாடுகள் உதவிட வேண்டும்.

70. சஅுக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களுக்கு பொருளாதார ஊக்குவிப்பைத் தடுக்க மற்றும் குறைக்க இருப்பு அல்லது சிற்றினம் குறித்த வர்த்தகம் தொடர்பான முறைகள் தேவையாகின்றன.

71. மீன் மற்றும் மீன்பொருட்களை ஆராய்ந்து கண்டுபிடிப்பதை அனுமதிக்கும் வகை அவைகளது சந்தைகளின் வெளிப்படைத்தன்மையை முன்னேற்றம் அடையச் செய்யும் முறைகளை நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

72. ஆர்வமுடைய நாடு கோரும் பொழுது நாடுகள் எந்த ஒரு நாட்டிற்கும் அதன் எல்லைக்குள் சட்டத்திற்குப் புறம்பாக அறுவடை செய்யப்பட்ட மீன் மற்றும் மீன் பொருட்களை வர்த்தகம் செய்வதைத் தடுப்பதற்கு உதவிட வேண்டும். இரு நாடுகளும் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளுக்கு இணக்கமாக உதவி வழங்கப்படவேண்டும். உதவிகோரும் நாட்டின் எல்லையை முழுவதுமாக மதித்து உதவி வழங்கப்பட வேண்டும்.

73. அவற்றின் இறக்குமதியாளர்கள் கப்பலுக்கு ஏற்றித்தருபவர்கள் வாங்குபவர்கள், உபயோகிப்பாளர்கள், சாதனங்கள் வழங்குபவர்கள், வங்கியாளர்கள் காப்பீட்டாளர்கள் இதரசேவை வழங்குபவர்கள் மற்றும் பொதுமக்கள் சஅுக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக அடையாளம் கண்ட கலன்களுடன் வர்த்தகம் கொள்வது தீங்கான விளைவுகளைத்தரும் என்பதை உணர்ந்து கொள்வதை உறுதி செய்திட நாடுகள் முறைகளை மேற்கொள்ள வேண்டும். எந்த நாட்டின் எல்லைக்குள் கலன் இயங்குகிறதோ அந்த நாடு அல்லது அதன் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளுக்கு இணங்கிய வகையில் தொடர்புடைய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனம் ஆகியவை சஅுக மீன்பிடிப்பில் ஈடுபட்ட கலன்களை கண்டறியும். இத்தகைய வர்த்தகத்தை நீக்க முறைகளை பரிசீலிக்கும். தேசீய சட்டத்தில் இயன்றவரை இம்முறைகள் சேர்க்கப்பட வேண்டும் அத்தகைய வியாபாரம் நடத்துவது அல்லது சஅுக மீன்பிடிப்பில் பெறப்பட்ட மீன் மற்றும் மீன்பொருட்களை வர்த்தகம் செய்வது சட்டமீறலாகும் என சட்டம் இயற்ற வேண்டும். சஅுக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களை அடையாளம் காணுதல் அனைத்தும் நியாயமான வெளிப்படையான வேறுபாடு காட்டாத முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

74. சஅுக மீன்பிடிப்பில் ஈடுபட்டதாக அடையாளம் கண்ட கலன்களுடன் வர்த்தகம் கொள்வதாக அடையாளம் கண்ட இறக்குமதியாளர்கள் கப்பலுக்கு ஏற்றித்தருபவர்கள் வாங்குபவர்கள், உபயோகிப்பாளர்கள், சாதனங்கள் வழங்குபவர்கள் வங்கியாளர்கள் காப்பீட்டாளர்கள்,இதரசேவைவழங்குபவர்கள் ஆகியோருடன் வர்த்தகம் நடத்துவது தீங்கான விளைவுகளைத் தரும் என்பதை நாட்டின் மீன்பிடிப்போர் உணர்ந்து கொள்வதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும். எந்த நாட்டின் எல்லைக்குள் கலன் இயங்குகிறதோ அந்த நாடு அல்லது அதன் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளுக்கு இணங்கிய வகையில் தொடர்புடைய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனம் ஆகியவை சஅுக மீன்பிடிப்பில் ஈடுபட்ட கலன்களை கண்டறியும். இத்தகைய வர்த்தகத்தை நீக்க முறைகளைப் பரிசீலிக்கும். இயன்றவரை தேசீய சட்டத்தில் இம்முறைகள் சேர்க்கப்பட வேண்டும். அத்தகைய வியாபாரம் நடத்துவது அல்லது சஅுக மீன்பிடிப்பில் பெறப்பட்ட மீன் மற்றும் மீன் பொருட்களை வர்த்தகம் செய்வது சட்ட மீறலாகும் என சட்டம் இயற்றப்பட வேண்டும். சஅுக மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களை அடையாளம் காணுதல் அனைத்தும் நியாயமான வெளிப்படையான வேறுபாடு காட்டாத முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

75. பசெதி நடவடிக்கையை செயல்படுத்துவதை ஊக்குவிக்க உதவும் வகையில் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு உகந்தது ஆன பயன்படும் பொருளின் விபரம் மற்றும் குறியீட்டு அமைப்புகளை பயன்படுத்துவதற்கு நாடுகள் முயற்சிக்க வேண்டும்.

76. விரிவாக செய்யத்தக்க வகையில் சான்றிதழ் மற்றும் ஆவணத் தேவை வரையறுக்கப்பட வேண்டும். இயலும் இடங்களில் திறனை உறுதி செய்யவும், பித்தலாட்டத்திற்கான

வாய்ப்புகளைக்குறைக்கவும் வர்த்தகத்தின் மீதான தேவையற்ற சுமையை தவிர்க்கவும் மின்னணு திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும்.

## ஆராய்ச்சி

77. பதப்படுத்தப்பட்ட பொருட்களின் மாதிரிகளில் இருந்து மீன்களின் சிற்றின வகைகளை அடையாளம் காண்பதற்கான வழிகள் மீது விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சியை நாடுகள் ஊக்குவிக்க வேண்டும். பரம்பரை பற்றியும் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்களின் மாதிரிகளில் இருந்து மீன்களின் சிற்றின வகைகளை அடையாளம் காண்பதற்காக இயன்ற அளவு இருப்பின் தோற்றத்தை அடையாளம் காணும் திறனையும் சேர்த்து பயன்படுத்தப்படும் அடையாளங்கள் பற்றியும் விபரங்களுக்கான விலை ஒன்று நிறுவிடுதலை உவேஅ எளிதாக்க வேண்டும்.

### மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள்

78. உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும், அவற்றிற்கு கட்டுப்படும் சஅக மீன்பிடிப்போடு சம்மந்தப்பட்ட கொள்கை மற்றும் முறைகளை வலியுறுத்தி நடைமுறைக்கு கொண்டு வருவதில் இணக்கத்தை நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும். தற்சமயம் ஏதும் இல்லாத இடங்களில் அத்தகைய நிறுவனங்களை மண்டலங்களில் நிறுவிடுதலில் நாடுகள் ஒத்துழைக்க வேண்டும்.

79. சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மேற்கொள்ளும் முறைகளின் வெற்றிக்கு உரிய நாடுகளின் ஒத்துழைப்பு முக்கியமானது. உரிய மீன்வள மேலாண்மை நிறுவனத்தின் உறுப்பினர் அல்லாத நாடுகள் அவற்றின் பன்னாட்டு கடமைகளுக்கு இணங்கிட அந்த மீன்வள மேலாண்மை நிறுவனத்துடன் ஒத்துழைக்கும் தங்கள் கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுவதில்லை. மண்டல மீன்வள நிறுவனத்தால் நிறுவப்பட்ட பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகளைப் பயன்படுத்த ஒப்புக்கொள்வதன் மூலம் நாடுகள், ஒத்துழைக்கும் தங்கள் கடமையை அமுல் படுத்த வேண்டும் அல்லது பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகளை முரண்பாடு இன்றி பின்பற்ற வேண்டும். தங்கள் கொடிகளைப்பறக்கவிடும் உரிமை பெற்ற கலன்கள் அத்தகைய முறைகளை வலிவற்றதாக்காது என்பதனை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

80. உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனம் மூலம் செயல்படும் நாடுகள் சஅக மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க பன்னாட்டு விதிகளுக்கு இணங்க, புதிதாக வழிகளை அமைத்து பலப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கீழ்க்கண்ட முறைகளும் சேர்க்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

80.1 சஅக மீன்பிடிப்பை தடுக்க, நீக்க, நிறுத்த அவற்றின் திறத்தினைப்பெருக்கிடும் வகையில் உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனத்தைப் பலப்படுத்துதல்;

80.2 பன்னாட்டு சட்டத்திற்கு இணங்க இணக்க முறைகளை மேம்படுத்துதல்;

80.3 அதிகாரம் சார்ந்த அறிவிப்பிற்காக விரிவான ஏற்பாடுகளை அமைத்து செயல்படுத்துதல்;

80.4 சஅக மீன்பிடிப்பில் ஈடுபடும் அல்லது அதற்கு உதவிடும் கலன்களைப் பற்றிய தகவல்களை பரிமாற்றம் செய்வதை நிறுவி ஒத்துழைத்தல்;

80.5 உரிய மண்டல மீன்வள நிறுவனத்தின் பொறுப்பில் உள்ள பகுதியில் மீன்பிடிக்கும் கலன்களின் பதிவேடுகளை ஏற்படுத்தி நிர்வகித்தல். மீன்பிடிக்க அங்கீகாரம் பெற்றவை மற்றும் சஅக மீன்பிடிப்பில் ஈடுபட்ட அல்லது உதவியவை ஆகிய இருவகைகளும் பதிவேடுகளில் உள்ளடக்கப் படுதல் வேண்டும்;

80.6 சஅுக மீன்பிடிப்பை கண்காணிக்க வர்த்தக விபரங்களை தொகுத்து பயன்படுத்தும் முறைகளை அமைத்தல்;

80.7 குறைந்த நேரத்தில் மீன்பிடிப்பு களஅு பிற புதிய தொழில் நுட்பங்கள் மீன் இறங்குதலை கண்காணித்தல் துறைமுகக் கட்டுப்பாடு கப்பலுக்கு ஏற்றுவதை ஆய்வு செய்தல் ஆகியவை பொருந்திய வகையில் பன்னாட்டு ஒப்பந்தத்தில் வழங்கப்படாதவரை தங்கள் எல்லைகளில் அதன் உறுப்பினர்கள் செயல்படுத்துவதற்காக ஊக்கம் அளித்தலையும் சேர்த்து எ.க கண்காணித்தலை மேம்படுத்துதல்;

80.8 பொருந்தும் இடங்களில் மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனத்திற்குள்ளாக பன்னாட்டு சட்டத்திற்குட்பட்டு கலனின் தலைவர்கள் மற்றும் ஆய்வாளர்களின் உரிமை மற்றும் கடமைகளை கருத்தில் கொண்டு கலனுக்குள் ஏறிச் செல்லுதல் மற்றும் ஆய்வு அமைப்புகளை மேம்படுத்துதல்.

80.9 பார்வையாளர் திட்டங்களை மேம்படுத்துதல்;

80.10 பசெதி நடவடிக்கைக்கு இணங்க பொருந்தும் இடங்களில் சந்தை தொடர்பான முறைகள்;

80.11 கலன் சஅுக மீன்பிடிப்பில் ஈடுபட்டது அல்லது அதற்காக உதவியது என கருதப்படும் சூழ்நிலைகளை வரையறுப்பது;

80.12 கல்வி மற்றும் பொதுமக்களின் விழிப்புணர்வு திட்டங்களை மேம்படுத்துதல்;

80.13 செயல் திட்டங்களை மேம்படுத்துதல்;

80.14 உறுப்பினர்கள் ஒப்புக்கொள்ளும் இடங்களில் இவை சஅுக மீன்பிடிப்பில் முடியும் என்ற அக்கறை இருப்பின் வாடகைக்கு அமர்த்தும் ஏற்பாடுகள் தேர்வு செய்தல்;

81. உரிய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனம் மூலம் செயல்படும் நாடுகள் கால அடிப்படையில் வருடத்திற்கு ஒரு முறையேனும் பிற மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்களுக்கும் உவே அமைப்பிற்கும் சஅுக மீன்பிடிப்பை தடுத்தல் நீக்குதல் நிறுத்துதல் தொடர்பான விபரங்களை தொகுத்து கிடைக்கச் செய்தல் வேண்டும். இவை உள்ளடக்கு பவையாவன :

81.1 மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனத்தின் பொறுப்பில் உள்ள பகுதியில் சஅுக மீன்பிடிப்பின் நடவடிக்கைகளின் அளவு பரிமாணம் மற்றும் இயல்பு ஆகியவற்றை மதிப்பிடுதல்;

81.2 சஅுக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த நீக்க மேற்கொண்ட முறைகளின் விபரங்கள்;

81.3 பொருந்தியவாறு மீன்பிடிக்க அங்கீகாரம் பெற்ற கலன்களின் பதிவேடுகள்;

81.4 சஅுக மீன்பிடிப்பில் ஈடுபட்ட கலன்களின் பதிவேடுகள்;

82. தொடர்புடைய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்களில் சஅுக மீன்பிடிப்பு தொடர்பாக மண்டல மீன்வள நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்கும் வகையில் கொள்கையை பலப்படுத்துதல் மற்றும் நிறுவன நோக்கங்கள் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்க வேண்டும்.

82.1 உட்புற நோக்கங்கள் மற்றும் பிற மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் ஆகிய இரண்டிற்காகவும் சஅுக மீன்பிடிப்பு குறித்த கொள்கை நோக்கங்களை தீர்மானிப்பது.

82.2 பொருந்தியவாறு உரிமைக்கட்டளை அலுவல், நிதி, முடிவுகள் மேற்கொள்ளுதல், அறிவித்தல் அல்லது விபரத்தேவைகள், திட்டங்களை நடை முறைக்கு கொண்டு வருதல்

ஆகியவற்றை உள்ளடக்கி சஅக மீன்பிடிப்பு தொடர்பான கொள்கைகளின் போதிய செயல்பாட்டிற்காக நிறுவன நுட்பத்தைப்பலப்படுத்துதல்.

**82.3** இயன்றவரை சஅக மீன்பிடிப்பு குறிப்பாக நடைமுறைக்கு கொண்டு வருதல் வர்த்தக நோக்கம் தொடர்பாக பிற மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை முறைப்படுத்துதல்.

**82.4** தங்களுக்குள்ளே பிற மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய மண்டல மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் குறித்த காலத்தில் கொள்கை மற்றும் முறைகளை செயல்படுத்துவதை உறுதி செய்தல்.

**83.** தொடர்புடைய மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மூலமாக செயல்படும் நாடுகள் தொடர்புடைய மீன்வளத்தில் உண்மையான ஆர்வத்துடன் அந்த நிறுவனங்களுடன் இணைந்து அவர்களின் பணிகளில் முழுதுமாக பங்கு கொண்டு ஒப்பந்தம் இல்லாத குழுக்களை ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறு இயலாத இடங்களில் மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் ஒப்பந்தம் இல்லாத குழுவினரை ஊக்குவிக்க வேண்டும். பயன்படும் பன்னாட்டு ஒப்பந்தங்கள், பன்னாட்டு சட்டம் ஆகியவற்றிற்கு இணக்கமான வகையில் தொடர்புடைய நிறுவனங்கள் நிறுவனங்கள் மேற்கொள்ளும் ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகளை செயல்படுத்துதலை எளிதாக்க வேண்டும். பன்னாட்டு சட்டத்திற்கு இணங்கிய வகையில் மீன்வளத்தில் வளம்குன்றாத தன்மையை அதிகரிக்கவும் ஒருங்கிணைப்பை நன்கு வளர்க்கவும் மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் ஆதாரங்களுக்குச் செல்லும் வழி குறித்த பிரச்சனைகளைத் தெளிவாக்க வேண்டும். பசெதிந பத்தி 78 மற்றும் 79 ஐ செயல்படுத்துவதில் ஒப்பந்தமில்லாத குழுவிற்கு தேவைக்கு ஏற்ப தொடர்புடைய மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் மூலம் செயல்படும் நாடுகள் உதவிட வேண்டும்.

**84.** தொடர்புடைய மீன்வள மேலாண்மை நிறுவனத்திற்கு உட்பட்ட மீன் இருப்புகளை பாதிக்கும் சஅக மீன்பிடிப்பில் தனது நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்லது தனது கொடியைப்பறக்க விடும் உரிமை பெற்ற கலன்கள் ஈடுபடாது என்பதனை உறுதி செய்ய நாடு தவறும் பட்சத்தில் நிறுவனம் மூலமாக செயல்படும் உறுப்பினர் நாடுகள் அந்த நாட்டின் கவனத்திற்கு இந்த பிரச்சனையைக் கொண்டு வர வேண்டும். இப்பிரச்சனை தீர்க்கப்படாவிட்டால் பன்னாட்டு சட்டத்திற்கு இணங்கி ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகள் மூலமாக உரிய முறைகளை மேற்கொள்வதற்கு நிறுவனத்தின் உறுப்பினர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்.

## V. வளரும் நாடுகளின் தனிப்பட்ட தேவைகள்

**85.** பொருந்தும் இடங்களில் உவே அமைப்பு பன்னாட்டு நிதி நிறுவனங்கள், நுட்பம் ஆகியவற்றின் உதவியோடு பயிற்சி மற்றும் திறனை வளர்த்தல் ஆகியவற்றிற்கு உதவிட ஒத்துழைக்க வேண்டும். குறைந்த அளவில் முன்னேறும் நாடுகள், முன்னேறி வரும் சிறிய தீவுகள் ஆகியவற்றையும் சேர்த்து வளரும் நாடுகளுக்கு நிதி தொழில்நுட்பம் மற்றும் பிற உதவிகள் வழங்குவதைப் பரிசீலிக்க வேண்டும், இதனால் பசெதி நடவடிக்கையின் கீழ் அவற்றின் பொறுப்புகள் கொடிநாடு மற்றும் துறைமுக நாடுகள் என்பதால் ஏற்படும் பணிகள் ஆகியவற்றையும் சேர்த்து பன்னாட்டு விதிக்கு இணங்க அவற்றின் கடமைகளை முழுமையாக ஆற்ற இயலும். பத்தி 25க்கு ஏற்ப தேசீய திட்ட நடவடிக்கைகளை அமைத்து செயல்படுத்தும் அத்தகைய நாடுகளுக்கு குறிப்பாக இந்த உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

**86.** பொருந்திய இடங்களில் கீழ்க்கண்டவைகளுக்காக நாடுகள் உவே அமைப்பு பன்னாட்டு நிதி நிறுவனங்கள், நுட்பங்கள் ஆகியவற்றின் உதவியோடு ஒத்துழைக்க வேண்டும்;

86.1 தேசீய சட்டம் மற்றும் மண்டல கட்டுப்பாட்டு அமைப்புகள் ஆகியவற்றை ஆய்வு செய்தல் திருத்தி அமைத்தல்;

86.2 மீன்வளத்தை மேம்படுத்துதல் உகந்தது ஆக்குதல் தொடர்பான விபரங்களை சேகரித்தல்;

86.3 மண்டல நிறுவனங்களை வலுவாக்குதல்;

86.4 துணைக்கோள்கள் மூலம் கண்காணிப்பதையும் சேர்த்து ஒருங்கிணைக்கப்பட்ட எ.க.க. அமைப்புகளை அதிகரித்து வலுவாக்குதல்;

## VI. அறிவித்தல்

87. நடத்தை விதித்தொகுப்பின் மீது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை உவே அமைப்பிற்கு அறிவித்தலைப் போன்று சஅக மீன்பிடிப்பை நிறுத்த நீக்க தடுக்க செயல்படுத்த தங்கள் திட்டங்களை விளக்கி முன்னேற்றத்தை உவே அமைப்பிற்கு நாடுகளும் மீன்வள மேலாண்மை நிறுவனங்களும் அறிவிக்க வேண்டும். காலமுறைப்படி இந்த அறிக்கைகள் உவே அமைப்பில் பிரசுரிக்கப்படும்.

## VII. உவே அமைப்பின் பங்கு

88. உவே அமைப்பு அதன் கூட்டத்தில் அறிவுறுத்தியபடி அந்த அளவிற்கு தொடர்புடைய அனைத்து விபரங்களையும் சேகரிக்க வேண்டும். இந்த விபரங்கள் மேற்கொண்டு ஆராய்வதற்கு அடிப்படையாக அமையும். அளிப்பதற்கும் விளைவுகளை ஏற்படுத்தவும் மேலாண்மை கட்டுப்பாடுகள் இல்லாமை வளத்தைக்குன்றச் செய்யும் மீனவ மேலாண்மை முறைகள் மான்யங்கள் போன்ற சஅக மீன்பிடிப்பை விளைவிப்பவை மற்றும் காரணங்களை கண்டறியும் நோக்கமாகக்கொண்டு இருக்கும்.

89. உவே அமைப்பு அதன் கூட்டத்தில் அறிவுறுத்தியபடி அந்த அளவிற்கு சஅக மீன்பிடிப்பை நிறுத்த நீக்க தடுக்க தேசீய மற்றும் மண்டல திட்டங்களை அமைக்கவும் செயல்படுத்தவும் உதவும் வழக்கமான திட்ட நிதியுடன் தனித்த உள்நாட்டு தொழில்நுட்ப உதவி திட்டங்கள் மூலமாக மற்றும் இந்த நோக்கத்திற்காக நிறுவனத்திற்கு கிடைக்கும் தனியான வரவு செலவு பட்டியல் தொகையைப் பயன்படுத்துவது மூலமாகவும் உதவிடும்.

90. உரிய தொடர்புடைய பன்னாட்டு நிறுவனங்கள் குறிப்பாக ப.க. நிறுவன ஒத்துழைப்போடு, உவே அ சக மீன்பிடிப்பு பிரச்சனையை மேலும் புலன் ஆய்வு செய்தல் வேண்டும்.

91. பசெதிந 76 ஐ செயற்படுத்திட வல்லுநர் கலந்தாய்விற்கு உவேஅ ஏற்பாடு செய்ய வேண்டும்.

92. 1993 உவே அமைப்பின் இணக்க ஒப்பந்தத்தின் பிரிவு வழங்கிய விபரத்திற்கு கட்டுப்பாடு இல்லாதவாறு அந்த விபரங்களையும் சேர்த்து மண்டல மற்றும் உலக அளவில் விபர மையங்களை நிறுவி நிர்வகிப்பதால் ஏற்படும் பயன்களை உவே அமைப்பு ஆராய்தல் வேண்டும்.

93. செயலாக்கத்தின் விரிவான ஆய்வின் அடிப்படையில் உவே அமைப்பு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பசெதி நடவடிக்கையை செயல்படுத்துதல் குறித்த முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்யும்.

**பிற்சேர்க்கை II**

**மீன்வளம் தொடர்பான எச்சரிக்கை, கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பிற்கான பன்னாட்டு வலை அமைப்பின் தொழில் நுட்ப வார்த்தைகள்.**

முகப்புரை

மறுபடியும் உணர்ந்து கொள்ளுதல்:

தங்கள் நாட்டினர் ஈடுபட்டுள்ள மற்றும் அல்லது பயன்பெறும் மீன்வளத்தை பராமரிப்பது நாடுகளின் பொறுப்பு;

கடல்வள ஆதாரங்களின் நீண்டகால வளம்குன்றாத வளர்ச்சியை வழங்குவதே நாட்டின் ஆர்வம்;

எல்லைக்குள் மற்றும் கடற்கரையோரப் பகுதிகள், ஆழ்கடல் பகுதிகள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் மீன்பிடி நடவடிக்கைகளின் எல்லை மற்றும் பிரிவு;

இலக்கு இடப்படாத சிற்றின வகைகள் மற்றும் பரந்த கடல்வள சுற்றுப்புறச்சூழலில் மீன்பிடிப்பால் ஏற்படும் விளைவுகள் உள்நாட்டு மற்றும் அந்நிய நாட்டு கலன்கள் மீன்வள மேலாண்மை மற்றும் பாதுகாப்பு முறைகளுடன் இணக்கமாக இருத்தலை உறுதி செய்ய ஆகும் செலவினம்;

மீன்வளம் தொடர்பான எச்சரிக்கை கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு (எகக) ஆகியவற்றில் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பால் ஏற்படும் பயன்கள்;

எகக விபரங்களை சேகரித்தல் மற்றும் பகிர்ந்து கொள்வதால் ஏற்படும் நன்மைகள், மற்றும்

தேசீய, மண்டல மற்றும் பன்னாட்டு சட்டம் உட்பட தொடர்ந்து மீன்வளம் தொடர்பான எகக முறைகளை செயல்படுத்த நாட்டிற்கு தேவையானவை:

பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பின் கட்டுரை 8.1.4 மற்றும் எகக தொடர்பான பிற பகுதிகள்,

மார்ச் 10 மற்றும் 11ல் நடைபெற்ற உவே அமைப்பின் அமைச்சரக கூட்டத்தில் பின்பற்றப்பட்ட நடத்தை விதித்தொகுப்பை பயன்படுத்துதல் மீதான ரோமின் அறிவிக்கை இனம் 12.1, 1999.

ஆழ்கடலில் மீன்பிடிகலன்கள் பன்னாட்டு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணங்குதலை ஊக்குவிப்பதற்கான ஒப்பந்தத்தின் கட்டுரைகள் 5,6 மற்றும் 7, நகராத மற்றும் பெரிதும் நகரும் மீன் இருப்புகளை பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல் தொடர்பாக 1982 டிசம்பர் 10ல் ஐக்கிய நாடுகளின் கடல் சட்ட மரபுபடி செயல்படுத்துவதற்காக ஒப்பந்தத்தில் விபரங்கள் சேகரித்தல் மற்றும் பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றிற்கான வரையறுக்கப்பட்ட தேவைகள் பிற்சேர்க்கை, மற்றும் சட்டத்திற்கு புறம்பான, கட்டுப்பாடற்ற அறிவிக்கப்படாத மீன்பிடிப்பபை தடுக்க, நிறுத்த நீக்க பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கையின் கட்டுரை 24.

எச்சரிக்கை கட்டுப்பாடு மற்றும் மீன்பிடிப்பை கண்காணித்தல் மீதான பன்னாட்டு கூட்டத்தில் கலந்து கொண்ட நாட்டினர், (சந்தியாகோ, சிலி, சனவரி 25 மற்றும் 26, 2000) மீன்வளம் அமுல்படுத்துதல் குறித்து தொடர்பான ஒருங்கிணைப்பிற்காக பன்னாட்டு வலையமைப்பை தோற்றுவிக்க வேண்டும் என்ற தங்கள் எண்ணத்தை தெரிவித்தனர்.

**1. வரையறை**

பன்னாட்டு எகக வலை அமைப்பு என்பது தேசீய அமைப்புகள்/ நிறுவனங்களின் ஏற்பாடாகும். எகக நடவடிக்கைகள் இவற்றின் பொறுப்பில் உள்ளன. நாடுகள்,

சட்டத்திற்குப்புறம்பான கட்டுப்பாடற்ற அறிவிக்கப்படாத (சஅக) மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க ஒத்துழைத்து ஒருங்கிணைந்து செயல்பட இவற்றிற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளன.

## 2. நோக்கங்கள் மற்றும் பணிகள்

2.1 பன்னாட்டு எகக வலை அமைப்பின் நோக்கங்கள் மீன்வளம் தொடர்பாக எகக பணிகளின் திறன் மற்றும் பயன்களை முன்னேற்றமடையச் செய்வதாகும். மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு, தகவல்கள் சேகரிப்பு மற்றும் எகக தொடர்பான நடவடிக்கைகளுக்கு பொறுப்பான தேசீய நிறுவனங்கள்/ அமைப்புகளுக்கு இடையில் பரிமாற்றம் ஆகியவற்றின் மூலமாக முன்னேற்றமடையச் செய்ய வேண்டும்.

2.2 கீழ்க்கண்ட பணிகளின் மூலமாக நாடுகள் நோக்கங்களை அடைய வேண்டும்.

அ) நாடுகள் அவற்றின் மீன்வளம் தொடர்பான எகக பணிகளுக்கு பொறுப்பான தேசீய நிறுவனங்கள் / அமைப்புகளை அடையாளம் காண வேண்டும். இந்த வலை அமைப்பு பணியின் நோக்கங்களுக்காக தேசீய முக்கிய ஒருங்கிணைப்பாளராக செயல்படக்கூடிய முதன்மையான தொடர்பாளரை அடையாளம் காண வேண்டும்;

ஆ) ஏற்பாடுகளுக்கு, பிற குழுவினருக்கு உரிய நேரத்தில் சரியான எகக தகவல்களை சேகரித்து வழங்க வேண்டும்;

இ) கோரிக்கைகளை பரிசீலிக்க வேண்டும். பொருந்தக் கூடிய இடங்களில் இயன்ற அளவில்இணைந்த மீன்வளம் தொடர்பான எகக நடவடிக்கைகளில் ஒத்துழைக்க வேண்டும்;

ஈ) கலந்து கொள்ளும் குழுவில் உள்ளவர்களின் திறனை வளர்க்கவும் எகக அறிவை வளர்த்துக் கொள்ளவும் தொழில்நுட்ப உதவிகள் பயிற்சி அனுபவ பரிமாற்றம் மற்றும் நிறுவன வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்த வேண்டும்;

உ) தனித்த தேவைகளையும் மற்றும் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் தடைகளையும் பரிசீலிக்க வேண்டும்; மற்றும்

ஊ) பன்னாட்டு எகக வலை அமைப்பு நிர்வாகியை அடையாளம் கண்டு நியமனம் செய்ய வேண்டும்.

## 3. நிறுவனம்

3.1 பன்னாட்டு எகக வலை அமைப்பில் பங்கு கொள்வது தன்னார்வமானதே. எகக பணிகளுக்கு பொறுப்பான அமைப்புகள்/ நிறுவனங்கள் பங்கு கொள்ள இயலும். அதற்காக பன்னாட்டு எகக வலை அமைப்பு நிர்வாகிக்கு பன்னாட்டு எகக வலை அமைப்பு வலைத்தளத்தில் கிடைக்கும் படிவத்தை எழுதி பூர்த்தி செய்து பயன்படுத்தி அறிவிப்பு செய்து பங்கு கொள்ளும்.

3.2 எகக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைப்பு நிறுவனங்கள் பங்கு கொள்ளும். அதன் தற்போதைய ஆதாரங்களுக்கு ஏற்ப அதன் எல்லைக்குட்பட்டு வழங்கும் ஆதாரங்கள் கிடைக்கும் எனில் மேலும் பங்கேற்க ஊக்குவிக்கப்படும்.

3.3 எகக நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பங்கு கொள்ளும் அமைப்பு/ நிறுவனங்களின் வலைத்தளத்தை அடைய பன்னாட்டு எகக வலை அமைப்பு நிர்வாகி, பன்னாட்டு வலை அமைப்பில் தொடர்பை பராமரிப்பார். தொடர்புப் பகுதிக்கான வழியையும் மற்றும் வலைத்தளத்தில் கிடைக்கும் விபரங்களைப் பெறுவதற்கான வழியையும் வலைத்தளம்

''விபர தேவைகள்'' என அடையாளப் படுத்தப்படுகிறது. வலை அமைப்பு நிர்வாகி சங்கேத வார்த்தைகளை வழங்குவார். வலைத்தளத்திற்கு செல்லும் வழியை நிர்வகிப்பார்.

## 4 விபரங்கள் பரிமாற்றத்திற்கான முதற்குறிப்பு

4.1 நிறுவனம்/ அமைப்புகள் விபரங்களை சேகரித்துப் பரிமாற்றம் மற்றும் அனுப்புதல் ஆகியவற்றில் ஒத்துழைக்க வேண்டும். சட்டத்திற்குட்பட்ட மற்றும் தனிப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தனிச்சலுகை பெற்ற விபரங்களின் நம்பகத்தன்மை குறித்த ஒவ்வொரு நாட்டின் மரபுகளுக்கு ஏற்ப செயல்பட வேண்டும்.

4.2 இயன்றவரை செயல்படுத்தக் கூடிய வகையில் விபர தேவைகளில் பெறப்பட்ட விபரங்கள் பன்னாட்டு எகக வலை அமைப்பு மூலமாக கிடைக்கக் கூடியதாகச் செய்ய வேண்டும்.

4.3 பன்னாட்டு எகக வலை அமைப்பின் மூலம் பெற இயலாத விபரங்களுக்கு, பன்னாட்டு எகக வலை அமைப்பின் வலைதளத்தில் குறிப்பிடப்பட்ட தொடர்பாளர்(கள்) அல்லது நியமிக்கப்பட்ட நபர் (கள்) ஆகியோருக்கு கோரிக்கை அனுப்ப வேண்டும். தொடர்பாளர் அல்லது நியமிக்கப்பட்டவர் தவறாது அத்தகைய கோரிக்கைகளுக்கு பதில் தருவதை உறுதி செய்ய வேண்டும்.

4.4 தகவல்களின் சுதந்திரம் மற்றும் இரகசிய தன்மையைப் பொறுத்தவரை, பங்கு கொள்ளும் ஒவ்வொருவருக்கும் சட்டம் பொருந்தும். கோரிக்கைக்கு இணங்கி வழங்கப்பட்ட தகவல்கள் நம்பகத்தன்மையில் வழங்கப்பட்டவை. விபரத்தை வழங்கியவர் அனுமதி வழங்காதவரை இவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

## 5. விபரத் தேவைகள்

5.1 அமைப்பு/ நிறுவனம் அவற்றின் தேசீய சட்டத்திற்கு இணங்க எகக ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை எளிதாக்க கீழ்க்கண்ட விபரங்களைச் சேகரித்து பராமரிக்க வேண்டும். குறைந்த அளவிலேனும் இது உவே அமைப்பின் இணக்க ஒப்பந்தத்திற்குட்பட்ட விபரங்களை உள்ளடக்கும். இயன்றவரை சஅக மீன்பிடிப்பை எதிர்த்துப் போராட பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கையில் திட்டமிட்டபடி விபரங்களை உள்ளடக்கும்.

5.2 விபரங்களின் பரிமாற்றத்திற்கான முதல் குறிப்பு விவரித்தபடி விபரங்கள் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 5 (அ) அமைப்பு/ நிறுவன தொடர்பு விபரங்கள்

- முதன்மை தொடர்பு அலுவலர் (பெயர், தொலைபேசி எண்கள் தொலைஅச்சு, ஈமெயில், மொழி)
- முக்கிய நபர்களின் பெயர் மற்றும் பதவி நிலை (முகவரி, தொலைபேசி எண்கள், தொலைஅச்சு, ஈமெயில், வலைத்தளம்)
- மீன்வளம் தொடர்புடைய எகக அமைப்பு / நிறுவனங்களின் பெயர் (பொதுவாக நிறுவனத்தின் விபரம் மற்றும் அமைப்பு)

### 5(ஆ) கலன் தொடர்பான விபரங்கள்

- கலனின் பெயர்
- பதிவு எண் (கிடைக்குமெனில் பகநி.எண்)
- கலன் கொடி
- முந்தைய கொடி நாடு மற்றும் மாற்றம் செய்த தேதி

- கலனின் முந்தைய பெயர்கள் மற்றும் மாற்றம் செய்த தேதி
- பதிவு மற்றும் பதிவு செய்யப்பட்ட துறைமுகம்
- பன்னாட்டு ரேடியோ அழைப்பு குறி
- உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரி (தொலைபேசி எண்கள் தொலைஅச்சு, ஈமெயில், வலைத்தளம்)
- முந்தைய உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரி
- கலனை கட்டிய நபரின் பெயர் முகவரி (தொலைபேசி எண்கள் தொலைஅச்சு, ஈமெயில், வலைத்தளம்)
- கட்டப்பட்ட பொழுது அமைக்கப்பட்ட மீன்பிடி முறை அமைப்பு (கலன் வகை)
- தற்சமயம் நிறுவப்பட்ட மீன்பிடி முறை அமைப்பு
- எங்கு கட்டப்பட்டது கட்டப்பட்ட தேதி
- நீளம் (மீ)
- செயல்படும் துறைமுகம்
- வண்ண புகைப்படம்
- கலன் நிலை அமைப்பு (வகை)
- அனியத்தின் அதிகபட்ச நீளம்
- பாய்மரம் (மீ)
- ஆழம் (மீ)
- கொள்ளும் திறன் (கமீ)
- பதிவு செய்யப்பட்ட மொத்த எடை (பமொஎ) (மொத்த எடை)
- பதிவு செய்யப்பட்ட நிகர எடை (பநிஎ) (நிகரஎடை)
- இடம்பெயர்தல் அளவு (டன்)
- முக்கிய இயந்திங்களின் மதிப்பிடப்பட்ட ஆற்றல் (குச)
- துணை இயந்திரங்களின் மதிப்பிடப்பட்ட ஆற்றல் (குச)

**5 (இ) மீன்பிடிப்பு அனுமதி / அங்கீகாரம்**

- கலனின் பெயர்
- இயற்கையாக அல்லது சட்டப்படி மீன்பிடிக்க அங்கீகாரம் பெற்ற நபர்
- பகுதி, நோக்கம் மற்றும் அங்கீகாரம் அளிக்கப்பட்ட கால கெடு
- சிற்றின வகைகளின் பெயர் அல்லது உவே அமைப்பின் தொகுப்பு அங்கீகரிக்கப்பட்ட மீன்பிடி சாதனம் பொருந்தும் இடங்களில் பிற பயன்படுத்தப்படக் கூடிய மேலாண்மை முறைகள்
- கலன் எச்சரிக்கை அமைப்பு
- பிடிக்கப்பட்டவற்றை அறிவிக்க தேவையானவை
- அறிவித்தல் மற்றும் கப்பலுக்கு மாற்றி அனுப்புவதற்காக பிற நிபந்தனைகள்

- பார்வையாளர்களை அனுமதித்தல், மீன்பிடிப்பு மற்றும் தொடர்பான தினசரி குறிப்பு புத்தகங்களை பராமரித்தல்
- கடற்பயண சாதனங்கள்
- பயன்படுத்தப்படும் பன்னாட்டு மரபு மற்றும் தேசீய சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு இணங்குதல்
- மீன்பிடி கலன்களுக்கு அடையாளமிடுதல்
- பிற வகையான மீன்வள ஏற்பாடுகளுக்கு இணக்கமாக இருத்தல்
- பன்னாடுகளால் அங்கீகரிக்கப்படும் பதிவு எண்

**5 (ஈ) மீன்பிடிப்பு / இறக்கப்படும் தகவல்கள்**

- கலனின் பெயர்
- கலனின் தினசரி நாட்குறிப்பு விபரம்
- தொடர்புடைய இடங்களில் இறக்கப்பட்டவை பற்றிய விபரம்
- விற்பனை மற்றும் அல்லது ஏற்றுமதி விபரம்

**5 (உ) எகக விபரம்**

- கலனின் பெயர்
- கலனின் ஆய்வு செய்யப்பட்ட விபரம்
- பார்வையில் படுதல் மற்றும் இயக்கம் பற்றிய பதிவு
- செயல் / தொடர்பு அலுவலர்கள்
- பன்னாட்டு சட்டத்திற்கு இணங்க விதி மீறல்கள் பற்றிய சரித்திரம் மற்றும் தண்டனை விபரங்கள் (கலன், நிறுவனங்கள், நபர்கள்)

**5(ஊ)மீன்வள சட்டங்கள்**

- குறிப்பான மீன்வளம் தொடர்பாக சட்டம் / கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகள் மற்றும் பாதுகாப்பு முறைகள்

**6** பன்னாட்டு எகக வலைப்பணி செலவினம்

**6.1** முன்பாகவே எழுதப்பட்ட ஒப்பந்தம் இல்லாதவரை தகவல்களை வழங்கும் பங்கு பெறுவோர், ஒத்துழைப்பு அல்லது உதவி அல்லது இணைந்த செயல்களில் பங்கு பெறுவோர் அத்தகைய பணிகளை வழங்குவதற்கான செலவினத்தை மேற்கொள்ள வேண்டும்.

**6.2** பன்னாட்டு எகக வலைப்பணி / மற்றும் அதன் நிர்வாகம் தொடர்பான செலவினம் வலைபணியை நிர்வகிப்பவரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**பிற்சேர்க்கை III**

**வமே அமீவநிறுவனம் நிறுவிய பாதுகாப்பு மற்றும் அமுலாக்க முறைகளுக்கு ஒப்பந்தத்தில் இல்லாத குழுவின் கலன்கள் இணக்கமாக இருப்பதை ஊக்கப்படுத்த திட்டங்கள்**[140]

இத்திட்டத்தை செயல்படுத்துவதில் ஒப்பந்தக்குழுவினர் நாட்டின் உரிமைகள் பணி மற்றும் கடமைகள் ஆகியவற்றிற்கு ஒப்புதல் அளிக்கின்றனர். ஆழ்கடலில் அந்நாட்டின் கலன்கள் வடமேற்கு அட்லாண்டிக் மீன்வளத்தில் தெரிவித்துள்ள வருங்கால பல்நோக்கு ஒத்துழைப்பு மீதான மரபுபடி நகராத மற்றும் பெரிதும் நகரும் மீன் இருப்பு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை தொடர்பான 1982 டிசம்பர் 10 ஐக்கிய நாடுகளின் கடல் சட்ட மரபு படி, ஆழ்கடலில் மீன்பிடி கலன்கள் பன்னாட்டு பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கு இணங்குதலை ஊக்குவிப்பதற்கான உவே அமைப்பு ஒப்பந்தப்படி மற்றும் பன்னாட்டு சட்டத்தின் பொதுவான கொள்கைகளின்படி குறிப்பாக நிறுவப்பட்டுள்ள மீன்வளத்திற்கு உரிய உணர்வை வழங்குவதை கடமையாகக் கொண்டு மீன்பிடிப்பு மேற் கொள்ள வேண்டும்.

1. நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் அமுலாக்க முறைகளின் விளைவை உறுதி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2. “மீன்பிடிப்பு நடவடிக்கைகள்” என்ற சொற்கள் மீன்பிடிப்பு, மீன்களைப் பதப்படுத்தும் நடவடிக்கைகள் மீன் மற்றும் மீன் பொருட்களை கப்பலுக்கு மாற்றி அனுப்புதல் மற்றும் வமேஅமீவ நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதிகளில் மீன்களுக்காக அல்லது மீன்பிடிப்பு தொடர்பான பிற எந்த நடவடிக்கையையும் குறிக்கும். “வமே அமீவ நிறுவன ஆய்வாளர்” என்ற வார்த்தை இணைந்த பன்னாட்டு ஆய்வு மற்றும் கண்காணிப்புக்கான வமேஅமீவநி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒப்பந்தக்குழுவின் மீன்வள பணிகளை கட்டுப்படுத்தும் ஆய்வாளரைக் குறிக்கும்.

3. இத்திட்டத்தை பின்பற்றுவதற்காக, வமேஅமீ நிறுவனம் உரிய விளம்பரத்தை இத்திட்டத்திற்கும் வமே அமீவ நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் அமுலாக்க முறைகளுக்கும் வழங்கும்.

4. வமேஅமீவ நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மீன்பிடிப்பில் ஈடுபடும் ஒப்பந்தத்தில் இல்லாத குழுவின் கலன்களுக்கும் இத்திட்டத்தில் உள்ள முறைகள் பொருந்தும்.

5. வமேஅமீவ நிறுவனத்தில் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் ஒப்பந்தத்தில் இல்லாத குழுவின் கலன் மீன்பிடிப்பில் ஈடுபடுவதை பார்க்க நேர்ந்தால் அக்கலன் வமேஅமீவ நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் அமுலாக்க முறைகளை வலிவற்றதாக்குகிறது என்பதாகவே கருதப்படும். கப்பலுக்கு மாற்றி அனுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒப்பந்தத்தில் இல்லாத குழுவின் கலன் வமேஅமீவ நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி அல்லது அதற்கு வெளியே உள்ள பகுதியில் பார்வையில் பட்டால் வமேஅ மீவ நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் அமுலாக்க முறைகள் அக்கலனுடன் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் பிற ஒப்பந்தமற்ற குழுவின் கலனுக்கும் பொருந்தும்.

6. அவ்வாறு பார்வையில் படுவது குறித்த விபரங்கள் வமேஅமீவநிறுவனத்தின் செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். வமேஅமீ நிறுவன செயலகம் பிறகு இத் தகவலை அனைத்து வமேஅமீவ நிறுவனத்தின் ஒப்பந்தக் குழுவிற்கும், இத்தகவல் பெறப்பட்ட ஒரு வேலை நாளுக்குள்ளாகவே அனுப்பும். பார்வையில் பட்ட கலனின் கொடி நாட்டிற்கும் எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவாக அனுப்பும்.

---

[140] வமேஅ மீவநி / பொகு ஆவணம் 97/6 செப்டம்பர் 1977ல் பின்பற்றப்பட்டது.

7. வமேஅமீவநிறுவனத்தின் ஒப்பந்தக்குழு ஒப்பந்தமில்லாத குழுவின் கலனைக்கண்டால் அத்தகைய கலன் மீன்பிடிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதைக் கண்டதாக தெரிவிக்கும். வமேஅமீவநிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் அமுலாக்க முறைகளை பலவீனப்படுத்துவதாக கருதும். இத்தகவல் அனைத்து வமேஅமீவ நிறுவனத்தின் ஒப்பந்தக்குழுவிற்கும் மற்றும் அக்கலனின் கொடிநாட்டிற்கும் வழங்கப்படும்.

8. ஒப்பந்த மில்லாத குழுவின் கலன் ஏதேனும் பார்வையில் பட்டால் அல்லது வமேஅமீநிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குள்ள பகுதியில் மீன்பிடிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அறிவிக்கப்பட்டால் அத்தகைய நிகழ்வுகளில் கலன் வமேஅமீவ நிறுவனத்தின் ஆய்வாளர் கலனில் ஏறிச் சென்று பார்ப்பதற்கு சம்மதிக்க வேண்டும். வமே அமீவநிறுவன ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புகள் வமேஅமீவ நிறுவனத்தின் செயலகத்திற்கு அனுப்பப்படும். வமேஅமீநிறுவனத்தின் செயலகம் இத்தகவலை வமேஅமீவநிறுவனத்தின் அனைத்து ஒப்பந்தக்குழுவிற்கும் இத்தகவல் பெறப்பட்ட ஒரு வேலை நாளுக்குள்ளாகவே அனுப்பும். ஏறிச்சென்று பார்த்த கலனின் கொடி நாட்டிற்கும் எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவாக அனுப்பும். கலனில் ஏறி உள்ளே சென்று பார்த்த ஒப்பந்தமில்லாத குழுவின் கலனுக்கும் வமேஅமீவநி ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புகளின் நகல் வழங்கப்டும்.

9. பத்தி 5ல் குறிப்பிடப்பட்ட ஒப்பந்த மில்லாத குழுவின் கலன் ஏதேனும் ஒரு வமேஅமீவ நிறுவனத்தின் ஒப்பந்தக்குழுவின் துறைமுகத்திற்குள் நுழைந்தால் வமே அமீவநிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் அமுலாக்கும் முறைகளையும் மற்றும் இத்திட்டத்தையும் அறிந்த ஒப்பந்தக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களால் அக்கலன் ஆய்வு செய்யப்படும். அத்தகைய ஆய்வு நடைபெறும் வரை, கலன் மீன்களை இறக்கவோ அல்லது கப்பலுக்கு மாற்றி அனுப்பவோ கூடாது. கலனின் ஆவணங்கள், தினசரி நாட்குறிப்பு புத்தகங்கள், மீன்பிடிசாதனங்கள், கலனில் உள்ள பிடிக்கப்பட்ட மீன்கள் மற்றும் வமே அமீவநிறுவனத்தின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் கலனின் நடவடிக்கைகள் தொடர்பான பிறவும் ஆய்விற்கு உட்படுத்தப்படும்.

10 பத்தி 9ல் குறிப்பிடப்பட்டிருந்த ஆய்வைத் தொடர்ந்து அத்தகைய கலனில் கீழ்க்கண்டவை இருந்தால் ஒப்பந்தமற்ற குழுவின் கலனிலிருந்து அனைத்து மீன்களையும் இறக்குதல் மற்றும் கப்பலுக்கு மாற்றி அனுப்புதல் தடைசெய்யப்படும்.

- (i) பிற்சேர்க்கை ‘அ‘ ல் குறிப்பிடப்பட்டுள்ள சிற்றின வகைகள் வமேஅமீவநிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதிகளுக்கு வெளியே பிடிக்கப்பட்டவை என்பதனை கலன் நிரூபிக்க வேண்டும்; அல்லது
- (ii) பிற்சேர்க்கை ‘ஆ‘ ல் குறிப்பிட்டப்பட்டுள்ள பிற சிற்றின வகைகள் வமே அமீவ நிறுவனத்தில் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதிகளுக்கு வெளியே பிடிக்கப்பட்டவை என்பதனை கலன் நிரூபிக்க வேண்டும்.

11. ஒப்பந்தக்குழுக்கள் வமேஅமீவநிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதிகளில் மீன்பிடிப்பு மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்ட அல்லது பார்க்கப்பட்ட ஒப்பந்தமற்ற குழுவின் கலனிலிருந்து அக்கலன்கள் மீன்களைப் பெறவில்லை என்பதனை உறுதி செய்ய வேண்டும்.

12. ஒப்பந்தக்குழுவின் துறைமுகங்களில், ஒப்பந்தமற்ற குழுவின் கலன்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள் பற்றிய விபரங்கள் மற்றும் அதனைப் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விபரங்கள் உடனடியாக வமேஅமீவநிறுவன செயலகம் மூலமாக அனைத்து ஒப்பந்த குழுவிற்கும், தொடர்புடைய கொடிநாடு(கள்) ஆகியவற்றிற்கும் எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக அனுப்பப்பட வேண்டும்.

13. ஒவ்வொரு ஒப்பந்தக்குழுவும் செயல் செயலாளருக்கு ஒவ்வொரு வருடமும் மார்ச் 1 அன்று முந்தைய டிசம்பரோடு முடிந்த ஓராண்டிற்கான கீழ்க்கண்ட விபரங்களை தெரிவிக்க வேண்டும்.

(i) அதன்துறை முகங்கள் இத்திட்டத்தில் இது ஒப்பந்தமற்ற குழுவின் கலன்களில் மேற்கொண்ட ஆய்வுகளின் எண்ணிக்கை, ஆய்வு செய்யப்பட்ட கலன்களின் பெயர்கள், அவற்றிற்குரிய கொடிநாடு, ஆய்வு செய்யப்பட்ட தேதி ஆய்வு நடத்தப்பட்ட துறைமுகங்கள் மற்றும் அத்தகைய ஆய்வுகளின் முடிவுகள்; மற்றும்

(ii) இத்திட்டத்தை தொடர்ந்து ஆய்விற்குப் பின் எங்கு மீன்கள் இறக்கப்பட்டன கப்பலுக்கு மாற்றி அனுப்பப்பட்டன, பத்தி 10(1) மற்றும் (11)ல் உள்ளதைத் தொடர்ந்து அறிக்கை வழங்கப்பட்ட சாட்சியங்களையும் உள்ளடக்க வேண்டும்.

14. செயல் செயலாளர் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் அன்று முந்தைய டிசம்பரோடு முடிந்த ஓராண்டிற்கான அறிக்கையை தயாரிப்பார். இத்திட்டத்தில் கேட்டுக் கொண்டபடி இது ஒப்பந்தக்குழுவினர் அளித்த கால முறை அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும்.

15. பன்னாட்டு சட்டத்திற்கு இணங்க, அதன் எல்லைக்குட்பட்ட துறைமுகங்களில் வமேஅமீவநிறுவனத்தின் ஒப்பந்தக்குழுக்கள் உரிமைப்படி இத்திட்டத்தில் செயல்படுத்துதலை எதுவும் பாதிக்காது.

16. வமேஅமீவ நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தமற்ற குழுவின் மீன்பிடிப்பு நடவடிக்கைகள் மீதான நிலைக்குழு (மீபிநநிகு) வருடந்தோறும் தொகுக்கப்பட்ட விபரங்கள் இத்திட்டம் மற்றும்இத்திட்டத்தை செயல்படுத்துவது மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி மறு ஆய்வு செய்யும். தேவையான இடங்களில் வமேஅமீவ நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் அமுலாக்க முறைகளை ஒப்பந்தமற்ற குழு பின்பற்றுவதை அதிகரிக்கச் செய்வதற்கு புதிய செய்முறைகளைப் பரிந்துரைக்கும். ஒப்பந்தக்குழு திட்டங்களை செயல்படுத்துவதற்கு புதிய முறைகளையும் பரிந்துரைக்கும்.

**இணைப்புஅ**

**பொதுவான ஆங்கில மற்றும் விஞ்ஞான பெயர்கள்**

1. Atlantic cod (*Gadus morhua)*
2. Atlantic redfish (*Sebastes sp.)*
3. American plaice (*Hippoglossoides platessoides*)
4. Yellowtail flounder (*Limanda ferruginea*)
5. Witch flounder (*Glyptocephalus cynoglossus*)
6. Capelin (*Mallotus villosus*)
7. Greenland halibut (*Reinhardtius hippoglossoides*)
8. Short-finned squid (*Illex) (Illex illecebrosus*)
9. Shrimps (*Pandalus sp.)*

**இணைப்பு ஆ**

**பொதுவான ஆங்கில மற்றும் விஞ்ஞான பெயர்கள்**

1. Haddock (*Melanogrammus aeglefinus*)
2. Silver hake (*Merluccius bilinearis*)
3. Red hake (*Urophycis chuss*)
4. Pollock (*Pollachius virens*)
5. Roundnose grenadier (*Macrourus rupestris*)
6. Atlantic herring (*Clupea harengus*)
7. Atlantic mackerel (*Scomber scombrus*)
8. Atlantic butterfish (*Peprilus triacanthus*)
9. River herring (alewife) (*Alosa pseudoharengus*)
10. Atlantic argentine (*Argentina silus*)
11. Long-finned squid (*Loligo) (Loligo pealei*)
12. Wolffishes (NS) (*Anarhichas sp*.)
13. Skates (NS) (*Raja sp*.)

**பிற்சேர்க்கை IV**

**திருத்தி அமைக்கப்பட்ட அசூபாபகுழுவின் துறைமுக ஆய்வு திட்டம்**

***திருத்தி அமைக்கப்பட்ட அசூபாபகுழுவின் துறைமுக ஆய்வு திட்டத்திற்கான அசூபா பகுழுவின் பரிந்துரைகள்***[141]

தற்சமயம் பல குழுக்கள் துறைமுக ஆய்வு திட்டங்களை கொண்டு.ள்ளன என்பதனை *உணர்ந்து*

அட்லாண்டிக் சூரை மீன்களைப் பாதுகாப்பதற்கான பன்னாட்டுக்குழு (அசூபாபகு) பரிந்துரைப்பவை:

1. ஒப்பந்தக்குழுவின் தகுந்த அதிகாரம் பெற்றவர்களால் அனைத்து அசூபாபகுழுவின் சிற்றின வகைகளுக்கும் ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டும். குழுவின் பாதுகாப்பு முறைகளுக்கு அவற்றின் சொந்த துறை முகங்களில் இணக்கமாக இருப்பதை பாரபட்சமின்றி கண்காணிக்கும் தேசீய அரசால் வழங்கப்பட்ட அடையாளத்தை ஆய்வாளர்கள் காண்பிப்பர்.

2. அந்நிய மீன்பிடி கலனால் விதி மீறல் என தோன்றும் நிகழ்வுகளில், குழுவால் வரையறுக்கப்பட்ட படிவத்தில் ஆய்வாளர் அறிக்கையை தயாரிப்பார். அல்லது தேசீய அரசால் வழங்கப்பட்ட அதே தரத்தில் விபரங்களைச் சேகரிக்கும் படிவத்தில் அறிக்கையை தயாரிப்பார். ஆய்வாளர் கலனின் தலைவர் முன்னிலையில் அறிக்கையில் கையொப்பமிடுவார். கலனின் தலைவருக்கும் அறிக்கையில் பார்த்த எதனையும் சேர்க்கவும் சேர்க்கப்பட செய்யும் உரிமை உள்ளது. அவரும் அறிக்கையில் கையொப்பமிடுவார். கலனின் தினசரி நாட்குறிப்பு புத்தகத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதைக் குறிப்பிடுவார். அக்கலனின் கொடி நாட்டிற்கு படிவங்களின் நகல்கள் அனுப்பி வைக்கப்படும். அசூபா பகுழுவின் செயலகத்திற்கும் 10 நாட்களுக்குள் அனுப்பிவைக்கப்படும். உள்நாட்டுக் கலனின் விதி மீறல் நிகழ்வுகளில் உள்நாட்டு முறைகள் ஆவணப்படுத்துதலுக்காக பின்பற்றப்படும். அசூபாபகுழுவின் வரையறுக்கப்பட்ட படிவத்தைப் போல் அதே தரத்தில் இதிலும் விபரங்களை வழங்க வேண்டும்.

3. ஆய்வாளர் மீன்களை மீன்பிடி சாதனங்களை மீன் மாதிரிகளை மற்றும் அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் பரிசோதிப்பார். மீன்பிடிப்பு குறித்த தினசரி நாட்குறிப்பு புத்தகம், கப்பலின் சரக்கை காட்டும் ஆவணங்கள் (தாய்க் கப்பல் அல்லது ஏற்றிச் செல்லும் கலன்) ஆகியவற்றை அசூபாபகுழுவின் முறைகளுக்கு இணக்கமாக இருப்பதை சரிபார்க்க ஆய்வு செய்தலும் இதில் அடங்கும். கலனின் தலைவர் ஆய்வாளருக்கு ஒத்துழைப்பு தருவது தேவையாகிறது. மிகக்குறைந்த அளவிலான குறிக்கீடுடன் சிறிதளவான சிரமம் அளித்தே ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் மீன் தரம் இழப்பது தவிர்க்கப்படுகிறது.

4 அவர்களுடைய தேசீய சட்டத்திற்கு இணங்க தேசீய ஆய்வாளர்களின் அறிக்கையைப் போன்று அதே அடிப்படையில் அந்நிய ஆய்வாளர்களின் விதி மீறல்களாக தோற்றம் தருபவை மீதான அறிக்கைகள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி குழுக்கள் பரிசீலிக்க வேண்டும். ஒப்பந்தக்குழுக்கள், அவர்களுடைய சட்டத்திற்கு இணங்க இத்தகைய ஏற்பாடுகளின் கீழ் செயல்படும் ஆய்வாளர்களின் அறிக்கைகளிலிருந்து தோன்றும் பிரச்சனை மீதான நீதி மன்ற அல்லது பிற செயல் முறை நடவடிக்கைகளை எளிதாக்க ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

---

[141] அசூபாபகுழுவின் பரிந்துரை 97–10, 1998 ஜுன் 13ல் அமுலுக்கு வந்தது.

5. விதி மீறல்கள் நடைபெற்றதாகத் தோன்றும் நிகழ்வுகளில் கலனின் கொடிநாடு விதி மீறல்களை தெரிவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அசூபாபகுழுவினருக்கு அறிவிக்க வேண்டும்.

6. அனைத்து குழுக்களும் அசூபாப குழுவின் சிற்றின வகைகளைப் பிடிப்பதில் ஈடுபட்டுள்ள கலனின் தலைவர்களுக்கு அவற்றின் கட்டுப்பாடுகளைப் பற்றி தெரிவிக்க வேண்டும். தேசீய மற்றும் அந்நிய துறைமுகங்களில் ஆய்வாளர்களுடன் ஒத்துழைக்க கலனின் தலைவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

7. அவர்களுடைய சொந்த துறைமுகத்தில் அல்லாது பிற துறைமுகங்களில் அவற்றால் பிடிக்கப்பட்ட மீன்களை இறக்க அல்லது கப்பலுக்கு மாற்ற துறைமுகத்திற்குள் நுழையும் பொழுது குழுக்கள் ஆய்வு செய்வதற்காக அவர்களுடைய ஆய்வாளர்களை அனுப்பலாம். குழுவின் கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டும். ஆய்வு நடத்தப்படும் துறை முகத்தின் அழைப்பை இதற்காக முன்பே பெற்றிருக்க வேண்டும்.

   கூடுதலாக இருபுறமும் ஒப்பந்தம்/ உடன்படிக்கைகளை குழுக்கள் மேற்கொள்ளலாம். இது ஆய்வாளர்களை பரிமாற்றம் செய்து கொள்ளும் திட்டத்தை அனுமதிக்கும். இத்திட்டம் ஒத்துழைப்பு விபரங்களை பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றை ஊக்கப்படுத்தும். அசூபாபகுழுவின் மேலாண்மை முறைகளுக்கு இணங்குதலை மேம்படுத்துவதற்கான நிலைகளை குழுவின் ஆய்வாளர்களுக்கு பயிற்றுவிக்கும்.நாட்டின் தேசீய அறிக்கை அத்தகைய திட்டத்தை விளக்குவதையும் சேர்த்துக் கொள்ளும்.

பிகு: அசூபாபகுழுவின் பரிந்துரைகள் இறக்கப்படும் பொழுது அமுல்படுத்தப்படும் என்பதை குழு ஏற்றுக்கொள்கிறது. ஆகையால் இது கண்காணிப்பு மற்றும் ஆய்விற்கு மிகவும் அடிப்படையான திறமையான சாதனம் ஆகும். இந்த பரிந்துரை தற்போதுள்ள அசூபாபகுழுவின் துறைமுக ஆய்வு திட்டத்தை மாற்றம் செய்யும். தேசீய துறைமுக ஆய்வு திட்டங்கள் தேவைப்படும் வகையில் மாற்றம் செய்யும். அசூபாபகுழுவின் சிற்றின வகைகளை இறக்குதல் கப்பலுக்கு மாற்றி அனுப்புதல் போன்ற நடவடிக்கைகளில் அந்நிய மற்றும் உள்நாட்டு கலன்களில் துறைமுக ஆய்வு மேற்கொள்ள குறைந்தபட்ச வரையறைகளை வழங்கும். அசூபாபகுழுவின் சிற்றின வகைகளுக்காக ஒவ்வொரு குழுவின் மீன்வள நடவடிக்கைகளை முழுமையாக கண்காணிப்பதை எளிதாக்குதல் மற்றும் தனிப்பட்ட கலனின் இணக்கம் ஆகியவற்றை உறுதி செய்வதே துறைமுக ஆய்வு திட்டத்தின் நோக்கமாகும். அசூபாபகுழு குழுக்கள் இத்தகைய குறைந்தபட்ச வரையறைகளை உண்மையாகவே மிகைபடச் செய்யும் இறக்குதல் மற்றும் கப்பலுக்கு மாற்றி அனுப்புதலை உரிய நேரத்தில் சரியாக கண்காணிப்பதை திறமையானதாகச் செய்வதற்காக என நம்புகிறது. அசூபாபகுழுவின் மேலாண்மை முறைகளுக்கு இணக்கமாக இருப்பதை சரிபார்க்கும். ஒதுக்கீட்டை தாண்டாது என்பதனை உறுதி செய்யும். தகவல்களை சேகரிக்கும் மீன் இறங்குதல் மற்றும் கப்பலுக்கு மாற்றி அனுப்புதல் பற்றிய பிற விபரங்களையும் சேகரிக்கும்.

**பிற்சேர்க்கை V**

## Dissostichus வகைகளுக்கான அகவாஆபாகுழுவின் பிடிபடும் மீன்களை ஆவணப்படுத்தும் திட்டம்[142]

Dissostichus வகைகளை சட்டத்திற்குப் புறம்பாக கட்டுப்பாடு இல்லாத மற்றும் அறிவிக்கப்படாத வகையில் (சஅக) பிடிப்பது சட்டத்திற்குப்புறம்பானது என கருதுகிறது. மரபுப்பகுதியில் Dissostichus வகைகள் மிகவும் கடுமையாக குறைந்து விடும் பயத்தை ஏற்படுத்துகிறது.

சஅக மீன்பிடிப்பில் ஆபத்தில் உள்ள அல்பட்ருஸ் பறவை உள்ளிட்ட சில அன்டார்டிக் சிற்றின வகைகள் தற்செயலாக பிடிபடுவது தனிச்சிறப்பானது என்பது உணரப்படுதல் வேண்டும். சஅக மீன்பிடிப்பு அகவாஆபா குழுவின் பாதுகாப்பு முறைகளின் திறமையை வலுவற்றதாக்கும். மரபின் நோக்கங்களுக்கு இணக்கமற்று இருக்கும் என்பது குறிப்பிடப்படுகிறது.

கொடிநாடுகளின் பொறுப்புகளை கோடிட்டு அவற்றின் கலன்கள் பொறுப்பார்ந்த முறையில் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

மண்டல அளவிலான மீன்வள பாதுகாப்பு முறைகளின் விளைவை மேம்படுத்த கொடிநாடுகள் அவற்றின் கடமை மற்றும் உரிமைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

Dissostichus வகைகளின் உயர்ந்த மதிப்பை சஅக மீன்பிடிப்பு பிரதிபலிப்பதை உணர்தல் வேண்டும். அதனால் அதற்கான சந்தை தேவை மற்றும் பன்னாட்டு வர்த்தகம் அதிகரித்துள்ளது என்பதனை உணர்தல் வேண்டும்.

தேசீய அளவில் Dissostichus சிற்றின வகைகளுக்கு வகைப்படுத்தும் தொகுப்பு முறையை அறிமுகப்படுத்துதலை ஒப்பந்தக்குழுக்கள் ஏற்றுக் கொண்டதை மீண்டும் நினைவிற்கு கொண்டு வருதல் வேண்டும்.

Dissostichus சிற்றின வகைகளுக்காக பிடிக்கப்படுவதை ஆவணப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்துதல் குழுவிற்கு பின் மேலாண்மை நோக்கங்களுக்கான முன்னெச்சரிக்கை அணுகுமுறையை வழங்குவதற்கு தேவையான முக்கிய விபரங்களை வழங்கும் என்பதனை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

பன்னாட்டு சட்டத்திற்கு இணங்க ஒப்பந்தக்குழுவின் சந்தைக்கு நுழையும் Dissostichus சிற்றின வகைகள் பிடிக்கப்பட்ட இடங்களைச் கண்டறிதல், Dissostichus சிற்றின வகைகள் மரபுப்பகுதியில் பிடிக்கப்பட்டதா அவர்களின் எல்லைக்குட்பட்ட பகுதியில் இறக்குமதி செய்யப்பட்டதாஅகவாஆபாகுழுவின் பாதுகாப்பு முறைகளுக்கு இணங்க பிடிக்கப்பட்டதா என்பன போன்றவற்றை அறிய நடவடிக்கை மேற்கொள்வது கடமையாகிறது.

Dissostichus சிற்றின வகைகளைக் குறித்தவரை குழுவில் ஏற்கனவே பின்பற்றப்படும் பாதுகாப்பு முறைகளை வலிமைப் படுத்துதலை விரும்புதல்

Dissostichus சிற்றின வகைகளைப் பிடிப்பதில் ஈடுபடும் ஒப்பந்தமில்லாத குழுவின் கலன்களை Dissostichus சிற்றின வகைகளுக்கான பிடிபடும் மீன்களை ஆவணப்படுத்தும் திட்டத்தில் கலந்து கொள்ள அழைத்தல்

மரபின் கட்டுரை 9க்கு இணங்க இதன் மூலம் பின்பற்றப்படும் கீழ்க்காணும் பாதுகாப்பு முறைகள்:

1. ஒவ்வொரு ஒப்பந்தக்குழுவும் அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்பட்ட Dissostichus சிற்றின வகைகள் பிடிக்கப்பட்ட இடங்களைக்

[142] அகவாஆபா குழுவின் பாதுகாப்பு முறைகள் 170/XX இம் முறைக்கான இணைப்புகள், அவ்வாறே பிற தொடர்புடைய அகவாஆபா குழுவின் ஆவணங்கள் அகவாஆபா குழுவின் வலைதளத்தில் கிடைக்கும்.

கண்டறிதல், Dissostichus சிற்றின வகைகள் மரபுப்பகுதியில் பிடிக்கப்பட்டதா அவர்களின் எல்லைக்குட்பட்ட பகுதியில் இறக்குமதி செய்யப்பட்டதா அகவாஆபாகுழுவின் பாதுகாப்பு முறைகளுக்கு இணங்க பிடிக்கப்பட்டதா என்பன போன்றவற்றை அறிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2. ஒவ்வொரு ஒப்பந்தக்குழுவிற்கும் ஒவ்வொரு கலனின் தலைவர் அல்லது கொடியிட்ட கலன்களின் பிரதிநிதி பிடிக்கப்பட்ட Dissostichus சிற்றின வகைகளை ஆவணப்படுத்தும் திட்டத்தை பூர்த்தி செய்வது தேவையாகிறது. மீன்கள் இறக்கப்படும் அல்லது கப்பலுக்கு மாற்றி அனுப்பப்படும் ஒவ்வொரு நிகழ்விலும் அது இறக்கும் அல்லது மாற்றி அனுப்பும் Dissostichus வகைகளுக்கும் செய்யப்பட வேண்டும். Dissostichus eleginoides மற்றும் / அல்லது Dissostichus mawsoni சிற்றின வகைகளைப் பிடிப்பதற்கு அங்கீகாரத்தை அக்கலன்கள் பெற்று இருக்க வேண்டும்.

3. ஒவ்வொரு ஒப்பந்தக்குழுவிற்கும் அதன் துறைமுகங்களில் Dissostichus சிற்றின வகை இறக்கப்படும் மற்றும் அதன் கலன்களுக்கு மாற்றி அனுப்பப்படும் ஒவ்வொரு முறைக்கும் பிடிக்கப்பட்ட Dissostichus சிற்றின வகைகளை ஆவணப்படுத்தும் திட்டத்தை பூர்த்தி செய்வது தேவையாகிறது.

4. ஒவ்வொரு ஒப்பந்தக்குழுவிற்கும் அதன் சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு இணங்க அவற்றின் கொடியிட்ட கலன்கள், மரபுப்பகுதிக்கு வெளியே ஆழ்கடல் பகுதியை உள்ளிட்ட இடங்களில் Dissostichus சிற்றின வகைகளைப் பிடிக்க கருதும் கலன்கள் அவற்றைப் பிடிப்பதற்காக குறிப்பிட்ட அங்கீகாரத்தை பெறுவது அவசியமாகிறது. அவ்வாறு Dissostichus வகைகளைப் பிடிக்க அங்கீகாரம் பெற்ற அதன் கொடியிட்ட ஒவ்வொரு கலனுக்கும் பிடிக்கப்பட்ட Dissostichus சிற்றின வகைகளை ஆவணப்படுத்த படிவங்கள் வழங்கப்படும். அக்கலன்களுக்கு மட்டுமே அவை வழங்கப்படும்.

5. ஒரு ஒப்பந்தம் இல்லாத குழு அகவாசூபாகுழுவுடன் இத்திட்டத்தில் கலந்து கொண்டு ஒத்துழைக்க விரும்பினால் பிடிக்கப்பட்ட Dissostichus சிற்றின வகைகளை ஆவணப்படுத்துவதற்குரிய படிவங்கள்அதன் கொடியிட்ட Dissostichus சிற்றின வகைகளைப் பிடிக்க கருதும் எந்த ஒரு கலனுக்கும் பத்தி 6 மற்றும் 7ல் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு இணங்க வழங்கப்படும்.

6. பிடிக்கப்பட்ட Dissostichus சிற்றின வகைகளை ஆவணப்படுத்துதல் கீழ்க்கண்ட விபரங்களைப் பெற்று இருக்க வேண்டும்.

   (i) அங்கீகாரம் அளிக்கும் அதிகாரம் உடையவரின் பெயர், முகவரி, தொலைபேசி மற்றும் தொலை அச்சு எண்கள்

   (ii) கலனின் பெயர், சொந்த துறைமுகம் தேசீய பதிவு எண் மற்றும் அழைப்புக்குறி வழங்கப்பட்டிருப்பின் பகநி/ லாயிட்ஸ் பதிவு எண்.

   (iii) பொருந்தக் கூடிய இடங்களில் கலனுக்கு வழங்கப்பட்டு இருந்தால் உரிமம் அல்லது அனுமதி கடித எண்

   (iv) இறக்கப்படும் ஒவ்வொரு Dissostichus சிற்றின வகை மீனின் எடை அல்லது மீன்பொருள் வகைப்படி மாற்றி அனுப்பப்பட்ட ஒவ்வொன்றின் எடை

      (அ) மரபுப்பகுதியில் பிடிக்கப்பட்டிருந்தால் அகவாஆ பாகுழுவின் புள்ளியியல் சார் பகுதி அல்லது கோட்டத்தின் படி மற்றும் / அல்லது

      (ஆ) மரபுப்பகுதியில் பிடிக்கப்பட்டிருந்தால் உவே அமைப்பின் புள்ளியியல் பகுதி சார் பகுதி அல்லது கோட்டத்தின் படி

(v) எந்த தேதிக்குள் பிடிக்கப்பட்டன எடுக்கப்பட்டன என்ற விபரம்

(vi) பிடிக்கப்பட்டவை இறக்கப்பட்ட துறைமுகம் தேதி கப்பலுக்கு மாற்றி அனுப்பப்பட்டது எனின் கலன், அதன்கொடி நாட்டின் பதிவு எண் விபரங்கள்

(vii) பிடிக்கப்பட்டவற்றைப் பெறுபவர்(கள்) பெயர், முகவரி தொலைபேசி மற்றும் தொலை அச்சு எண்கள் மற்றும் ஒவ்வொரு சிற்றின வகையின் அளவு மற்றும் பெறப்பட்ட பொருளின் வகை

7. இம்முறைக்கு கலன்களை பொறுத்தவரை பிடிக்கப்பட்ட Dissostichus சிற்றின வகைகளை ஆவணப்படுத்தும் முறைகள் இணைப்பு 170/ன் பத்தி அ 1 முதல் அ 10 வரை குறிப்பிடப்பட்டுள்ளன. பிடிக்கப்பட்டவற்றை ஆவணப்படுத்த பயன்படுத்தப்படும் வரையறுக்கப்பட்ட ஆவணம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

8. ஒவ்வொரு ஒப்பந்தக்குழுவிற்கும் அதன் எல்லையில் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யப்பட்டு Dissostichus வகைகள் கப்பலுக்கு மாற்றி அனுப்பப்படும் ஒவ்வொரு முறைக்கும் ஏற்றுமதிக்காக சட்டப்படி செல்லத்தக்க பிடிக்கப்பட்ட Dissostichus சிற்றின வகைகளை ஆவணப்படுத்தப் பட்ட விபரம்(ங்கள்) உடன் அனுப்புதல் தேவையாகிறது. பொருந்தக்கூடிய இடங்களில் சட்டப்படி செல்லத்தக்க மறு ஏற்றுமதி ஆவணங்கள், மாற்றி அனுப்பப்பட்டவற்றில் உள்ள அனைத்து Dissostichus சிற்றின வகைகளையும் கணக்கில் கொள்ளும் வகையில் உடன் அனுப்புதல் தேவையாகிறது.

9. ஏற்றுமதிக்காக சட்டப்படி செல்லத்தக்க பிடிக்கப்பட்ட Dissostichus பற்றிய ஆவணம் வழங்கப்படுவது கலனைப் பொறுத்தவரையில் கீழ்க்கண்டபடி இருக்கும்:

(i) இம்முறைக்கான இணைப்பு 170/ன் பத்தி அ1 முதல் அ11 வரையில் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு இணங்க தொடர்புடைய அனைத்து விபரங்களையும் மற்றும் கையொப்பங்களையும் பெற்று இருக்கும்.

(ii) ஆவணத்தில் உள்ள விபரங்கள் சரியானது என்பதற்காக ஏற்றுமதி செய்யும் நாட்டின் பொறுப்பான அலுவலரால் கையொப்பமிட்டு முத்திரையுடன் கூடிய சான்றிதழ் இதனுள் அடங்கும்.

10. ஒவ்வொரு ஒப்பந்தக்குழுவும், அதன் சுங்க அலுவலர் அல்லது பிற உரிய அலுவலர்கள் அதன் எல்லையிலிருந்து இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படும் Dissostichus சிற்றின வகைகளை ஒவ்வொரு முறை மாற்றி அனுப்பும் பொழுதும் ஏற்றுமதிக்காக சட்டப்படி செல்லத்தக்க பிடிக்கப்பட்ட Dissostichus சிற்றின வகைகளை ஆவணப்படுத்தப்பட்ட விபரங்களை சரி பார்ப்பர் மற்றும் பொருந்தக்கூடிய இடங்களில் சட்டப்படி செல்லத்தக்க மறு ஏற்றுமதி ஆவணங்கள், மாற்றி அனுப்பப்பட்டவற்றில் உள்ள அனைத்து Dissostichus சிற்றின வகைகளையும் கணக்கில் கொள்ளும் வகையில் உள்ளதா என்பதனை சரிபார்ப்பர் என்பனவற்றை உறுதி செய்ய வேண்டும். இந்த அலுவலர்கள் மாற்றி அனுப்பபட்டவற்றில் உள்ளவை பிடிக்கப்பட்ட மீன்களின் விபரங்கள் உள்ள ஆவணம்(ங்கள்) படி உள்ளதா என்பதனை சரி பார்ப்பர்.

11. மேலே குறிப்பிடப்பட்ட பத்தி 10 ன் படியாக ஆய்வு முடிவினால் பிடிக்கப்பட்ட Dissostichus சிற்றின வகைகளைப் பற்றிய ஆவணங்களில் உள்ள விபரங்கள் குறித்து அல்லது மறு ஏற்றுமதி ஆவணம் குறித்து கேள்வி எழுந்தால் ஏற்றுமதி நாட்டின் தேசீய அளவின் ஆவணம்(ங்களை) சட்டப்படி செல்லத்தக்கதாக்கும் அதிகாரம் உடையவர், பொருந்தக்கூடிய இடங்களில் ஆவணத்தை பூர்த்தி செய்த கலனின் கொடிநாடு ஆகியோரை அழைத்து இத்தகைய கேள்விகளை சரிப்படுத்தும் நோக்கில் இறக்குமதி நாட்டிற்கு ஒத்துழைப்பு தர கோருவர்.

12. ஒவ்வொரு ஒப்பந்தக்குழுவும் உடன் மிகவிரைவான எலக்ட்ரானிக் சாதனங்கள் மூலமாக அனைத்து ஏற்றுமதி சட்டபடி செல்லத்தக்க Dissostichus வகைகளின் பிடிப்பு விபர ஆவணங்களின் நகல்களை அகவாஆபாகுழுவின் செயலகத்திற்கு அனுப்புவர். பொருந்தக்கூடிய இடங்களில் வழங்கப்பட்ட சட்டபடி செல்லத்தக்க மறு ஏற்றுமதி ஆவணங்கள் அதன் எல்லைக்குள் பெறப்படும். அத்தகைய ஆவணங்களில் இருந்து Dissostichus சிற்றின வகைகள் பிடிக்கப்பட்ட இடம், அதன் எல்லையிலிருந்து ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யப்பட்ட அளவு போன்றவை மீதான தகவல்கள் பெறப்பட்டு வருடந்தோறும் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

13. பத்தி 5க்கு இணங்க அதன் கொடியை உடையகலன்களைப் பொறுத்தவரை Dissostichus பிடிப்பு விபரங்களை வழங்கும் ஒவ்வொரு ஒப்பந்தக்குழு மற்றும் ஒப்பந்தமில்லாத குழுவும் அகவாஆபாகுழுவின் செயலகத்திற்கு Dissostichus பிடிப்பு விபரங்களின் ஆவணங்களை செல்லத்தக்க தாக்கும் பொறுப்பு உடைய தேசீய அதிகாரம் உடையவர் அல்லது (பெயர்கள், முகவரிகள், தொலைபேசி மற்றும் தொலைஅச்சு எண்கள் மற்றும் ஈமெயில் முகவரி உள்ளிட்ட) விபரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

14. மேலே உள்ள வற்றைக் கருதாது பிடிக்கப்பட்டவற்றை ஆவணப்படுத்தும் திட்டத்தில் கலந்து கொள்ளும் ஒப்பந்தக்குழு அல்லது ஒப்பந்தமற்ற குழுவிற்கும் பிடிக்கப்பட்டவை பற்றிய ஆவணங்களை கொடிநாடு கூடுதலாக சரிபார்ப்பது தேவையாகிறது. இதற்கு இடையில் மரபுப்பகுதிக்கு வெளியே ஆழ்கடலில் பிடிக்கப்பட்ட மீன்களைப் பொறுத்தவரை[1] அவை அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் இறக்கப்படும் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் களஅமைப்பைப் பயன்படுத்தி கூடுதலாக சரிபார்த்தல் தேவையாகிறது.

15. பிடிப்பு ஆவண அமைப்பில் பங்கு கொள்ளும் ஒரு ஒப்பந்தக்குழு பறிமுதல் செய்யப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட Dissostichus சிற்றின வகைகளை விற்க அல்லது கழித்து ஒதுக்க, அது சிறப்பான செல்லத்தக்க Dissostichus பிடிப்பு ஆவணத்தை (சிசெபிஆ) வழங்க வேண்டும். செல்லத்தக்கதாக்க காரணத்தை அதில் குறிப்பிட வேண்டும். சிசெபிஆ கைப்பற்றப்பட்ட மீன்கள் வர்த்தகத்திற்கு கொண்டு செல்லப்படுவதற்காக சூழ்நிலையை விளக்கும் அறிக்கையை கொண்டிருக்க வேண்டும். செயல்படுத்த முடிந்தவரை குழுக்கள் பறிமுதல் செய்யப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட மீன்களை விற்பனை செய்வதன் மூலம் சஅக மீன்பிடிப்பில் குற்றம் புரிந்தவர்களுக்கு பணப்பயன் ஏதும் இல்லை என்பதனை உறுதி செய்ய வேண்டும். ஒப்பந்தக்குழு சிசெபி ஆவணத்தை வழங்கும் எனில் செயலகத்திற்கு அத்தகைய அனைத்தையும் அனைத்துக்குழுவினருக்கும் தெரிவிப்பதற்காக உடனடியாக அறிவிக்க வேண்டும். பொருந்தும் எனில் வர்த்தக புள்ளியியல் விபரங்களில் பதிவு மேற் கொள்ள வேண்டும்.

16. பறிமுதல் செய்யப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட Dissostichus சிற்றின வகைகளை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப்பெற்ற வருவாயை முழுமையாகவோ அல்லது பகுதியாகவே குழுவால் நிறுவப்பட்ட பிஆ திட்டத்திற்கு மாற்றித்தரலாம். அல்லது மரபின் நோக்கங்களை நிறைவேற்றுவதை மேம்படுத்தும் தேசீய நிதிக்கு மாற்றித்தரலாம். ஒரு ஒப்பந்தக்குழு அதன் உள்நாட்டு சட்டத்திற்கு இணங்கி பிற நாட்டின் சிசெபி ஆவணத்தின் படி விற்பனைக்கு வரும் பல் மீன் வர்த்தகத்திற்கான சந்தையை ஏற்படுத்தித்தர மறுக்கலாம். இணைப்பு ஆ, பிஆ திட்டநிதியை பயன்படுத்துவது தொடர்பாக குறிப்பிடுகிறது.

[1] மரபு பகுதிக்கு வெளியே ஆழ்கடலில் இழுவை மீன்பிடிப்பால் தற்செயலாக பிடிபட்டவையாக பெறப்படும் Dissostichus சிற்றின வகைகளைத் தவிர்த்து தற்செயலாக பிடிபடுபவை என்பது பிடிக்கப்பட்ட அனைத்து சிற்றின வகைகளின் மொத்தத்தில் 5 சதவிகிதத்திற்கு மேற்படாமல் மற்றும் ஒரு கலனின் முழுமையான மீன்பிடி பயண ஏற்பாட்டில் 50 டன்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என்று வரையறுக்கப்படுகிறது.

**பிற்சேர்க்கை VI**

## தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களின் வலைதளங்கள்

| | |
|---|---|
| அண்டார்டிக் கடல்வாழ் ஆதாரங்களின் பாதுகாப்பிற்கான குழு அகவ ஆ பாகு (CCAMLR): | **www.ccamlr.org** |
| தென்பகுதி நீல துடுப்பு சூரை மீன்களின் பாதுகாப்பிற்கான குழு (CCSBT) : | **www.home.aone.net.au/ ccstb/** |
| மெடிட்டரேனியன் பொது மீன்வள குழு பொ மீ கு மெ (GFCM) : | **www.fao.org/fi** |
| இந்தியப் பெருங்கடல் சூரை மீன் குழு இ பெ சூ கு (IOTC) : | **www.seychelles.net/iotc** |
| பன்னாட்டு பல்டிக் கடல் மீன் குழு ப ப க மீ கு (IBSFC) : | **www.ibsfc.org** |
| அட்லாண்டிக் சூரை மீன்களைப் பாதுகாக்கும் பன்னாட்டுக் குழு அ சூ பா ப கு (ICCAT) : | **www.iccat.es** |
| அமெரிக்கா இடையேயான வெப்பமண்டல சூரை மீன் குழு அவெசூகு (IATTC) : | **www.iattc.org** |
| வடகிழக்கு அட்லாண்டிக் மீன்வள நிறுவனம் வகி அமீவநி (NEAFC) : | **www.neafc.org** |
| வட மேற்கு அட்லாண்டிக் மீன்வள நிறுவனம் வ மே அ மீ வ நி (NAFO) : | **www.nafo.ca** |
| வடக்கு அட்லாண்டிக் சால்மன் பாதுகாப்பிற்கான குழு வஅசாபாகு (NASCO) : | **www.nasco.int** |
| வடக்கு பசிபிக் நன்னீரில் இனப் பெருக்கம் செய்யும் மீன்வள நிறுவனம் வ ப ந இ மீ வநி (NPAFC) : | **www.npafc.org** |

சட்டத்திற்குப்புறம்பான, அறிவிக்கப்படாத, கட்டுப்பாடு இல்லாத மீன்பிடிப்பை தடுக்க, நிறுத்த, நீக்க பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கைகயை செயல்படுத்துவதற்கு உதவிட இந்த வழிகாட்டு முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன (பசெதிந–சஅக) மீன்வள மேலாண்மையுடன் தொடர்புடைய தீர்மானம் மேற்கொள்வோர் மற்றும் கொள்கை அமைப்போர் ஆகியோருக்காக எழுதப்பட்டது. மீன்பிடி நிறுவனங்களுக்கும் மற்றும் பிற குழுவினர்களுக்கும் ஆர்வமுடையதாகவும் இருக்கும். பசெதிந–சஅக உவே அமைப்பின் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பிற்கு இணக்கமாக உள்ளது. அவ்வாறே ஆழ்கடலில் மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்கள் பன்னாட்டு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணக்கமாக இருப்பதை ஊக்குவிக்கும் 1983 வருடத்திய ஒப்பந்தம் டிசம்பர் 10, 1982 வருடத்திய கடல் சட்டம் மீதான ஐக்கிய நாடுகளின் மரபுகளை செயல்படுத்த 1995 வருடத்திய ஒப்பந்தம், நகராத மற்றும் பெரிதும் நகரும் மீன் இருப்புகளை பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை மற்றும் பிற பயன்பாட்டில் உள்ள பன்னாட்டு சட்ட விதிமுறைகளுக்கு இணக்கமாகவும் உள்ளது. தேசீய செயல்திட்டங்களை மேம்படுத்த மற்றும் செயல்படுத்த பொதுவான அறிவுரை மற்றும் வடிவமைப்பை வழங்குவதே இந்த வழிகாட்டு முறைகளின் நோக்கமாகும்.

ISBN 92-5-104756-1 ISSN 1020-5292

9 789251 047569

TC/M/Y3536E/3/10.05/200

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*2009*